
EISSN 2456-5571

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 9 | SPECIAL ISSUE 4 | FEBRUARY 2025 | E-ISSN: 2456-5571



திருநெல்வேலி தெக்ஷிணா மாற நாடார் சங்கம் கல்லூரி

தெ. கள்ளிகுளம்

தேசியதர மதிப்பீட்டில் "A" அங்கீகாரம் பெற்றது

தமிழ்த்துறை (S.F) & அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் வெளியிடும் பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

## இலக்கியமும் இயற்கையும்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் அ. சவரிராயம்மாள் | முனைவர் சு. பால்மோகன்

# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science

**An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal**

Vol.9 | Special Issue 4 | February 2025 | E-ISSN: 2456-5571

**CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES** (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

# BODHI INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

*An Online, peer reviewed, refereed and quarterly Journal with Impact Factor*

www.bodhijournals.com, bodhijournal@gmail.com, 7540077733

4/27, Achampathu, Madurai-625019, Tamil Nadu, India


## SPECIAL ISSUE EDITORIAL BOARD


**முனைவர் அ. சவரிராயம்மாள்**

(ஒருங்கிணைப்பாளர்)

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

**முனைவர் சு. பால்மோகன்**

*(ஒருங்கிணைப்பாளர்)*

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**
(Re-Accredited by **NAAC** at an **'A'** Grade with a CGPA of **3.09** (II Cycle )
**T. KALLIKULAM - 627 113, Tamil Nadu.**
E-mail : tdmnsoffice@gmail.com
Office : 04637 - 220250

**V.P. RAMANATHAN NADAR** M.Com., M.B.A.,
Secretary & Correspondent

**Dr. (Major) D. RAJAN** M.Sc., M.Phil., Ph.D.,
Principal

Ref.No. : ......................... Date : 11/01/2025

## வாழ்த்துரை

நாம் நம் வாழ்நாள் முழுவதையும் இயற்கையோடு இயைந்து தான் வாழ்கிறோம். ஆனால் அதன் அழகைப் பற்றி உணர்வது அரிது தான். நம் முன்னோர்கள் இயற்கையைத் தெய்வமாக போற்றினார்கள். ஆனால், இன்று நம்மவர்கள் இயற்கையைச் சீரழித்து வருகின்றனர். அதனால் பருவ நிலை மாறுபாடுகள் ஏற்பட்டு மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. இதனால் நாம் இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது அவசியமாகிறது. இன்றைய இளைஞர்களிடம் இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக "இலக்கியமும் இயற்கையும்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை ஒரு சமுதாயத்தை உருவாக்கும் காரணிகளுள் முதன்மையானது. இயற்கை நம் பாரத நாட்டின் பிரதான வளம் என்பதை எல்லா விதமான மக்களும் உணரும் விதம் தொகுக்கப்பட்டுள்ள 'இலக்கியமும் இயற்கையும்' என்ற இந்த ஆய்வு நூல் சிறக்க வாழ்த்துகிறேன்.

SECRETARY
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T.KALLIKULAM.

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**
(Re-Accredited by **NAAC** at an **'A'** Grade with a CGPA of **3.09** (II Cycle )
(Affiliated to Manonmaniam Sundaranar University)
**T. KALLIKULAM - 627 113**
Tirunelveli District, Tamil Nadu.

**Dr.** (Major) **D. RAJAN, M.Sc., M.Phil., Ph.D.,**
Principal

Ⓒ **Off : 04637-220250**
E-mail : tdmnscollege@rediffmail.com
tdmnscollege@gmail.com

Date : ........................

## வாழ்த்துரை

இலக்கியமும் இயற்கையும் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. எண்ணங்களைச் சிந்திக்க வைக்கும் புதிய அறிவுகளை எடுத்துக் கொடுக்கின்றது. படிக்கத் தொடங்கியவுடன் ஒரு புதிய உலகிற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இலக்கியமும் இயற்கையும் மனிதன் உள்ளத்தின் ஆழங்களை வெளிப்படுத்துகின்றன. தொகுக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் இயற்கையின் அழகும் அதன் வெற்றிடங்களிலும் இலக்கியத்தின் நுணுக்கங்களை நாம் அறிந்ததைத் தாண்டி ஒரு புதிய பார்வையை நமக்கு அளிக்கின்றன. மனிதனின் உள்ளார்ந்த சிந்தனைகளை எழுப்ப ஒரு மாற்றியமைந்த உலகைக் காண்பிக்கின்றன. சூரிய மண்டலத்தில் புதிய ஒரு ஒளியைக் காட்டி ஒவ்வொருவரின் உள்ளத்திற்கும் எளிதாக அணுகும் அழகான ஒரு பயணத்தைத் தருகிறதென நம்புகிறேன். இயற்கையின் புதுமையை இலக்கியத்தின் வளமையை நாடும் அனைவருக்கும் இந்த ஆய்வுக் கட்டுரைகள் ஓர் அர்ப்பணிப்பு மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். ஆய்வுக்கட்டுரைகள் சிறக்க வாழ்த்துக்கள்.

11.1.2025

PRINCIPAL
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T. KALLIKULAM.

# வாழ்த்துரை

“வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு…..” அந்தத் தமிழ்நாட்டின் கல்விக் கடவுளாகப் போற்றப்படுபவர் நமது முன்னாள் தமிழக முதல்வராகிய காமராஜர் ஐயா அவர்கள். அவரின் கல்விக் கொள்கைகளை நினைவு கூறும் வகையாக தென் தமிழகத்தின் சிறப்புமிக்க திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி தெக்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மற்றும் அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு 14.02.2025 இன்று நடைபெறுகின்ற இந்த கருத்தரங்கு வரலாற்றில் பதிக்கப்பட வேண்டிய ஒன்றாக திகழ்கின்றது. ஏனெனில் இக்கருத்தரங்கினை நடத்துவதற்கு இவர்கள் கடந்து வந்த பாதை மிகக் கடினமானது. அந்த வகையில் இவர்களின் வரலாற்றில் 2018ஆம் ஆண்டு “கோயிற்கலை பன்முகப் பார்வை” மற்றும் 2019 ஆம் ஆண்டு “தென் தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்” என்ற இரு பயிற்சிப் பட்டறைகளையும் மேலும் 2020இல் “புறநானூற்றுப் பொருண்மை” மற்றும் “சங்க இலக்கியமே அறிவியலாக” என்ற இரண்டு நாள் இணைய வழி கருத்தரங்கினையும் நடத்தியுள்ளது. தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவானது கிராமியக்கலை இலக்கிய மன்றத்துடன் இணைந்து 2022இல் “நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்” என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தியுள்ளனர். அக்கருத்தரங்கில் நானும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு திறவுசொல் பேச்சாளராக கலந்ததையிட்டு மனம் பேருவகை கொள்கின்றது. அதனைத் தொடர்ந்து “வனைதலும் முடைதலும்” என்ற தலைப்பில் மாநில அளவிலான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு “இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்” என்ற தலைப்பில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2024ஆம் ஆண்டு கிருஷ்ணாபுரம், ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் ஒருநாள் தொல்லியல் பயிற்சிப் பட்டறையையும் நடத்தியது. இவ்வாறு ஏராளமான கருத்தரங்குகளையும், பயிற்சிப் பட்டறைகளையும் சிறந்த கருப்பொருள்களைக் கொண்டு நடத்திய தன் பயனாகத் தற்போது 2025 ஆம் கல்வியாண்டில் “இலக்கியமும் இயற்கையும்” என்ற பொருன்மையில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. இந்த கருத்தரங்கிலும் நான் திறவுச்சொல் பேச்சாளராகக் கலந்து கொள்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கருத்தரங்க குழுவாகக் கூட்டு முயற்சியில் பன்னாட்டுக் கருத்தரங்கை திறம்பட நடத்திக் கொண்டிருக்கின்ற கொடைவள்ளல்களாகிய திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தலைவர் திரு.ஆர்.கே.காளிதாசன் நாடார் அவர்களுக்கும், செயலாளர் மற்றும் தாளாளர் திரு.வி.பி.ராமநாதன் நாடார் அவர்களுக்கும், பொருளாளர் திரு.ஏ.செல்வராஜ் நாடார் அவர்களுக்கும், கல்விக்குழு உறுப்பினர் திரு.எஸ்.கே.டி.பி.காமராஜ் நாடார் அவர்களுக்கும், முதல்வர் முனைவர் மேஜர் டி.ராஜன் அவர்களுக்கும், அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ.புஷ்பராஜ் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிபிரிவு)திருமதி சு.கிரிஜா அவர்களுக்கும் இந்த வேளையில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களாகச் செயற்பட்டு ஆய்வுக்கட்டுரைகளைப் பெற்று அவற்றினைச் சிறந்த முறையில் சரிபார்த்து சிறப்பாகக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருக்கின்ற தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்களான முனைவர் அ. சவரிராயம்மாள் மற்றும் அன்பு நண்பர் முனைவர் சு. பால் மோகன் அவர்களுக்கும் கருத்தரங்க

ஆலோசனைக் குழுவைச் சார்ந்த முனைவர் செ. சோனாகிருஷ்டி, முனைவர் சு. முருகவேல் மற்றும் திருமதி.டே.கிரேஸ் புஸ்பா ஜுலியட் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வளவு அறிஞர்களின் கூட்டுமுயற்சியால் உருவான இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் மிகவும் சிறப்பாக நடைபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவ்வாறே தொடர்ந்தும் திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் கல்விப்பணி தொடர வேண்டும் அதன் மூலம் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மென்மேலும் ஏராளமான பன்னாட்டுக் கருத்தரங்குகளை நடத்தி தமிழுக்கும் ஆய்வுத்தளத்திற்கும் தங்கள் சேவை தொடர வேண்டும்.

வாழ்க தமிழ், வளர்க தமிழ்ப்பணி.

**முனைவர் சி. சூரியகுமார்.**<br>
முதுநிலை விரிவுரையாளர்,<br>
இசைத்துறை (வாய்ப்பாட்டு),<br>
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**Dr.A. PUSHPARAJ Ph.D.,**
Associate Professor & IQAC Coordinator,
Department of Zoology,
T.D.M.N.S.College,
T. Kallikulam - 627 113, Tamil Nadu.

Phone : 04637-220250 (Off)
Mobile : +91-9994097004
E-mail : tdmnspushparaj@gmail.com

## வாழ்த்துரை

"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத்
தமிழெங்கள் உயிருக்கு நேர்"

என்று உயிரினும் மேலான தமிழ்த்தாயை வணங்கி இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகள் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்கும் தகுதியுடையன. இவ்வுலகில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்கிலும் சமூகத்தில் உள்ள அனைவரும் **'இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்'** என்பதை உணரும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களின் சரியான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதற்கு இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் தலைமுறைகளுக்கான பொக்கிஷம்.

முனைவர் அ. புஷ்பராஜ்
(அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர்)

Residence: No: 7, Jeyam Cottage, Karunya Nagar, Vallioor - 627 117, Tirunelveli (Dt.), Tamil Nadu, India.

# வாழ்த்துரை

பயிற்றிப் பல கல்வி தந்து -இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றான் முண்டாசுக்கவி பாரதி. கல்வி மூலமே சமூகம் உயர்வு காண முடியும் என்பதை அழுத்தமாக பதிவு செய்தவர்.அவர்.அந்த வகையில் எமது திருநெல்வேலி தெ'ண மாற நாடார்சங்கமானது ஏழை மாணவர்களின் கல்வி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இந்த கல்விகூடத்தை களிகையில் ஆரம்பித்தனர். சான்றோர் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி. இன்று 53 ஆண்டுகளைக் கடந்து பொன்விழா கண்டு பொலிவுபெற்று திகழ்ந்து வருகின்றது. 2014 - 2015 ஆம் கல்வி ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இளங்கலைத் தமிழ் பாடப்பிரிவானது நிர்வாகம், முதல்வர், அலுவலர்கள், மாணவர்களின் தனித்தன்மையாலும் திறமையாலும் பல்கலைக்கழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் பல சாதனைகளையும் பாராட்டுகளையும் பெற்று வருகிறது. வருடம் தோறும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் தேசிய, மாநிலக் கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் கலை இலக்கிய நிகழ்வுகளையும், போட்டிகளையும் நிகழ்த்தி அசத்தி வருகின்றது. பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் வருடம் தோறும் எமது துறை மாணவர்கள் இடம் பெற்று அலங்கரித்து வருகின்றனர். இதுவரை இரண்டு தங்கப்பதக்கங்களும் இருபத்து இரண்டிற்கும் மேற்பட்ட சிறந்த இடங்களையும் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்று கல்லூரிக்கும் துறைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். கலை இலக்கியப் போட்டிகளிலும் சாதனைகளை பெற்று செம்மாந்து நிற்கிறது, எமது தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் அ.சவரிராயம்மாள் முனைவர் சு. பால் மோகன் ஆகியோர் இலக்கியமும் இயற்கையும் என்ற பொருண்மையில் தலைப்பினை தேர்ந்தெடுத்து கருத்தரங்கினை நடத்த எண்ணம் உதயமாகியது வியப்பிற்குரியது. பாராட்டிற்குரியது. இயற்கை பற்றிய சிந்தனைகள் கட்டுரைகளை எழுதியுள்ளவர்களின் எண்ணங்களில் விதைத்ததே இக்கருத்தரங்கிற்கு கிடைத்த வெற்றியாகும். சங்க இலக்கியங்கள் முதல் இக்காலம் வரை உள்ள இலக்கியங்கள் வரை கருத்துக்களை ஆய்ந்து எடுத்து கட்டுரைகளை எழுதியுள்ளனர். அனைத்துக் கட்டுரைகளும் அருமை. கதம்ப மாலையாகத் தொடுக்கப்பட்டுள்ள இக்கட்டுரைப் பூக்கள் தமிழ்த்தாயினை அலங்கரிக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை

நன்றி!

**திருமதி சு.கிரிஜா**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப் பிரிவு)
திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்

# தொகுப்புரை

தமிழகத்தின் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் தாலுகாவில் உள்ள தெ.கள்ளிகுளத்தில், திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரியானது 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று பொன்விழாவை கடந்து பவள விழாவை நோக்கி பொலிவுடன் நடைபயில்கிறது. 54 ஆண்டுகள் கிராமப்புற மாணவர்களின் மேம்பாடு ஒன்றினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கல்விப்பணியை செய்து தேசிய தரமதிப்பீட்டில் 'A' பெற்று திகழ்கின்ற எமது கல்லூரியில் 2014-2015 ஆம் கல்வியாண்டில் இளங்கலைத்தமிழ் பாடப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

2018 ஆம் ஆண்டு 'கோயிற்கலை- பன்முகப்பார்வை' மற்றும் 2019 ஆம் ஆண்டு 'தென்தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்' என்ற பயிற்சி பட்டறையும் மேலும் 2020 இல் 'புறநானூற்றுப் பொருண்மை', 'சங்க இலக்கியமே அறிவியலாக' என்ற இரண்டு நாள் இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கத்தினையும் நடத்தியுள்ளது. மேலும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 'நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்' என்ற தலைப்பிலும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்' என்ற தலைப்பிலும் இரண்டு பன்னாட்டுக் கருத்தரங்கினை போதி பன்னாட்டு ஆய்விதழுடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

'இலக்கியமும் இயற்கையும்' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற இருக்கிறது. பண்டையத் தமிழ்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர் என்பதை உலக மக்கள் அறியும் நோக்கில் இக்கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது. தமிழ்த்துறையோடு கல்லூரி அகத்தர மதிப்பீட்டுக்குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்ச் சான்றோர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பல்வேறு தரப்பினரையும் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

'இலக்கியமும் இயற்கையும்' என்ற பொருண்மையில் அமைந்த இந்த பன்னாட்டுக் கருத்தரங்கில் சங்க இலக்கியத்தில் இயற்கை, தொல்காப்பியத்தில் இயற்கை, காப்பியங்களில் இயற்கை, சிற்றிலக்கியங்களில் இயற்கை, பக்தி இலக்கியங்களில் இயற்கை, நீதி இலக்கியங்களில் இயற்கை, நாட்டுப்புற இலக்கியத்தில் இயற்கை, இக்கால இலக்கியங்களில் இயற்கை இது போன்ற பல பொருண்மைகளில் ஆய்வுகளை அமைத்துக் கொள்ள நினைத்தோம். அதனடிப்படையில் தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆய்வை மேற்கொண்டு தரமான 100 ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரைகளை நான்கு தொகுதியாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ் இலக்கியக் களங்களான இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புற இலக்கியம், நீதி இலக்கியம், நவீன இலக்கியம் என பல்துறையில் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்ட எங்களுக்கு இது மனநிறைவைத் தந்தது. எங்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எண் திசையிலிருந்தும் கட்டுரைகளை அனுப்பித் தந்தனர். தமிழ் ஆய்வுலகில் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கு தொய்வு இல்லை என்று நம்பிக்கையூட்டிய அத்தனை நல் நெஞ்சங்களையும் மனதார வாழ்த்துகிறோம் வணங்குகின்றோம்.

‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்துவதற்கு அனுமதித் தந்த கல்லூரி மற்றும் சங்கத் தலைவர் திரு.R.K.காளிதாசன் நாடார், சங்க செயலாளர் திரு.T.ராஜகுமார் நாடார், பொருளாளர் திரு.A.செல்வராஜ் நாடார் மற்றும் கல்லூரி செயலர் & தாளாளர் திரு.V.P.இராமநாதன் நாடார், கல்லூரிக்குழு உறுப்பினர் S.K.T.B.காமராஜ் நாடார், கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர்.D.ராஜன் ஆகியோருக்கு நன்றியை உரித்தாக்குகிறோம். மேலும் இக்கருத்தரங்கு நடத்த தீர்மானித்தது முதல் விழா நடைபெறுவதற்கு உரிய நாள் வரை பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கூறிய கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக்குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் A.புஷ்பராஜ் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

இந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்புற அமைய உதவிப் புரிந்த தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு) திருமதி.சு.கிரிஜா மற்றும் எமது துறை பேராசிரியர்களுக்கும் நூலாக வடிவமைத்த போதி பன்னாட்டு ஆய்விதழ் நிறுவனர் முனைவர் S.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகின்றோம். மேலும் கருத்தரங்கிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

மகிழ்வுடன்

**முனைவர் அ.சவரிராயம்மாள்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

**முனைவர் சு.பால்மோகன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

**BODHI**
**INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**
An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol. 9** **Special Issue 4** **February 2025** **E-ISSN: 2456-5571**

**Aim & Objectives**

Academic Excellence in research is continued promoting in research support for young Scholars. Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in an multidisciplinary views, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of Books; motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

**CONTENTS**

| S. No. | Title | Page No. |
|---|---|---|
| 1 | நற்றிணையில் இயற்கை<br>**ஹெ. கார்மல் ஷர்மிளா** | 1 |
| 2 | சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழல் மேலாண்மை<br>**முனைவர் செ. பொன்மலர்** | 5 |
| 3 | கார்நாற்பதில் கார்கால இயற்கை எழில்<br>**முனைவர் மு. சாந்தினி** | 9 |
| 4 | ஐங்குறுநூற்றில் ஐந்திணைக் காட்சிகள்<br>**திருமதி. சு. கிரிஜா** | 12 |
| 5 | குற்றால சாரலும் குறவஞ்சியும்<br>**முனைவர் தெ. மேகநாதன்** | 17 |
| 6 | சங்க இலக்கியத்தில் இயற்கை<br>**ச. மணிவண்ணன்** | 21 |
| 7 | நாச்சியார் திருமொழியில் இயற்கை வழி துன்பியல்<br>**முனைவர் ம. லெ. இராஜேஸ்வரி** | 28 |
| 8 | குயில்பாட்டில் இயற்கை<br>**முனைவர் மு. மகாலெட்சுமி** | 32 |
| 9 | முல்லையும் இயற்கையும்<br>**முனைவர் இரா. திலகா** | 35 |
| 10 | இயற்கை இன்பம்<br>**முனைவர் சு. பால் மோகன்** | 38 |
| 11 | புறநானூற்றில் இயற்கைச் சிந்தனைகள்<br>**முனைவர். சி. வி. சைலா** | 43 |
| 12 | திருவள்ளுவரின் இயற்கைப்புனைவில் மரம்<br>**முனைவர் ப.சு. செல்வமீனா** | 47 |
| 13 | கலித்தொகையில் இயற்கைப் புனைவுகள்<br>**முனைவர் த. கிறிஸ்டல் ரெஜி** | 52 |
| 14 | தேம்பாவணியில் இயற்கை<br>**இரா. ரேகாள்** | 58 |
| 15 | தொல்காப்பியத்தில் இயற்கை<br>**அ. டெய்சி** | 62 |
| 16 | மணிமேகலையில் புகார் நகரின் வனங்களின் வனப்பு<br>**முனைவர் சே. பார்த்தசாரதி** | 65 |
| 17 | ‘மீன்குகைவாசிகள்’ புதினம் காட்டும் இசுலாமிய மக்களின் இயற்கைசார் வாழ்வியல்<br>**க. லெட்சுமி** | 69 |
| 18 | சங்க இலக்கியத்தில் இயற்கை<br>**நா. அழகேஸ்வரி** | 72 |

| | | |
|---|---|---|
| 19 | பண்டைத் தமிழர் கண்ட இயற்கையின் இசை<br>**முனைவர் சி. சூரியகுமார்** | 76 |
| 20 | பெரியபுராணம் காட்டும் இறைபொருளும் இயற்கைப் பொருளும்<br>**வீ. வீரமாரீஸ்** | 82 |
| 21 | அற்புதத்திருவந்தாதியில் இயற்கை<br>**சு. தெய்வ ஜெயஜோதி** | 85 |
| 22 | எட்டுத்தொகை அகநூல்களில் இயற்கை<br>**சை. ஜாபர்** | 90 |
| 23 | கிருபானந்தவாரியாரின் கந்தபுராண தத்துவம்<br>**முனைவர் த. தனலெட்சுமி** | 94 |
| 24 | திருவரங்கக் கலம்பகத்தில் இயற்கை<br>**முனைவர் ந. கிருஷ்ணவேணி & க. செங்கொடி** | 98 |
| 25 | ‘ஐம்பேரியற்கை’ புதினம் காட்டும் இயற்கைசார் மனித வாழ்வியல்<br>**திருமதி க. சத்யஜோதி** | 103 |

# நற்றிணையில் இயற்கை

**ஹெ. கார்மல் ஷர்மிளா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, விவேகானந்தா கல்லூரி*
*அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பது வாழ்க்கையை - இயற்கையை - காலத்தைக் காட்டும் ஒரு வெற்றுக் கண்ணாடியன்று: இயற்கை என்னும் பேரொளி, கவிஞன் இதயத்தினுள்ளே புகுந்து வெளிப்படும் பொழுது, அங்குள்ள கலை உணர்ச்சிகளாகிய பல்வேறு வண்ணக் கலவைகளில் பிணைந்து, புதுமையான ஒரு வண்ணத் திருக்கோலத்தை அடைகின்றது. சங்க இலக்கியங்களை ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். சங்க இலக்கியங்கள், தாம் பிறந்த காலத்தின் போக்கை – நடைமுறையைக் காட்டுவனவாகும். அதே நிலையில் சங்கப் புலவர்களின் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதாகும். புலவர்களின் உணர்ச்சிப்பொலிவின் அடிப்படை இயற்கையைக் காட்டுவதேயாகும் அவை வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். இப்பிரதிபலிப்பை நற்றிணை புலவர்களின் வழியே எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.*

**மலைகள்**

மலைகள் பல நீர்வளம் மிகுந்திருந்த காலங்களில் குன்றுகளில் அருவிகள் பல விழுந்து ஓடிய வண்ணம் இருக்கும். இதனை, தொலைவில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவற்றின் தோற்றம் அழகான காட்சியாகவும், அருகில் இருந்து கேட்டவர்க்கு அவற்றின் ஓசை செவிக்கு இனிமையாகவும் இருக்கும் என்பதை நற்றிணைப் பாடல்கள் குறிப்பிடும் போது, கருமை நிறம் கொண்ட குன்றில் வெண்ணிறமான அருவி ஒன்று தோன்றுகிறது. அந்தக் குன்று பெரிய ஒற்றைக்கொம்பு உடைய யானைப்போல் தோன்றுவதாகப் புலவர் பொய்கையார் குறிப்பிடுகிறார்.

**“............ யானைத்**
**தடாஅ நிலை ஒரு கோட்டன்ன,**
**ஒன்று இலங்கு அருவிய குன்று...”**
**(நற்.18 : 8-10)** [1]

எனவும், மலையில் பெருமழை பெய்த பிறகு நீர் நிரம்பிய அருவி விழும் ஓசை, அகன்ற வாயையுடைய தண்ணுமையினால் எழுப்பும் இசை போன்றது. இதனை,

**“அழி துளி தலைஇய பொழுதில் புலையன்**
**பேழ் வாய்த் தண்ணுமை இடம்**
**தொட்டன்ன, அருவி இழிதரும்**
**பெருவரை. . . . .” (நற்.347 : 5-7)** [2]

மலையில், சாரல் மழையின் போது, ஒரு பகுதியில் கூட்டமாகக் கூடி, வண்டுகள் ஒலிக்கும் ஒலியானது யாழோசை போன்றும், அவ்வண்டுகள் கூட்டமாக மலைச்சாரல் வழியாகப் புகுந்து செல்லும் போது அங்கே விழும் அருவியின் ஒலி, முழவின் ஒலியோடு ஒத்திசைப்பதை,

**“யாழ் ஓர்த்தன்ன இன் குரல் இன வண்டு**
**அருவி முழவின் பாடொடு ஓராங்கு,**
**மென்மெல இசைக்கும் சாரல் . . . ”**
**(நற்.176:8-10)** [3]

**மேகங்கள்**

குறிஞ்சி நில மக்கள் தம் தொழிலுக்காக மேகங்களின் போக்கினைக் காண்டறியும் திறன் கொண்டவர்கள். இரவு நேரங்களில் மின்மினிப்பூச்சியின் மூலம் மேகந்தின் இயக்கத்தை கண்டறிவர். இதனை,

**“நீடு இலை விளை தினைக் கொடுங் கால் நிமிரக்**
**கொழுங் குரல் கோடல் கண்ணி, செழும் பல,**
**பல் கிளைக் குறவர் அல்கு அயர் முன்றில்,**
**குடக் காய் ஆசினிப் படப்பை நீடிய**
**பல் மர உயர் சினை மின்மினி விளக்கத்து,**
**செல் மழை இயக்கம் காணும்...”**
**(நற்.44:6-1)** [4]

நீண்ட இலைகளுடன் விளைந்த தினை, கனத்த கதிர்களோடு வளைந்திருக்கும். அந்த நிலைமாறி, நிமிறுமாறு அதன் விளைந்த கதிர்களை அறுத்துக் கொள்ள கருதிய குறவர்கள், சுற்றத்தாரோடு தங்கி கொண்டாடும் முற்றத்தில், மழை செல்லும் போக்கைக் காண்பார்கள். குடம் போன்ற காயை உடைய (ஆனிசிப் பலா) பலாத்தோட்டத்தில் நீண்ட பலாமரங்களின் கிளைகளின், இரவில் மின்மினிப் பூச்சி தரும் சிறு வெளிச்சத்தில் மழையின் இயக்கத்தை காண்பார்கள். மேலும் மலையின் மேல் மேகங்கள் தவழும் காட்சிகள், புலவர் பலின் கண்களைக் கவர்ந்து, தம் படைப்புகளின் வழி வெளிப்படுத்துவர். அதில் நற்றிணை புலவர்களில் ஒருவரான பரணர் தம் பாடல் வரியில் குறிப்பிடும் போது,

**“தொன்று படு துப்பொடு முரண் மிகச் சினைஇக்**
**கொன்ற யானைச் செங் கோடு கழாஅ,**
**அழி துளி பொழிந்த இன் குரல் எழிலி,**
**எ.்.குறு பஞ்சிற்று ஆகி, வைகறைக்**
**கோடு உயர் நெடு வரை ஆடும்...”**

**(நற்.247 :1-5)**[5]

வலிமை மிகுதி பெற்ற யானை, பகை மிகுதியால் சினம் கொண்டு புலியை கொன்றது. அது புலியைக் கொன்றதால் யானையின் சிவந்த தந்தத்தை மேகம் மழை பெய்து கழுவியது. அந்த மேகம் பிறகு வில்லால் அடிக்கப்பட்ட பஞ்சு போல் ஆகி, விடியற்காலையில் உயர்ந்த மலையுச்சியில் அசைந்து செல்லும். இதே கருத்தினை கபிலர் குறிப்பிடும் போது,

**“ஆள் இல் பெண்டிர் தாளின் செய்த**
**நுணங்கு நுண் பனுவல் போல, கணம் கொள**
**ஆடு மழை தவழும் கோடு உயர் நெடு வரை...” (நற்.353:1-3)**[6]

வெண்ணிற மேகங்கள் அசைந்து சென்று, கூட்டமாக மலையுச்சியில் சேர்ந்து நிற்பது, நூற்பதற்கு ஏற்ற நுட்பமான பஞ்சுபோல தோன்றித் தவழும் மேலும்,

**“மழை கழி விசும்பின் மாறி ஞாயிறு**
**விழித்து இமைப்பது போல் விளங்குபு மறைய...” (நற்.241:7-8)**[7]

வானத்தில் மேகங்கள் நீங்கி செல்லும் போது, கதிரவன் மேகங்களிடைய தோன்றித் தோன்றி மறையும் காட்சி, கண்ணை விழித்து விழித்து இமைப்பது போன்றது என்கிறார் மதுரைப் பெருமருதனார். மேலும்,

**“தாழ்ந்து ஒலி கதுப்பின் வீழ்ந்த காலொடு..........................**
**பொலந் தொடி போல மின்னி கணங் கொள்**
**இன் இசை முரசின் இரங்கி மன்னர்**
**எயில் ஊர் பல் தோல் போலச்**
**செல் மழை தவழும்.....”**

**(நற்.197:6; 9-12)**[8]

மேகம், தாழ்ந்து தழைத்த கூந்தல் போல் மழைபெய்வதற்காக இறங்குகின்றது. அவை பொன்னாலாகிய வளையல் போல் மின்னுகின்றது. இனிய ஓசை எழுப்பும் முரசு போல் முழங்குகிறது. அரசரின் மதில்போல் செல்லும் வீரனின் பல கேடயம் போல் மலைமேல் தவழ்ந்து செல்வதாகக் குறிப்பிடுகிறார் புலவர்.

மேகமானது, கருநிற மலையின் பிளவுகள் தெரியுமளவு மின்னி ஒளி வீசுவதும், நீலநிற மலர்களைக் கொண்ட காயா மரங்கள் நிறைந்த குன்றில், கொன்றை மரங்களின் பொன்னிறமான மலர்கள் ஒளி வீசி விளங்குதல் போன்றது. என்பதை,

**“காயாய் குன்றத்துக் கொன்றை போல**
**மா மலை விடர் அகம் விளங்க மின்னி....”**

**(நற்.371:1-2)**[9]

**பெருங்காற்று**

பெருங்காற்று அடித்தலால் ஆம்பல் மலர்கள் குவிந்து தாமரை மலர்க்குச் சாய்ந்து வணங்குதல் போல் தோன்றுகின்றன; அத்தோற்றம் ஒளி வீசும் வளையல்களை அணிந்த அரசகுமாரி சினம் கொண்டவுடன் அதற்கு அஞ்சி தோழியர் எல்லாம் கை தொழுது வணங்கினாற்போல் உள்ளதை,

**“சுடர்த் தொடிக் கோமகள் சினந்தென அதன் எதிர்**
**மடத் தகை ஆயம் கைதொழுதாஅங்கு,**
**உறு கால் ஒற்ற ஒல்கி, ஆம்பல்**
**தாமரைக்கு இறைஞ்சும்....”**

**(நற்.300:1-4)**[10]

என்பதை பெருங்காற்று வீசும் நிலையில் இயற்கையின் நிலைப்பாட்டை இப்பாடல் எடுத்துரைக்கிறது.

**கீழ்காற்று**

சிறிய மரங்களைக் கொண்ட ஞாழல் மரங்கள் இருக்கும் கடற்கரையோரம், கீழ்காற்று வீசும் பொழுது புதுமணல் பொங்கிக் கிடக்கும் கானலில் புன்னை மலர்கள் பூத்திருந்து அவை மணம் பரப்பும், அப்பூக்களின் நுண்ணிய மகரந்தப் பொடியினை சிதறடிக்கும் கீழ்காற்று, குருகின் வெண்சிறகு கூம்பும்படி, குளிர்காற்று வீசும் நிலையினை,

**"சிறு வீ ஞாழற் பெருங் கடற் சேர்ப்பனை ....................**
**புது மணற் கானல் புன்னை நுண் தாது,**
**கொண்டல் அசை வளி தூக்குதொறும், குருகின்**
**வெண் புறம் மொசிய வார்க்கும் ...."**
**(நற்.74:5:7-9)** [11]

கீழ்காற்று வீசுவதால் வானத்தில் மேகங்கள் நின்றுவிட்டது. அவை அலையின் திரை பிரிந்து பொங்கும் நுரை போல, வானத்து உச்சியில் ஏறி, கரிமேகம் மலையைச் சூழ்ந்து கொண்டது. மேலும் உழுந்து செடியின் நீண்ட இலைகள் உதிரும் படி கீழ்காற்று வீசுவதாகவும், மிகப்பெரிய யானை பெருமூச்சுடன் கொட்டாவி விடுவது போன்று கீழ்காற்று வீசுவதை,

**"கொண்டல் ஆற்றி விண்தலைச் செறீஇயர்**
**திரைப் பிதிர் கடுப்ப முகடு உகந்து ஏறி**
**நிரைத்து நிறை கொண்ட கமஞ் சூல் மா மழை......................**
**இரும் பனிப் பருவத்த கயிர்க் காய் உழுந்தின்**
**அகல் இலை அகல வீசி..............**
**பரும யானை அயா உயிர்த்தாஅங்கு"**
**(நற்.89:1-3;5-6;8)** [12]

நெடுங்காலக் குளிர் மலையில் ஈச்ச மரங்கள் தழைத்து இருக்கின்றன. அங்குள்ள ஈச்சங்காட்டின் காற்று, சுழன்று அடிப்பதால் அந்த காட்டு வழியாகச் செல்லும் மக்களுடைய தலையைப் புலிக்குட்டிகள் மோதும். அதனால் அப்புலிக் குட்டிகளின் தலைகளில் சிவப்பு கறைபட்டது. மேலும், வாயெல்லாம் குருதி படிந்திருந்த நிலையினை குறிப்பிடும்போது,

**"அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து,**
**ஒலி வல் ஈந்தின் உலவைஅம் காட்டு**
**ஆறு செல் மாக்கள் சென்னி எறிந்த**
**செம் மறுத் தலைய நெய்த்தோர் வாய..."**
**(நற்.2:1-4)** [13]

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**மூங்கில்**

மூங்கில் புதர்போல் நெருங்கி வளர்வதும், அவற்றின் வேர்கள் ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பதும் இயற்கையே. காற்று வீசும்போது மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் ஒருவகை ஓசை பிறக்கும். அந்த ஓசையைக் கேட்ட புலவர், அது யானை வருந்தி விடும் மூச்சைப் போன்றது என்பதை,

**"வேர் பிணி வெதிரத்துக் கால் பொரு நரல் இசை**
**கந்து பிணி யானை அயா உயிர்த்தன்ன..."**
**(நற்.62:1-2)** [14]

என்று இளங்கீரனார் பாடல்வழி அறிந்து கொள்ள முடிகிறது.

**தேன் வளம்**

வண்டுகள் மொய்த்து உண்ண, மலர்ந்த வேங்கையின் பெரிய கிளையில் செழுமையான தேனடையில் தேனீக்கள் மொய்த்ததால், கசிந்த இனிய தேனைக் குறச்சிறுவர்கள் உண்டு செல்ல, அவர்கள் உண்ட மீதியைக் குரங்குக் குட்டிகள் நக்கும் என்பதை,

**"சுரும்பு உண விரிந்த கருங்கால் வேங்கைப்**
**பெருஞ் சினைத் தொடுத்த கொழுங் கண் இறாஅல்,**
**புள்ளூற்றுக் கசிந்த தீம் தேன் கல் அளைக் . . . " (நற்.168:1-3)** [15]

என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

**மின்னல்**

பெண்களின் அணிகலன்கள் வீசிடும் ஒளி போல் மின்னல் தோன்றுவதாகக் கூறிய கற்பனையோடு, இன்னும் சில அழகிய வருணனைகள் நற்றிணைப் பாடல்களில் உள்ளன. அவை, மேகம் மழை பெய்வதற்காக மின்னுதல், மலை கண் திறந்து இமைப்பது போல் உள்ளது என்பதை,

**"மலை இமைப்பது போல் மின்னி**
**சிலை வல் ஏற்றொடு செறிந்த இம்**
**மழைக்கே. . . " (நற்.112:8-9)** [16]

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

இயற்கைக் கன்னியை இணையற்ற கோலங்களில் காணத் துணைபுரிவன இலக்கியங்கள். பிற உலக இலக்கியங்களில் இயற்கை அமைந்திருப்பதைப் போலவே தமிழ் இலக்கியங்களில் இயற்கையின் அரிய, இனிய காட்சிகள் நிறைந்து கிடக்கின்றன.

அழகு எங்கெங்கே உள்ளதோ அங்ஙங்கே புலவர்களின் கண்கள் சென்று திளைக்கும் அழகை உணர்ந்து கற்பனை செய்து, கண்டு மகிழ்ந்து தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று பிறரும் கண்டு மகிழும் சொல்லோவியமாக்கித் தருவதே புலவர்களின் தொழில். இத்தொகுப்பில், நற்றிணை புலவர்கள் தாங்கள் கண்ட இயற்கை அழகினை சுவைபட எடுத்துரைப்பதை அறிந்து கொள்ள முடிந்தது. மேலும், ஐம்பூதங்களின் நிலைப்பாட்டினையும், மாந்தர்கள் இயற்கையோடு இயந்த வாழ்க்கையும் நற்றிணையில் விரவிகிடப்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

**அடிக்குறிப்புப் பட்டியல்**

1. பாலசுப்பிரமணியன், கு.வெ., **நற்றிணை,** நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை-98, அக்டோபர் 2011, ப.32.
2. மேலது, ப.643.
3. மேலது, ப.327.
4. மேலது, ப.77.
5. மேலது, ப.454.
6. மேலது, ப.653.
7. மேலது, ப.443.
8. மேலது, ப.361.
9. மேலது, ப.684.
10. மேலது, ப.551.
11. மேலது, ப.131-132.
12. மேலது, ப.160.
13. மேலது, ப.4.
14. மேலது, ப.110.
15. மேலது, ப.308.
16. மேலது, ப.202.

# சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழல் மேலாண்மை

**முனைவர் செ. பொன்மலர்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்*

## முன்னுரை

ஆரம்பகால மனிதன் நாடோடியாக வாழ்ந்தான். கூடி வாழ எண்ணியபோது சமூகம் உருவானது. ஒரு சமூகத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் அங்கு வாழ்கின்ற மக்களின் பண்பாட்டை அறிந்து கொண்டால் போதுமானதாகும். பண்பாடு மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகும். அந்த வகையில் இன்றைய காலக்கட்டத்தில் மனிதர்களிடம் காணப்படும் இயற்கை சுற்றுச்சூழல் பற்றிய சிந்தனைகள் பழந்தமிழர்களிடமும் இருந்துள்ளது என்பது குறித்து இவ்வாய்வு அமைகிறது.

## இயற்கை

இயற்கை என்பது இயல்பானது. மனித சக்தி இல்லாமல் தானே தோன்றும் பொருட்கள் அனைத்தும் இயற்கை ஆகும். அதனால் தான் தொல்காப்பியர், உலகமானது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களால் ஆனது என்கிறார்.

> ***"நிலம், தீ, நீர், வளி விசும்பொடு ஐந்தும்***
> ***கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"***[1]

உலகம் மட்டுமல்லாமல் இந்த உடலும் பஞ்சபூதங்களால் ஆனது. அதனால்தான் இயற்கை என்னும் பஞ்ச பூதத்திற்கு தீங்கு நேரிடும் பொழுது மனிதனும் பலவித இன்னலுக்கு உள்ளாகிறான். இதனை திருவள்ளுவர்,

> ***"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்***
> ***ஐந்தும் அகத்தே நகும்"***[2]

என்று விளக்கியுள்ளார்.

## மரம்

இயற்கை சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மனிதன் மரங்களை தெய்வமாக வழிபட தொடங்கினான். மரங்கள் மனித வாழ்வோடு இரண்டற கலந்து இருந்தது மன்னர்கள் கூட தனக்கென ஒரு காவல் மரத்தை அடையாளமாக வைத்திருந்தனர். நன்னன் என்னும் மன்னன் தன் காவல் மரக்காயை உண்டதனால் பெண்கொலை புரிந்தான் என்ற நிகழ்வும் குறுந்தொகை பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை

> ***"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை***
> ***புனற்தரு பசுங்காய் தின்றதன் தப்பாய்***
> ***ஒன்பதிற் கொன்பது களிற்றொடு அவணிறை***
> ***பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்***
> ***பெண்கொலை புரிந்த நன்னன் போல"***[3]

என்ற பாடல் வழி அறியலாம்.

## உன்ன மரம்

இதனை இலந்தை மரம் என்றும் கூறுவர். போருக்கு செல்லும்போது இதனை நிமித்த மரமாக பயன்படுத்தியுள்ளனர். உன்ன மரம் சாய்ந்தது கண்டு செல்வ கடுங்கோ வாழ் யாதன் நாட்டுக்கு நேர்ந்த தீங்கை போக்குவதற்கு கொடை வழங்கினான். இதனை,

> ***"புன்கால் உன்னத்துப் பகைவன்"***[4]

என்னும் வரி மூலம் அறியலாம்.

தமிழர்களின் வீர விளையாட்டு ஏறுதழுவுதல். முல்லை நில மக்கள் ஒரு பெண் குழந்தை பிறந்த உடனேயே ஒரு காளை மாட்டையும் வளர்க்க தொடங்கி உள்ளனர். பெண் பருவ வயதை அடைந்ததும் காளையை அடக்குபவனுக்கே தன் மகளை மணமுடித்து தருவதாக பெண்ணின் தந்தை பறை அறிவிக்கிறார். தலைவியை விரும்பும் தலைவன் காளையை அடக்கி தலைவியை மணமுடித்து கொள்கிறான். அத்தகைய ஏறுதழுவுதல் நிகழ்வு கடம்ப மரத்தடியில் நடைபெற்றுள்ளது.

தலைவன் தலைவியை புன்னை மரத்து அடியில் சந்திக்கின்ற போது தலைவி நாணுகிறாள். தலைவன் காரணம் கேட்டபோது புன்னை எனது தமக்கை என்றாள்.

*"நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும் என்று*
*அன்னை கூறினள் புன்னையது சிறப்பே"*[5]

ஆனால் இன்று மரங்கள் அழிந்து வரும் அவல நிலை.

*"மரம் தான் மரம் தான் எல்லாம் மரம் தான்*
*மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்*
*மனிதா! மனிதனாக வேண்டுமா*
*மரத்திடம் வா*
*ஒவ்வொரு மரமும் போதிமரம்"*

என்னும் கவிஞர் வைரமுத்துவின் கவிதை தற்காலச் சூழலை சிந்திக்கத் தூண்டுவதாகும்.

**சுருங்கை**

சங்ககால மக்கள் அழகான வீடுகளிலும் மாட மாளிகைகளிலும் வாழ்ந்துள்ளனர். அதே போன்று தன் இல்லத்தின் சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் சுகாதார வசதியையும் தெரிந்து வைத்திருந்தனர். சுருங்கை என்பது கழிவு நீரை அப்புறப்படுத்தும் நவீன புதைச் சாக்கடையாகும். இந்தசுருங்கையானது மதுரை நகரமைப்பில் அமைக்கப்பட்டிருந்ததாக பரிபாடல் சான்று பகர்கின்றது.

*"நெடுமால் சுருங்கை நல்வழிப் போந்து*
*கடுமாக் களிறணத்துக் கைவிடு நீர் போலும்*
*நெடுநீர் மலிபுனல் நீள்மாடக் கூடல்*
*கடிமதில் செய்யும் பொழுது"*[6]

ஊரில் உள்ள எல்லா இடங்களிலிருந்து வரும் கழிவுநீரை புதைச் சாக்கடை வழியாக ஒன்று திரட்டி ஊருக்கு வெளியே கொண்டு செல்லும் அமைப்பும் இருந்துள்ளது என்பது புலனாகிறது.

**பயிர் சுழற்சி முறை**

பண்டைத் தமிழர்கள் விளைநிலங்களைக் கண்ணெனப் பாதுகாத்துள்ளனர். அறுவடை செய்யப்பட்டு தரிசாக விடப்பட்ட நிலத்தில் வேறு வகையான பயிர்களை பயிரிடுவதால் நிலமானது இழந்த மண் வளத்தினை மீண்டும் பெறும். இதனால் பயிரின் வளம் செழிக்கும் என்ற அறிவியல் செய்திகளைப் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர். எனவே அறுவடை செய்த நிலத்தில் மாற்றுப் பயிராக அவரையை பயிரிட்டுள்ளனர். இதனை

*"பெரும்' புனக் குறவன் சிறுதினை மறுகாற்*
*கொழுங்கொடி அவரை பூக்கும்"*[7]

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

**மட்கும் பொருட்கள்**

சங்ககால மக்கள் தாங்கள் வாழ்கின்ற புவியியற் சூழலுக்கு ஏற்ப மட்கும் பொருட்களையே பயன்படுத்தி உள்ளனர். உணவு உண்பதற்கு தேக்கு இலை, வாழை இலை, ஆம்பலிலை, தாமரை இலை, பனையோலை ஆகியவற்றை உணவு உண்பதற்கு ஏற்புடையதாக வடிவமைத்து பயன்படுத்தியுள்ளனர்.

*"வெயில்வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை"*[8]

தலைவி தனது கணவனுக்கு ஆம்பல் இலையில் இனிப்புடன் கூடிய புளிப்பான பழத்தினை சோற்றுடன் பரிமாறினாள் என்னும் செய்தி அகநானூறு பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

*"ஆம்பல் இலைய விமலை வெஞ்சோறு*
*தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து*
*விடியல் வைகறை யிடு உமுர"*[9]

இயற்கையில் கிடைக்கும் மூங்கிலை நீர் மற்றும் கள் ஊற்றி வைக்கும் கலன்களாக பயன்படுத்தியுள்ளனர். பழந்தமிழர்கள் மூங்கில் கலன்களில் மதுவினை நிரப்பி முற்ற வைத்து பின் அதனை உண்டு குரவைக் கூத்தினை ஆடிக் கண்டுகளித்துள்ளனர்.

*"வாங்கமை பழனிய நறவுண்டு*
*வேங்கை மூன்றிற் குரவையும் கண்டே"*[10]

இறந்தவர்களின் உடலை பாதுகாப்பாக புதைப்பதற்கு மண்ணால் செய்யப்பட்ட பெரிய தாழிகளை பயன்படுத்தியுள்ளனர். இது

முதுமக்கள் தாழி என்று அழைக்கப்படுகிறது. தொல்பொருள் ஆராய்ச்சியிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

*"கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே*
*......................................*
*வியன்மலர் அகன்பொழில் ஈமத்தாழி*
*அகலிதாக வனைமோ.......*"[11]

மக்கள் வீட்டில் உணவு சமைக்க பயன்படுத்தும் மண்ணால் செய்யப்பட்ட பானையினை "குழிசி" என்கின்றனர். இதனை

*"மான்றடி பழுக்கிய புலவுநாறு குழிசி"* [12]
*"கயறு பிணிக் குழிசி"*[13]

என்ற பாடலடிகள் மூலம் உணரலாம்.

பழந்தமிழரின் வீர வாழ்க்கைக்கு உணவு முறை ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. தாவரம் மற்றும் மாமிச வகைகளை உணவுகளாகவும் மருந்துகளாகவும் பயன்படுத்தி உள்ளனர். பழங்களை விரும்பி உண்டுள்ளனர்.

"சோழன் நலங்கிள்ளியின் படை வீரர்களில் முன்னால் சென்றவர்களுக்கு நுங்கினை சாப்பிட கொடுத்ததாகவும், இடையில் சென்றவர்களுக்கு பனம்பழத்தை சாப்பிடக் கொடுத்ததாகவும் புறநானூறு குறிப்பிடுகிறது.

*"தலையோர் நுங்கின் தீஞ்சோறு மிசைய*
*இடையோர் பழத்தின் பைங்கனி மாந்த*"[14]

பழந்தமிழர்கள் துரித உணவுகளை பயன்படுத்தியதாக தெரியவில்லை. காடை கண்ணியரிசி, குதிரைவாலி அரிசி, சாமை அரிசி, தனைை அரிசி, வரகரிசி, நேல்லரிசி என பல வகையினை அரிசிகளை பயன்படுத்தியுள்ளனர்.

*"புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை ஆக*"[15]
*"கொய்குரல் அரிசியோடு நெய் பெய்து சுட்டு*"[16]

## ஆடைகள்

மனிதனின் அடிப்படை தேவைகளுள் ஆடையும் ஒன்று. இவ்வாடை மனிதனின் பண்பாட்டுச் சின்னமாகவும், அணிகலன்களில் ஒன்றாகவும் விளங்குவது சிறப்பானதாகும். ஆடை என்ற சொல் சங்ககாலம் முதலே வழக்கில் இருநற்துள்ளது. இது உடம்பை அடுத்து ஒட்டியிருப்பதால் ஆடை என்று பெயர் பெற்றுள்ளது. தமிழர்கள் முதலில் இயற்கையாகக் கிடைத்த மரத்தழைகளே ஆடைகளாக அணிந்தனர். இதனை,

*"துவர்செய் ஆடை*"[17]
*"கொடுந்திரை ஆடை*"[18]

என்னும் பாடலடிகள் கூறுகின்றன. மேலும் சங்ககால மக்கள் ஆடையின் தன்மை, நிறம், உறுப்பு, பண்புகளுக்கு ஏற்ப பல்வேறு பெயர்களில் ஆடையைப் பெயரிட்டு அழைத்தனர்.

## தழையாடை

சங்ககால மக்கள் தழையாடையை தழையுடை (குறு. 125), பகைத்தழை (நற். 96), மடிவை (பதி.27), குழை (அகம். 269) எனப் பலப் பெயரிட்டுள்ளனர். பெரும்பாலும் தழை என்ற சொல்லே வழக்கில் இருந்துள்ளது. ஞாழல், ஆம்பல், குவளை, நொச்சி போன்றவற்றின் தழைகளைத் தழையாடையாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை

*"சிறுகரு நெய்தல் கண்போன் மாமலர்ப்*
*பெருந்தண் மாத்தழை யிருந்த அல்குல்*"[19]
*சிறு வெள்ளாம்பல் இளையமாகத் தழையாயினவே*"[20]

எனும் பாடலடிகள் இதனை வெளிப்படுத்தி நிற்கிறது. இவ்வுடையினை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. நீண்டகால உழைப்பின்மை மற்றும் பிற துணிகளின் பயன்பாட்டினாலும் தழையாடையின் பயன்பாடு குறைந்திருக்கலாம் என்று கூறுவதற்கு இடமுண்டு.

## முடிவுரை

தமிழர்களின் வாழ்வியலை வழிநடத்தியது இயற்கைதான். இயற்கை உணவை மட்டுமே உண்டு இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்வதே உடலைப் பேணும் ஒப்பற்ற வாழ்க்கையாகும். இயற்கையானது உலக அளவில் மனித வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளது. அது மட்டுமல்லாமல் மனித

நாகரீக வளர்ச்சியின் ஆணிவேராகவும் பண்பாட்டுத் தரவுகளாகவும் இருந்துள்ளது என்பதை இக்கட்டுரைவழி அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், தமிழண்ணல் பாடல் எண் 625 இரண்டாம் பதிப்பு-2014 செல்லப்பா வளாகம், மதுரை- 625 001.
2. திருக்குறள் மூலமும் தெளிவுரையும் பழனிதாசன் வான்சிறப்பு குறள்-271 முதல் பதிப்பு 2017 கலா ஆப்செட், காலண்டர் சிவகாசி.
3. குறுந்தொகை, புலியூர்க்கேசிகன், பாடல் எண்-292, பாரி நிலையம், 184, பிராட்வே சென்னை 600 108, 2011
4. பதிற்றுப்பத்து, புலியூர்க்கேசிகன், பாடல் எண்-61: 6, பாரி நிலையம், 184, பிராட்வே சென்னை 600 108, 2011
5. நற்றிணை, புலியூர்க்கேசிகன், பாடல் எண். 172, பாரி ஆப்செட் பிரிண்டர், சென்னை 600 013, 2001
6. பரிபாடல், எம். நாராயணவேலுப்பிள்ளை
7. பாடல் எண். 20 104 – 107, நற்பவி பிரசுரம்
8. 57வி. பசுல்லா சாலை, தியாகராய நகர், சென்னை – 600017, 2008
9. குறுந்தொகை, பாடல் எண். 82, அகநானூறு, ந.மு.வேங்கடசாமிநாட்டார் (தொகுப்பாசிரியர்), பாடல் எண். 37, 10, சாரதா பதிப்பகம்
10. அகநானூறு, மேலது. 196, 5-7
11. நற்றிணை, பாடல் எண். 276, 9-10
12. புறநானூறு, புலியூர்க்கேசிகன், பாடல் எண்-256, பாரி நிலையம், 184, பிராட்வே சென்னை 600 108, 2011
13. மேலது 165: 6
14. அகம் - 77: 7
15. புறம். 225: 1 – 2
16. புறம். 61: 5
17. புறம். 328 – 10
18. நற்றிணை: 33
19. புறம்: 275
20. கலித்தொகை, பாரத்துவாசி நச்சினார்க்கினியர், (உரை ஆசிரியர்), பாடல் எண். 130, முல்லை நிலையம்
21. 9, பாரதிநகர் முதல் தெரு, தி. நகர்
22. சென்னை – 17. 2008
23. புறம். 248

# கார்நாற்பதில் கார்கால இயற்கை எழில்

**முனைவர் மு. சாந்தினி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்*

## முன்னுரை

இறைவன் படைப்பில் அனைத்தும் அழகானது. நாம் வாழும் இவ்வுலகில் உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற இயற்கைச் சூழல் அமைந்து உள்ளது. இந்த பிரபஞ்சத்தில் வேறு எந்த கோள்களிலும் உயிர்வாழ்வதற்கேற்ற சூழல் உள்ளதா என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். நிலம், நீர், காற்று போன்ற இயற்கையாவும் இறைவன் நமக்குக் கொடுத்த வரப்பிரசாதம் ஆகும். சங்கத்தமிழர் இயற்கையோடு இணைந்து இயற்கையைப் போற்றி வாழ்ந்தனர். ஆனால் தற்பொழுது மக்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளால் இயற்கையை மாசுபடுத்துகின்றனர். உயிருக்கு ஆதாரமான நீரை நமக்குத் தரும் கார்கால இயற்கைச் சூழலைக் கார்நாற்பதின் வழி காண்போம்.

## ஆய்வு நோக்கம்

தொல்காப்பியர் ஓர் ஆண்டை கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில், முதுவேனில் என 6 பருவங்களாகப் பகுத்தார். கார்காலம் என்றாலே வினை முடிந்து தலைவன் வருவான். அவன் வரவை தலைவி எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள் என ஒவ்வொரு பருவத்திற்குரிய நிகழ்வுகளையும் வரிசைப்படுத்தி உள்ளார். சங்கத் தமிழரும் அனைத்துப் பருவங்களையும் மனதார ஏற்றுக்கொண்டு, இரசித்து வாழ்ந்தனர். ஆனால் இன்று குளங்களையும், ஏரிகளையும் ஆக்கிரமித்து வீடுகளைக் கட்டியுள்ள நகரவாசிகள் கார்காலம் என்றாலே நீரில் உடைமைகளை இழந்து படகுகளை எதிர்பார்க்கும் அவலநிலையில் உள்ளனர். இவ்வுலகைச் சுத்தப்படுத்தி பூக்களால் அலங்கரிக்கும் கார்கால இயற்கைச் சூழலைக்கார் நாற்பதின் மூலம் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

## ஆய்வுச் சிக்கல்

பொதுவாகக் கார்காலம் மனிதனை அன்றாட இயல்பு வாழ்க்கையிலிருந்து மாற்றிவிடும். காலநிலை மாற்றம் உடல்நலக் குறைவை ஏற்படுத்தும். இச்சூழலை மக்கள் அச்சப்படாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## ஆய்வு கருதுகோள்

இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் கார்காலத்தில் தலைவன் வினை முடிந்து வந்து தலைவியோடு சேர்ந்து இயற்கையை இரசிக்க வேண்டும். எறும்புகள் கார்காலத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சேமித்து வைப்பதுபோல தலைவனும் பிற பருவங்களில் வாழ்க்கைக்குத் தேவையானப் பொருட்களைச் சம்பாதித்து, கார்காலத்தை ஓய்வுக் காலமாக இரசித்து வாழ்ந்திருக்கலாம்.

## கார்நாற்பது

பதினெண்கீழ்க்கணக்கு அகநூல்களில் அளவில் சிறியதொரு நூல். இதனை எழுதியவர் மதுரை கன்னங் கூத்தனார். 40 பாடல்களை உடையது. வினை வழி பிரிந்த தலைவன், கார்காலம் தொடங்கியதால் தலைவியைக் காண விரைந்து வருகிறான். அப்பொழுது பாகனோடு பேசிக்கொண்டு வருகிறான். முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளில் பாடப்பட்டுள்ளது.

## இயற்கை எழில்

"தாவரங்கள், விலங்குகள் வாழும் பொது உலகத்தை இயற்கை என்று குறிப்பிடலாம். இயற்கை வளங்கள் என்பது பூமியில் ஏற்கனவே இருக்கும் அல்லது மனிதர்களின் தலையீடு இல்லாமல் உருவாகும் வளங்கள்

ஆகும். தாவரங்கள், நீர், காற்று, மண் போன்றவை இயற்கை வளங்கள் ஆகும்”[1].

எழில் என்பதற்கு அழகு, பொலிவு, இளமை, எழுச்சி என கழகத் தமிழ் அகராதி பொருள் தருகின்றது” [2].

நாம் எழில் என்பதை அழகு என்று பொருள் கொள்வோம்.

### இடி, மின்னல், தூது

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே” என்பது போல் மழை வருவதற்கு முன் பல அறிகுறிகள் தோன்றும். அதனைப் பார்த்தே மழை வரும் என்பதை கணித்து விடுவர். கண்ணங்கூத்தனார் இடி, மின்னல், கார்காலம் வரப்போகிறது என்பதை தலைவனுக்கு உணர்த்தும் என்று பாடியுள்ளார்.

*“இன்னே வருவர் நமரென் றெழில்வானம்*
*மின்னு மவர் தூ துரைத்து”* (கார்: 2)

இப்பாடலில் மேகம் தலைவர் இப்பொழுதே வருவார் என்பதை அறிவிக்க தூதாக மின்னல் மின்னுகிறது என்று கூறியுள்ளார். மற்றொரு பாடலில் மின்னலை வேள்வித் தீயோடு ஒப்பிட்டுள்ளார்.

*“கடிதிடி வான முரறும் நெடுவிடைச்*
*சென்றாரை நீடன்மி னென்று”* (கார்: 6)

என்னும் பாடலில் மாவடு பிளந்தது போன்ற அகன்ற கண்களை உடையவளே கடுமையாய் இடிக்கும் மேகம் நீண்ட வழியில் சென்ற தலைவரைக் காலம் தாழ்த்தாதீர் எனக் கூறி முழங்கும்.

### மழை பெய்யும் அறிவியல்

கார்மேகம் உருவாகும் விதம் குறித்து சங்க காலத்திலேயே மக்கள் அறிந்து வைத்திருந்தனர். முல்லைநில மக்களின் வாழ்வை எடுத்துரைக்கும் பத்துப்பாட்டின் மிகச்சிறிய நூலான முல்லைப்பாட்டில் கடல்நீரை முகந்து கார்மேகம் உருவாகிறது என கீழ்க்கண்ட பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*“பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு*
*கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி”*[3] (முல்லைப்பாட்டு: 4,5)

இச்செய்தி கார்நாற்பது பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன.

*“கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி”*
(கார்: 33)

*“விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்*
*பெருவிறல் வானம் பெருவரை சேரும்”*
(கார்: 34)

### ஆலங்கட்டி மழை

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது சில நேரங்களில் பனிக்கட்டியும் விழும். இதனை ஆலங்கட்டி மழை என்பர். சில நேரங்களில் பனிக்கட்டி சிறிதாகவும் இருக்கும், பெரிதாகவும் இருக்கும்.

இடியுடன் கூடிய மழைத்துளிகள் மேல்நோக்கிச் சென்று உறையும்போது ஆலங்கட்டி மழை உருவாகிறது. இயற்கையின் அதிசயங்களில் ஆலங்கட்டி மழை அற்புதமானது. இதனைப் பற்றி கார்நாற்பது பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

வரி நிறத்தையுடைய பாதிரி மலர்கள், காற்றினால் உருவாக்கப்பட்ட இளமணலை உடைய முல்லைநிலக் காட்டில் ஆலங்கட்டிகள் புரள மழை பெய்கின்றது. (கார்: 3)

*“தண்துளி ஆலி புரளப் புயல்கான்று”*
(கார்: 23)

### கார்கால மலர்கள்

கார்காலம் என்றாலே இயற்கை பல வண்ண பட்டாடை அணிந்தது போன்று பல வண்ண மலர்கள் மலர்ந்து எழில் மிகுந்து காணப்படும். குறிஞ்சிப் பாட்டில் 99 மலர்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. கார் நாற்பதில் மழைக்காலம் மலரும் மலர்களை அழகான உவமைகளுடன் கூறப்பட்டுள்ளது. இம்மலர்கள் கண்ணுக்கு விருந்தளிப்பதோடு மனதுக்கு உற்சாகத்தையும், மகிழ்வையும் தருகிறது. இதில் பல மலர்கள் மருத்துவ குணம் நிரம்பியவை.

1. **“கண்ணிய லஞ்சந் தோய்ந்தபோற் காயாவும்”** - கண்ணுக்கு இடும் மை போன்ற காயா மலர்கள்
2. **“கருவிளை கண்மலர்போல்”** - கண்மலர் போன்ற கருவிளமலர்

3. **"எரிவனப் புற்றன தோன்றி"** – தீ போன்ற தோன்றிப்பூ
4. **"அணர்த்தெழு பாம்பின் தலைபோல் புணர்கோடல்"** - பாம்பின் படம் போன்ற வெண்காந்தள்
5. **"நாஞ்சில் வலவன் நிறம்போலப் பூஞ்சினை செங்கால் அராஅம்"**- கலப்பையை உடைய பலராமனின் வெண்மை நிறம் போன்ற வெண்கடம்ப மலர்கள்
6. **"சிறுமுல்லை போதெல்லாம் செவ்வி"** – மகளிரின் பற்கள் போன்ற முல்லை மலர்கள்
7. **"வரகின் பொரிப்போல் அரும்பவிழ்ந்து"** – வரகுப்பொரி போன்ற தெறுழ் மலர்
8. **"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட"** – கார்த்திகைத் திருவிழா விளக்கைப் போன்ற தோன்றி மலர்கள்
9. **"குருகிலை பூத்தன கானம் "** - குறிஞ்சிப் பறைப் போன்ற குருகிலை
10. **"பொன்செய் குழையின் "** - பொன்குழை போன்ற குமிழ மலர்கள்

**கார்கால எழில்**

***"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்***
***துப்பாய தூஉம் மழை"***[4] **(குறள்)**

அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக விளங்கும் நீரைத் தரும் மழை பெய்யும் போது தோன்றும் அதிசயங்கள் கார்நாற்பதில் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மழைக் காலத்தில் மட்டுமே தோன்றும் வானவில் இந்திரவில் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"பவளஞ் சிதறி யவைப் போலக் கோபம்"*

பவளங்கள் சிதறியதைப் போன்ற இந்திரக்கோபம்.

மழைக் காலங்களில் காடுகள் எங்கும் செக்கச் செவேலென இந்திரக்கோபப் பூச்சிகள் சுற்றித் திரிவதை சிதறிக் கிடக்கும் பவளத்தோடு ஒப்பிட்டுள்ளார்.

***"திருந்தின் இளிவண்டு பாட"***(கார்: 15)

மழைக் காலங்களில் வண்டுகள் ஒலி அதிகமாக இருக்கும். இதனை குருந்த மரக்கிளைகளில் இருந்து வண்டுகள் "இளி" என்ற பண்ணைப் பாடும் என்கிறார் புலவர். அதனோடு சேர்ந்து தும்பிகள் இனிய குழலை ஓதும். அதனைக் கேட்ட தலைவர் கார்காலம் வந்துவிட்டதை அறிந்து தலைவியைக் காண விரைந்து வருவார்.

**முடிவுரை**

சூழ்நிலைக்கு ஏற்றவாறு தகவமைத்துக் கொள்ளும் உயிரினமே இவ்வுலகில் நிலைத்து நிற்கும். பருவங்கள் மாறும்பொழுது அதனை இரசித்து அதற்கு ஏற்றார்போல் வாழ வேண்டும். சங்கத் தமிழர்கள் அனைத்துப் பருவங்களையும் ஏற்றுக் கொண்டு அதற்கு ஏற்ற விழாக்களை நடத்தி மகிழ்வாக வாழ்ந்தனர். வினை புரியமுடியாத மழைக்காலத்தைத் தலைவியோடு சேர்ந்து இருந்து மகிழ்வாக வாழ்ந்தனர்.

**அடிக்குறிப்புகள்**


1. Wikipedia\
2. திரு. எஸ்.அனவரத விநாயகம் பிள்ளை, கழகத் தமிழ்க் கையகராதி, கழக வெளியீடு, 2011.
3. முல்லைப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010
4. பி.எஸ். ஆச்சார்யா, திருக்குறள், நர்மதா பதிப்பகம், 2015.

# ஐங்குறுநூற்றில் ஐந்திணைக் காட்சிகள்

**திருமதி. சு. கிரிஜா**
*துறைத்தலைவர் & உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), தி.தெ.மா.நா.சா.கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

## முன்னுரை

**'ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி**
**மூங்கில் போல் முசியாமல் வாழும்'**

பெருமை பெற்றது நம் தமிழ் மொழி, அத்தகு தமிழ் மொழியில் சங்க கால மக்களின் வாழ்வியலை ஓவியம் போல் நமக்கு எடுத்துக்காட்டுவன எட்டுத்தொகை நூல்கள். சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தியுள்ளனர் என்பது பாடல்கள் வழி அறிய முடிகிறது, தமிழ் மக்களுக்கு இயற்கையின் மேல் இருந்த ஈடுபாடும், இயற்கையை பாடலுக்கு பின்னணியாக அமைக்கும் முறையும் வியப்பைத் தருகின்றன, அவர்களின் அன்றாட வாழ்வில் அமைந்து பின்னிப் பிணைந்துள்ள எண்ணிலடங்கா இயற்கை வளமும் அவை ஐங்குறுநூற்றில் எவ்வாறு காணப்படுகின்றன என்பது பற்றி இக்கட்ரையில் காண்போம்,

## ஐந்திணை அமைப்பு

சங்க இலக்கியங்கள் தமக்கென பல சிறப்புகளைக் கொண்டுள்ளது, உலக இலக்கியங்கள் அனைத்தையும் காட்டிலும் காதல் வீரம் என்னும் பொருண்மைகளைக் கொண்ட சங்கப் பாடல்கள் ஏட்டில் எழுதாத இலக்கியங்களாக காற்றில் கலந்த கவிதைகளாக. வாழும் வாய்மொழி இலக்கியங்களாக மக்கள் நாவில் தவிழ்ந்து. பின்னரே மெல்ல மெல்ல ஏட்டில் குடிகொண்டன. பின்புதான் தமக்கென செம்மையான இயல்புகளைக் கொண்டு ஒளிர்ந்து செம்மாந்து சிறக்கின்றன, அத்தகு இலக்கியங்கள் உணர்த்தும் மக்களின் வாழ்க்கை அவரவர் வாழும் சூழல் நோக்கி அமைந்ததே, ஐந்நிலப்பாகுபாடு என்று உண்டானது என்பதை நாம் அறிவோம், ஆனால் சங்கத் தமிழர் இயற்கையோடு அமைந்த நிலப்பரப்பைக் கண்டு வியப்புற்று அதன் இயல்பிற்கு ஏற்ற வகையில் பகுத்துள்ளான்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமண லுலகமும்**
**முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்த லெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"**
**(தொல்,பொருள்.நூற்பா 5)**

என்று தொல்காப்பியர் பாகுபடுத்திக் கூறியுள்ளார், மக்களுடைய சூழலுக்கு ஏற்ற வகையில் திணைகளின் அமைப்பு, மலை சூழ்ந்த பகுதி குறிஞ்சியாகவும். காடு மண்டிய வழி முல்லையாகவும். ஆறு ஓடிய வழி மருதமாகவும். கடல் பரந்த வெளி நெய்தலாகவும் பழந்தமிழர் பாகுபடுத்தி 'நன்னிலம்' என்று உலகிற்கு உணர்த்தினர், மேலும் பருவ மாறுபாட்டினால் முல்லையும் குறிஞ்சியும் வளங்குறைந்து பாலையாகிவிட்டது

**'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உற்றுப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'**
**(சிலம்பு காடுகாண் காதை 64-66)**

என்கிறார் இளங்கோ, இவ்வாறு அமைந்த திணை அமைப்பு, இயற்கை நில அமைப்பினை ஒட்டியதாகும். இவ்வாறு பகுக்கப்பட்ட திணைகளுக்கென்று தனித்தனி கருப்பொருட்களை தொல்காப்பியர்

**'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தியாழின் பகுதியொடு தொகை'**
**(தொல்,பொருள்.நூற்பா 18)**

என்கிறார். இதன்படி மக்கள், விலங்கு, பறவை, ஊர், நீர், மரம், உணவு, பறை,

யாழ், பண், தொழில் என ஒவ்வொரு திணை மக்களும் தங்களின் திணை, உணவு, உடை, உறைவிடம், தொழில், அகவொழுக்கம், தெய்வ வழிபாடு போன்ற வாழ்வியல் கூறுகளை இந்தச் சூழல் அடிப்படையிலே அமைத்துள்ளனர், மலர்கள், இலைகள், காய்கள், செடி கொடிகள், மரங்கள் போன்றவை வளம்பெற்று காணப்படுவது போன்று மக்களும் நோய்கள் இல்லாமல் இயற்கையோடு இயைந்து வாழ்ந்துள்ளனர்,

**குறிஞ்சித் திணைக் காட்சிகள்**

மணல், மணல் குன்றுகளை பற்றிய குறிப்புகள் குறிஞ்சி நிலத்தில் குறிப்பிடப்படவில்லை. மலைகள், குன்றுகள், கற்கள், பாறைகள் போன்ற பதிவுகளே ஐங்குறு நூறு நூற்றுப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன,

குறிஞ்சி நிலத் தலைவன் நாட்டில் மலைகள் உயர்ந்தோங்கி நிற்கின்றன, அத்தகைய மலைகள் நீலமணிப் போன்ற நிறதில் காட்சியளிக்கின்றன,

**'மணி நிறமால் வரை மறைதொறு, இவள்**
**அறை மலர் நெடுங்கண் ஆர்த்தன பனியே'**
**(நற்,பா95)**

குறிஞ்சி நிலத்தில் இருந்திடும் மலைகள் திருமாலில் நீல மணி நிறம் போன்று காட்சியளிப்பதாகக் வரையப்பட்டுள்ளது.

குறிஞ்சி என்பதற்கு 'குறி' 'அடையாளம் 'காலம்' 'அளவு' 'தடவை' என்று பொருள்படும். நன்னிலத்தில் குறுகுதலான நிலம் எதுவெனில் மலையம் மலையை சார்ந்த நிலமும் என்று காரணம் கண்டுரைப்பர்''. குறிஞ்சி நில மக்கள் மலைகளைத் தங்கள் வாழிடமாகக் கொண்டு கலிடைக் குறிஞ்சி அமைத்ததனை

**'குன்றகத் ததுவே குழுமிளை சீறூர்''**

கொறுகச்சி முளைத்து அடர்ந்த பெரிய மலைப் பக்கத்தில் சிறுகுடி அமைந்திருந்ததை,

**'எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி'**

என்று குறிஞ்சி நிலத்தாரின் இயற்கை சார்ந்த இருப்பிடச் நற்றினைப் பாடலடிகள் விளக்குகின்றன, மேலும் சிற்றூர்களின் நான்கு பக்கங்களிலும் முள்வேலி இட்டிருப்பர், குரம்பைகளுக்கு புல்வேய்வர் என்றெல்லாம் குறிஞ்சித் திணையின் இருப்பிடங்களைச் சங்கப் பாடல்கள் விளக்குகின்றன, மேலும் இத்திணை மக்கள் தேனும் திணையும் உண்டு விலங்குகளை வேட்டையாடி வாழும் வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர்,

**"புள்ளூற்றுக் கசிந்த தீம்தேன் கல்அளைக்**
**குறக் குறுமரீக்கள் உண்ட''**

என கல்முன்ல்பின் குழிகளில் வடிந்து நிற்கும் தேனை குறவர்களின் இளம்மக்கள் வழித்து உண்பர், இவை மட்டுமல்லாமல் திணையரிசியையும் கிழங்கையும் உண்வாக உட்கொள்வர் (ஐங்.213) உணவுப் பொருள் இல்லாத நாட்களில் யானையின் மருப்புகளை விலைக்கு விற்றுவிடுவர் என சங்கப்பாடல்கள் நமக்கு தெரிவிக்கின்றன,

**"கோடு நுவையா கோள்வாய் நாயொடு**
**காடு தேர்ந்து அசைய வயமான் வேட்டு''**

என வேட்டைத் தொழில் பற்றியும், சுனை விளையாட்டு (ஐங் 224) பற்றியும் அழகாக காட்சிபடுத்தியுள்ளனர், சங்ககாலப் புலவர்கள் குறிஞ்சி நிலத்தின் எந்தப் பகுதியைக் கண்டாலும் தன் பாடல்களில் பதிவு செய்தனர்.

**முல்லைத் திணையின் காட்சிகள்**

முல்லைத் திணை காடும் காட்டைச் சார்ந்த பகுதியும் உடையது. முல்லை நிலத்தில் வாழும் மக்கள் ஆநிரைகளை மேய்த்து காத்தலும், காட்டின் இயற்கைப் பொருட்களை அனுபவித்தலும், பசுவின் பால் தயிரை உணவாகக் கொள்ளுதலும், தன்னை தேடி வருகின்ற உறவினர்களுக்கு விருந்தோம்பியும், ஏறுதழுவுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

முல்லை, தோன்றி, காயா, கொன்றை போன்ற மலர்கள் மல்ர்ந்து கானகம் எழிலுற காட்சியளித்தது.

**“சென்னிய மருங்கின் பன்மலர் தாஅய்ப்**
**புலம் தீர்ந்து இனிய ஆயின புறவே”**
**(ஐங்.பா. 495)**

மழை பொழிந்தமையால் பல்வகை மலர்க் கூட்டங்களும் மலர்ந்து முல்லை நிலம் பொலிவு பெற்று காட்சியளிக்கிறது,

**“தான் அவள் சிறுபுறம் கவையினள் -**
**நன்றும் நறும் பூந்தண புறவு அணிந்த**
**குறும்பல் பொறைய நாடு கிழவோனே”**
**(ஐங்.பா. 19)**

என்ற பாடல் வரிகள் பலவகையான பூக்கள், மலர்கள், சிறிய குன்றுகள் நிறைந்த நிலம் முல்லை நிலம் என்பதை நமக்கு காட்சிப்படுத்துகின்றது,

**மருதம் திணைக் காட்சிகள்**

மருதம் வயலும் வயலைச் சார்ந்த அழகிய பகுதி. மனதிற்கு இனிமை தரும் பகுதி வற்றாத வயல் வளத்தால் சுற்றத்தாரையும் மற்றவர்களையும் உபசரித்து கூடி வாழும் செம்மை நெறியை உணர்த்தி, அதன் வழியாக உலக நாகரீக வாழ்வு உருவாக்கி வாழ்ந்த மருதநில மக்களின் பண்பும், வாழ்வும், வளமும் வரலாற்றின் அடிப்படை செய்தி. மருதநிலம் வண்ண மலர்களும், முதலை, மீன் போன்ற உயிரினங்களைக் கொண்ட குளிர்ந்த நீர் நிலைகள் கொண்டு விளங்கியது.

**“பல்லிதழ் நீலமொரு நெய்தல் நிகர்க்கும்**
**தண்துறை ஊரன்**
**முதலைப் போத்து முழுமீன் ஆகும்**
**தண்வரை ஊரன்” (ஐங்.பா.2)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

**“மாரி கடிகொளக், காவலர் கடுக**
**வித்திய வெண்முளை களவன் அறுக்கும்**
**கழனி ஊரன் மார்புற மரீஇத்”**
**(ஐங். மருதம் 29 : 1-3)**

மாரி மிகுதியாக பெய்யும், காவல் செய்வோரும் விரைவாக வந்து பார்வையிட வெள்ளிய முளைகளை அலவன் (நண்டு) அறுத்து திரியும் கழனிகளையுடைய ஊரன் என்று கூறுமிடத்து வித்தை முளைக்கட்ட வைத்து விதைக்கும் வழக்கத்தையும், மழை மிகுதியாக பெய்து இயற்கையை செழிக்கச் செய்ததையும் எழிலுறக் காட்சிப்படுத்தியுள்ளார்.

**நெய்தல் திணைக் காட்சிகள்**

கடலும், கடலைச் சார்ந்த பகுதியும் நெய்தலாகும், பரந்துபட்ட நிலப்பரப்பைக் கொண்டது. நெய்தல் திணையில் கடல் என்பது பௌவம், அறைபுனல் என்ற மூன்று பெயர்களில் அறியப்படுகின்றன.

சிப்பியில் பிறக்கும் முத்திலும், சங்கில் பிறக்கும் முத்துதான் சிறந்த முத்து என்பர். கடறக்கரையில் வாழும் மீனவ குலத்தினர் ஆனால் தாம் கண்டெடுத்த சங்குகளில் இருந்து கிடைக்கும் முத்துகளை ஏனைய நிலத்தில் வாழும் மக்களுக்கு விற்பனை செய்வார் என்பதை

**‘வளைபடு முத்தம் பரதவர் பகரும்’**
**(ஐங்.பா.195)**

என்ற வரி சங்க கால இயற்கை வளத்தை பகர்கிறது,

மேலும் நெய்தல் திணையில் கடலில் கிடைக்கின்ற பொருளை அம்மூவனார் அழகுற காட்சிப்படுத்துகின்றனர் இக்காட்சி புனைவினை

**“வலம்புரி உழுத வார் மணல் அடைகரை**
**இலங்குகதிர் முத்தம் இருள்கெட இமைக்கும்**
**துறைகெழு கொண்க! நீ தந்த**
**அறை புனல் வால்வளை நல்லவோ தாமே”(ஐங்.நெய்.193:1-4)**

என்றும் பாடல் அடிகளில் காண முடிகிறது. இப்பாடலில் கடலில் கிடைக்கக்கூடிய வலம்புரிச் சங்கு மணல், இயற்கை முத்துக்கள், ஒலிக்கும் நீரையுடைய கடல் தலைவி அணியக்கூடிய சங்கால் செய்யப்பட்ட வெண்மையான வளையல் ஆகியவற்றை கவினுற காட்சிப்படுத்தப்பட்டுள்ளது,

**‘கடலின் நாரை இரற்றும்**
**மடல் அம் பெண்ணை அவனுடைய நாடே”**
**(ஐங்.நெய்.114 :3-4)**

என்ற பாடல் வரிகள் கடலைவிட்டு நீங்கி வந்த நாரைக்கு தலைவனின் காட்டில்

உள்ள பனை மரமானது தங்குவதற்கு இடம் கொடுத்ததாம்.

**‘பெருங்கடற்கரையது சிறுவெண்காக்கை**
**இருங்கழி அயிரை ஆரும்’’**
**(ஐங்.நெய்.164:1-2)**

என்றும்

**“பெருங்கடற்கரையது சிறுவெண்காக்கை**
**இருங்கழி இனக்கெடிறு ஆரும்’’**
**(மேலது.167 :1-2)**

இந்தப் பாடல் வரிகள் பெரிய கடலில் கிடைக்கக்கூடிய உயர்ந்த இனத்தையுடைய பெரிய மீன்களை உண்ணாமல் இருங்கழி மற்றும் அறுங்கழியில் கிடைக்கக்கூடிய தாழ்ந்த மீன் வகையான அயிரை மற்றும் கூட்டமாக வாழக்கூடிய ‘கெடிறு’ எனப்படும் கெழுத்தி மீனை பெரிய கடலில் வாழும் சிறுவெண் காக்கை உணவாக உட்கொண்டமை இயல்பாக நெய்தல் நிலத்தில் நடைபெறக்கூடிய செய்தியை காட்சிபடுத்தியுள்ளார்.

உப்புக்கும் மீனுக்கும் நாள் முழுக்க உழைக்கும் மக்களின் நிலை. கடல் மேல் கலம் செலுத்தி வாணிபம் செய்யும் செல்வநிலை போன்ற நெய்தல் நிலம் சார்ந்த செய்திகள் அறியப்படுகின்றன.

**“உலகு கிளர்ந்தனை உருககெழு வங்கம்**
**புலவுத் திரை பெருங்கடல் நீரிடைப் போழ**
**இரவும் எல்லையும் அசைவின்றாகி**
**விரை சொல் இயற்கை அங்கூழ் ஆட்டக்**
**கோமலர் திணி மணல் அகன்றுறை நீகான்**
**மாடஒள்ளெரி மருங்கறிந்து ஒய்ய’’**

என கடல் நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் பெரிய அளவிலான கப்பல், கடற்பயணம், கலங்கரை விளக்கம் என கடற்கரை, உப்பங்கழி ஆகியவற்றுக்கும் அப்பால் விரிந்து விளங்கும் கடல் வாழ்வு பற்றி தெரிந்து கெள்ள முடிகின்றது,

**பாலைத் திணைக் காட்சிகள்**

வளம்மிக்க குறிஞ்சியும், முல்லையும் வறண்டு வெம்மையின் வறட்சி தாளாமல் வறட்சி நிலமாகக் காட்சியளித்ததை பாலை எனக் கூறினர், இந்நிலத்தில் கதிரவனின் கடும் வெப்பம காணப்பட்டது. பாலை நிலங்களில் கோடையின் வெப்பத்தால் தளர்ந்து வலிமை குன்றிய யானையும், புலியும், செந்நாயும் காணப்பட்டன. பாலை, இருப்பை, கள்ளி, சூரை முதிலிய மரங்களும், மராம் பூவும் இந்நிலத்தில் காணலாம் எருமையும், பருநதும் பாலையின் புள்கள்.

பாலை நிலங்களில் மணல் குன்றுகள், வெண்மை மணல் பிளவு போன்ற இடங்கள் காணக்கிடக்கின்றன,

**“ஞெலி கழை முழங்கு அழல் வயமா வெரூஉம்**
**குன்றுடை அருஞ்சுரம் செலவு அயர்ந்தனையே**
**நன்று இலஇ கொண்க நின் பொருளே’’**

என்ற பாடல் வரிகளில் பாலை நிலத்தில் குன்றுகள் காணப்பட்ட காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

போகில் என்னும் பறவை பாலை நிலத்தில் வாழும் என்பதையும்

“போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ்சுரம்” வெப்பம் மிகுந்த மணல் பரப்பில் போகில் பறவை பறக்க முடியாமல் இருப்பதை இப்பாடல் பதிவு செய்கிறது.

பாலை நிலத்தில் கொடிய கோடைக்காலத்தில் வழியின் சுரங்கள் கொதித்து கிடக்கின்றது, கோடைச்சூரியினின் கதிர்கள் மலைகளை பிளக்குமாறு இருந்திருக்கின்றன.

**“உயர்கரைக் கான்யாற் றவிர்மணல் அகன்றுறை**
**வேனிற் பாதிரி விரி மலர் குவைஇத்**
**தொடலை தைஇய மடரவன் மகளே’’**
**(ஐங்.பாலை.361 :1-3)**

“உயரமான கரையையுடைய காட்டாற்றின் மணல் பரந்த அகன்ற துறையினிடத்தே, வேனிற் காலத்தில் பூத்துக் குலுங்கும்

பாதிரியின் விரிந்த மலர்களைத் தொகுத்துக் குவித்து தொடுத்தபடியிருக்கும் பெண்ணே" என்று கூறுவதன் மூலம் பாதிரி பூவின் விரிந்த மலர்களைத் தொடுத்து பெண்கள் சூடியிருக்கின்றனர் என்ற செய்தியினை அறிய முடிகிறது,

**முடிவுரை**

தொல்காப்பியர் நிலங்களை ஐந்தாகப் பிரிக்கின்றார், அந்த ஐவகை நிலங்களில் காணலாகும் காட்சிகளையும் அவற்றின் சிறப்பு, இயற்கையின் சிறப்பு ஆகியவற்றை ஐங்குறுநூற்றுப் பாடல்களின் வழி அறிய முடிகிறது, மேலும் அந்த கால மக்கள் வாழ்ந்த இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும் அறிய முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**


1. மோகன்தாஸ் ராமசாமி - ஐங்குறுநூறு கலைஞன் பதிப்பகம் 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை.
2. இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம 2, சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், சென்னை.
3. உ.வே.சா.டாக்டர் - சிலப்பதிகாரம் உவேசா நூல் நிலையம் 2, அருண்டேல் கடற்கரை சாலை, பெசண்ட் நகர், சென்னை.
4. ச.வே.சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் முழுவதும் முனைவர் (ப.நி) மணிவாசகம் பதிப்பகம் 5, புலியூர் தேசிகன் - எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஸ்ரீ செண்பகா பதிப்பகம்.

# குற்றால சாரலும் குறவஞ்சியும்

**முனைவர் தெ. மேகநாதன்**
*பேராசிரியர் ஒருங்கிணைப்பாளர், தமிழியல் துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்**
*குற்றாலம் என்று கேட்டவுடன் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் அருமையான நதிகளும் இயற்கை வளம் நிறைந்த பகுதிகளும் தான் நம் நினைவுக்கு வரும். குற்றால மழை சாரலிலே மனதை தொலைத்தவர்கள் அதிகம். அந்தக் குற்றால மலையின் இயற்கை எழிலினை தினமும் கண்டுகளித்து ரசித்துக் கொண்டிருக்கும் குற்றாலநாதரையும் குற்றால மலையின் இயற்கை வளத்தையும் அழகுறக கண்டுணர்ந்த திரிகூட ராசப்ப கவிராயர் குற்றாலக் குறவஞ்சி என்ற இலக்கியத்தை படைத்தார். அதில் உள்ள இயற்கையின் அழகினை ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

## ஆய்வு முன்னுரை

திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. குறவஞ்சி நூல்களுள் மிகவும் சிறப்பு பெற்ற நூலாக கருதப்படுவதால் இந்நூல் கவிதைக் கிரீடம் என்று அழைக்கப்படுகிறது. குற்றால மலையில் உள்ள இயற்கை வளங்களை கவி நயத்தோடு அனைவரும் உணரும் விதமாக குற்றாலக் குறவஞ்சி என்ற இலக்கியத்தை படைத்து அதில் குற்றாலத்திள் இயற்கை எழில் மிகுந்த அழகுகளை கவிதையாக்கி காலத்தால் அழியாத படிக்க படிக்க தெவிட்டாத, தெள் அமுதாக விளங்கக் கூடிய குற்றாலக் குறவஞ்சியில் உள்ள இயற்கையின் சிறப்புகளைக் இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

## இயற்கை

இயற்கை என்பது உலகின் தோற்றங்களையும் உயிரியல் இனங்களையும் குறிக்கிறது. உயிரியல் கோட்பாட்டின்படி பண்டையக் காலம் முதல் இக்காலம் வரை இயற்கையை பற்றிய புரிதல் சற்று குறைவாகத்தான் உள்ளது என்பதை புரிந்துக் கொள்ள முடிகிறது. நேச்சர் என்ற சொல்லின் பல்வேறு பயன்பாடுகளுக்கு மத்தியில் இச்சொல் நிலவியல் மற்றும் வானவியல் என்ற பொருள்களில் குறிப்பதாக உள்ளது. அதனடிப்படையில் அங்கு தாவரங்கள் விலங்குகள் வாழ்வதால் அதை இயற்கையான உலகம் என்று அழைக்கின்றார். இவ்வுலகில் மனிதன் என்ற இனம் தோன்றியவுடன் முதன் முதலில் இயற்கையைத் தான் வழிபட்டுள்ளான் என்பதை பல வரலாற்று அறிஞர்கள் தங்களுடைய ஆய்வுகளில் கூறியுள்ளார்கள். தமிழில் தோன்றிய முதல் நூலான தொல்காப்பியத்தில் இயற்கையை 4 வகையான நிலங்களாக பிரித்து அவற்றிற்கு தனியாக தெய்வங்களையும் படைத்துள்ளதை அறிய முடிகிறது.

**“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்
எனச் சொல்லிய முறையான் சொல்லவும்
படுமே” (தொல் பொரு 5)**

உலக நூல்களில் முதன்மை இடம் பெறும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவா் முதல் பாடலில் இயற்கையின் படைப்பு தெய்வமான சூரிய பகவானை வணங்கி தொடங்குகிறார்.

**“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு”**

என்ற குறள் மூலம் நம் முன்னோர்கள் இயற்கையை தன்னுடைய குலச்சாமியாக வழிப்பட்டதை அறிய முடிகிறது. நம் முன்னோர்கள் இயற்கையால் தான் மனித வாழ்வு செம்மையாக நடைபெறுகிறது

என்பதை உறுதியாக நம்பினர். அதனால் தான் தன்னுடைய வீட்டில் எந்த செயல் செய்தாலும், விளைநிலங்களில் பயிர் செய்யும் போதும் சூரிய பகவானை வணங்கி தான் தங்களுடைய செயலை தொடங்கி வெற்றிகரமாக முடித்தார்கள். அதை நினைவு கூறும் விதமாகத்தான் தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டது தமிழில் புகழ் பெற்ற காப்பிய இலக்கியமான சிலப்பதிகாரத்தை தொடங்கும் போது தமிழர்களின் குலத் தெய்வமான இயற்கையை வணங்கி தொடங்குகிறார்.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றுதும்**
**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்"**

என்று இயற்கையின் முழுமுதற் படைப்பாக கருதப்படும் நிலா, சூரியன், மழை ஆகியவற்றை நம் முன்னோர்கள் வணங்கியதை அறிந்துக் கொள்ள முடிகிறது.

**குற்றாலக் குறவஞ்சியின் இயற்கை வளம்**

குற்றால குறவஞ்சி இயற்கையின் அதிசயங்களை மிகவும் அழகாக வெளிப்படுத்துகிறது. தமிழகத்தின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் இயற்கை பொழிலுடன் அமைந்திருக்கும் குற்றாலத்தின் சிறப்பையும் அங்கு கோயில் கொண்டுள்ள குற்றாலநாதரையும் பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்பெற்றதால் திருகுற்றாலக் குறவஞ்சி என்று அழைக்கப்படுகிறது. தமிழில் படைக்கப் பெற்ற அத்தனை இலக்கியங்களிலும் இயற்கை பற்றிய குறிப்புகள் உள்ளன. குற்றாலக் குறவஞ்சியில் முதல் பாடலில் குற்றாலநாதர் கொன்றை மலரினால் தொடுக்கப்பெற்ற மாலை சூடியோன் தாமரை மலர் போன்ற பாதம், குற்றால மலைகளில் பாயும் அருவிகள், கற்பக மரம் போன்ற இயற்கை பற்றிய குறிப்புகள் உள்ளன,

**"பூமலி இதழி மாலை புனைந்த குற்றாலத்து ஈசர்**
**கோமலர்ப் பாதம் போற்றிக் குறவஞ்சித் தமிழைப்பாட**
**மாமதத்து அருவி பாயும் மலை என வளர்ந்த மேனிக்**
**காமலி தருப்போல் ஐந்து கை வலான் காவலானே"**

குற்றாலக் குறவஞ்சிக்கு முன் தோன்றிய திருவாசகத்திலும் கொன்றை பூவின் சிறப்புகளையும், தாமரை பூ போன்ற பாதம் உடையவன் என இயற்கையை சிவபெருமானின் மேனிக்கு உவமையாக, மாணிக்கவாசகர் கூறியுள்ளதையும் அறிய முடிகிறது.

**"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன்**
**வானேயும் பெரால்வேண்டேன் மண்ணாள்லான் மதித்துகிறேன்**
**தேனையும் மலர்கொன்றைச் சிவனே எம்பெருமான்**
**மானேயுள் அருள்பெருநாள் என்றென்றே வருந்துவனே" (திரு. 16)**

**"வருந்துபவநின் மலர்பாதம் அவை காண்பாள் நாயடியேன்" (திரு. 17)**

குற்றால மலையின் அழகைக் கண்டும் அங்கு விளையக்கூடிய பழ வகைகள், மூலிகைகள் போன்ற இயற்கையின் அழகையும் வருணித்து அதோடு குற்றால அருவியின் பேரலகையும் கூறி இத்தனை சிறப்புடைய இயற்கையின் அரிய படைப்பான குற்றாலத்தில் வீற்றிருக்கும் குற்றாலநாதரை குற்றால மலையின் இயற்கை அழகோடு ஒப்பிடுகிறார்,

**"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்**

**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**
**தேனருவித் திரையெழுப்பி வானின்வழி ஒழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**
**கூனல்இறம் பிறைமுடிக்க வேணிஅலங்காரர்!**
**குற்றாலத்திரிகூட மலை எங்கள் மலையே''**

இந்நாட்டிலே குற்றாலத்தை போல குளிர் மிகுந்த மலை உண்டு ஆனால் குற்றாலத்தை போல மக்கள் நீராடுவதற்கென்றே அமைந்த சீரான அழகுடைய அருவிகளை உடைய மலைப்பகுதிகள் இல்லை.

குற்றால அருவிகளின் அழகை பார்ப்பதற்கு காண கண்கோடி வேண்டும் என்பதை நினைவுப்படுத்தும் விதமாக குற்றாலத்தின் இயற்கை வளத்தை பற்றி திருஞானசம்பந்தர் பதிகம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

**''மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி**
**குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்''**

நாங்கள் வாழ்கின்ற குற்றால மலையிலே குறவர்கள் பயிரிடுவதற்காக பல வகையான திணைப்பயிர்களும், வாசன மரங்களான, அதில், குங்குமம், சந்தனமரம் போன்றவை காணும் இடம் எல்லாம் பரவியிருந்தன.

**''வேடுவர்கள் திணைவிரைக்கச் சாடுபுனந்தோறும்**
**விந்தை அகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்**
**காடுதொறும் ஒடிவரை ஆமுகுறி பாயும்**
**காகமணு காமலையில் மேகநிரைகாயும்**
**நீடுபல வீசர் கயிலாசகிரி வாசர்**
**நிலை தங்கும் திரிகூடமலை எங்கள் மலையே''**

என்ற பாடல் வரிகள் மூலம் குற்றால மலையின் இயற்கை வளத்த அறிய முடிகிறது. இத்தேசத்திலே சிவபெருமான் கொல்லிமலை, பழனி மலை, விந்தை மலை, இமய மலை, சுவாமி மலை, வேலி மலை என பல மலைகளில் வீற்றிருந்தாலும் குற்றாலநாதராக வீற்றிருக்கும் குற்றால மலையின் இயற்கை வளம் எல்லா மலைகளையும் விடச் சிறந்தது என்று குற்றாலக் குறவஞ்சி கூறுவதை அறிய முடிகிறது.

**''இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே**
**சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே**
**தோழிமலை நாஞ்சில் நாட்டு வேல்விமலை அம்மே**
**செல்இனங்கள் முடிவு கொட்ட மயிலினங்கள் ஆடும்**
**திரிகூடமலை யெங்கள் செல்வமலை யம்மே''**

குற்றாலத் தலத்திலே குற்றால நாதரை வணங்கி திருஞான சம்பந்தர் குற்றால மலையில் இயற்கை வளத்தை அழகாக பாடி மகிழ்ந்ததை கீழ்காணும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

**''செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்**
**கொல்லை முல்லை மெல்லரும் பீனுத் குற்றாலம்''**
**நீல நெய்தல் தள் சுணை சூழ்ந்த நீன் சோலைக்**
**கோல மஞ்ஞை பெடையொடாருள் குற்றாலம்**

## ஆய்வு முடிவுரை

இயற்கையை வணங்கி தன்னுடைய உயிருக்கு மேலாக போற்றி வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை தமிழில் தோன்றிய இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. சிவபெருமான் மீது தீராதக் காதல் கொண்ட திரிகூட ராசப்ப கவிராயர் குற்றாலநாதரின் சிறப்புகளை மட்டும் கூறாமல் குற்றால மலையின் இயற்கை வளத்தையும் அழகுற வர்ணித்துள்ளது அவருக்கு இயற்கை மீதுள்ள ஈடுபாட்டை உலகறியச் செய்கிறது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. உரை புலியூர்க் கேசிகன் திருக்குற்றாலக் குறவஞ்சி சாரதா பதிப்பகம், சென்னை – 600 014.
2. சிற்பி பாலசுப்பிரமணியம் - திருக்குறள் தாமரை பப்ளிகேஷன்கள் (பி) லிட். சென்னை - 600 098.
3. இளம்பூரனைனார் - தொல்காப்பியம் பொருதிகாரம் கௌரா பதிப்பகம், சென்னை.
4. புலியூர்க் கேசிகன் - சிலப்பதிகாரம் (தெளிவுரை) பாரி நிலையம், சென்னை – 600 001.

# சங்க இலக்கியத்தில் இயற்கை

**ச. மணிவண்ணன்**
*மூன்றாம் நிலை நூலகர்*
*கிளைநூலகம், கன்னங்குறிச்சி, சேலம் மாவட்டம், தமிழ்நாடு*

## முன்னுரை

நம் தாய் மொழியாம் தமிழ் மொழி தொன்மை வாய்ந்த மொழியாம். இது இலக்கிய வளம் நிறைந்த மொழி. சங்க இலக்கியத்தில் இயற்கை பற்றிய பல குறிப்புகள் உள்ளன. சங்க இலக்கியம் காலத்தாற் முற்பட்டது. இயற்கையை, உள்ளது உள்ளவாறு உரைப்பது. சங்ககாலப் புலவர்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்தவர்கள். **தொல்காப்பியம்** கூறும் நிலம், பொழுது ஆகிய இரண்டின் இயல்பு இயற்கை எனப்படும். சங்கத்தமிழ் இலக்கியங்கள் தோன்றி, வளர்ந்த ஒவ்வொரு காலச் சூழ்நிலையிலும், அவை பெரும்பாலும் இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பற்றி பாடப்பட்டுள்ளன. இயற்கை என்பது இயல்பானது. மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்.

## கடற்கரை

நீலத்திரைகடல், நிலாப்பரந்த வெண்மணலைக் கட்டியணைந்து முத்தமிடும் கவினொழுகும் இடமே கடற்கரை. இயற்கையின் எழிலைக் கண்டு நீங்காத இன்பப்பெருக்கிலே நிலைத்துவிட வேண்டுமாயின் அது கடற்கரையிலேதான் சாலும். **மூலைக்கடலினை வானவளையம் முத்தமிட்டே தழுவி முகழ்த்தல், 'நெரித்த திரைகடல்', 'நீலவிசும்பு', 'திரித்த நுரை', 'சின்னக்குமிழ்கள்',** விண்ணைப்பிடிக்கவும், மண்ணை இடிக்கவும் விரையும் அலைகளின் விடாமுயற்சி! முயற்சியில் வெற்றிபெறும் அலைகளின் மகிழ்ச்சி ஆரவாரம்! ஓங்கார ஒலி! இவையெல்லாம் கண்ணுக்கும், கருத்துக்கும் பெருவிருந்து!

நாம் கண் முன்னே காணும் கடற்கரை, இன்று பிரிந்தவர் கூடும் பெருமைசால் இடமாகவும், வருந்துவோர் களிக்கும் மனமகிழ் மன்றமாகவும், புதியவரை நண்பராக்கும் புதுமைசேர் கூடமாகவும், கவின்கண்டு களிக்கும் கற்பனைக் கழகமாகவும் காட்சித்தருகின்றன.

பகலெல்லாம் உழைத்துச் சோர்ந்து மெலிந்த மக்கட்குக் கடற்கரையே சொர்க்கம்! எண்பது கோடி நினைந்து எண்ணி மனம் புண்பட்டாருக்குக் கடற்கரையே இன்ப - அமைதிப் புகலிடம்! கல்லாதவரையும் கவிஞராக்கும் கற்பனைப் பள்ளி! எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து யாரோவென்றிருந்த இந்த ஆடவரையும் மகளிரையும் இணைத்து, வாழ்க்கைத் துணைவராக்கும் இல்லறக் கல்வி நிலையம்! இக்கடற்கரையே **நெய்தல்** நிலம் என வழங்கப்படுகிறது.

## நெய்தல் நிலம்

பழந்தமிழ் சான்றோர்கள் நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்துள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்பனவே அவை. எனினும், உலகம் நானிலம் என்றே வழங்கப்படுகிறது. காரணம், நம் தமிழ்ப் பெருநாட்டில் இயற்கையாய் அமைந்த பாலை என்ற ஓர் தனி நிலப்பகுதியே இல்லை; ஆதலின் அது தனி நிலமாகவே கருதப்படவில்லை என்பதுதான். சிலபல ஆண்டுகளில் வான்வளம் பொய்க்குமாயின், செழுமை கொழிக்கும் நிலப்பகுதிகளான முல்லை, குறிஞ்சி முதலியன ஞாயிற்றின் வெம்மைக்கு இலக்காகி, பசுமைத் தவழும் மரம், செடிகொடிகள் அனைத்தும் கருகித் தீய்ந்து, கவினழிந்து காணும் அக்காலங்களில் மட்டுமே அப்பகுதிகள் பாலை நிலனாய் படிவங்காட்டி நிற்கும்.

பின்னர், வான்மழை சுரந்தும் மீண்டும் பழமை போல் வளமையும், இளமையும் பெற்று முல்லையும், குறிஞ்சியும் பிறவுமாகக் கவினொழுகும் காட்சி பெற்று, மாட்சியுடன் பொலியும். எனவேதான், பண்டைச் சான்றோர்கள் பாலையை ஒரு தனி நிலமாய்க் கொள்ளாது, இயற்கையால் அமைந்த ஏனைய நான்கு நிலங்களை மட்டுமே சிறப்பாகக் கருதி, இந்நாட்டினை **நானிலம்** என வழங்குவராயினர். நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த பகுதியாகும்.

இதனை **“வருணன் மேய பெருமணல் உலகம் நெய்தல்”** என்கிறது தொல்காப்பியம். வருணனை வழிபடும் மக்கள் வாழ்கின்ற கடற்கரைப் பகுதியே நெய்தல் என்பது தொல்காப்பிய உரையாசிரியர் நச்சீனார்க்கினியரின் கருத்து. கடல் நீரால் அமைந்தமையின் கடற்கரைப் பகுதி மட்டுமே **நெய்தல்** என கொள்ளல்தகும். நெய்தல் நிலத்தில் தாழை, புன்னை, ஞாழல், செருந்தி, அரும்பு போன்ற எண்ணற்ற பூக்கள் உள்ளன. எனினும் அங்கு மிகுதியாக, சிறப்பாக, ஏனைய நிலங்களிற் காணப்படுவதினும் அதிகமாக **நெய்தற் பூவே** காணப்படுகிறது. கண்காணும் இடமெல்லாம் **“நெய்தல் மலர்கள்”** பூத்துக் குலுங்குவதாக இலக்கியங்கள் கூறுகின்றன. ஆதலின் நெய்தற் பூவின் சிறப்பினாலேயே அந்நிலம் **நெய்தல்** என்ற பெயர் பெற்றது என்பது தெளிவாகிறது.

## செடி கொடி மர வகைகள்

கடற்கரையினையடுத்து ஆங்காங்கே வளைந்த மணிநீர்க் கருங்கழிகள் உள்ளன. அவை வளைந்தும் நெளிந்தும் வெள்ளம் பெருகுங்கால் பொங்கிக் கரைகளை மோதியும் அடும்பின் கொடிகளையலைத்தும் ஓடும். அக்கழி மருங் கெலாம் பூத்துக் குலுங்கும் நெய்தற் கொடிகள்; பசிய இலைகளுக்கு மேலே திரண்ட காம்புடன் மிளிரும் பூக்கள்; செருந்திப் பூக்களும் செறிந்து மலர்ந்து மணியும் பொன்னுமென மயங்க வைக்கும். அங்குள்ள வெண்மணற் பரப்பெல்லாம் பசுமை தவழும் அரும்புக் கொடிகள் அடர்ந்து, பரந்து படர்ந்து மண்டி கிடக்கும். முண்டகம் என்னும் ஒருவகை முள்ளிச்செடியும் முயங்கித் தோன்றும்; தாளையும் தழைத்து வெண்மலர் விரித்து நறுமணம் வீசி நிற்கும். புன்னை மரங்களும், புலிநக கொன்றையாம் ஞாழலும், விண்ணுற ஓங்கிய பெண்ணையாம் பனையும் தண்ணருங் கானலில் கண்கொள்ளாக் காட்சியாய்த் திகழும். அங்கொன்றும் இங்கொன்றுமாக நாவலும் வேம்பும் நன்னிழலூட்டும் தில்லை மரங்களும் கழிநீர் அலைப்பச் செழித்து வளரும். மேலே கூறப்பட்டனவெல்லாம் நெய்தலில் காணப்பெறும் செடி, கொடி, மர வகைகள்.

## அடும்பு

இது கடற்கரை மணல் பரப்பில் பரந்து படர்ந்து கிடக்கும் கொடி; அடம்பென்றும் அடம்பங்கொடியென்றும் வழங்கப்பெறும். இதன் இலை பிளவு பட்டிருக்கும். இதன் கொடி சற்றுச் செந்நிறமாக இருக்கும் சிறிது மங்கிய கருநிறமுடைய கொடி வகையடும்பும் உண்டு.

இதன் பூ வெண்ணிறமாயும் மங்கிய செந்நிறமாயும் மணி போன்ற வடிவினைவுடையதாகவும் இருக்கும். இவ்வடும்பினைப் பற்றி டாக்டர் உ.வே. சாமிநாதையர், “நெய்தல் நிலத்திற் கடற்கரையில் படரும் கொடிகளுள் மலரையுடையது இது. இதன் இலை இரு பிரிவாக இருத்தலின் மானடியை உவமை கூறுவர். இதன் மலர் குதிரையின் கழுத்திலிடும் சலங்கை மணியைப் போல் இருக்கும். மகளிர் அதனை நெய்தலோடு கட்டிக் கூந்தலில் சூடுவர் என்றும் கூறுகின்றார் இவ்வரும்புக் கொடி வெண் மணற்கரையில் விரவிப் படர்ந்துள்ளமையைச் சங்கப் புலவர்கள்

**“குன்று ஓங்கு வெண்மணல் கொடியடும்பு’,**

**“அடும்பு இவர் மணற் கோடு”,**

**"அடும்பு இவர் அணிஎக்கர்";**
**"அடகரை, ஒன்பில் மலர கவட்டிலை அடும்பின்",**
**தண்கடல் பரப்பின் அடும்புஅமல் அடைகரை",**
**"கோட்டக மலர்ந்த கொழுங்கொடி யடும்பின் நற்றுறை"**

என்று பாடியுள்ளார்.

**தாழை**

நெய்தல் நிலத்தின் புன் புலால் நாற்றத்தை மாற்றி நறுமணம் வீசி, நலம் பயந்து நிற்பது தாழை. கண்டல், கைதை என்னும் பெயர்களாலும் தாழை வழங்கப்படுகிறது. தாழை புறக்காழுடையது. ஆதலால் அது புல் வகையினைச் சார்ந்ததாகவே கருதப்படுகிறது. இது கடல் ஓரத்திலும் கழியோரத்திலும், அடர்ந்து, மதர்த்துச் செழித்து வளர்ந்திருக்கும் அடி மரம் வளைந்து சருச்சரையுடையதாகவும், வெளுத்துத் திரைத்த மெல்லிய தோல் போர்த்தியதாகவும் காணப்படும். இலைகள் கொத்துக்களாக மேலேழும்பிப் பரவி வளைந்து தோன்றும். அவை நீளமாகவும் இது விளிம்புகளிலும் நடுநரம்பிலும் கூரிய சிறு முட்களையுடையதாகவும் இருக்கும். அடுக்கடுக்கான மடல்களுக்குள்ளே மிகுந்த பாதுகாப்பமைந்தது போன்ற நடுவிடத்தே தாழை அரும்பிப் பூக்கும். இஃது ஓலைப்பூ என்றும் வழங்கப்படும். பூ மடலுக்குள் நீறு போன்ற பொடியுடன் கூடிய கொத்துக் கொத்தான மெத்தென்ற பஞ்சுருண்டைகள் போன்ற பகுதிகள் காணப்படும். இதனைச் சோறு என்றும் கூறுவர், இப்பூக்களில் சில வெண்ணிறமுடையன; சில பொன்னிறம் உடையன;, அவை முறையே வெண்டாழை என்றும் செந்தாழையென்றும் வழங்கப்பெறும். தாழையில் ஆணென்றும் பெண்ணென்றும் உலக வழக்கில் இரு பிரிவுள்ளது.

ஆண்தாழை காய்க்கும். பெண் தாழை காயாது என்று கூறுகிறார் இ.வை. அனந்தராமையர். இதன்காய் ஒரு சிறு பலாக்காயையொத்திருக்கும். அன்னாசிப்பழம் என்ற மேலைநாட்டுப் பழத்தினைப் போன்றே தோன்றும். இது மின்னலால் பூக்கும் என்கிறது கந்தபுராணம். கடுங்காற்று வீசுங்காலத்தும் பூக்குமென்று கூறுவர். தலைவிரித்துக் கிடக்கும் பேய் போன்றது என்று தாழையின் தோற்றத்தை ஒரு புலவர் கூறுகிறார். தாழை கடற்கரையில் நறுமணத்தை அள்ளி வீசும் செய்தி பல இடங்களில் கூறப்படுகிறது.

**"முன்றில் தாழையோடு கமழும்**
**தென்கடல் சேர்ப்பு**
**"வீழ்த்தால் தாழைப் பூக்கமழ் கானல்"**
**கமழும் தாழைக் கானலம் பெருந்துறை"**

எனவரும் அடிகளால் புலனாகின்றன.

**புன்னை**

நெய்தல் நிலத்தில் சிறப்புமிக்க மரம் புன்னை. இதன் அடி மரமும் கிளைகளும் கருநிறமுடையன. இவ்வுண்மையை, நீல் நிறப்புன்னை; "மாச்சினை", கருங்கோட்டு புன்னை", நீனிறப் புன்னை, ஓங்கு இரும்புன்னை", என்ற அடிகள் எடுத்துக் கூறுகின்றன. இதன் இலை கரும்பசுமை நிறமுடையது; அகன்றது; மலர், கொத்து கொத்தாக இருக்கும். அரும்புகள் வெண்மையானவை. மகரந்தம் பொன்னிறமானது. இதன் அரும்புகள் நீண்ட காம்புகளையும், உருண்டை வடிவினையும் உடையன. முத்துப்போல் தோற்றமுடையன. அரும்புகள் மலர்ந்து நறுமணம் வீசும். இதன் பொன்னிறத் தாது உதிர்ந்து வெண் மணல் பரப்பெங்கும் பொலிவூட்டும். இச்செய்திகளை யெல்லாம் இலக்கியங்கள் இனிதெடுத்து இயம்புகின்றன இலக்கியங்கள் வினிகளுக்கு இயம்புகின்றன. புன்னை மரங்கள், மக்கள் வாழ்மனைகளையடுத்தும், கடற்கரையில் அலைகள் தொடுமாறும் வளர்ந்துள்ளன என்ற செய்தி கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் புலவர் பெருமக்கள்,

**“வியுகப் புன்னை பூத்த இன்நிழல் உயர்கரை” புன்னை தழைந்த வெண்மணல்” புன்னை ஓங்கிய துறைவன்”**

**“புன்னையங் கானல்”**

**“பூவேய் புன்னையந் தண்பொழில்” புன்னை, அணிமலர் துறைதொறும் வரிக்கும்”**

எனப் பலபடப் பொருத்தமுறப் பாடியுள்ளனர். புன்னை மரங்களின் இலைகள் அடர்ந்து படர்ந்து நிழல் தந்து நிற்கும். கதிரவனின் கதிரும் அவற்றை ஊடுருவி உட்புகாது. கடும் வெயில் காய்கின்ற காலத்தும் அவற்றின் கீழ்க்குளுகுளுக்காற்று குறையாது வீசும். அடைமழை பெய்தாலும் அவை அண்டியோரை நனைய விடாது காக்கும். ஆதலால், காதல் பயிலும் காளையரும் கன்னியரும் அவற்றின் தண்ணிழலில் அடிக்கடி வந்து நெடுநேரம் தங்கிக் காதல் காவியம் படைத்துக் களிப்பில் ஆழ்ந்திருப்பர். இச்செய்திகள் பலவிடத்தும் இன்பந்தவழ எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**ஞாழல்**

நெய்தலுக்குரிய மற்றொரு சிறந்த மரம் ஞாழல். ஞாழல் என்பது புலிநகக் கொன்றை என்றே பெரிதும் வழங்கப்பெறுகிறது. அதன் காய் நுனியிலே சற்று வளைந்து புலி நகம் போன்றிருத்தலின் இது புலி நகக் கொன்றை என்று அழைக்கப்படுகிறது. இது கொன்றை வகையைச் சார்ந்தது. ஞாழலின் கிளைகள் கருமையானவை; பக்கவாட்டில் அடுக்கடுக்காய் உள்ள சின்னஞ்சிறு இலைக்கொத்துகளையுடையவை மலர்கள் மிகச் சிறியவை; செம்பொன்னிறமானவை; நறுமணம் வீசுபவை. இம்மரங்கள் கடல் அடுத்து வளர்வன. பரதவ மகளிர் ஞாழல் மலரைக் கண்ணியாய்ச் சூடிக்கொள்வர். ஞாழலுடன் நெய்தலையும் சேர்த்து கதம்பமாய்க் கட்டி அணிவர். ஞாழல் மரத்தின் கிளைகளில் தாழை விழுதைக் கயிறாகக் கட்டி ஊசல் செய்து உவப்புடன் ஆடுவர். குருகு, நாரை, சிறுவெண்காக்கை முதலிய பறவைகள் ஞாழலின்கண் துணையுடன் வாழும். மலர்கள் தண்மையும் நறுமணமுடையனவாதலால் அவை “நறுவீஞாழல்” நறுமலர் ஞாழல், தண்ணிய கமழும் ஞாழல் எனக் குறிப்பிடப்பெறுகின்றன. பூக்கள் கொத்துக்கொத்தாய்ச் செறிந்திருக்கும், என்ற உண்மை

**“ஞாழல் தேன்தோய்ஒள் இணர்” ஞாழல் தினைமருள் திறள்வீ”**

**“இணர்ததை ஞாழல்”**

**“குவி இணர் ஞாழல்”**

எனவரும் அடிகளால் விளங்குகின்றது.

**பெண்ணை**

இது பனை என்று வழங்கப்பெறுவது. இலக்கியத்தில் போந்தை என்றும் குறிப்பிடப்படுகிறது. நெய்தல் நிலத்தில் பல்கிப் பெருகி காணப்படுவது. விண்ணளாவ ஓங்கி வளர்வது. பனை அனைவருக்கும் தெரிந்த ஒரு மரம். நெய்தல் நில மணல்மேடுகளில் கும்பல் கும்பலாக வளர்ந்திருக்கும். அதனைப் பனந்தோப்பு என்று கூறுவர். இது இளவேனில் காலத்தில் காய்க்கத் தொடங்கும். முற்றாத காய் நுங்கு என வழங்கப்படும். நுங்கு கண்கள் சுளை போலிருக்கும். இனிய நீரோடு அருந்துவதற்கு மிகவும் சுவையாக இருக்கும். காய் முற்றிப் பழமாகும். பழத்தில் மூன்று கொட்டைகள் இருக்கும். கொட்டைகள் முளைத்துக் கிழங்குகளாகும். கிழங்குகள் அடி பெருத்து நுனிசிறுத்து நீண்டிருக்கும். பனங்கிழங்கினைப் பிற்காலத்து வாழ்ந்த சக்திமுத்தப் புலவர் என்பவர் நாரையின் அலகுக்கு ஒப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமானது. பனை மரத்திலிருந்துகள் இறக்குவது பண்டைய நாளிலிருந்தே பழக்கத்தில் இருந்து வருகிறது. அடி முதல் முடிவரையில் கருக்கு மடல்களோடு கூடிய ஓலைகள் அடர்ந்து வளரும். அவ்வோலைகளால் வேலிகள் அமைப்பார்கள். ஊர்களில் பனை அடியில் பொது மன்றங்கள் உண்டு. நெய்தல் நிலமக்கள் தம் குலதெய்வத்தையும், பனை மரத்தையும் வணங்கி வருவது தொன்று

தொட்டு வரும் வழக்கு. இவ்வழக்கு இன்னும் சில பகுதிகளில் நடைமுறையில் உள்ளது. அன்றில் நாரை, குறுகு போன்ற பறவைகள் பனைகளில் தங்கும்; கூடு கட்டியும் வாழும். அன்றில் பறவைகளுக்குப் பனைகளே சிறந்த குடியிருப்பு.

**முண்டகம்**

முண்டகம் என்பது கழிமுள்ளியென்ற பெயரால் வழங்கப்பெறுவது. நெய்தல் நிலத்தில் அதிகம் காணப்படுவது. இதன் மலர் கருநிறமுடையது. குளிர்ச்சியுடையது. இச்செடியிலுள்ள முள் வளைந்திருக்கும். மகளிர் முண்டக மலரைச் சூடிக் கொள்வர். கடற்கரையிலும், கழிக்கரையிலும் செழித்து வளரும் என்பது பல இடங்களில் குறிப்பிடப்பெறுகிறது. வெண்மணற் கரையில், வளைந்த முள்ளியுடைய கழிமுள்ளியினது குளிர்ந்த மலர், காற்றால் சிதறிக் கிடக்கின்ற காட்சி, நூலற்று உதிர்ந்து போன முத்துக்களைப் போன்று தோன்றும். மகளிர் கடலிற் படிந்தாடும் போது களிமுண்டக மலர் மாலை அணிந்து ஆடுவர். இச்செய்திகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன

**தில்லை**

இது நெய்தனிலத்துக்கு உரித்தாகக் கூறப்படும் மரவகை. இதன் தளிர் புற்கென்ற நிறமுடையதென்பதும், பன்முறை அருவி நீராடும் தாபதர் சடையின் நிறத்திற்கு உவமை கூறப்பெறுவதென்பதும் அறியப்படுகின்றன. இதன் பால் மிக்க கொடுமைத் தன்மையுடையதென்பர் என்கிறார் அனந்தராமையர். இது கள்ளி வகையைச் சேர்ந்தது. கடற்கரையின் மணல் திடல்களிலே கருநிறங் கொண்ட கழிமுள்ளியும் தில்லை மரமும் ஒருங்கே வளர்ந்திருக்கும். ஊரைச் சுற்றி தில்லை மரங்கள் வேலியாக அமைந்திருக்கும். தென்னாட்டின் சிறப்புமிக்க சிவத்தலங்களில் ஒன்றான சிதம்பரத்துக்குத் **தில்லை** என்ற பெயர் வந்ததன் காரணம் அது முன்னர்த் தில்லை மரங்கள் அடர்ந்த காடாய் இருந்தது பற்றியே.

**நாவல்**

பொங்கியெழும் அலைமோதிய வெண் மணற்கரையில் நாவல் மரம் வளர்ந்திருக்கும் அதன் கனிகளை நண்டுகள் தின்னும்; வண்டுகள் மொய்க்கும.

**வேம்பு, செருந்தி**

கடற்கரையில் வேப்ப மரங்களும், செருந்தி மரங்களும் ஆங்காங்கே அருகிக் காணப்படும். வேப்பமரங்களில் கோட்டான்கள் குடியிருக்கும். செருந்தி மரத்தின் கிளைகள் விரிந்து நிற்கின்றன. பொன் போன்ற ஒளி பொருந்திய கொத்துக்களையுடைய செருந்தியின் பன்மலர்களைக் கொய்து மாதர்கள் சூடிக் கொள்வர். பூக்கள் மலிந்த புன்னையம் சோலை; வண்டுகள் கிண்டியதால் மலர்ந்து மணக்கின்றன. அங்குள்ள செருந்தி மரத்தின் சிறந்த மலர்கள்.

**பறவைகள்**

தொல்காப்பியம் பதினெட்டாம் சூத்திர உரையில் நச்சினார்கினியர், நெய்ததற்கு - புள், அன்னமும் அன்றிலும் முதலியன என்று குறிப்பிட்டமை முதலில் எடுத்துக்கூறப்பட்டது. எனவே, நெய்தல் நிலத்துக்குரிய புட்கள், அன்னம், அன்றில், கடற்காக்கை முதலியனவாம்.

**அன்னம்**

இது நெய்தலில் காணப்படும் பறவைகளில் ஒன்று; வெண்ணிறமானது. வானில் மிக உயரத்தில் பறக்கக் கூடியது. கால்களில் நீரில் நீந்துவதற்கு ஏற்ற தோலடிகளையுடையது. கடலிலும், கழியிலும் நீரைத் துழாவி மீன்களைப் பற்றி உண்ணும். கடற்கரை மணலிலும், அங்கு படர்ந்துள்ள அடும்புக்கொடிகளின் மீதும் தங்கி இருக்கும், என்ற செய்திகளைச் சங்க இலக்கியங்களில் அறிகிறோம். “அன்னத்தின் கால் நீண்டு, மயிரடர்ந்து, நுனி குவிந்து, தோலுரைப் போரலின் துதிகால் அன்னம் என்று கூறப்படுகிறது’ என்கிறார் அவ்வை துரைசாமிப்பிள்ளை.

**அன்றில்**

இது நெய்தல் நிலத்தில் கழிகளிலுள்ள மீன் முதலியவற்றையுண்டு, பனை மரத்தல் கூடமைத்து வாழும் பறவை. ஆண் அன்றிலின் உச்சிக்கொண்டை நெருப்புப் போல் சிவந்து தோன்றும். சிவந்து வளைந்த வாயினையுடையது. இதன் கால் கரியது. ஆணும் பெண்ணும் இணைபிரியாது வாழும் இயல்பின. ஒன்றைவிட்டு ஒன்று பிரிய நேரின் சற்றும் துயிலாது வேதனையில் ஆழ்ந்து நடுங்கி நலியும். உளமார்ந்த அன்பின் ஆழ்ந்து இணைபிரியாது வாழும் காதலர்க்கு ஆணும் பெண்ணுமான அன்றில்களையே உவமை கூறுவர்.

**சிறுவெண் காக்கை**

இது கடற்கரையிலும் நெய்தல் நிலக்கழிப பகுதிகளிலும் காணப்படும் ஒருவகைக் காக்கை. கடற்கரையில் வாழும் பழங்குடி மக்கள் இதனைக் கடற்காக்கை என்று கூறுகின்றனர். இதன் கழுத்தின் கீழ்ப்புறம் மட்டும் வெளுத்து ஏனைய உடல் முழுவதும் மங்கிய கருமையோடு இருப்பதால் இது சிறுவெண்காக்கை என்று வழங்கப்படுகிறது. இதனுடைய வாயின் உட்பகுதி செந்நிறமாய் இருக்கும். இது நீரநிலைகளில் மீன் பிடித்துண்டு கடற்கரையில் மரங்களில் கூடுகட்டி வாழும். இதனை நீர்க்காக்கை என்றும் கூறுவர். இச்சிறுவெண்காக்கைகள் நெய்தல் நிலத்து மரங்களாகிய புன்னை, தாழை, புலிநகக் கொன்றை. பனை, முதலியவற்றில் தங்கியுரையும்.

**சங்க இலக்கியத்தில் மயில்**

சங்க இலக்கியத்தில் எல்லாவற்றிலும் மயில் பற்றிய - மயில்தொடர்பான குறிப்புகள் காணப்படுகின்றன. நிலப்பறவையாகிய இந்நீலப்பறவையாம் மயில் பற்றி சங்க இலக்கியங்களில் அகத்திணை, புறத்திணைப் பாக்கல் இரண்டிலுமாக 171 இடங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. 2081 சங்கப்பாக்களில் 142 பாக்கல் மயிலால் அழகு பெறுகின்றன. முருகனின் ஊர்தியாகவும் கொடியாகவும் இது விளங்குகின்றன. அகநானூற்றினை அடுத்துப் பரிபாடலும் ஐங்குறுநூறும், புறநானூறும் சரிசமமாக மயிலுக்கு வாய்ப்பளித்துள்ளன. சங்கப் பாடல்களை பாடியுள்ள 473 புலவரில் 73 புலவர் மயில் பற்றி பாடியுள்ளனர். இப்புலவர் பெருமக்களில் மயிலின் அழகில், ஆடலில் மயங்கிப் பல பாடல்களில் அதற்குச் சிறப்பிடம் அளித்திருப்பவர் கபிலர். கபிலரையடுத்து மயிலுக்கு பெருமை தருபவர் நக்கீரர். சேயோனிடம் புலவரை ஆற்றுப்படுத்தும் இவர் அவனின் ஊர்தியாக மயிலையும் அவனோடு சிறப்பித்திருக்கிறார்.

**மயிலும் வரலாறும்**

மயில் மன்னன் ஒருவன் வரலாற்றுடனும் தொடர்பு கொண்டுள்ளது. கடையேழு வள்ளல்களில் ஒருவன் பேகன். இவன் இச்சிறப்பினைப் பெறுவதற்கு மயில் ஒன்று காரணமாகின்றது. மழையில் நகனைந்த மயில் மகிழ்வுடன் ஆட, அது குளிரில் நடுங்குவதாகக் கருதியவன் அதற்குத் தன் போர்வையினை ஈந்து மகிழ்கின்றான்.

**கழி - கடல் வாழ் உயிரினங்கள் விலங்குகள்**

சுறா: கடலில் வாழும் மீனினங்களில் சுறா பெயர் போனது. இது பெரும்பாலும் கடலில் தான் காணப்படும். ஆறுகளிலும், கழிகளிலும் சிற்சில சமயங்களில் காணப்படுவதும் உண்டு. ஆறுகள் கடலோடு கலக்குங்கால், சுறா மீன்கள் கடலிலிருந்து கழிமுகங்களின் வழியே ஆற்றுக்குள் சென்றுவிடும். பின்னர் ஆற்றுடன் இணையும் கழிகளிலும் புகும். சுறா பெரும்பாலும் கடல் நீரில், அதாவது உப்பு நீரில் தான் வாழும். கடல் நீர், ஆற்றுக்குள் பாயும்போது குறிப்பிட்டத் தொலைவு வரையில் உப்பு நீராகவே இருக்கும். உப்பு நீர்இருக்கும் வரை அதில் சுறா வாழும். எனவே, இலக்கியங்களில் கழிகளில் உள்ளனவாகக் குறிப்பிடப்படும் சுறா மீன்கள் மேற்கூறியவாறு கடலினின்றும் நுழைந்தனவேயாகும். சுறா மிகவும் பயங்கரமானது. மீன்களுக்குள் சிறப்புமிக்கது. சுறா மீன் கடலில் வாழும்

உயிரினங்களை பிடித்து தின்னும். பெரும்பாலான வகைகள் வேறு மீன்களை பிடித்துண்ணும். தம் இனத்தையே தின்னவும் சில பின் வாங்குதில்லை. சில சமயங்களில் சுறாக்கள் மனிதனைப் பிடித்துவிடுவதுண்டு. “சுறாக்களிலட சில முப்பது அடிக்குமேல் பெரிதாக இருக்கும். சில ஒன்று அல்லது இரண்டடி இருக்கும். **கொம்பன் சுறா** தலையின் முன் பாகம் இருபுறமும் நீண்டு சுததியின் தலையைப் போன்றத் தோற்றமுடையது. **வாழ்சுறா** இதன் மூக்குபாகம் தட்டையாக நீண்டு இருபுறமும் கூரான பற்கள் உள்ளன. இது பொதுவாக ஆறடி நீளமிருக்கும். சுறாவின் கல்லீரலிருந்து **மீனெண்ணெய்** எடுக்கின்றனர். இதில் வைட்டமின் சத்தும் இருக்கிறது. சில வகைச் சுறா மீன்களைமக்கள் உணவாக கொள்வார்கள். சங்கப் பாடல்கள் பலவற்றுள் **வால்சுறா** குறிப்பிடப்படுகிறது.

**இறா**

இறா கடலிலும்,, கழிகளிலும், ஆறு, ஏரி, குளம் முதலிய நன்னீர் நிலைகளிலும் வாழும் சிறிய மீனினமாகும். இலக்கியங்களிலும் இறாவெனவும் இறவு எனவும் வழங்கப்படுகிறது. இறாக்களில் பெரும்பாலானவை கடலிலும், உப்பங்கழிகளிலும் வாழும். நன்னீரிலும் வாழ்வதுண்டு. கடலில் ஆழமில்லாத கரைப்பகுதிகளில் இறாக்கள் கூட்டமாக இயங்கும். இப்படிக் கூட்டமாக இருப்பதை “மாப்பு” என்று வழங்குவர். இலக்கியங்களில் சேய் இறா, வெள்ளி இறா என இருவகை இறாக்கள் கூறப்பட்டுள்ளன.

**அலவன்**

இலக்கியங்களில் அலவன் என்றும் ஞெண்டு என்றும் வழங்கப்படுகிற இக்கரைவாழ் உயிரினம் இப்போது நண்டு என்றே வழங்கப்படுகிறது. **நண்டு** என்னும் சொல் தொல்காப்பியத்தில் கையாளப்பட்டுள்ளது. செவியுணர்வு ஒழிந்த நான்குணர்வும் உள்ள உயிரினங்களைக் கூறும்பொழுது தொல்காப்பியர் “நண்டும் தும்பியும் நான்கறிவினவே” என்று கூறுகிறார். தொல்காப்பியத்தில் வழங்கப்படும் நண்டு என்னும் சொல் பின்னர் வேறு எந்தச் சங்க இலக்கியத்திலும் வழங்கபடாதிருப்பது விந்தையாகவேயுள்ளது. இலக்கியத்தில் கள்வன் என்ற சொல்லாலும் அழைக்கப்படுகிறது. அகநானூற்றில் ஓரிடத்தும், கலித்தொகையில் ஓரிடத்தும், ஐங்குநுறூற்றில் பத்திடத்தும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. நண்டுகள் கடற்கரையிலும் கழிக்கரைகளிலும் வளையமைத்து வாழ்வன. கரையையடுத்து நீருக்குள்ளே வாழுகின்ற நண்டுகளும் வாழுகின்றன. அவை பெரும்பாலும் நிலத்தில் இயங்குவதில்லை. நெய்தல் திணையில் குறிப்பிடப்படுவனவெல்லாம், கடற்கரையிலும் கழிக்கரையிலும் வாழும் நண்டுகளாகும்.

**முடிவுரை**

சங்க இலக்கியம் கூறும் நெய்தல் நிலம் செடி, கொடி, மரவகைகள், பறவைகள் பற்றிய பல்வேறு செய்திகளையும் விளக்கமாகக் கண்டோம். சங்க இலக்கியத்தில் இயற்கை பதிவுகளை விளக்கும் வகையில் இவ்வாய்வு கட்டுரை அமைக்கப்பெறுகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம் டாக்டர் தி. முத்து - கண்ணப்பன், பதிப்பாண்டு - 1978.
2. அதிபத்தர் பதிப்பகம் 6, வசந்தா பிரஸ் சாலை, அருணாசலபுரம், சென்னை.
3. சங்க இலக்கியத்தில் மயில் திருமதி. பாக்கியவதி சங்கரலிங்கம் பதிப்பாண்டு 1989, உலகத் தமிழ்க் கல்வி இயக்ககம், 33, திருமலைநகர் இணைப்பு, பெருங்குடி, சென்னை- 600 096.

# நாச்சியார் திருமொழியில் இயற்கை வழி துன்பியல்

**முனைவர் ம. லெ. இராஜேஸ்வரி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி*

**ஆய்வுச்சுருக்கம்**
*காலத்தைப் படிவடிவிடுதல் இயற்கையின் வெளிப்பாடு. இயற்கை இன்றேல் இயக்கம் இல்லை. இயற்கையைப் பாடாத இலக்கியங்களும் இல்லை. கனவோ, கற்பனையோ கவிஞனைத் தாலாட்டி கருப்பொருளாக மாறுவது இயற்கை. காதலில் திளைப்போருக்கு இயற்கை ஒரு வரம். இன்பத்தை வாரி வழங்கும் இயற்கை சில நேரங்களில் துன்பத்தையும் நல்குகின்றது. அதன் வழி நாச்சியார் இறைவன் மேல் கொண்ட காதலால் இயற்கையைப் பழிக்கின்றாள். இயற்கையும் அவளுக்கு துன்பத்தையே தருவதாக எண்ணுகின்றாள். அதனை அவள் வெளிப்படுத்தும் திறனை ஆராய்வதே இக்கட்டுரையின் களம்.*

## முன்னுரை

இயற்கை இறைவனின் ஐந்தாம் வேதம். மௌன மொழியின் சித்தாந்தம் "நேட்சுரா என்ற இலத்தீன் அடிப்படையில் தருவிக்கப்பட்டது தான் நேச்சர் (Nature) என்ற ஆங்கிலச் சொல்லாகும். இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது. உயிரினம் மற்றும் உயிரின அறிவு போன்றவையும் அடங்கும்"[1] இயற்கை விந்தையானது. அழகும் ஆபத்தும் ஒரு சேர இணைந்து, இயைந்து நிற்பது. இயற்கையை ஐம்பூதங்களாக்கி வழிபட்டான் மனிதன். மரம் முதல் பறவை வரை தெய்வத்தின் வடிவங்களாக மாற்றினான். அதனால்தான் அனைத்து படைப்புக்களிலும் இயற்கை பாடுபொருளாகிறது. இவ்வழகிய இயற்கை நாச்சியாருக்கு விளைவிக்கும் துன்பியலே இக்கட்டுரை.

## துன்பியல் விளக்கம்

"துன்பியல் என்பது மனித துயரத்தின் அடிப்படையில் அமைந்த பார்வைாளர்களை ஆர்வமூட்டக்கூடிய ஒரு நாடக வடிவமாகும்."[2] ஆனால் நாடக வடிவத்தைத் தாண்டி கவிநயத்திலும் துன்பியலைக் காண முடியும் நடிப்பினால் பார்வையாளர்களைக் கவர முடியும் என்றால் 'பாக்களை' படிக்கும் பொழுது சுவைஞர்களாலும் அவற்றிலிருந்து வெளிப்படும் துன்பியலையும் உணரமுடியும். அதனால் தான் காலம் கடந்தும் பல இலக்கியங்கள் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கின்றன. இன்பத்தை மட்டுமே பாடி வெற்றி பெறுகின்ற இலக்கியங்களை விட துன்பியலை வெளிக் கொணர்கின்ற இலக்கியங்கள் மக்கள் மனதில் இடம் பிடித்து தடம் பதித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் நம் ஆண்டாள் நாச்சியார் திருமொழியும் ஒன்று. காதலோடு இழைந்த பக்தியை துன்பக் கடலில் நீந்தி வெளிப்படுத்தும் திறன் போற்றுதலுக்குரியது.

## இலக்கியங்களில் துன்பியல்

தொல்காப்பியர் உள்ளத்தில் நிகழக்கூடிய அக உணர்வுகளை உடம்பின் வெளிப்பாடுகளாகக் கருதி அவற்றை மெய்ப்பாடுகள் என,

> **"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
> **அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
> **அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"[3]**

என வகுத்துள்ளார்.

"இதில் அழுகையாவது அவலித்தல், கண் கலுழ்தலும், துயர் உறுதலுமாக நிகழும். அழுகை, அவலம், இரக்கம், துயரம் என்பவை ஈண்டு ஒத்த பொருளில் வரும்"[4] மிகுதியான துன்பத்தின் வெளிப்பாடுதான் அழுகை. அதனால் தான் மாணிக்கவாசகரும்

"வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"[5] என்று உருகுகின்றார். அழுகை என்பது உணர்ச்சியின் வெளிப்பாடு இங்கே சத்திமுத்தப் புலவர் தன் வறுமை நிலையினை,

**"ஆடையின்றி வாடையில் மெலிந்து**
**கையது கொண்டு மெய்யது பொதிதா**
**காலது கொண்டு மேலது தழீஇ"[6]**

என்று தூதுவிடுகின்றார். புலவரின் துன்பியல் நிலை சுவைஞர்களையும் தடுமாறச் செய்யும். இதே வறுமை நிலையினை புறநானூற்றில் வன்பரணர் என்னும் புலவர்.

**"கூதிர் பருந்தின் இறஞ்சிறகு அன்ன**
**பாறிய சிதாரேன், பலவுமுதல் பொருந்தித்**
**தன்னும் உள்ளேன்..."[7]**

என்று பாடுகின்றார். இவ்வாறு அக இலக்கியமாக இருந்தாலும் புற இலக்கியமாக இருந்தாலும் இன்ன பிற படைப்புகளாக இருந்தாலும் கருப்பொருள்களுக்கிடையே ஊடாடி கிடக்கின்ற இயற்கையை நாம் மறுக்க இயலாது. இயற்கையையும் இன்பத்தையும், இயற்கையையும் துன்பத்தையும் நம் வாழ்விலிருந்து பிரித்து வைக்க முடியாது.

**நாச்சியாரின் இயற்கை வழிதுன்பியல்**

**பூக்களோடு புலம்பல்**

இயற்கையின் மிக அழகான வெளியீடு பூக்கள். பூக்களை விரும்பாத கவிஞர்களும் இல்லை. பூவை நுகராத வண்டுகளும் இல்லை. காதலின் முதன்மை அடையாளமாக பூக்கள் வரவேற்கப்படுகின்றன. தமிழ்க்கிழவன் கூட

**"மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்**
**செவ்வி தலைப்படு வார்"[8]**

என்று மலரை விட காதல் உயர்ந்தது என்கின்றார். நாச்சியாரும் அதே வழியில் தான் காதலுக்காக பூக்களைச் சாடுகின்றார்.

**கருவிளை ஒண் மலர்காள்! காயாமலர்காள்! திருமால்**
**உரு – ஒளி காட்டுகின்றீர், எனக்கு உய்**
**வழக்கு ஒன்று உரையீர்;"**

பாடல் எண் : 589

என்று புலம்புகின்றாள். மலர்களின் இயல்பான வண்ணம் காதலின் ஆழத்தால் திருமாலின் வண்ணமாகக் காட்சி அளித்து அவளுக்கு துன்பத்தைத் தூண்டுகிறது.

**கொடியாள் கொடியோடு புலம்பல்**

"கொடி என்பது துவளும் தன்மை கொண்ட அல்லது ஒன்றின் மேல் படரக்கூடியது என்பர்"[9] நாச்சியார் என்னும் பெண் கொடி இறைவன் என்னும் ஆதாரத்தைப் பற்றுகின்றாள். அவளின் பார்வை கோவைக் கொடியை நாடுகின்றது.

**கோவை மணாட்டி! நீ உன் கொழுங்கனி கொண்டு எம்மை**
**ஆவி தொலைவியேல்; வாயழகர் தம்மை அஞ்சுதும்**
**பாவியேன் தோன்றிப் பாம்பு – அணையார்க்கும் நம் பாம்பு போல்**
**நாவும் இரண்டு உள ஆய்த்து நாணிலியேனுக்கே**

**(பாடல் எண் : 599)**

கோவைக்கொடியே! நீ உன்னடைய அழகிய பழங்களினாலே என்னுடைய உயிரைப் போக்கலாகாது என்று கூறும் நாச்சியார் திருமாலுக்கும் ஆதிசேடனைப் போல் இரண்டு நாக்குகளா என்று வினவுகின்றாள். மேலும்

**"முல்லைப் பிராட்டி! நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை**
**அல்லல் விளைவியேல்,.." பா.எண் : 600**

என்று முல்லைக் கொடியிடமும் என்னை துன்பத்திற்கு உள்ளாக்காதே என்று புலம்புகின்றாள்.

**பறவைகளோடு புலம்பல்**

குயிலின் கீதத்தை விரும்பாதவர் எவரும் இலர், அதன் குரலில் இழையோடும் சோகமும், இனிமையும் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும். ஆனால் நாச்சியாருக்கு குயிலின் இசை,

**"பாடும் குயில்காள்! ஈது என்ன பாடல்? நல் வேங்கட**
**நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்,**

கூச்சலாகத் தெரிகின்றது. அதோடு நின்றுவிடாமல் மேலும் கூறுகின்றாள்.

**"ஆடும் கருளக் கொடி உடையார் வந்து அருள் செய்து**
**கூடுவராயிடில் கூவி நும் பாட்டுகள் கேட்டுமே" பா.எண் : 601**

என்று குயிலிடம் என் விஷயத்தில் கருடக் கொடியோன் நன்மை செய்தால் உங்களை வரவழைத்து உங்கள் பாட்டுக்களை கேட்போம் என மனதால் உழல்கின்றாள்.

மயில் தோகை விரித்தாடும் பொழுது கரையாதவர் மனமும் கரையும். தேகையின் வண்ணங்களில் நெஞ்சம் நெகிழும். இயற்கையின் படைப்பில் மயிலின் வண்ணம் வியப்பிற்குரியது. ஆனால் நாச்சியாருக்கோ மயில்களின் நடனம் இன்பத்தைத் தரவில்லை.

**"கண மா மயில்காள்! கண்ணபிரான் திருக்கோலம் போன்று**
**அணி மா நடம் பயின்று ஆடுகின்றீர்க்கு அடி வீழ்கின்றேன்" பாடல் எண் : 602**

கூட்டமாய் இருக்கின்ற மயில்களே கண்ணனின் வடிவத்தில் இருந்து கொண்டு அழகிய நாட்டியமும் ஆடுகின்ற உங்களின் திருவடிகளிலே வணங்குகின்றேன் உங்கள் ஆட்டத்தை நிறுத்துங்கள் என்று விம்முகின்றாள். மற்றுமோர் பாடலில்,

**"நடம் ஆடித் தோகை விரிக்கின்ற**
**மா மயில்காள், உம்மை**
**நடமாட்டம் காணப் பாவியேன் நான் ஓர்**
**முதல் இலேன், பாடல் எண் : 603**

என் முன்னால் ஆடாதே உன்னைப் பார்த்து இரசிப்பதற்கு என் கண்கள் என்னிடம் இல்லை. குடக்கூத்தாடியான கோபாலன் என் எல்லா உடைமைகளையும் அவனே கொண்டு சென்று விட்டான் என்று மயங்குகின்றாள்.

**மேக விடு தூது**

பூக்கள், மரங்கள், செடிகள், பறவைகள் என்று ஒவ்வொன்றிடமும் புலம்பிய நாச்சியார் மேகத்தை தூதாகச் செல்லுமாறு அதனோடு வேண்டுகின்றார். நாச்சியாராகிய காதல் ஆழத்தை இப்பாசுரங்களின் வழி அறியலாம்.

**"ஒளிவண்ணம் வளை சிந்தை உறக்கத்தோடு இவை எல்லாம்**
**எளிமையால் இட்டு என்னை ஈடழியப் போயினவால்**
**குளிர் அருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி**
**அளியத்த மேகங்கள்! ஆவி காத்து இருப்பேனே" பாடல் எண் : 579**

எல்லாவற்றையும் பழித்த நாச்சியார் மனம் இரங்கி 'அருள்புரியும் மேகங்களே' என்று அழைக்கின்றாள். எவ்வாறாகினும் இறைவனை அடைந்திட வேண்டும் என்ற தவிப்பு நாச்சியாரின் பாடல்களில் காணலாம். துன்பநிலையின் உச்சமாக,

**"பைம்பொழில் வாழ் குயில்காள்! மயில்காள்! ஒண் கருவிளைகாள்!**
**வம்பக் களங்கனிகாள்! வண்ணப் பூவை நறுமலர்காள்!**
**ஐம்பெரும் பாதகர்காள்! அணிமாலிருஞ் சோலை நின்ற**
**எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என் செய்வதே"**

குயில்களே! மயில்களே! அழகிய காக்கணம் பூக்களே! அழகிய நிறத்தையும், மணத்தையும் கொண்ட காயாம் பூக்களே! ஐம்பெரும் பாதகர்களே! உங்களுக்கு திருமாலிருஞ் சோலையிலுள்ள அழகருடைய திருமேனி நிறமானது எதற்காக என்று இயற்கையைப் பார்த்து துன்பத்துடன் வினவுகின்றாள்.

**முடிவுரை**

பெண் உலகில் அழியாப் புகழுடன் திகழ்பவள் ஆண்டாள் என்ற திருநாமம் சூட்டப் பெற்ற கோதை நாச்சியார் பெண்கள் காதலை வெளியில் சொல்லக் கூடாது என்கின்ற காலவெளியில்,

**“மானிடவர்க்கென்றே பேச்சுப்படில்**
**வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே!”**

என்று புரட்சி செய்தவர் நாச்சியார். இயற்கையை அவர் விளித்து கூறும் இடங்களில் இறைவனைப் போன்றதே இயற்கையையும் நேசித்துள்ளார் என்பதை நம்மால் உணர முடியும். நாச்சியார் திருமொழியின் பாசுரங்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் விருட்சங்களுக்கான விதைகளை தனக்குள் ஒளித்து வைத்திருக்கின்றது என்றால் அது மிகையன்று.

**துணைநூல்கள்**


1. ta.m.wikipedia.org
2. https://www.shabdkosh.com
3. http://www.tamilvu.org. Tamil Virtual Academy
4. http://www.tamilvu.org.
5. திருவாசகம் உரையாசிரியர் பேராசிரியர் புலவர் அ.மாணிக்கம், பக்க எண் : 128, வர்த்தமானன் பதிப்பக வெளியீடு, 21 இராமகிருஷ்ணன் தெரு, சென்னை – 600017.
6. http://maruthaani.blogspot.com
7. புறநானூறு அ.ப.பாலையன், பக்க எண் : 152, சாரதா பதிப்பகம், ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, சென்னை – 14. முதற்பதிப்பு – ஜீலை 2008.
8. திருக்குறள் : 1289.
9. https://ta.wikionary.org.wiki

# குயில்பாட்டில் இயற்கை

**முனைவர் மு. மகாலெட்சுமி**
*துறைத்தலைவர்*
*சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர்*

## ஆய்வு முன்னுரை

சங்கக் கால கவிஞர்கள் முதல் இக்கால கவிஞர்கள் வரை இயற்கை பற்றி பாடாத கவிஞர்கள் இல்லை. எல்லா கவிஞர்களும் இயற்கையைத் தன்னுடைய கவிதையின் மூலப்பொருளாக பாடியுள்ளனர். அதில் தன்னுடைய கவிதைகளில் பாரதி இயற்கையை பயன்படுத்தும் திறன் தனித்துவம் வாய்ந்ததாகும். ஒரு தாய் தன் குழந்தையை பார்த்து மகிழும் திறனோடு கவிஞன் இயற்கையை பார்த்து மகிழும் திறன் ஒப்பிடப்படுகிறது. பாரதியின் கற்பனையில் எழுந்த குயில்பாட்டில் இயற்கையை கையாண்ட விதம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## குயில்பாட்டு

காலை நேரம் புதுவைத் திருநகரில் அழகான மாஞ்சோலை அந்த சோலைக்குள் பாரதி செல்கின்றார். அங்கே மாமரத்தில் இருந்த குயில் ஒன்று அழகாக பாடுகின்றது. பாடலை ஆண் குயில்கள் எல்லாம் கேட்கின்றது. அந்த இன்னிசையை சோலை பறவைகள் எல்லாம் தன்னுடைய நினைவுகளை மறந்து பரவசமாய் கேட்டு அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கள்ளிக்குயிலின் இன்னிசை பாட்டினிலே பரவசப்பட்டு விடுகின்றார். காதற்களியிலே அவர் குயிலைப் பார்த்து

> **“மனிதவுரு நீங்கி குயிலுருவம் வாராதோ?**
> **இனிதிக் குயிற் பேட்டை என்றும் பிரியாமல்**
> **காதலித்துக் கூடிக் களியுடனே வாழோமோ!**
> **நாதக் கனலிலே நம்முயிரைப் போக்கோமோ” (குயில் பா 27-30)**

என்று பாரதியின் காதல் வெறியும் அதற்கேற்ப கவிதை வெறியும் மூன்டெழுகின்றது. குயில் குக்குக்கூ என்று கூவுவது போல தன் குரலில் இருந்து அழகான குயில்பாட்டு ஒலித்தது.

> **“காதல் காதல் காதல்**
> **காதல் போயின் காதல் போயின்**
> **சாதல் சாதல் சாதல்” (குயில் - பா)**

## இயற்கை எழில்

பாரதியில் குயில் பாட்டை நாம் படித்தால் அவர் இயற்கை எழில் மீது கொண்டுள்ள ஈடுபாடு நமக்கு புலனாகும். குயில் பாட்டில் ஞாயிறு, வெண்ணிலா, விண்மீன்கள், காற்று, மழை முதலியவற்றைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் எல்லாம் இயற்கை மீது கொண்ட காதலை அறிய முடிகிறது. குயிலின் குரல் இயற்கையாக அமைந்த ஒன்று அந்த குரலின் இனிமையைப் பற்றி பாரதியார்.

> **“அறிவும் வடிவுங் குறுகி அவனியிலே**
> **சிறியதொரு புள்ளாய்ச் சிறியோன் பிறந்திடினும்**
> **தேவர் கருணையிலோ தெய்வச் சினத்தாலோ**
> **யாவர் மொழியும் எளிதுணரும் பேறு பெற்றேன்”**

என்று தனக்கு கிடைத்த நற்பேற்றினைக் காட்டி குயிலின் நல்லோசைகளில் நான் மனதை பறிகொடுத்த செய்தியும் அன்றாடம் இயற்கையாக ஒலிக்கும் ஒலிகளான, காட்டு மரங்களிடையே வரும் ஓசை பறவைகள் எழுப்பும் நகை, ஆற்று நீரோசை, கடல் அலை எழுப்பும் ஓசை இவற்றில் எல்லாம் மனதை பறிக்கொடுக்கிறார். இந்தக் கவிஞர்

**“கானப்பறவை கலகாலனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்று நீரோசை அருவி யொலியிணிலும்
நீலப்பெருங்கடர்லெந் நேரமுமே தானிசைக்கும்
நலத்திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊறுருகப் பாடுவதில் ஊறிருந்தேன் வாரியிலும்
ஏற்ற நீர்பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப்பார் தஞ்சுவை மிகுந்த பாண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத் தருமோர் கூட்டமுதப் பாட்டினினும்
வேயின் குழலோடு வீணை முதலா மனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல் கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்” (குயில் பாட்டு 28-45)**

இயற்கையாக வரும் ஒலிகளை இசைபயின்ற மனிதர்கள் கருவிகள் கொண்டு இசைக்கும் இசைக்கு ஒப்பிட்டு அந்த இசையில் மனதை பறிக்கொடுத்ததையும் கூறியுள்ளது. அவருக்கு இயற்கை மீது உள்ள ஈடுபாட்டை புலப்படுத்துகிறது. இதைப் போன்ற ஒரு இயற்கை ஈடுபாட்டை சிலப்பதிகாரத்திலும் உள்ளதை அறிய முடிகிறது.

**“கழனி செந்நெல் கரும்புசூழ் மருங்கில்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்து
கம்புள் கோழியும், கனைகுரல் நாரையும்
செங்கால் அன்னமும், பைங்கால் கொக்கும்
கானக் கோழியும், நீர்நிறக் காக்கையும்
உள்ளும் உரலும் புள்ளும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போல
பல்வேறு குழு உக்குரல் பரந்த ஓதையும்” (சிலம்பு 112-119)**

**“தென்கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த
மண்கணை முளவின் மகிழ்இசை ஓதையும்
பேர்யாற்று அடைகரை நீரிள் கேட்டு ஆங்கு
ஆர்வ நெஞ்சமொரு அவலம் கொள்ளார்” (சிலம் 138-141)**

இந்த இயற்கையில் இசை ஒலிகளை கேட்டு கோவலனும் கண்ணகியும் தன்னை மறந்து சென்றனர். காலையில் கதிரவனின் விடியலைக் கண்டு அதன் அழகைக் தன் மனதால் உணர்ந்து உணர்ச்சி பெருக்க காலைக் கதிரழகளை கற்பனையில் பாடுகின்றேன் என்று,

**“தங்க முருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான்வெளியைக்
சோதி கவர்ந்து சுடர் மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையென்று காண்பாரோ? (குயில்பயா – 31-34)**

மேலும் ஞாயிற்றின் எழினைக் கண்டு அதை பழநிப் பஞ்சாமிர்தம் போல இனிமையான கவிதையாக மாற்றுகிறார் பாரதி,

**“கண்ணையினி தென்றுரைப்பார் கண்ணுக்கு கண்ணாகி
விண்ணை அளக்குமொளி மேம்படுமோ? இன்பமன்றோ
மூலத் தனிப் பொருளை மோனத்தை சிந்தை செய்யும்
மேலவரும் அஃதோர் விரியுமொளி என்பாரோல்
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை ஒப்புளதோ
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி**

**மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து**
**விண்ணை வெளியாக்கி விந்தை செயஞ்சோதியினை**
**காலைப் பொழுதினிலே கண்விளித்து நான் தொழுதேன்**
**நாலுபுறத்துமுயிர் நாதங்கள் ஓங்கிடவும்**
**இசைக் களியில் இயங்கும் புவிகண்டேன்" (குயில்பா 35-44)**

இறைவன் படைப்புகளில் முதன்மையானது பஞ்சபூதங்கள் இவற்றின் செயல்பாடுகளை கண்டு வியந்து நோக்கி நாள் தோறும் இயற்கையில் ஏற்படும் விந்தைமிகு மாற்றங்களை கண்டு பாரதி,

**"ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாயிலுமே**
**கானா முதம் படைத்த காட்சி மிக விந்தையடா**
**காட்டுநெடுவானம், கடலெல்லாம் விந்தையெனில்**
**பாட்டினைப்போல் ஆச்சரியப் பாரின் மிசை இல்லையடா" (குயில்பா 93-96)**

என்று இயற்கையின் கண் கவரும் விந்தையைக் கண்டு பூரிப்படைகிறார். மேலும் குயில் பாடிய இன்னிசை பாட்டில் தனது மனதை பறிக்கொடுக்கிறார்.

**"ஆசைக்குயிலே! அரும் பொருளே! தெய்வமே**
**பேச முடியாப் பெருங்காதல் கொண்டுவிட்டேன்**
**காதலில்லை யானாற் கணத்திலே சாதலென்றாய்**
**காதலினாற் சாகுங் கதியினிலே தன்னை வைத்தாய்**
**எப்பொழுதும் நின்னை இனிப்பிரிய தாற்றுகிலேன்**
**இப்பொழுது நின்னை முத்தமிட்டுக் களியுறுவேன்" (குயில் 64-70)**

என்ற வரிகள் மூலம் பாரதிக்கு இயற்கை மேல் உள்ள ஏக்கத்தை புரிந்துக் கொள்ள முடிகிறது. குயில்பாட்டு பாரதியின் கற்பனையில் தோன்றிய இயற்கையை பற்றிய அருமையான படைப்பு என்பதனை

**"மாலை அழகின் மயக்கத்தால் உள்ளத்தே**
**தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி"(46-47)**

என்ற அடிகள் தெளிவுப்படுத்துகிறது. மேலும் பாரதியின் இயற்கை பற்றிய உணர்ச்சியின் வெளிப்பாடு அவருடைய பல பாடல்களில் வெளிப்படுகிறது. இயற்கையாக இவ்வுலகில் உள்ள பல உயிர்களிடம் பல கருத்துக்கள் பொதிந்துள்ளன என்பது உண்மை ஆனால் பாரதியார் இயற்கையை பார்த்து நீங்கள் எல்லாம் உண்மைதானா என்று இயற்கையிடமே கேட்பதை அவருடைய கவிதைகள் மூலம் அறிய முடிகிறது.

**"வானகமே இளவெயிலே மரச்செறிவே**
**நீங்களெல்லாம் கானலின் நீரோ**
**வெறுங் காட்சிப் பிழைதானோ**
**போனதெல்லாம் கனவினைப் போற்**
**புதைந்தமிழ்ந்த போனதனால் நானுமோர் கனவோ?**
**இந்த ஞாலமும் பொய்தானோ?**

## ஆய்வு முடிவுரை

பாரதியின் இலக்கியப் படைப்புகளை மிகவும் புதிய நெறிகளில் ஆய்வுக்கு உட்படுத்தும் போது மொழிக்குப் புதிய உத்திகளும் இயற்கையை பற்றிய மதிப்புகளும் உயருகின்றன. இவ்வுலகில் சங்க காலம் முதல் இக்காலம் வரை பல கவிஞர்கள் பலவகையான இலக்கயிங்களை படைத்துள்ளனர். அத்தனை இலக்கியங்களிலும் இயற்கை பாடுபொருளாக இடம் பெற்றுள்ளன. ஆனால் பாரதியின் கற்பனையில் தோன்றிய குயில்பாட்டு என்ற இலக்கியம் மக்களிடையே இயற்கையின் மதிப்பை உயர்த்தும் விதமாகவும், இயற்கையாக தோன்றும் காதலின் மகத்துவத்தை உணர்த்து விதமாகவும் இவ்விலக்கியம் படைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

## பார்வை நூல்கள்


1. பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் குயில்பாட்டு ஒரு மதிப்பீடு பாரி நிலையம், சென்னை – 600 001.
2. இளம்பூரணனார் - தொல்காப்பியம் பொருளதிகாரம் கௌரா பதிப்பகம், சென்னை.
3. புலியூர்க் கேசிகன் சிலப்பதிகாரம் (தெளிவுரை) பாரி நிலையம், சென்னை.

# முல்லையும் இயற்கையும்

**முனைவர் இரா. திலகா**
*உதவிப் பேராசிரியர்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரி, பணகுடி*

**ஆய்வு முன்னுரை**

*சங்கத்தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மிகவும் சிறப்புக்குரியவை. தனித்தனி புலவர்களால் பாடப்பெற்ற 103 அடிகளையுடைய முல்லைப்பாட்டு நப்பூதனார் என்ற புலவரால் பாடப்பெற்றது. தமிழகத்தில் உள்ள நிலங்களை தொல்காப்பியர் திணை அடிப்படையில் ஐந்து வகைப்படுத்தினார். அவற்றுள் பாலை நிலம் தமிழகத்தில் இல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற பிரிவிற்குள் நம் நிலப்பகுதியை அடக்கலாம். அதில் காடும் காடு சார்ந்த நிலமாகிய முல்லை நிலத்தில் நடக்கும் நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து முல்லைப்பாட்டு என்ற இலக்கியம் படைக்கப் பெற்றுள்ளது. அதில் பொதிந்துள்ள இயற்கைப் பற்றிய குறிப்புகளை ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

## முல்லைப்பாட்டு

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம்பெரும் மூதாதையர் பண்பாட்டு பெருமையினை இன்றையத் தமிழரும், பிறரும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்ற அவாவின் விளைவாக அக்காலப் புலவர் பெருமக்கள் ஆயிரம் ஆயிரம் பாடல்களை பாடிச் சென்றனர். அவர்கள் பாடிச் சென்ற இலக்கியங்களில் முல்லைப் பாட்டு அளவில் சிறிதாக இருந்தாலும் மதிப்புமிக்கது. அதனால் தான் இன்றும் முல்லை பாட்டை தமிழர்களின் அடையாளமாக கருதுகிறார்கள். முல்லைப்பாட்டு என்ற அக இலக்கியம் ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என்ற உயர்ந்த வாழ்க்கை நெறியோடு வாழ்க்கையைத் தொடங்குமிடத்துப் பிறந்த பேரின்பம். இத்தகையது எனப் பிறர்க்குப் புலனாக எடுத்துரைக்க மாட்டாதாய் இவ்விருவர் உள்ளத்து உணர்வை நுகர்ந்து மகிழ்தற்குரிய காதலை அகவாழ்க்கை என்றும் அவ்வின்ப வாழ்விற்குத் துணை நிற்கும் பிரிவைப் பற்றியும் முல்லைப்பாட்டு என்ற இலக்கியமாக நம் பழந்தமிழர் வகுத்துக் காட்டினர்.

முல்லைப்பாட்டு முல்லைத்திணைக்குரிய நூல் கார் பருவத்திற்கு முன் திரும்பி வருவதாகச் சொல்லிப் போருக்குச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வரவில்லை. தலைவியோ பிரிவுத் துயரம் தாளாமல் உடல் மெலிந்து வாடுகிறாள். தலைவியின் துயரத்தை தோழி ஆற்றுவித்து நற்சொல் கூறுகிறாள். தோழி கூறிய மொழி தலைவியின் துயரத்தை குறைக்கவில்லை. போரில் வெற்றி பெற்று பாசறையில் இருந்து தலைவன் திரும்பியதும் தலைவி ஆறுதலடைந்து இன்பமுறுகிறாள். இந்நிகழ்ச்சியைக் கருவாக கொண்டு புலவர் கவிநயத்தோடு எழுதியதே முல்லைப்பாட்டு. இந்நூல் நெஞ்சாற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது.

## முல்லைப்பாட்டில் இயற்கை

ஆவணி புரட்டாசி மாதம் தொடங்கியவுடன் கார்காலம் தொடங்கி விடுகிறது. அந்தக் கார்காலத்தில் மாலை பொழுதில் பெய்யும் மழையை வெம்மையால் வருந்தும் மக்கள் கண்டவுடன் முல்லை நிலத்தில் உள்ள மக்கள் மனம் குளிர்ந்து போவார்கள். இயற்கையாக பெய்யும் மழை இறைவன் கொடுத்த வரம் அதை பற்றிய குறிப்புகள் முல்லை பாட்டில் உள்ளன.

> **“நனம் தலை உலகம் வளைஇ நேமியொடு**

**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர் செல் நிமிர்ந்த மாசுல் போல**
**பாடிமிழ் பனிக்கடல் பருகி வலன் ஏர்பு**
**கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி**
**பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை"**
**(முல்லை 1-6)**

இதைப் போன்று மழை மேகத்தை திருமாலின் உருவத்திற்கு உவமையாக பாடப்பட்டுள்ளதை பிற்காலத்தில் தோன்றிய திருப்பாவை பாடல் வழி அறிய முடிகிறது.

**"ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீ கை கரவேர்**
**ஆழியிற் புக்கு முகந்துகொடு ஆர்த்து ஏறி**
**ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்**
**பாழியம் தோளுடைப் புத்பநாபன் கையில்**
**ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து**
**தாழாதே சாரங்கம் உதைத்த சரமழை"**
**(திருப்பாவை)**

முல்லைப்பாட்டில் இயற்கையாக நடக்கும் நிகழ்வுடன் தங்களுடையத் தேவையை தொடர்புபடுத்தி விரிச்சிக் கேட்டல் நிகழ்வு நடைபெறுகிறது. முல்லை நிலத்தின் கடவுளான திருமால் ஆலயத்தில் முல்லை பூவும் நெல்லும் வைத்து வழிபாடு நடத்தி முதுபெண்டிர் விரிச்சி கேட்டன, என்பதை கீழ்க்காணும் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

**"அருங்கடி மூதூர் மருங்கில் போகி**
**யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு**
**நாழி கொண்ட நறுவி முல்லை**
**அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது**
**பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்"**
**(முல்லை)**

கடும் குளிரால் கன்று பசியால் வருந்தி தன்னுடைய தாயை அழைப்பது இயற்கை. அதற்கு ஆயர்குல மகளிர் கன்றுவிடம் தாய்பசு இப்பொழுதே வரும் என்று கூறிய நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று தலைவியிடம் கூறி தலைவிய ஆற்றுப்படுத்தினார்கள். இதில் புலவர் இயற்கையாக நடக்கும் நிகழ்வை தன்னுடைய புலமைக்கு பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது.

**"சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்**
**உறு துயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்**
**நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய**
**கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர**
**இன்னே வருகுவர் தாயர்" என்போள்**
**நன்னர் நன்மொழி கேட்டனம்" (முல்லை)**

முல்லை மலர் பற்றிய குறிப்புகள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது,

**"பாணன் சூடான், பாடினி அணியாள்**
**ஆண்மை தோன்ற ஆடவர்க்கடங்க**
**பல்வேற் சாந்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே!" (புறம்)**

முல்லைப்பாட்டில் காட்டாறு, முல்லைக்காடு, பிடவச்செடி, புதல், எருக்கி, நீர், கடல் போன்ற கடவுளால் படைக்கப்பட்ட இயற்கை பற்றிய செய்திகள் உள்ளன.

**"கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்**
**சேண்நாறு பிடவமொடு மைம்புதல் எருக்கி**
**வேட்டுப்புழை அடுப்பம் மாட்டி காட்ட**
**இடுமுட் புரிசை ஏமுற வளைஇ**
**படுநீர்ப் புணரியின் பரந்தபாடி" (24-25)**

இயற்கையின் அடையாளம் நெற்பயிர்கள் அதனால் தான் வள்ளலார் 'வாடிய பயிரை கண்ட போது வாடினேன்' என்று கூறினார். நெற்கதிர்கள், கரும்பு, அதிமதுரத் தழைகள் பற்றிய குறிப்புகள் முல்லைப்பாட்டில் உள்ளன.

**"தேம்படு கவுள சிறுகண் யானை**
**ஒங்குநிலைக் கரும்பொடு, கதிர்மிடைந்து யாத்த**
**வயல்விளை இன்குளகு உண்ணாது னுதல் துடைத்து**
**அயில் நுனை மடுப்பின்தம் கையிடைக் கொண்டென" (முல்லை)**

மேலும் காயாமலர், கொன்றை மலர், காந்தள்மலர் போன்ற மலர்கள் பூத்திருப்பதையும் வருடந்தோறும் இயற்கையாக வானம் தப்பாமல் பெய்யும் மழையும் கார்காலத்தின் சிறப்பும் அழகாக வருணிக்கப்பட்டுள்ளன.

**"செறி இலைக் காயா அஞ்சனம் மலர**
**முறி இணரக் கொன்றை நன்பொன் கால**
**கோடல் குவி முகை அங்கை அவிழ**
**தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப**
**கானம் நந்திய செந்நிலப் பெருவழி**
**வானம் வாய்த்த வாங்கு கதிர்வரகின்**
**திரிமருப்பு இரலையொடு மடமான் உகள**
**எதிர்சொல் வெண்மழை பொழியும் திங்களில்" (முல்லை 92-100)**

இதைப்போன்று நற்றிணைப் பாடல்களில் மலர் பற்றிய குறிப்புக்கள் உள்ளதை கீழ்கண்ட பாடல் மூலம் அறிய முடிகிறது.

**"பாரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர்**
**நறு மோரோடமொடு உடனெறிந்து அடைச்சிய**
**செப்பு இடந்தன்ன நாற்றம் தொக்குடன்**
**அணிநிறங் கொண்ட மணிமருளைம் பால்" (நற். 337)**

## ஆய்வு முடிவுரை

சங்க இலக்கிய நூல்களில் பத்துப்பாட்டில் மிகவும் சிறிய நூலாக இருந்தாலும் உன்னதமான தமிழர்களின் பண்பாட்டை பறைசாற்றும் பொக்கிஷமாக உள்ளது. அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளை இயற்கையோடு தொடர்புபடுத்தி கார் கால வருணனை தலைவியின் கார் கால துயர நிலைகள் பற்றியும் முல்லை நிலத்தின் இயற்கை சிறப்புகளையும் இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

## பார்வை நூல்கள்


1. தமிழ்ப்பிரியன் - முல்லைப்பாட்டு கங்கை புத்தக நிலையம், சென்னை.
2. சி. பாலசுப்பிரமணியன் - திருப்பாவை விளக்கவுரை சாரதா பதிப்பகம், சென்னை.
3. புலியூர் கேசிகன் - புறநானூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம், சென்னை.

# இயற்கை இன்பம்

**முனைவர் சு. பால் மோகன்**
*தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்*
*தி.தெ.மா.நா.ச. கல்லூரி, தெ. கள்ளிகுளம்*

**ஆய்வுச் சுருக்கம்**

*இயற்கை என்பது மனிதனின் வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாகும். அது மனிதனின் மனப்பாங்கு மற்றும் உளரீதியான சுகாதாரத்தை நல்வழிப்படுத்தும் சக்தி கொண்டது. இயற்கை இன்பமையமானது என்பதை இவ்வுலகில் உள்ள அனைவரும் உணர வேண்டும். இயற்கைகளின் செயல்பாடுகள் சரிவர நடக்கவில்லை எனில் இவ்வுலகம் மண்ணோடு மண்ணாக அழிந்துவிடும் என்பது உண்மை. அதனால் தான் நம் முன்னோர்கள் இயற்கையயை தன் குலத்தை காக்கும் தெய்வமாக நினைத்து வழிபட்டார்கள். இயற்கையின் இன்பம் மனிதனின் உடல் மற்றும் மனதை சமநிலைப்படுத்துவதோடு அதன் உள்ளார்ந்த அமைதியையும் மனிதனுக்கு உணர்த்துகிறது. இயற்கையின் அழகான பரிமானங்களில் வானம் சூரியன், நிலவு, மழை, காடு, மலர்கள், நிலம் கடல் இவை அத்தைும் இயற்கையின் அற்புத படைப்புகளாகும். இவற்றிற்கு மனிதன் எவ்வித தீங்கும் செய்யாமல் அவற்றை தன்னுடைய உயிரினும் மேலாக போற்றி இயற்கையை பாதுகாத்தால் இயற்கையானது தன்னுடைய வாழ்விற்கு தேவையான இன்பத்தை கொடுக்கும் இயற்கையை நம் முன்னோர்கள் கடவுள் கொடுத்த வரமாக நினைத்து இயற்கையை தன்னுடைய வாழ்வின் இன்பமாக போற்றினார்கள். அதை இக்கால சந்ததியினரும் உணரும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**ஆய்வு முன்னுரை**

இயற்கை இன்பம் என்பது மனித உடலின் ஆன்மாவின் சமநிலையை விளக்குகின்றது. இயற்கையை நேசித்தால் அது நமக்கு அமைதி, சுகாதாரம் மற்றும் ஆன்மீக சாந்தியைத் தரும். இயற்கையை அன்னையாக வணங்கும் நம் நாட்டில் சமீப காலமாக இயற்கையை பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது. இயற்கையின் பலத்தை அறியாமல் அதற்கு கேடுகளும் நம்மவர்கள் செய்கிறார்கள். அதனால் பலவிதமான இயற்கை பேரழிவுகள் ஏற்படுகின்றன. இயற்கையின் ஒரு அங்கம் காடு காடு செழித்து இருந்தால்தான் மழைவளம் பெருகும். ஆனால் நம்மவர்கள் காடுகளை அழிக்கத் தொடங்கி விட்டார்கள். அதை உணர்ந்து தான் நம்முடைய அரசும் 'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் நாட்டு வளம் காப்போம்' என்று மக்களிடையே இயற்கையை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது. சாதாரன குடிமக்களும் இயற்கை தான் நம்முடைய வாழ்விற்கு இன்பத்தைக் கொடுக்கும் சக்தி என்பதை உணர்த்தும் நோக்கில் ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**இயற்கை இன்பம்**

இயற்கை அன்னை நமது தேவைகளைப் பூர்த்தி செய்வாள் ஆனால் நமது பேராசைகளைப் பூர்த்தி செய்யமாட்டாள் என்றா் காந்தியடிகள் இயற்கையை வழிபடுவதை நம் முன்னோர்கள் நமக்கு சொல்லிக் கொடுத்துள்ளனர். நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்ச பூதங்களை தொடர்ந்து நாம் வழிபடுகிறோம். அதற்குச் சான்றாக பஞ்சபூத தலம் தமிழ்நாட்டில் உள்ளது. நிலத்தின் அம்சமாக காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் நெருப்பின் அம்சமாக திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் நீரின் வடிவமாக திருவானைக்காவர் ஜம்புகேசுவரர் கோவில் ஆகாயத்தின் வடிவமாக சிதம்பரம் நடராஜர் கோயில், காற்றின் வடிவமாக திருக்காளத்தில் காளத்தீசுவரர் கோயில் உள்ளது. இது தமிழர்கள் இயற்கையை தெய்வமாக போற்றினார்கள் என்பதற்கு சான்று. பூமியைத் தாயாக கருதும் பழக்கம் நம் முன்னோர்களிடம் இருந்தது. ஆனால் இன்று பூமியை வேண்டாத கழிவுகள் கொட்டும்

இடமாக மாற உள்ளார்கள். அது போல கங்கை, காவேரி போன்ற நதிகளை தாயாக மதித்தார்கள். ஆனால் இன்று அத்தனை கழிவுகளும் நதிகளில் தான் கலக்கின்றன. மரங்களை தெய்வமாக வணங்கிய நாடு ஆனால் இன்று உயிர் காக்கும் ஆதாரமாக கூட பார்ப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும் இயற்கை பற்றிய புரிதல் மனிதனுக்கு ஏற்பட வேண்டும். நம்முடைய பண்டைய இலக்கியம் அனைத்தும் இயற்கையை மதித்து வாழ வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

தமிழில் தோன்றிய முதல் நூலான தொல்காப்பியத்தில் இவ்வுலகம் பஞ்ச பூதங்கலால் ஆனது என்று குறிப்பிடுகிறார்.

**"நிலம் தீநீர் வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"**
**(தொல் - 1589)**

மேலும் சங்க இலக்கிய நூலான புறநானூறறில் உலகத்தின் தோற்றம் குறித்து கூறப்பட்டுள்ளது.

**"மண் திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**வளித் தலைகிய தீயும்**
**தீ முரளிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை" (புறம் 2)**

'கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது பழமொழி அதற்கு காரணம் அவரின் கற்பனை வளம், தனித்துவம், இயற்கையின் அழகு போன்றவற்றை அவர் பயன்படுத்திய திறன் குறிப்பாக ராமனும் சிதையும் இயற்கை இன்பத்தை கண்டு ரசிப்பதை,

**"தாமரைப் பருவ வண்டும் தகை வரும் திருவும் தண்தார்க்**
**காமூகாப் பருவ மாதர் கண்களும் காமன் அம்பும் வயங்கு முத்தும்**
**நாமுதல் பருவ மெய்யும் நாம நூல் பொருளு மன்னோ?"**

மேலும் வாயுபுத்திரனான அனுமனை பஞ்ச பூதங்களோடு தொடர்புபடுத்துகிறார் இதிலிருந்து இயற்கையினை தெய்வத்தோடு தொடர்புப்படுத்துவதை அறிய முடிகிறது. இயற்கையை தன்னுடைய உயிரினும் மேலாக பேற்றி வணங்க வேண்டும் என்பதால் தான் இயற்கையை கடவுளோடு தொடர்புபடுத்துகிறார்.

**அஞ்சிலே ஒன்று பெற்றாள் அஞ்சிலே ஒன்றைத் தாவி**
**"அஞ்சிலே ஒன்று ஆறு சரக ஆசிரியருக்காக ஏகி**
**அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்குகைக் கண்டு அயளரூரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மை அளித்துக் காப்பான்"**

மேலும் சூரியனின் தோற்றத்தால் தான் இவ்வுலகில் இயற்கையின் செயல்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை சங்கப் புறப்பாடலும் வலியுறுத்துகிறது.

**"பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி**
**மாறி வருதி மலை மறைந் தொளித்தி**
**அகலிரு விசும்பி னானும்**
**பகல் விலங் குதியால் பல்கதிர் விருந்தே" (புறம் 8)**

இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் அடிப்படை பஞ்சபூதம் தான் என்பதை கம்பர் தன்னுடைய பாடல்களில் அறிவுறுத்துகிறார்.

**"வான் நின்று இழிந்து**
**வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும்**
**ஊனும் உயிரும் உணர்வும் போல்**
**உள்ளும் புறனும் உளன் என்ப**
**கூறும் சிறிய கோத்தாயும்**
**கொடுமை இறைப்பக் கோல் துறந்து**
**காணும் கடலும் கடந்து இமையோர்**
**இருக்கண் தீர்த்த கழல் வேந்தை"**

மேலும் ஒரு நாட்டின் சிறப்புமிக்க இயற்கை வளம் அந்நாட்டை உயர்ந்த நாடாகவும் பண்பான நாடாகவும் மாற்றும் என்கிறார் கம்பர்.

**"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை பொய் உரை இலாமையால்**
**வெண்மை இல்லை பல கேள்வி மேவலால்"**

இயற்கை வளம் பொருந்திய ஒரு நாட்டில் நீர்வளம். நெல் வளம் பெருகினால் அந்நாட்டில் மக்கள் சிறப்புடன் வாழ்வார்கள் என்று ஔவையார் கூறுவதை அறிய முடிகிறது.

**"வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயரக் குடி உயரும்**
**குடி உயரக் கோல் உயரும்**
**கோல் உயரக் கோன் உயர்வான்"**

இயற்கை இன்பம் பார்க்க பார்க்க இன்பத்தை தருவது அதனால் தான் கம்பர் பெண்ணின் நடையையும் அழகையும் மயிலுக்கும் தாமரை பூவிற்கும் ஒப்புமைப்படுத்தி கூறுவது இயற்கை இன்பம் எத்தகையது என்பதை பறைசாற்றுகிறது.

**"பஞ்சி ஒளிர் விஞ்ச குளிர் பல்லவம் அனுங்க**
**செந் செலிய கஞ்சம்நிகர் சீஷடியார் ஆகி**
**அம்சொல் இளம் மந்தை என அன்னம் என**
**மின்னும் வஞ்சி என நஞ்சு என வஞ்ச மகள் வந்தாள்" (கம் 2762)**

இயற்கை அழகை வர்ணிக்கும் கம்பன் அந்திக் காலத்தில் மலைக் காட்சியின் அழகைக் கூறும் இடத்தில் இரு கண்களும் களிப்பு கொள்ளும் வண்ணம் எழில் மேனியாக அமையும் மலையின் தோற்றம் பொலிவு கட் புலனுக்கு தரும் இன்பம் மலையின் பசுமைத் தோற்றம் அனைத்தும் இறைவனின் தோற்றத்திற்கு ஒப்பாகின்றது. இவ்வாறு தன்னுடைய புலனுக்கு இன்பத்தை தருகின்ற மலையை இறைவன் வடிவில் காண்கின்றான் கவிஞன்.

**"கண்ணுக்கு இனியது ஆகி விளங்கிய காட்சியாக**
**எண்ணத்திற்கு அரிது ஆகி இலங்கு சிரங்களாலும்**
**வண்ணக் கொழுஞ் சந்தனச் சேதகம் மார்பு அணிந்த**
**அண்ணல் கரியோன்தனை ஒத்தது – அல் - ஆக இல் குன்றம்" (கம் 829)**

மேலும் கம்பர் திருவேங்கட மலையின் சிறப்பை உணர்ந்து வேங்கடமலைக்கு நிகரான மலை இவ்வுலகில் இல்லை என்றும் இம்மலை பிறவிகளை ஒழிக்கும் மலை, இசை ஒலிக்கும் மலை, யானைகளும் புலிகளும் பகைமை மறந்து வாழும் மலை, திருமாலின் திருவடியை தாங்கிய மலை என்று வர்ணிக்கிறார்.

**"கோடுஉறு மால் வரை அதனைக் குறி குதிரேல்**
**உம் நெடிய கொடுமை நீங்கி**
**வீடு உறுதிர் ஆதலினால் விலங்குதிர்**
**அம்புறத்து நீர்மேவு தொண்டை"**
**(கம் 768)**

திருவேங்கட மலையின் மகத்துவத்தை உணர்ந்த குலசேகராழ்வார் அந்த மலையில் ஏதாவது ஓர் பொருளாக பிறக்கும் பாக்கியத்தை இறைவனிடம் வேண்டுகிறார்.

**"வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மனன்வரத்ம்**
**கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்**
**தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல்**
**கானாறாய் பாயும் கருத்துடையேனாவேனே"**

இயற்கை இன்பம் அள்ளக் அள்ளக் குறையாதது நாம் அதை பேணி பாதுகாத்தால் அது வாழ்வின் வரமாக நன்மைகளைத் தரும். இறைவன் படைப்பில் இயற்கைக்கு தான் முதலிடம். வாழ்வின்

உன்னதத்தை மனிதனுக்கு தருவது இயற்கை. அதனால் பாரதியார்.

**“காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ்**
**கண்டேதோர் வையை பொருனை நதி - என**
**மேவிய யாறு பலவேடைத் திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு”**

என்று தமிழகத்தின் வற்றாத ஜீவநதிகளான காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, தாமிரபரணி பற்றி பாடி பரவசமடைவதை அறிய முடிகிறது.

### இயற்கையின் இன்றைய நிலை

இயற்கை காற்று, நீர், நிலம், சூரிய ஒளி கனிமங்கள், தாவரங்கள், விலங்குகள் என பல கொடைகளை நமக்கு வழங்கியுள்ளது. இவற்றை பொக்கிஷமாக பாதுகாப்பது நம் கடமையாகும். இன்றையக் காலக்கட்டத்தில் சுத்தமான காற்று குடிநீர் தரமான உணவு போன்றவை கிடைப்பதில்லை அதற்கு காரணம் நாம் இயற்கையை தவறாக பயன்படுத்தியதே. அதிலும் குறிப்பாக நாம் நதிகளை கழிவு நீர்கள் கலக்கும் இடமாகதான் பயன்படுத்துகிறோம். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் தற்போது பெய்யும் மழையை விட அதிகமான மழை பெய்தது. ஆனால் மனிதன் இற்கையை பாதுகாத்ததால் எவ்வித ஆபத்தும் இன்றி வாழந்தான் ஆனால் இனறு மழையினால் ஏற்படும் மண் அரிப்பினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதற்கு காரணம் மனிதன் தன்னுடைய தேவைகளுக்காக காடுகளை அழித்தது தான். மேலும் இயற்கை வளங்கள் மனிதன் உயிர் வாழ பல அற்புதக் கொடைகளை நமக்கு அளித்து வருகின்றன. ஆனால் நாம் அவற்றை நம்முடைய சுயநலத்திற்காக அழித்து வருகின்றோம். இயற்கை வளமிக்க பசுமையான சோலைகள் காடுகள் மரங்கள் உயிரினங்கள், புல்வெளிகள், ஆறுகள், ஏரிகள் போன்றவை மனித வாழ்கைக்கு இன்றிமையாத ஒன்று. இறைவனால் படைக்கப்பெற்ற அறிய படைப்புகளுள் ஒன்று மரம் அதை தனது தேவைக்காக மனிதன் அழிக்கின்றான். அதனால் வாழ்வில் சொல்ல முடியாத துன்பத்தை தானே தேடிக் கொள்கிறான் என்பதை வைரமுத்துவின் கவிதையின் வாயிலாக அறிய முடிகிறது.

**பிறந்தோம் தொட்டில் மரத்தின் உபயம்**
**நடந்தோம் நடைவண்டி மரத்தின் உபயம்**
**எழுதினோம் பென்சில் பலகை மரத்தின் உபயம்**
**மணந்தோம் மாலை சந்தனம் மரத்தின் உபயம்**
**கலந்தோம் கட்டில் என்பது மரத்தின் உபயம்**
**துயின்றோம் தலையணை பஞ்சு மரத்தின் உபயம்**
**நடந்தோம் பாதுகை ரப்பர் மரத்தின் உபயம்**
**இறந்தோம் சவப்பெட்டி பாடை மரத்தின் உபயம்**
**எறிந்தோம் சுடலை விறகு மரத்தின் உபயம்**
**மரம் தான் மரம் தான் எல்லாம் மரம் தான்**
**மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்**
**மனிதா மனிதனாக வேண்டுமா மரத்திடம் வா**
**ஒவ்வொரு மரமும் போதி மரம்”**

### ஆய்வு முடிவுரை

மனிதன் இவ்வுலகில் இயற்கையோடு இணைந்துதான் வாழ முடியும் என்பதை நம் வாழ்வில் உறுதியாக நம்ப வேண்டும். இயற்கைக்கு மாறாக வாழ்ந்தால் நம் வாழ்வில் பல பிரச்சனைகளும் ஏற்படுவதோடு இயற்கையின் மாறுபாடினால் பேரழிவுகள் ஏற்படும் அதனால் தான் நம்முன்னோர்கள் இயற்கைகளை தன்னுடைய குலசாமியாக நினைத்து இன்பமாக வாழ்ந்தார்கள். ஆனால் நம்மவர்கள் இயற்கையை புறக்கணித்து வாழ்வதால் தினம் தினம் இயற்கையின் அழிவுகளால் துன்புறுகின்றனர் என்பதை

மக்களுக்கு உணர்த்தும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. டாக்டர் ரா. சீனிவாசன் - கம்பராமாயணம் அணியகம், மைக்ரோ அச்சகம், சென்னை – 3.
2. அ. அடைக்கலராஜ் - தொல்காப்பியம் கழக வெளியீடு, சென்னை – 2.
3. புலியூர் கேசிகன் - புறநானூறு மூலமும் உரையும் சரன் பிக்ஸ், சென்னை.

# புறநானூற்றில் இயற்கைச் சிந்தனைகள்

**முனைவர். சி. வி. சைலா**
*உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,*
*விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்*

**ஆய்வுச்சுருக்கம்**
*செவ்வியல் இலக்கியங்களாகத் திகழும் சங்கநூற்கள் மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழியின் தனித்துவத்திற்குச் சான்றாகத் திகழும் சங்க இலக்கியப் பாடல்கள் இயற்கையைப் பின்புலமாகக் கொண்டுள்ளன. பழந்தமிழர் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்ததோடு மட்டுமல்லாமல் பேணும் முறையையும் உலகிற்கு கற்றுக்கொடுத்துள்ளனர். பண்டைத்தமிழரின் வாழ்வை எடுத்துரைக்கும் புறநானூற்றில் அமைந்துள்ள இயற்கைச் சிந்தனைகள் ஆராயப்பட்டுள்ளன.*

**முன்னுரை**

இலக்கியங்கள் மனித வாழ்வினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கின்றன இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடம் காணப்படுகின்ற இயற்கை பற்றிய சிந்தனைகள் சங்ககால மக்களிடமும் இருந்துள்ளன. ஒவ்வொரு காலச் சூழ்நிலையிலும் இயற்கையோடு இயைந்து வாழ்ந்திருக்கின்றனர். அவ்வகையில் இயற்கையோடு மக்கள் வாழ்ந்த பண்பாட்டுப் பிணைப்புகளை புறநானூற்றின் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

**இயற்கை விளக்கம்**

தமிழரின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம், என்னும் நூற்பாவில் ‘இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்’[1] இயற்கையை ‘இயல்பு’ என்ற பொருளில் விளக்குகின்றது. மேலும் உலகம் என்பது ஐம்பூதங்களை உள்ளடக்கியது மட்டுமல்லாமல் இயற்கையாலானது ஆனாது என்பனும்,

**“நிலம் தீ வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்”**[2]

இச்செய்யுள் விளக்குகின்றது. இதனை,

**“இரு முந்நீர்க் குட்டமும்**
**வியன் ஞாலத்து அகலமும்**
**வளி வழங்கு திசையும்**
**வறிது நிலைஇய காயமும் என்றாங்கு”**[3]

என்ற புறநானூற்றுப்பாடல் கடல், காற்று, நிலம், ஆகாயம் நான்கையும் அன்பு, அறிவு ஆகிய உயர்பண்புகளுக்கு இணையாகக் குறிப்பிடுகின்றது.

**நிலம் நீர்**

நிலம் என்பது உடம்பு. நீர் என்பது உயிர். நீரின்றி வாழாது உடல். அவ்வுடலுக்கு உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவராவார். உடம்பு அழியாமல் காக்கப்பட வேண்டுமாயின் நீர் நிலைகளை உயிரைப்போல் பாதுகாக்க வேண்டுமென்பதை சங்ககால மக்கள் உணர்ந்திருந்தனர். இதனைப் புறநானூறும்,

**“நீரின்றி அமையா யாக்கைக்கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”**[4]

மெய்ப்பிக்கின்றது.

**“விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது”**[5]

என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது.

பழந்தமிழர் குளம் அமைத்து வளம் பெருக்கும் பணியிலும் ஈடுபட்டு இருந்ததை,

**“நிலன்நெறி மருங்கின் நீர்நிலைப் பெருகத்**
**தட்டோர் அம்ம, இவண் தட் டோரே”**[6]

என்ற புறநானூற்றுப் பாடலடிகள், விளக்குகின்றன.

**"அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**
**தெண்ணீர்ச் சிறுகுளம்"**[7]

என்னும் செய்யுள் வாயிலாக எட்டாம் நாள் தோன்றும் பிறை போன்ற வளைந்த தோற்றமுடைய குளம் கட்டப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படுத்தியதை அறிய முடிகிறது.

பருவம் மாறி மழை பொய்க்கும் போதும் பேரிடர்காலத்தும் மக்களைப் பாதுகாப்பதோடு உழவர்களுக்கான நீர்வளத்தை வழங்குவது நல்லரசு என்பதை,

**"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்**
**இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்**
**காவல்ப்பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்"**[8]

என்ற பாடல் உணர்த்துகிறது.

இக்காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக மழைநீரை அணை, ஏரி, குளம் ஆகியவற்றில் சேமித்து இயற்கையால் விளையும் இன்னல்களிலிருந்து மக்களைக் காக்கின்றனர்.

சங்ககால மக்கள் பாறை மற்றும் மணல் திட்டுகளை வளைத்து தேவையான இடங்களில் நீர்த்தேக்கங்களை உருவாக்கி பாதுகாப்பாக வாழும் திறமை பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

**காற்று**

சங்ககால மக்கள் காற்றின் பல்வேறு தன்மைகளை அறிந்து வைத்திருந்தனர். பழந்தமிழர் எல்லைகளையும், மன்னனின் சிறப்பையும் குறிப்பிடும் வகையில் புலவர் வெள்ளைக் குடிநாகனார் கடல்களால் சூழப்பெற்ற காற்று வழங்காத வானத்தின் கீழ் உள்ள தமிழ் நிலத்தை ஆளும் வேந்தனாகிய சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவனை,

**"நனியிரு முந்நீர் ஏணியாக**
**வளியிடை வழங்கா வானம் சூடிய**
**மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க்கிழவர்"**[9]

என்று குறிப்பிடுகிறார்.

காற்றின் இயல்பையும் அதன் இயக்கத்தையும் அறியும் ஆற்றல் பெற்றவர்களாக மன்னர்கள் விளங்கியதை,

**"வளி திரி தரு திசையும்"**[10]
**"வளிபுடைத்த கலம் போல"**[11]

என்ற பாடல் வாயிலாக புலவர்கள் எடுத்துரைக்கின்றனர்.

**வானியலறிவு**

பழந்தமிழர் இயற்கையைக் கடவுளாக வணங்கினர் ஞாயிறு தொன்மை வழிபாடாக இருந்ததை,

**"செஞ்ஞாயிற்றுச் செலவும்**
**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்"**[12]

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன. மேலும், ஞாயிற்றின் தோற்றம் இயங்கும் முறை, வான்வழி மண்டிலம் குறித்த செய்திகளையும் எடுத்துரைக்கின்றன.

வானத்திலிருந்து ஓர் எரி நட்சத்திரம் விழுந்த ஏழாம் நாளில் சேரமன்னன் இறந்ததை,

**"பங்குனி உயர் அழுவத்துத்**
**தலை நாள் மீன் நிலை திரிய**
**நிலை நாள்மீன் அதன் எதிர் ஏர்தர"**[13]

என்று கூடலூர்க்கிழார் பாடியுள்ளார்.

வெள்ளிக்கோளானது தென்புலத்தில் மறைந்தால் நீரின்றி வறட்சி ஏற்படுவதை,

**"வெள்ளி தென்புலத்து உறைய விளைவயல்**
**பள்ளம் வாடிய பயன் இல் காலை"**[14]

என்ற பாடல் உணர்த்துகிறது. வானில் கோள்களின் மாற்றத்தை அறியும் ஆற்றல் பெற்றவர்களாக சங்கத்தமிழர் விளங்கியது புலனாகிறது.

**"வாள் வலந்தர மறுப்பட்டன**
**செவ் வானத்து வனப்பு போன்றன"**[15]

என்னும் வரிகள் மூலமாக வாள்கள் வெற்றிக்காகப் போரிட்டதால் வெளியேறிய குருதியை சிவந்த வானத்திற்கு ஒப்புமைப்படுத்தியதை அறியமுடிகிறது.

**"உலவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை**

**நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற"**[16]

என்ற பாடலில் முழுமதியின் வடிவத்தை வெண்கொற்றக் குடைக்கு இணையாகப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

பகைவரை அழிக்கச் சினந்து எழுந்த போது ஞாயிறாகவும், துயருற்றோர்க்கு இரங்கி அருள்கின்ற வேளை தண்மதியம் போலவும் தலையாலங்கானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் விளங்கியதை,

**"மீன் திகழ் விசும்பின் பாய் இருள் அகல**
**ஈடு செலல் மரபின் தன்இயல் வழாஅது**
**உரவுச் சினம் திருகிய உருகெழு ஞாயிறு**
**நிலவுத் திகழ் மதியமொடு, நிலஞ்சேர்ந்தாங்கு"**[17]

என்று கல்லாடனார் புகழ்ந்து பாடியுள்ளார்.

இதிலிருந்து ஞாயிறு, நிலவு ஆகிய இரண்டையும் அரசர்களின் இயல்புகளாக பழந்தமிழர் போற்றியிருப்பதைக் காணமுடிகிறது.

## நெருப்பு

சங்கப்புலவர்கள் மன்னனது குணங்களை ஐம்பெரும் பூதங்களின் ஆற்றலோடு ஒப்பிட்டுப்பாடுவது மரபாகும். தீ போல எதிரிகளை அழிப்பவன், காற்று போல வேகமுடையவன், ஆகாயம் போன்ற வல்லமை, பூமி போன்ற பொறுமை உடையவன் என்று போற்றிப் பாடியுள்ளனர்.

விண்ணில் உழலும் காற்று தீயைப் பற்றி பரவச் செய்யும் ஆற்றலைப் பெற்றிருப்பதை,

**"விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்"**[18]

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியுள்ளார்.

காற்று நெருப்புடன் இணைந்தால் தீ விரைவாக எரியும் என்ற அறிவியல் உண்மையை,

**"……………… காற்றோடு**
**எரிநிகழந்தன்ன செலவின்"**[19]

என்று புலவர் உவமையாகக் கூறுகின்றார்.

## மரங்கள் (காடு)

இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் பெருஞ்சேதத்தைத் தடுக்க காட்டரண்களை அமைத்தல் வேண்டும். நீரால் ஏற்படும் அழி வினைத்தடுக்க மரங்கள் அவசியமாகிறது. நிலச்சரிவினைத் தடுப்பது மட்டுமன்றி அடந்து உயர்ந்த மரங்கள் மழைப்பொழிவிற்கு காரணமாக அமைகின்றன என்பதை முன்னோர்கள் அறிந்திருந்தனர். காட்டை அழிப்பதால் நாம் சுவாசிக்கும் காற்றில் கலந்திருக்கும் கார்பன்டை ஆக்ஸைடு பிராணவாயுவாக மாற்றப்படும் நிகழ்வு தடை பட்டு நோய் பரவக்காரணமாகிறது. மரத்தினைப் பாதுகாக்கும் நெறி பண்டைக்காலத்தில் இருந்ததை,

**"மரங் கொல் தச்சன் கைவல் சிறாஅர்"**[20]

மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் மரத்தை வெட்டும் தொழிலை கொல்லும் செயலுக்கு இணையாக விளக்கியுள்ளது. கடையெழு வள்ளல்களுள் ஒருவரான காரி மரங்கள் சூழப்பெற்ற நாட்டினைத் தானமாக வழங்கியதை,

**"--------------------- நளி சினை**
**நறும் போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்**
**குறும்பொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த காரிக்குதிரை"**[21]

என்று சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கின்றது. இந்நிகழ்வால் காடு பாதுகாப்புச் சிந்தனை சங்ககால மக்களிடம் இருந்துள்ளமை தெளிவாகிறது.

## நிறைவுரை

எட்டுத்தொகை நூற்களில் ஒன்றான புறநானூற்றில் ஐம்பூதங்கள் குறித்த சிந்தனைகள் நிறைந்து காணப்படுகின்றன. நிலம், நீர், வான், காற்று, நெருப்பு ஆகியவற்றின் தன்மை குறித்து புலவர்கள் விளக்கியிருக்கின்றனர். உலக இயக்கம் ஞாயிற்றின் தோற்றம் பற்றி அறிந்த வானவியலாளர்கள் இருந்தனர். சங்ககால

மக்கள் பல்துறையறிவு பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிந்தது.

## தொகுப்புரை

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள இயற்கை சார்ந்த பதிவுகள் இனங்கண்டு பகுத்தும் தொகுத்தும் தரப்பட்டுள்ளன. புதிய தலைமுறையினருக்கு இயற்கையின் அழகை, ஆற்றலை நம் இலக்கியங்களின் வழி உணர்த்துவதோடு நாமும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை மேற்கொள்ளவேண்டும். அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக அழிந்து வரும் இயற்கையைப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. ‘சொல்லதிகாரம் மூலமும் உரையும்’ முனைவர் ச. திருஞானசம்பந்தம் தொல். சொல்கிளவி. நூ.எ.19, ப.எ.22, முதற்பதிப்பு.2013 ராஜா பப்ளிகேஷன்ஸ் நெ.10 முதல்தளம், இப்ராகிம் நகர் காஜாமலை, திருச்சி-23.
2. ‘தொல்காப்பியம்- பொருளதிகாரம்’ தமிழண்ணல் தொல். பொருள் மரபியல் நூ.எ.1589 ப.எ.144, இரண்டாம் பதிப்பு – 2014 செல்லப்பா பதிப்பகம் மயூரா வளாகம்
3. 48 தானப்ப முதலியார் தெரு மதுரை - 625001.
4. ‘புறநானூறு மூலமும் உரையும்’ புலியூர்க்கேசிகன் புறம் 20 (வரி-4) ப.எ. 49
5. முதற்பதிப்பு -1958, மறுபதிப்பு – 2011 பாரிநிலையம் 184 பிராட்வே, சென்னை - 600108.
6. மேலது புறம் 18 (வரி 18-19) ப.எ.46
7. ‘திருக்குறள் மூலமும் தெளிவுரையும்’ பழனிதாசன், வான்சிறப்பு குறள் -16 ப.எ. 19, முதற்பதிப்பு -2017 இரண்டாம் பதிப்பு -2018
8. கலா ஆப்செட் காலண்டர்ஸ், சிவகாசி
9. மேலது புறம் 18 (வரி 28-29) ப.எ.46
10. மேலது புறம் 118 (வரி 1-3) ப.எ.165
11. மேலது புறம் 39 (வரி 27-29) ப.எ.75
12. மேலது புறம் 35 (வரி 1-3) ப.எ.74
13. மேலது புறம் 30 (வரி 4) ப.எ.67
14. மேலது புறம் 26 (வரி 2) ப.எ.60
15. மேலது புறம் 30 (வரி 1-3) ப.எ. 66 – 67
16. மேலது புறம் 229 (வரி 5-7) ப.எ.282
17. மேலது புறம் 388 (வரி 1-2) ப.எ.440
18. மேலது புறம் 4 (வரி 1-2) ப.எ.19
19. மேலது புறம் 3 (வரி 1-2) ப.எ.21
20. மேலது புறம் 25 (வரி 1-4) ப.எ.59
21. மேலது புறம் 2 (வரி 3-4) ப.19
22. மேலது புறம் 41 (வரி 16-17) ப.எ.84
23. மேலது புறம் 206 (வரி 11) ப.எ.258
24. ‘பத்துப்பாட்டு’ ஞா. மாணிக்கவாசகன் சிறுபாணாற்றுப்படை (வரி 107-110) ப.எ.97, உமா பதிப்பகம், சென்னை - 600001.

# திருவள்ளுவரின் இயற்கைப்புனைவில் மரம்

**முனைவர் ப.சு. செல்வமீனா**
*இணைப் பேராசிரியர்*
*தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி*

**ஆய்வுச் சுருக்கம்**
*தெய்வநூலாம் திருக்குறள் பரந்துபட்ட இலக்கியப் பொருண்மைகளைத் தன்னகத்தே கொண்டது. வள்ளுவர் வாழ்வியல் ஒழுகலாறுகளை எடுத்துரைக்க இயற்கையையும் ஒருபடைப்பாக்க நெறியாக எடுத்துக் கொண்டார். அவ்வகையில் திருவள்ளுவரின் இயற்கைப் புனைவில் மரம் பெறுமிடத்தை விளக்குவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் சுருக்கமாக அமைகிறது.*

**முன்னுரை**

உலகம் உவக்கும் திருக்குறளெனும் ஒப்பற்ற நூலினைப் படைத்தளித்தவர் செந்நாப்போதாராகிய வள்ளுவப் பெருந்தகை. இந்நூல் அறத்துப்பால் (38), பொருட்பால் (70), காமத்துப்பால் (25) என்னும் முப்பால்களையும் இல்லறவியல், துறவியல், அரசியல், ஒழிபியல், களவியல், கற்பியல் எனும் ஏழு இயல்களையும் 1330 அரிய குறட்பாக்களையும் தன்னுள் கொண்டுள்ளது. திருக்குறளில் மனித வாழ்வியல் நெறிகளை விளக்க 'மரம்' என்னும் பொருண்மையை வள்ளுவர் கையாண்ட முறையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கைப் புனைவில் மரம்**

மனித வாழ்வில் இயற்கை முதன்மையானது. "மனித வாழ்க்கைக்கும் பிற உயிர்களின் வாழ்க்கைக்கும் பிற உயிர்களின் வாழ்க்கைக்கும் இவ்வுலக இயற்கைப் பொருள்கள்

இன்றியமையாதவை. அவற்றின் வளம் கொண்டே உயிர்கள் செழிக்கின்றன."[1] திருக்குறளில்

எண்ணரும் வாழ்வியல் விழுமியங்கள் இயற்கைக் கூறுகள் மூலமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

திருக்குறளில் செடி, கொடி, தாவரங்கள், பூக்கள், மரங்கள் முதலான தாவரவியல் (Botany)

செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. இவற்றுள் மரம் பற்றிப் பின்வருபவை விளக்குகின்றன.

தொல்காப்பியர் உயிர்ப்பாகுப்பாட்டை விளக்குமிடத்துப் புல்லும் மரமும் ஓரறிவுயிர்கள் என்பதை,

**"புல்லும் மரனும் ஓரறிவு வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[2]**

என்னும் நூற்பா வழி விளக்கியுள்ளார். ஓரறிவுயிராவது உடம்பினால் அறிவது. உடம்பினால் வெப்பம், தப்பம், வன்மை, மென்மை அறிவதே ஓரறிவுயிரின் பண்பாகும். தாவர வகையுள் மரமும் ஒன்றாகும். இது ஆங்கிலத்தில் 'Tree' எனப்படும்.

தொல்காப்பியம் மரம், புல் என்பதற்கு,

**"அகக்கா ழனவே மரமெனப் படுமே"[3]**
**"புறக்கா ழனவே புல்லெனப் படுமே"[4]**

என்று விளக்கம் தருகிறது. வைரம் பாய்ந்த கட்டை என்பது முன்னோர் கூறுவது போல உள்உயிர்ப்புடையவே மரம் என்று அழைக்கப்படும். உள் உயிர்ப்பில்லாதவை புல்லெனப்படும்.

**வள்ளுவரின் புனைவில் மரம்**

திருக்குறளில் வாழ்வியல் நெறிகளை விளக்க 'மரம்' என்னும் தாவரவகை வள்ளுவரால் பதினொரு (78, 216, 217, 576, 600, 879, 997, 1008, 1020, 1058, 1078) இடங்களில் கையாளப் பெற்றுள்ளது.

**மரமும் அன்பும்**

மனித வாழ்வில் அன்பு தலையாயது. இதனை,

> **“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு”**[5]

என்பர் வள்ளுவர். அன்பை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் உடம்பே உயிர்தங்கிய உடம்பாகும். அவ் அன்பு இல்லாதவர்க்கு உண்டான உடம்பு எலும்பைத் தோலால் போர்த்த வெற்றுடம்பேயாகும். அன்பே உலக இயக்கத்திற்கு அடிப்படையானது.

மனத்தில் அன்பில்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை பாலைநிலத்தில் ஈரம் வற்றிய மரம் தளிர்க்காததைப் போன்றது என்பதனை,

> **“அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
> **வற்றல் மரம்தளிர்த் தற்று” (குறள்:78)**

என்னும் குறள் சுட்டுகிறது. அன்பற்ற உயிர் வாழ்க்கைக்கு வற்றல் மரம் உவமையாக்கப்பட்டுள்ளது. வற்றல் என்பதற்கு “இலை, கிளை இல்லாத மரம்”[6] என்று பொருள். உலர்ந்த மரம் தளிர்க்காதது போல அன்பில்லாத மனமும் நன்கு வாழ்தல் இயலாது.

**பயன், மருந்து மரங்களும் ஒப்பறிவாளன் செல்வமும்**

ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அஃது ஊரின் நடுவே உள்ள பயன்மிகுந்த மரம், பழங்கள் பழுத்தாற் போன்றது (குறள்-216). ஒப்புரவாகிய பெருந்தகைமை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அஃது எல்லா உறுப்புகளும் மருந்தாகிப் பயன்படத் தவறாத மரம் போன்றது (குறள்-217). “மனிதநேயம் படைத்த பேரறிவாளனின் செல்வமும் ஊர்மக்களுக்குப் பயன்படுகிறது. குளத்திலுள்ள நீர் மக்களுக்கு மட்டும் பயன் தரவில்லை. அது மரம், செடி, கொடிகளுக்கு பயன்தருகின்றது. வளரும் தாவரம் சத்துள்ள பழங்களைத் தரும் மரங்களாக இருக்குமானால் அது மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் பயன்படுகின்றது”[7]

“செல்வமானது உதவி செய்யும் பெருந்தன்மை உடையவனிடத்துப் பொருந்துமாயின் அது தன் இலை, பூ, காய் முதலிய எல்லா உறுப்புக்களும் மருந்தாகப் பயன்படும் மரத்தை ஒக்கும்.”[8] என்பார் கா.சு. பிள்ளை. இவ்விடத்து மருந்துமரம் என்று வள்ளுவர் மொழிந்தது வாழை மரமாக இருக்க இடமுண்டு.

**நச்சு மரமும் நச்சப்படாதவனும்:**

பொருள் ஈட்டுவதில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர் தமக்கோ பிறர்க்கோ அதனைப் பயன்படுத்தாது பூமிக்குப் பாரமாக இருப்பர். செல்வத்தை விரும்பி எவருக்கும் கொடாதவருடைய செல்வம் நடு ஊருள் நச்சுத்தன்மை வாய்ந்த பழங்களைக் கொண்ட மரத்தைப் போன்றது என்பதனை,

> **“நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
> **நச்சு மரம்பழுத் தற்று” (குறள்-1008)**

என்னும் குறள் குறிப்பிடுகிறது. “பிறரால் விரும்பப் படாதவனது செல்வம் ஊர் நடுவிலே எட்டி மரம் பழுத்திருப்பது போல ஆகும்”[9] என்பர் சாமி சிதம்பரனார். வள்ளுவர் நச்சுமரம் என்று உரைத்திருப்பது எட்டிமரமென்று அறிய இடமாகிறது.

**மரமும் ஊக்கமின்மையும்**

மனித வாழ்வின் உயர்வுக்கு அடிப்படை ஊக்கமாகும். ஒருவனுக்குத் திண்மையான அறிவெனப்படுவது ஊக்கமிகுதியாகும். அவ்வூக்க மிகுதி இல்லாதவர் மக்களாகார் மரங்களாவார். வடிவத்தில மக்களைப் போன்றிருப்பினும் மரங்களைப் போன்றவரே என்பதனை,

> **“உரமொருவற் குள்ள வெறுக்கை/ தில்லார்**
> **மரமக்கள் ஆதவே வேறு” (குறள்-600)**

என்னும் குறள் மொழிகிறது. "ஊக்க மிகுதியே வலிமை, அது இல்லாதவர் நிலையால் மரம்; வடிவால் மானிடர்"[10] என்பார் வ.சுப. மாணிக்கனார்.

**மரமும் மக்கட்பண்பும்**

மனிதனை மனிதனாக்குவது கண்ணோட்டமாகும். "பிறரோடு பழகிப் பழகிக் கண்ணோட்டம் உடையவர்களாய் இயைந்து வாழ்வதே மக்கட்பண்பு"[11] அரம் போன்ற கூர்த்த அறிவுடையவராயினும் மக்கட்பண்பு இல்லாதவர் மரத்தைப் போன்றவரென்பதனை,

> **"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
> **மக்கட்பண்பு இல்லா தவர்" (குறள்-997)**

என்னும் குறள் பகர்கிறது. "நன்மக்களுக்குரிய பண்பில்லாதவர் அரத்தினைப் போன்று கூர்மையுடைய புத்தியுடையவரானாலும் ஓர் அறிவினை உடைய மரத்திற்கு ஒப்பாவார்கள்"[12] என்கிறார் திருக்குறளார் முனுசாமி.

**மரப்பாவையும் நாணமின்மையும், வறியவரின்மையும்**

மரத்தால் செய்யப்பெற்ற பாவை மரப்பாவையாகும். இது அழகுடையதாய் இருப்பினும் உணர்ச்சியற்றதாய் விளங்கும் தன்மையது. மனிதனுக்குத் தேவையான குணம் நாணுவதற்கு நாணுவதாகும். மனத்தில் நாணமில்லாதவர் உலகத்து இயங்குதல் மரப்பாவையைக் கயிறு கொண்டு கட்டி உயிருள்ளதாக மயக்கினாற் போன்றதாகும். (குறள்: 1020). இதற்குப் பரிமேலழகர் "தம் மனத்தின் கண் தான் இல்லாத மக்கள் உயிருடையார் போன்று இயங்குகின்ற இயக்கம் மரத்தால் செய்த பாவை இயந்திரக் கயிற்றினைத் தன் இயக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினால் போலும்"[13] என்று உரைவகுத்துள்ளார்.

இரத்தலும் ஈதலும் உலகத்து இயல்பு. "இரப்பவர் இல்லையானால் இப்பெரிய உலகின் இயக்கம் மரத்தால் செய்த பாவையைக் கயிற்றினால் ஆட்டப்பட்டுச் சென்று வந்தாற் போன்றதாகும்"[14] (குறள் : 1058) உதவி கேட்பவர் இல்லாவிடின் இப்பேருலகே மரப்பாவை போல உணர்ச்சியற்று நடக்கும் தன்மையதாய் மாறிவிடும்.

**முள்மரமும் பகைவெல்லலும்**

மரங்களில் முள்மரமும் ஒன்று. முள்மரத்தைச் சிறியதாக இருக்கும் பொழுதே களைய வேண்டும். முதிர்ந்த தண்மையில் களையத் தொடங்கினால் களைபவர்தம் கையையே களைத்து விடும். அது போலத் தம் பகையை தொடக்கநிலையிலேயே களைத்துவிட வேண்டும் என்பதனை வள்ளுவர்,

> **"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
> **கைகொல்லும் காழ்த்த விடத்து"**

என்னும் குறட்பா வழி உணர்த்தியுள்ளார். இது இரு விகற்பக் குறள் வெண்பாவாகும். "பகையை முற்ற விடக்கூடாது. ஆரம்பத்திலேயே வெற்றியினாலோ நட்பினலோ பகை இல்லாமற் செய்து விட வேண்டும்"[15] என்பார் நாமக்கல் கவிஞர். முள்மரம் என்று வள்ளுவர் மொழிந்தது கருவேலமரம், இலந்கை, சூரம்பழம் போன்ற மரவகையினவையாக இருக்கலாம்.

**பனைமரமும் நன்றியுணர்வும்**

பனை என்பது தொல்காப்பியரால் புல்வகை என்றுரைக்கப்படினும் 'பனை' என்னும் பெயரை வள்ளுவர் நன்றி, குற்றம், சாமம் முதலியவற்றைக் காட்டக் கையாண்டுள்ளார். (குறள் : 104, 433, 1282) தினையளவு நன்றி செயினும் அதனைப் பனையளவாகக் கொள்வர் நன்றியின் பயனை அறிந்தவர். நன்றிக்குப் பல்வேறு அளவுகோல்களை எடுத்துக்காட்டும் வள்ளுவர் தினை, பனை என்னும் சொற்களை எடுத்தாண்டு நன்றியின் அளவை உரைக்கிறார். இங்கு பனை என்பது மரத்தைக் குறிக்காது பனங்காயைக் குறிக்கும்.

**கரும்பும் கீழ்மைக் குணமும்**

கரும்பும் புல்வகையினது. ஒருவர் தம் குறையைக் கூறியவுடன் உடுக்கையை இழந்தவன் கைபோல உதவிச் செய்ய சான்றோர் விரைந்து செல்வர். "கீழோரோ கெஞ்சினால் கூட உதவமாட்டார். கரும்பைத் தறித்தும் நெரித்தும் அடர்த்தும் சாறு பிழிவது போல வன்முறையால் அவர்களிடமிருந்து அனுகூலம் பெற முடியும்"[16] இக்கருத்தை,

> **"கொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
> **கொல்லப் பயன்படும் கீழ்"(குறள் : 1078)**

என்னும் குறள் மொழிகிறது. "பெரியோர் வருத்துவோர்தம் குறையைச் சொன்னவுடனே பயன்படுவர். கீழோர் (கயவர்) கரும்பு போல வலியார் வனதத்த பொழுதுதான் பயன்படுவர்"[17] கீழ்மைக் குணத்தைச் சொல்ல வள்ளுவர் கரும்பைக் கையாண்டுள்ளார்.

**முடிவுரை**

**"திருவள்ளுவரின் இயற்கைப்புனைவில் மரம்"** என்னும் ஆய்வுக் கட்டுரையில் வள்ளுவர் பதினொரு இடங்களில் மரம் பற்றிப் பதிவு செய்துள்ளதையும் அவை வாழ்வியல் பண்புகளை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் ஆய்வின் வழி அறிய முடிகிறது அன்பு, மக்கட்பண்பு, நன்றியுணர்வு பகைவெல்லும் தன்மை, கீழ்மைக்குணம் முதலானவற்றை மரங்களில் வழி வெளிப்படுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை.

**தொகுப்புரை**

**"திருவள்ளுவரின் இயற்கைப்புனைவில் மரம்"** என்னும் ஆய்வுக்கட்டுரையின் வழி,

- மனித வாழ்த்கைக்கு இயற்கை வளம் முதன்மையானது.
- வள்ளுவர் வாழ்வியல் விழுமியங்களை எடுத்துரைக்க 'மரம் எனும் தாவரவகையைக் கையாண்டுள்ளார். தொல்காப்பியர் குறிப்பிடும் உயிர்ப்பாகுபாட்டில் மரமும், புல்லும் ஓரறிவு உயிருடையனவாகும்.
- திருக்குறளில் மரம் என்னும் சொல்லாட்சி பதினொரு (78, 216, 217, 576, 600, 879, 997, 1008, 1020, 1058, 1078) இடங்களில் கையாளப் பெற்று வாழ்வியல் கூறுகள் விளக்கப் பெற்றுள்ளன.
- உலர்ந்த மரம் தளிர்க்காதது போல அன்பில்லா மனமும் நன்கு வாழ்தல் இயலாது (78)
- ஒப்பரவாளன் பெற்ற செல்வம் நடுஊருள் பழ மரம் பழுத்ததைப் போன்றது.(216) மருந்து மரம் காய்த்ததை ஒத்தது. (217). மருந்து மரம் என்பது வாழை, வேம்பு போன்றவையாக இருக்கலாம்.
- விரும்பப்படாதவனது செல்லும் ஊர் நடுவிலே எட்டி முதலான நச்சு மரம் பழுத்தது போன்றது. (1008)
- ஊக்கமில்லாதவனும் (600) மக்கட்பண்பு இல்லாதவனும் (997) கண்ணோட்டமில்லாதவனும் (579) மரத்தைப் போன்றோரே.
- நாணமின்மையும் (1020) வறியார் இன்மையும் (1058) பேருலகை மரப்பாவை போல உணர்ச்சியற்றதாக்கிவிடும்.
- முள்மரத்தைத் தொடக்க நிலையிலேயே களைத் தெறிவது போலப் பகைவரையும் ஆரம்பத்திலேயே வென்று விட வேண்டும். (879)
- நன்றியின் பயனை நன்குணர்ந்த சான்றோர் தினையளவு உதவி செய்யினும் அதனைப் பனையளவு பெரிதாகக் கொள்வர். (104)
- கீழோர் கரும்பு போல வலியார் வதைத்த பின்பே பயன்படுவர். (1078).

முதலான ஆய்வு முடிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. வள்ளுவர் 'மரம்' என்னும்

இயற்கைப் புனைவிலிருந்து உலக மக்களின் வாழ்விற்குத் தேவையான செய்திகளை விளக்கியுள்ள திறம் போற்றத்தக்கது. இயற்கையிலிருந்து இயல்புகளை மொழிந்த விதம் சிறப்புமிக்கது.

**அடிக்குறிப்புப் பட்டியல்**


1. திருக்குறளில் உயிரினங்கள், புலவர் இரா. நாராயணன்,ப. 13, முதற்பதிப்பு – 2007,பூங்கொடி பதிப்பகம்,மயிலாப்பூர், சென்னை – 600004
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணனார் உரை, எஸ். கௌமாரீஸ்வரி (பதி) நூ. 572, முதற்பதிப்பு – 2005, சாரதா பதிப்பகம், கி–4, சாந்தி அடுக்கம், ராயப்பேட்டை, சென்னை-14.
3. மேலது, நூ. 631
4. மேலது, நூ. 632
5. சிவனாரின் வள்ளுவர் தெள்முறையும் சொல்லடைவும், முனைவர் ச. சாம்பசிவனார், குறள்-78, திருத்திய பதிப்பு : திசம்பர் - 1998, வள்ளுவர் வெளியீடு, அ.பெ.எண். 155, மதுரை – 625001.
6. திருக்குறட் சொல்லடைவு, சாமி வேலாயுதம், ப. 232, முதற்பதிப்பு – 2002, தென்னிந்திய தமிழ்ச் சங்கம், 79, பிரகாசம் சாலை, சென்னை -108
7. திருக்குறளின் வடிவமைப்பும் திட்டமும் செயல்திறனும், முனைவர் மு. இளங்கண்ணன், பக். 136 – 137, முதற்பதிப்பு – 2002, முருகன் பதிப்பகம், கே. கே. நகர், சென்னை – 600 078
8. திருக்குறள் உரைக்களஞ்சியம், மு. ந. ராமசுப்ரமணிய ராஜா (தொ. ஆ), ப. 229, பதிப்பு – 2020, கொற்றவை வெளியீடு, தி. நகர், சென்னை – 600017
9. மேலது, ப. 1022
10. மேலது ப. 614
11. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் மு.வரதராசனார், பக். 150 – 151, மறுபதிப்பு – 2019, பாரி நிலையம், பிராட்வே, சென்னை – 108.
12. திருக்குறள் உரைக்களஞ்சியம், மு. ந. ராமசுப்ரமணிய ராஜா (தொ. ஆ), ப. 1010, பதிப்பு – 2020, கொற்றவை வெளியீடு, தி. நகர், சென்னை – 600017
13. மேலது, ப. 1034
14. திருக்குறளில் உயிரினங்கள், புலவர் இரா. நாராயணன், ப. 63, முதற்பதிப்பு – 2007,பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை – 600004
15. திருக்குறள் உரைக்களஞ்சியம், மு. ந. ராமசுப்ரமணிய ராஜா (தொ. ஆ), ப. 893, பதிப்பு – 2020, கொற்றவை வெளியீடு, தி. நகர், சென்னை – 600017
16. திருக்குறள் ஆய்வுரை, டாக்டர் எஸ். ஆர் கே. ப. 392, முதற்பதிப்பு – 1991, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி(லிட்), சென்னை – 600 098
17. திருக்குறள் உரைக்களஞ்சியம், மு. ந. ராமசுப்ரமணிய ராஜா (தொ. ஆ), ப. 1092, பதிப்பு – 2021, கொற்றவை வெளியீடு, தி. நகர், சென்னை – 600017

# கலித்தொகையில் இயற்கை புனைவுகள்

**முனைவர் த. கிறிஸ்டல் ரெஜி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியம் நிலத்தை குறிஞ்சி,முல்லை, மருதம்,நெய்தல்,பாலை என ஐந்தாகப் பிரித்து இருக்கிறது. இவ்வைந்து பகுப்புக்குள் உலகம் அடங்கி விடும்.இது ஐந்திணை எனவும் அழைக்கப்படுகிறது.நிலத்தை அடிப்படையாகக் கொண்டு தான் பருவநிலையில் மாறுதல்கள் ஏற்படுகின்றது. தொன்மை மிக்க சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாக கருதப்படுகின்றது .அவற்றுள் கலித்தொகையை பிற்காலம் என்று கருதுவோரும் உண்டு. அக்கால தமிழர்களின் வாழ்வு உள்ளம் உணர்ச்சி இவற்றை சங்க இலக்கியங்களில் காண முடியும். எனவே சங்க இலக்கியங்கள் காலத்தை வென்றன எனலாம் . கவிஞர்களின் கவிநயம் வர்ணனைகளுக்கு அப்பால் நிற்பது மனித வாழ்வு. அதே கலித்தொகையில் முழுக்க முழுக்க காண முடிகின்றது. மனித வாழ்வு என்பது ஐந்நில தன்மையுடையன .நிலம் பொழுதுகளின் இணைவால் உருவாகும் மரம் செடி, கொடிகள் மலைகள் ஆறுகள் கடல்கள் பருவ காலங்கள் போன்ற இயற்கைகளை புனைவாகவும் இடப் பின்னணியாகவும் கொண்டு பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளமை கலித்தொகைக்கு உரிய சிறப்பாக கருதப்படுகின்றது .மிகையான பாத்திரப்படைப்பு வாழ்க்கையை மீறிய வடிவங்கள் கவர்ச்சி மிக்க துணை கதைகள் கதைகளில் இடம்பெறும் கற்பனைகள் ஆங்காங்கே அறிவுறுத்தல்களில் இத்தகைய வெகுஜனத் தன்மையோடு அமைவது புனைவியல் எனலாம்.*

## முன்னுரை

செவ்வியல் இலக்கியங்களாக திகழும் சங்க நூல்கள் மக்களின் வாழ்வியலை தன்னகத்தே அடக்கி உள்ளன .இன்றைய சூழலில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக உலகம் முழுவதும் மாசுபட்டுள்ளது. அம்மாசு வரும் தலைமுறையினருக்கு பெருந்தீங்கை ஏற்படுத்தும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகின்றது .அவ்வகையில் இயற்கையை போற்றி பாதுகாக்க வேண்டியது நம் கடமையாகும் அதற்கு நம் பழந்தமிழ் இலக்கியங்கள் இயற்கை எவ்வாறு போற்றிப் பாடி உள்ளன என்பதையும் நாம் அறிந்து கொள்வது அவசியமாகிறது. அவ்வகையில் சங்க வாழ்வியலில் மக்கள் வாழ்ந்த இயற்கைச் சூழலை இனம் காண்பதே கட்டுரை நோக்கமாகும்.

## இயற்கை-சொல்விளக்கம்

இயற்கை என்பது நாம் வார்த்தைகளால் அடக்கி விட முடியாத ஒன்று. காண்போர் கண்ணிலும் மனதிலும் நிலைத்து பழந்தமிழர் இலக்கியங்களிலும் பரந்து காணப்படுகின்றது . இலக்கண நூலான தொல்காப்பியம்,

**"இயற்கை பொருளை இற்றெனக் கிளத்தல்"**[1]

என்னும் நூற்பாவில் கூறுகிறது."இயற்கை என்பதனை இயல்பு "எனவும் பொருள் விளக்குகிறது கழக தமிழ் அகராதி.

இயற்கை என்பது இயல்பானது; மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதனைத் தொல்காப்பியம்,

**“நிலம்நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்”**[2]

இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்று கூறுகிறது. இயற்கை என்ற சொல்லிற்கு “இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை”3 என்று பல பொருள்களைக் கூறப்பட்டுள்ளது. கௌரா தமிழ் அகராதி, “இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி, முறைமை என்று பல பொருள்களைக்கூறுகிறது"[4]

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, “மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மலைநீர்) போன்ற பொருள் அல்லது (மழைநீர், இடி, காற்று) போன்ற சக்தி என்று பொருள் தருகிறது”5. இவ்வாறான பல விளக்கங்களின் அடிப்படையில் “இயற்கை” என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உண்டாக்கப்படாத நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது எனக் கொள்ளலாம்.

“முல்லை முதலான ஏனைய இயற்கை ஓவியங்கள் குறைவே”6 என்கிறார் மு.வரதராசனார். பழந்தமிழர் வாழ்வின் இன்றியமையாக் கூறாக இயற்கை இருந்தமையை இவ்விளக்கத்தில் உணரலாம்.நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது மட்டுமல்லாது உலகம் என்பது இயற்கையின் பாற்பட்டது என்பதையும் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர்.

**இயற்கை காட்சிகள் - குறிஞ்சிக்கலியில் இயற்கை**

காட்டாற்று வெள்ளத்தில் சிக்குண்ட தலைவியை காப்பாற்றிய தலைவன் அன்பால் காதல் கொண்டான். பெண் கேட்டு வந்தனர் தலைவனின் பெற்றோர். தலைவியின் பெற்றோரோ பெண் கொடுக்க மறுத்துவிட்டனர். இதை அறிந்த தோழி தன் தாயிடம் சென்று சொல்லும் நிகழ்ச்சி,

**"அவனும் தான்,**
**ஏனல் இதணத்து அகிற் புகை உண்டு**
**இயங்கும் வான் ஊர் மதியம் வரை சேரின்**
**அவ்வரை தேனில் இறால் என**
**ஏணி இழைத்திருக்கும்" (குறி.கலி. பா.39)**

நமது தகுதிக்கு அவன் எவ்விதத்திலும் குறைந்தவன் அல்லன். அவனுடைய நாட்டிலே உள்ள திணை புனைத்து பரணியிலேயே அகில் புகைகிறது. அப்புகை வான் முட்ட செல்கிறது. சென்று நிலவினை மறைக்கிறது. அதனால் நிலவு ஒளி மங்கி பழுப்பாக தோன்றுகிறது. அவ்விதம் தோற்றமளிக்கும் சந்திரன், மலைமீது செல்லும் காட்சி மலைமீது தேனடை இருப்பது போல் தோன்றுகிறது .அங்கு நீண்டு வளர்ந்துள்ள மூங்கில்கள் தேனடியை எடுக்க உதவும் ஏணி போன்று காட்சி தருகின்றனவாம். இத்தகைய அகன்ற கானல் நாட்டுக்கு தலைவன் தான் நம் தலைவியை காப்பாற்றியவன். தலைவி வீட்டார் தலைவனைப் பற்றி எதுவும் தெரியாது இருந்ததால் வரைவை மறுத்துரைக்கின்றனர். அவனின் தகுதி மிகுதியைக் கூற விளைந்த ஆசிரியர் அக்கானகத்தின் ஒரு காட்சியை தன் கற்பனையால் புனைந்திருக்கின்றார் .

தலைவன் ஒருவன் தலைவியுடன் தனி இடத்தில் அமர்ந்து இன்பமாக பொழுது போக்கிவிட்டு விரைவில் வருவேன் என்று கூறி சென்றான். அவன் வராதது கண்டு வருந்திய தலைவியை அழைத்து தோழி வள்ளைப்பாட்டு பாட ஆரம்பிக்கின்றாள் .பாட்டில் தோழி தலைவனின் உயர் பண்புகளை புகழ்ந்து பாடுகின்றாள். ஆனால் தலைவியோ இகழ்ந்து பாடுகின்றாள். அந்நேரத்தில் அவ்விடம் வந்த தலைவன் மறைந்து நின்று அப்பாட்டை கேட்கிறான் .தலைவியின் உள்ளத்தை புரிந்து கொண்ட தலைவன் சுற்றத்தாருடன் வந்து பெண் கேட்கிறான்.தலைவியின் தந்தையும் பெண் கொடுக்க இசைந்தார். இதை அறிந்த தோழி தலைவனின் உண்மைகளை புகழும் இடத்தில் ,

**"குன்று அகல் நல் நாடன்**
**வாய்மையில் பொய் தோன்றின்**
**திங்களுள் தீத் தோன்றியற்று"**

**(குறி.கலி. பா.41)**

என்கிறாள். சந்திரன் எவ்வளவு தண்மை மிக்கது. அது தீயுமிழ்கின்றது என்றால் அது நம்பத்தக்கது அல்ல. அதுபோலத்தான் தலைவனும் ஒருநாளும் பொய் சொல்பவன் அல்ல .தலைவனின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்த கவிஞர் இயற்கையோடு ஒன்றித்து புனைந்துரைப்பது படித்து இன்புற தக்கதே .

காதல் வயப்பட்ட தலைவி தலைவனைப் பற்றி பாட நினைக்கிறாள் .தோழியோடு சேர்ந்து வள்ளைப் பாட்டு பாடும் போது வரும் காட்சியை இவ்வாறு கூறுகிறார்,

**"தகையவர் கைச் செறிந்த தாள் போல**

**காள்தள் முகையின் மேல் தும்பி இருக்கும்**
**பகை எனின் கூற்றம் வரின் தொலையான்"**

**(குறி.கலி. பா.43)**

அந்த மலை தலைவனுடையது. எமனே வந்து எதிர் நின்று சண்டையிட்டாலும் பயந்து ஓடாமல் சண்டையிட்டு வெற்றி கொள்வான். அம்மலையிலே காந்தள் மொட்டின் மேல் வண்டானது எப்போதும் மலரும் என்னும் எண்ணத்துடன் அமர்ந்திருக்குமாம். அக்காந்தள் மலரோ உன் கையில் உள்ள நீக்கல் மோதிரம் போலிருக்கிறது என்று பாடுகிறாள் தோழி. அதாவது தேனைக் குடிக்க வண்டு காத்திருப்பது போல் உன் தலைவன் காத்திருக்கிறான் என்னும் பொருள் படும்படியாக இயற்கையாக மலரும் மலரில் ஒரு காதல் நிகழ்ச்சியை வைத்து புனைந்து இருப்பது சிறப்பானதே .

வானத்தில் தோன்றி மறையும் மின்னலே காண்கிறார் கவிஞர். தலைவி ஒருவர் தலையலங்காரம் செய்திருக்கும் காட்சியையும் பார்க்கிறார் அவரின் கற்பனை இவ்வாறு செல்கிறது.

**"மின் ஒளிர் அவில் அறல்**
**இடைபோழும் பெயலே போல்**
**பொன் அகை தகை வகிர் வகை**
**நெறி வயங்கிட்டு" (குறி.கலி. பா.55)**

அதாவது தலையை வகுந்து தாழம்பூ வைத்து பின்னிய கூந்தலையயுடைய உன் தலையலங்காரம் மேகங்களின் இடையே தோன்றும் மின்னலைப் போன்று காட்சியளிக்கின்றது என்கிறார் ஆசிரியர் .குறிஞ்சி மலையில் உள்ள அருவியானது ,

**"இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்தே**
**வானில் இலங்கும் அருவித்தே -தான் உற்ற**
**சூள் பேணான் பொய்த்தான் மலை"**

**(குறி.கலி. பா .41)**

வானில் இருந்து விழுவது போல் காட்சி அளிக்கிறது என்கிறார். தன்னுடைய பெருமையை பாதுகாக்க தெரியாத மலை என்று மலையை சாடவும் செய்கிறார் கபிலர் .

**முல்லைக்கலியில் இயற்கை**

முல்லைக்கலியைப் பாடிய நல்லுருத்திரன்

**"கண் அகல் இரு விசும்பில் கதழ்**
**பெயல் கலந்து ஏற்ற நண் நறு**
**பிடவமும் தவழ் கொடித் தளவமும்**
**வண்ண வண் தோன்றியும் வயங்கு**
**இணர்க் கொன்றையும் அன்னவை பிறவும்**
**பல் மலர் துதையத் தழையும் கோதையும்**
**இழையும் என்று இவை**
**தைஇயினர் மகிழ்ந்து திளைஇ விளையாடும்**
**மட மொழி ஆயத்தவருள் இவள் யார்-உடம்போடு**
**என் உயிர் புக்கவள் இன்று?"**

**(முல்.கலி. பா .102)**

என்று இயற்கை காட்சி வர்ணிக்கிறார். முல்லை நிலமானது விரிந்து நிற்கும் வானில் சூரியன் நிலவு என்னும் இரண்டு விளக்குகளை இயற்கை ஏற்ற அழகிய நறுமணத்தை உடைய பிடவ மலரும் அழகிய கொடியான தளவமும் வண்ணமலர்களையுடைய தோன்றியும் அழகான கொன்றை மலர்களும் அவை போன்ற வேறு மலர்களின் நிறைந்த பொழிலில் விளையாடும் இவள் யாரோ? என் மனதில் புகுந்தாள் என தலைவன் தலைவியை கண்டவுடன் மனதில் நினைக்கிறான் .அதுவும் உடம்போடு உயிருக்குள் வந்தவள் என்று கூறுகிறான். இங்கே நல்லு ருத்திரன் தலைவனும் தலைவியும் சந்தித்துக்கொள்ளும் நிகழ்வை இயற்கை அழகுடன் பொருத்திக் கூறுகிறார் .

இன்னொரு பாடலானது மிகப்பெரிய ஒளியை உலகுக்கு அளிக்கும் சூரியன் தனது பகல் வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு மலையை நோக்கி சென்றான். ஆனாலும் இவ்வுலக மானது ஒளிபெறும் வண்ணம் நிலவானது தோன்றியது. இது நல்லாட்சி தருகின்ற அரசனது செயலைப் போல் உள்ளது என்கிறார். இதனை

**"பல் கதிர் ஞாயிறு பகல் ஆற்றி மலை சேர**
**ஆனாது கலுழ் கொண்ட உலகத்து மற்று அவன்**
**ஏனையான் அளிப்பான் போல் இகல் இருள் மதி சீப்பக்**
**குடை நிழல் ஆண்டாற்கும் ஆளிய வருவாற்கும்**

**இடை நின்ற காலம் போல் இருள்தந்த மருள் மாலை! (முல்.கலி. பா .118)**

என்ற பாடலிலும் விவரிக்கிறார்.

**மருதக்கலியில் இயற்கை**

அழகிய பொய்கையில் மகிழ்ந்து ஆடும் அன்னப்பறவியானது தனது இணையை மறைக்கும் வண்ணம் வளர்ந்திருந்த செடியினால் தனது இணையை காணாமல் வாடி தனது இணையின் அழகிய நிழலானதை நீரினுள் கண்டு அதனைத் தேடி ஓடும்.பின்னர் தன் இணையை கண்டு வெட்கம் கொள்ளும் ஊரை சேர்ந்தவன் நம் தலைவன் என என மருத நில ஊரின் புகழை,

**"மணி நிற மலர்ப் பொய்கை மகிழ்ந்து ஆடும் அன்னம்**
**தன் அணி மிகு சேவலை அகல்**
**அடை மறைத்தெனக் கதுமெனக்**
**காணாது கலங்கி அம் மடப் பெடை**
**மதி நிழல் நீர் உள் கண்டு அது என உவந்து ஓடி**
**துன்னத் தன் எதிர் வரூஉம் துணை கண்டு**
**மிக நாணிப் பல் மலர் இடை புகூஉம் பழனம் சேர் ஊர" (மரு.கலி. பா .70)**

இப்பாடலில் கவிஞர் பாடுகிறார். தலைவன் தலைவிக்கான காதலை சொல்ல வரும்போது கவிஞர் இயற்கையை வைத்து கூறுகிறார் .

**"மண்டு நீர் ஆரா மலி கடல் போலும் நின்**
**தண்டாப் பரத்தை தலைக் கொள்ள நாளும்**
**புலத் தகைப் பெண்டிரைத் தேற்ற மற்று யாம் எனின்**
**தோலாமோ நின் பொய் மருண்டு"**

**(மரு.கலி. பா .73)**

இப்பாடல் நீர் நிறைந்து காணப்படும் கடலானது எவ்வளவு நீர் வந்தாலும் ஏற்றுக்கொள்ளும் அதுபோல தலைவனே உனது பரத்தையும் அப்படிப்பட்டவளே என விளக்குகிறது .அதாவது தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தையும் கடலின் நீர் பெருக்கத்தையும் இணைத்து கவிஞர் பாடுகிறார்.

**நெய்தல் கலியில் இயற்கை**

நல்லந்துவனார் இயற்றிய நெய்தல் கலியில்,

**"பெரும் கடல் தெய்வம் நீர் நோக்கித் தெளித்து என்**
**திருந்து இழை மென் தோள் மணந்தவன்செய்த**
**அரும் துயர் நீக்குவேன் போல்மன்"**

**(நெய்.கலி. பா .131)**

என்று தலைவனின் பெருமையை கடலுடன் ஒப்பிட்டுப் பாடுகிறது. அதாவது பெருங்கடலை ஆளக்கூடிய தெய்வமானது என் நோக்கி நீர் தெளிக்க தலைவன் என்னை மணந்து கொண்டான் என்று கூறுகிறது. இயற்கைக்கும் தலைவிக்குமான உறவு இங்கே பேசப்பட்டுள்ளது.

நெய்தல் நிலமானது மிகப்பெரிய தாமரை மலர்களும் மணல்மேடுகள் நிறைந்தும் காணப்படும் அங்கே தாழை மலர்கள் மலர்ந்திருக்கும் என நெய்தலின் இயற்கை இங்கே வர்ணிக்கப்படுகிறது. இதனை

**"மா மலர் முண்டகம் தில்லையோடு ஒருங்கு உடன்**
**கானல் அணிந்த உயர் மணல் எக்கர் மேல்**
**சீர் மிகு சிறப்பினோன் மர முதல் கை சேர்த்த**
**நீர் மலி கரகம் போல் பழம் தூங்கு முடத் தாழைப்**
**பூ மலர்ந்தவை போலப் புள் அல்கும் துறைவ!கேள்" (நெய்.கலி. பா .133)**

என்னும் பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றன.

**பாலைக் கலியில் இயற்கை**

தலைவன் செல்லும் வழியில் பூங்கொடிகள் இருக்கும். அவை பற்றுக்கோடு இல்லாமல் துவண்டு வாடி கிடைக்கும்.

**"துணிபு நீ செலக் கண்ட ஆற்றிடை அம்மரத்து**
**அணி செல வாடிய அம்தளிர் - தகைப்பன"**

**(பா.கலி. பா.3)**

எவ்வளவோ சொல்லியும் பிடிவாதமாக செல்லும் தலைவன் போகும் இடங்களில் மரங்கள் நிறைய இருக்கும். அவற்றின் தளிர்கள் வாடி கிடைக்கும். வாடிய தளிரைக் கண்ட போதாவது தலைவனுக்கு காதலின் நினைவு வராதா ?என்று கற்பனைப்படுத்துகிறார் . பருவம் அடைந்த பெண் ஒருத்தி களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டதால் தலைமகனோடு உடன் போக்கு செல்ல துணிந்து விட்டாள். தலைவன் மீது

கொண்ட தீராத அன்பினால் கொடிய பாலை வழியாக நடந்து செல்லவும் துணிந்து விட்டாள். தலைவனோடு ஓடிப்போன தலைவியைத் தேடி புறப்படுகிறாள் செவிலி.வழி போக்கர்களிடம் தலைவியைப் பற்றி கேட்கிறாள் .இந்நிகழ்ச்சியை கூறும் இடத்தில் மலையில் சாதாரணமாக வளர்ந்து நிற்கும் சந்தன மரம் ஆசிரியரின் கற்பனைக்கு விருந்தாக அமைகிறது .

**"பல உறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை**
**மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என் செய்யும்?**
**நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே" ( பா.கலி. பா.9)**

நல்ல வாசனை மிக்க சந்தனம் மலையிலே விளைகிறது. மலையிலே பிறந்த சந்தன மரம் மலையிலே தான் இருக்க வேண்டியது இல்லை .அதை எடுத்து பயன்படுத்துகிறவர்கள் அனுபவிப்பதும் இயற்கையே. பெண்ணை பெற்றவர்களும் இப்படி தான் .என்றைக்காயினும் மற்றொருவனுடன் போக வேண்டியவள் தானே. பெண்ணின் காதல் வாழ்க்கை சந்தன மரத்திற்கு ஒப்பானது என்று கற்பனை செய்து புனைந்துள்ளது வியப்பிற்கு உரியது .

**"விரிகாஞ்சித் தூது ஆடி இருங்குயில் விளிப்பவும்" (பா.கலி. பா.12)**

காஞ்சி பூ மலர்ந்து விடுதல், குயிலின் கூவுதல், மலரின் மணம், தென்றலின் வருகை, வண்டுகள் மலர்களை சூழுதல் இக்காட்சிகள் எல்லாம் தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவியின் மனதை வேதனைப்படுத்துவதாக கூறுகிறார். இன்னொரு இடத்தில் ஒரு காட்சியை வேனில் காலத்தோடு புனைந்து வைப்பது சிறப்பாக அமைகிறது.

**"இருங்குயில் ஆல பெருந்துறை கவின் பெற**
**குழவி வேனில் விழவு எதிர்கொள்ளும்**
**சீரார் செவ்வியும் வந்தன்று**
**வாரார் தோழி நம் காதலரோ"**

**(பா.கலி. பா.27)**

இளவேனில் காலம் வெண்கடம்பு பூத்துள்ளது. அமரத்தில் மயில் அமர்ந்து அழகிய தோகை விரித்து ஆடுகிறது. இக்காட்சியைப் பார்த்த தலைவி காதல் வசமாகிறாள். இதனை காண காதலன் அருகில் இல்லையே என்று வருந்துவதாக கூறுகிறாள்.

பாலைக்கலிப் பாடலில் இயற்கையை சிவபெருமானின் முக்கண்ணாகவும் அதனால் ஏற்படும் வெயில் மென்மேலும் அதிகமாகி மலையையே பிளந்து துன்புறுத்துவது போலத் தலைவனின் பிரிவானது தலைவியைத் துன்புறுத்தும் என்றுக் கூறுகிறது.

**"முக்கண்ணான் மூவெயிலும்**
**உடன்றக்கால் முகம் போல ஒண் கதிர் தெறுதலின்**
**சீறு அரும் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்**
**ஏறு பெற்று உதிர்வன. போல் வரை பிளந்து**
**இயங்குநர்" (பா.கலி.2)**

என்று தலைவியின் துன்பத்தை வெயிலோடு இணைத்துப் பேசுகிறது.

தலைவன் பொருள் தேட செல்கிறான். அதை அறிந்த தலைவி விடுகிறாள் .தலைவியின் துயரம் பொறுக்க முடியாமல் தோழி தலைவனிடம், நீ தலைவியை பிரிந்து செல்வாயானால் ஆற்றிலும் சுனையிலும் வரும் வெள்ளமானது வற்றி அங்கிருக்கும் அழகிய மலர்கள் வாடுவது போல தலைவியும் உன் பிரிவால் வாடுவாள். மேலும் நீ செல்லும் வழியானது மரங்கள் தண்ணீர் இல்லாமல் வாடி நிற்கும் அதுபோல தழுவியும் வாடி நிற்பாள் என்று கூறுகின்றாள். இதனை

**"கடைஇய ஆற்று இடை நீர் நீத்த வறும் சுனை**
**அடையொடு வாடிய அணி மலர் - தகைப்பன**
**வல்லை நீ துறப்பாயேல் வகை வாடும் இவள்" (பா.கலி.4)**

என்று கூறுகிறது பாலைக்கலி.

**முடிவுரை**

தமிழ் மக்களுக்கு இயற்கையில் இருந்த ஈடுபாடு இயற்கையைச் செய்யுளுக்கு பின்னணியாக அமைக்கும் முறையும் வியப்பைத் தருகின்றது. சங்க இலக்கியத்தின் மூலம் தமிழரின் இயற்கை ஈடுபாட்டை ஆழமாக உணர்ந்துக் கொள்ள முடியும். தொல்காப்பியம் பொருளதிகாரம்

இயற்கையை புலனெறி வழக்கிற்கு அமைத்து இருக்கிறது. ஐந்திணைக்கு பண்டைத் தமிழர்கள் கொடுத்த பெயர்கள் மூலம் அவர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததை அறிந்துக் கொள்ள முடிகிறது.இவ்வாறு கலித்தொகையில் கையாளப்பட்டுள்ள இயற்கையோடு இயைந்த காட்சிகள் கவிஞரின் கற்பனைக்கு இன்பம் பயப்பவனாக அமைந்து இலக்கியத்தை மேலும் மெருகூட்டுகிறது.

**அடிக்குறிப்புகள்**


1. தொல்.கிளவி. நூற். 19 இளம்பூரணர் உரை சாரதா பதிப்பகம், சென்னை 2010
2. தொல்.மரபு. நூற். 90 சேனா வரையர் கௌரா பதிப்பகம் 2022 கழக அகராதி ப.114 சைவசித்தாந்த நூல் பதிப்புக் கழகம் திருநெல்வேலி 1990.
3. கௌரா தமிழ் அகராதி ப.26 கௌரா பதிப்பகம் சென்னை 2020.
4. தற்காலத் தமிழ் அகராதி ப.43 கிரியா பதிப்பகம் 2020.
5. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை-ப.98 மு.வரதராஜன் பாரி நிலையம் சென்னை 2020.

# தேம்பாவணியில் இயற்கை

**இரா. ரேகாள்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*ம.சு.ப.கல்லூரி, பணகுடி*

**ஆய்வுச்சுருக்கம்**
*தமிழ்க் காப்பிய உலகிற்குக் கிடைத்த ஒரு சிறந்த நூல் தேம்பாவணியாகும். தேம்பாவணி என்னும் காப்பியம் இத்தாலி நாட்டைச் சார்ந்த வீரமாமுனிவர் என்பவரால் இயற்றப்பட்டது. தேம்பாவணி ஒப்பற்ற காப்பியமாகத் திகழ்கிறது. கிறித்தவ சமயப் போதகராய் மதம் பரப்புவதற்காக வந்த வீரமாமுனிவர் தமிழின் மீது கொண்ட பற்றின் காரணமாக ஒப்பற்ற காப்பியமாகிய தேம்பாவணியைப் படைத்துள்ளார். இன்று தமிழ்மொழியில் காணப்படும் காப்பிய வரிசையில் இடம்பிடித்து கலையம்சத்துடன் திகழ்கிறது. இந்நூலில் இயற்கை வாழ்வியல் வயல் வளம், மலை வளம், அருவியின் தோற்றம், எருசலேம் நகர இயற்கை வருணனை, மனிதன் மீது இயற்கை கொண்ட பரிவு போன்ற செய்திகள் ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.*

## முன்னுரை

இத்தாலி நாட்டிலிருந்து இயேசு சபையின் குருவாகிய கத்தோலிக்க சமயம் பரப்பத் தமிழ்நாட்டிற்கு வந்த வீரமாமுனிவர் இயற்றி அளித்த பெருங்காப்பியம் தேம்பாவணியாகும். கத்தோலிக்க திருச்சபையின் கொள்கைகளும் அறிவுரைகளும் கதை வடிவாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் இயேசு கிறிஸ்துவை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரின் (வளன்) வரலாற்றைக் கூறுகிறது. இக்காப்பியத்தில் வீரமாமுனிவர் கிறிஸ்தவ சமயக் கொள்கைகள் பலவற்றை ஆங்காங்கே பதிவு செய்துள்ளார். தண்டி ஆசிரியர் குறிப்பிடும் காப்பிய இலக்கணம் முழுமையும் பின்பற்றப்பட்ட சிறந்த நூல். இக்காப்பியத்தில் நாட்டுப் படலம், நகரப் படலம் இரண்டிலும் இயற்கை காட்சிகளைச் சிறப்பாக வருணித்துக் காட்டியுள்ளார். தேம்பாவணியின் இயற்கை வளங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தேம்பாவணி

தேம்பாவணி காப்பியம் தமிழ்மொழியில் கிடைத்துள்ள மிகச் சிறந்த காப்பியம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களையும் கொண்டுள்ள காப்பியமாகும்.

> **“நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகித்**
> **தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்**
> **மலை கடல் நாடு வளநகர் பருவம்**
> **இருசுடர்த் தோற்றமென்று இனையன புனைந்து”[1]**

என்று தண்டி ஆசிரியர் கூறும் காப்பிய இலக்கணத்தின் அடிப்படையில் அமைந்த அற்புத காப்பியம் ஆகும்.

## இயற்கை வாழ்வியல்

இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு. உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமையானத் தோப்புகள், நீர் நிலைகள், வயல்வெளிகள் என இயற்கையின் கொடைகள் கணக்கில் அடங்காதவை. மனிதன் உயிர் வாழத் தேவையான காற்று, நீர், உணவு, உறைவிடம் மற்றும் நவநாகரீக வாழ்வுக்கான சகல பொருட்களும் இயற்கையிடமிருந்தே பெறுகின்றான். அவனது தேவைகள் அனைத்தையும் தொன்று தொட்டே குறைவின்றி வழங்கி வருகிறது இயற்கை. இயற்கைச் சூழல் மனிதர்க்கு இனிய உணர்வுகளைத் தூண்டுகிறது.

கவிஞன் இயற்கையின் அதிசயங்களைக் கண்டு வியந்து, அதன் இன்பங்களைக் கவிதையில் வெளிப்படுத்தினான். காப்பியங்களைப் பொறுத்தமட்டில், நாட்டு வளம், நகர்வளம்

போன்றவற்றைக் கூற முற்படும் கவிஞர்கள் இயற்கையைப் புகழ்ந்து பாடினர். இயற்கையின் ஈர்ப்பில் வயப்பட்ட கவிஞர்கள் வளமான கற்பனைகளை வெளிப்படுத்தினர். வீரமா முனிவரும் நாட்டுப்படலம், நகரப்படலம் பாடுமிடத்து உயர்ந்த கற்பனைக் களஞ்சியத்தைத் தமிழுலகுக்குத் தந்திருக்கின்றார்.

**மழைவளம்**

மனிதன் வாழ்வதற்கு நீர் மிகவும் இன்றியமையாதது. இதனை,

> **"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
> **வானின்று அமையாது ஒழுக்கு"[2]**
> **(குறள் 20)**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். வானம் பொய்த்து விட்டால் மழைவளம் குன்றி நாடு விளைச்சலைப் பெறாமல் பசியும் பட்டினியாலும் அல்லலுறும். ஆனால், தேம்பாவணியில், சூதேயா நாட்டு வளம் கூறும் போது, வீரமாமுனிவர் தொடக்கத்திலேயே மழை வளத்தையே சிறப்பாகக் கூறுகின்றார்.

> **"தெள்ளுலாம் திணை திரைப்ப உண்டு எழுந்து உயர் பரந்து**
> **வள்ளுலாம் கருமதகரி இனமெனத் தோன்ற"[3]**

என்றும்,

> **"செறி கருணையோடு உஞற்றிய வள்ளற்**
> **கொடையெனச் செழுங்குன்றொடு பயின்தொறும் குளிர"[4]**

என்று கூறுமிடங்களில் இயற்கை வளம் வானைத் தொடுகிறது. மழை வளத்தைக் கூறுமிடத்து வானத்தில் வெண்ணிற மேகங்கள் செல்லுவதைப் போருக்குச் செல்லும் வீரர்களுக்கும், கடல் நீரை குடித்த கரிய மேகங்களை மதம் கொண்ட யானைக்கும், மின்னல் ஒளியை பகைவர்கள் அஞ்சும் வேலுக்கும் இடி ஓசையை மிக்கு ஒலிக்கின்ற முரசுகளின் ஓசைக்கும் ஒப்பிட்டு கூறுகின்றார். இறுதியில் வள்ளல்களைப் போல் கொடைத்தன்மை கொண்டு எல்லா இடங்களும் குளிரும்படி மழை பொழிந்தது என்று கூறுகின்றார்.

**வயல் வளம்**

மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால் தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதியாரும் போற்றுகின்றனர்.

மழைவளம் சிறந்து விளங்கிய காரணத்தால் வயல்கள் விளைந்து அதிக மகசூலைத் தருகின்றது. உழவர்கள் நெற்கதிர்களை அறுத்து போர்களாகக் குவித்து வைப்பர். மெய்யொடு கலந்த பொய்யை நீக்கி மெய்யை மட்டும் கொள்வது போல் உழவர்கள் வைக்கோலை நீக்கி விட்டு நெல்லின் ஒரு பகுதியை இரவலர்க்கு ஈந்து மீதமுள்ளவற்றைச் சேர்த்து வைப்பர். என்பதனை,

> **"மெய்கலந்த பொய்விலக்கி மெய்கொள்பவர் வினை போல**
> **வைக லந்தநெல் பகட்டினால் தெளி த்துவை மறுத்துக்**
> **கைகலந்து அடுத்து ஏற்குனர்க்கு அளித்தபின் களிற்று**
> **துய் கலந்த நெல் உண்ணவும் ஈயவும் தொகுப்பர்"[5]**

என்று தேம்பாவணி கூறுகிறது.

செந்நெல்லைச் சுமந்து திணறுகின்ற வண்டிகளும், வெற்றிலைக் கட்டுக்கள் பொருத்தி இருக்கின்ற வண்டிகளும், உயர்ந்த கமுகின் ஒள்ளிய பழங்களைக் கொண்ட வண்டிகளும், மரங்களில் பரவலாகக் கனிந்து கிடந்த இனிய கனிகளை ஏற்றிய வண்டிகளும் மிகுந்து காணப்படுகின்றன என்பதனை,

> **"வாய்ந்த செந்நெல்லை மறுகும் பண்டியும்**
> **ஆய்ந்த மெல்விலை அமையும் பண்டியும்**
> **பாய்ந்த பூசுவொண் பழம்பெய் பண்டியும்**
> **வேய்ந்த தீங்கனி விம்மும் பண்டியும்"[6]**

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. மேலும் இளநீர், கரும்பு, மலர்கள், மணிகள் ஆகிய இவைகள் ஏற்றப்பட்ட வண்டிகளும் இருந்தன என்பதனை,

**“பன்னுந் தெங்கிள நீர்பெய் பண்டியும்**
**துன்னுந் தீங்கழை சுமக்கும் பண்டியும்**
**மின்னுந் தேன்செறி வீபெய் பண்டியும்**
**மன்னுந் தேசுபன் மணிகொள் பண்டியும்”**[7]

என்ற பாடல் மூலம் குறிப்பிடுகிறார். இத்தகைய வளங்களை ஏற்றி செல்லும் வண்டிகள் ஒன்றோடொன்று நெருங்கித் தேய்வனவாயின. இத்தகைய அதிக அளவு வளங்களைக் கொண்ட நாடாக சூதேயா நாட்டின் பகுதிகள் விளங்குகின்றன.

**மலை வளம்**

மலையின் வளத்தைச் சிறப்பிக்கும் பொருட்டு ஆசிரியர் வருணனையோடு குறிப்பிட்டுள்ளார். மழைநீரைக் குடித்த மலைகள், நூல்களைக் கற்ற ஆசிரியர், மாணவர் பயனடைய விரித்துரைப்பது போல் அருவிகளாக எங்கும் பாயும் என்று கற்பனை செய்து,

**“படித்த நூல் அவை பயன்பட விரித்துரைப்பவர் போல்**
**தடித்தநீள் முகில் தவிழ்தலை பொலிந்த பொன் மலையே”**[8]

என்று பாடுகின்றார். மலையிலிருந்து பாய்ந்த அருவி வெள்ளமானது புண்ணிலிருந்து நுரையுடன் இரத்தம் எழுமாறு கொன்று கொள்ளையடிக்கும் பகைவரைப் போன்று விளங்கியது என்பதை,

**‘புண்நுரைத்தடக் கொள்ளை செய் பொருந்தவர் போன்றே’**[9]

என்ற பாடலில் கூறுகிறார்.

**கனி வளம்**

தேம்பாவணியில் நாட்டுப் படலத்தை அமைத்து அதில் முழுவதும் நாட்டின் வளத்தை வருணித்துள்ளார். சூதேயா நாட்டில் கரும்பு, தேனடை, பழம், தென்னை, மலர் இவற்றின் தேனினை பறவைகள் உண்ணுகின்றன என்பதனை,

**“கழைஇ றால்பனை கனிகள் தெங்கலர்**
**உழையில் தாவிய தேறல் உண்ட பின்”**[10]

என்று பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. மேலும்,

உயர்ந்த தெங்கம் பழங்கள் வீழ்ந்து தாக்குதலால் உயர்ந்த ஆசினிப் பலா, பலா, மா, வாழை ஆகிய கனிகளிலிருந்து பொழிந்த தேனீர், தோய்ந்த இடங்களெல்லாம் இனிமை தாங்கின என்பதை,

**“பாய்ந்த தெங்கதின் பழங்கள் வீழ்தலால்**
**வாய்ந்த வாழைமா வருக்கை ஆசினி**
**சாய்ந்த தீங்கனி சரிந்த தேன் புனல்**
**தோய்ந்த வாயெலாம் இனிமை தேய்ந்தன”**[11]

என்ற பாடலில் கூறுகிறார். இத்தகைய கனிவளம் நிறைந்த பகுதியாக சூதேயா நாடு காணப்படுகிறது.

**எருசலேம் நகர இயற்கை வருணனை**

சூதேயா நாட்டின் நகரமாகிய எருசலேமை வருணிக்கும் போது, எருசலேம் நகரின் உயர்ந்த மாளிகைகளில் உள்ள பொற்கம்பங்களின் உச்சியில் கட்டிய கொடிகள் மாதர் மனம் போல அசைந்தாடும் என்றும், மாளிகையின் உச்சியில் கட்டிய கொடிகள் இரவலரை ‘வருக’ என்று அழைப்பது போலவும் தோன்றும் என்கிறார்.

**“கோது அகன்று அளிக்குவார் அருத்திக் கொள்கை போல்**
**தீது அகன்ற அருந்திரு நுகரச் சென்மின் என்று**
**ஏது அகன்ற அணிக்குலத்து இலங்கும் மாடங்கள்**
**மீது அகன்று அசைகொடி விளிப்ப மாறுமே”**[12]

எருசலேம் நகரில் கட்டட வல்லுநர்கள் பிடித்த நூல் இழை பிசகாமல் ஒரே நேராக காணப்படுவதைப் போல நெடுக அமைந்த வீதிகளைக் கொண்டது. வீதிகளில் அமைந்த மாடமாளிகைகளில் எல்லாம் கல்வியின் மணமே கமழும். மங்கையர் கற்பு நெறி பிறழாது வாழ்வர். மற்றையோர் அரசியல் கலைகளைக் கற்பிக்கும் நூல்களை

ஆராய்வர் என நகரச் சிறப்பைத் திறம்பட விளக்குகிறார்.

## இரக்கம் கொண்ட இயற்கை

கருணையன் தன் தாயருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். அச்சமயத்தில் தாய் இறந்த போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்கு கொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை,

**“நவமணி வடக்க யில்போல் நல்லறப் படலைப் பூட்டும்**
**தவமணி மார்பன் சொன்ன தன்னிசைக்கு இசைகள் பாடத்**
**துவமணி மரங்கள் தோறும் துணர்அணிச் சுனைகள் தோறும்**
**உவமணி கானம்கொல் என்று ஒலித்து அழுவ போன்றே”[13]**

நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் புலம்புவதைக் கேட்டு, தேன் மலர்கள், பூத்த மரங்கள் தோறும் உள்ள, மணம் வீசும் மலர்களும் சுனைதோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன. இவ்வாறு இயற்கையும் மனிதன் மீது பரிவு கொண்டதாகப் பாடுகிறார்.

## முடிவுரை

தேம்பாவணி தேன் போன்ற பாக்களைக் அணியாக கொண்டு அமைந்த அற்புதக் காப்பியமாகும். தேம்பாவணியின் நாட்டு படலம், நகர படலம் முழுவதிலும் இயற்கை இன்பம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தமிழின் மீது பற்று கொண்டவர்கள் தேம்பாவணியின் இன்பத்தில் நனைவர் என்பதே திண்ணம்.

## தொகுப்புரை

தமிழ் மொழியில் தோன்றிய ஓர அற்புதக் காப்பியம் தேம்பாவணியாகும். இத்தாலி நாட்டைச் சார்ந்த வீரமாமுனிவர் என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூல் இயேசுவை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரின் (வளன்) வரலாற்றைக் கூறுகிறது. தண்டி ஆசிரியர் குறிப்பிடும் காப்பிய இலக்கணம் முழுமையும் பின்பற்றப்பட்டது. வீரமாமுனிவர் நாட்டுப்படலம் நகரப்படலம் ஆகியவற்றைக் கூறுமிடத்து இயற்கை காட்சிகளை வகைப்படுத்துகிறார். தேம்பாவணியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற திணைக் காட்சிகள் இடம்பெறுவதைக் காணலாம். இதில் மழைவளம், மலைவளம், வயல்வளம், கனிவளம், எருசலேம் நகரத்தின் இயற்கை வருணனை போன்றவையும் மனிதன் மீது இயற்கை கொண்ட இரக்கமும் இக்கட்டுரை மூலம் ஆராயப்பட்டது.

## அடிக்குறிப்புகள்


1. தண்டியாசிரியர், ‘தண்டியலங்காரம், நூற்பா.8, கழக வெளியீடு, சென்னை, 1969. திருக்குறள் - 20
2. நல்ல முத்து சேதுரகுநாதன், ‘தேம்பாவணி’, நாட்டுப்படலம். 1:3-4, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி.
3. மேலது, நாட்டுபடலம் 3: 2-3
4. மேலது, பா - 15
5. மேலது, பா.- 30
6. மேலது, பா.- 31
7. மேலது, பா - 4 : 1-2
8. மேலது, பா - 6 : 4
9. மேலது, பா - 23: 1,2
10. மேலது, பா - 33
11. மேலது, பா - 19
12. மேலது, பா - 2410

Vol. 9 Special Issue 4 February 2025 E-ISSN: 2456-5571

# தொல்காப்பியத்தில் இயற்கை

**அ. டெய்சி**
*உதவிப் பேராசிரியர்*
*வியாசா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சுப்பிரமணியபுரம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*தொல்காப்பியம் கூறும் நிலம், பொழுது ஆகிய இரண்டின் இயல்பு இயற்கை எனப்படும். சங்க காலத் தமிழ் இலக்கியங்கள் தோன்றி, வளர்ந்த ஒவ்வொரு காலச் சூழ்நிலையிலும் அவை பெரும்பாலும் இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பற்றிப் பாடப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்தில் காணப்படும் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்களுள் ஒருவர் ஔவையார். இயற்கை என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உண்டாக்கப்பட்டாத நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது எனக் கொள்ளலாம். வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம் வானத்தில் ஓங்கி உயர்ந்து விளங்கும் நெருப்பு பந்தானது பூமியில் உள்ள அனைவருக்கும் நல்லவர் கெட்டவர் என்ற எவ்வித பாகுபாடும் இல்லாமல் வெளிச்சத்தைத் தருகிறது என்று கூறுப்படுகிறது.*

## முன்னுரை

இயற்கை என்பது இயல்பானது, மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதனை தொல்காப்பியம்

நிலம் நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் (தொல். மரபு-90)

இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்று கூறுகிறது. இயற்கை என்ற சொல்லிற்கு "இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம் நிலைமை, கொள்கை" என்று பல பொருள்களைக் கொண்டு கூறப்பட்டுள்ளது. கௌரா தமிழ் அகராதி, இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி, முறைமை என்று பல பொருள்களைக் கூறுகிறது. மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் மழைநீர் போன்ற பொருள் அல்லது இடிகாற்று போன்ற சக்தி என்று பொருள் தருகிறது.

## தொல்காப்பியம் கூறும் இயற்கை

தொல்காப்பியம் புறப்பாடல்களையும் இணைந்து நோக்குமிடத்து எல்லா நில வருணைகளும் இடம் பெற்றிருக்க காணலாம். ஆயினும் மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சிக் காட்சிகள் பெருவாரியாகப் பாடப்பட்டுள்ளது. முல்லை முதலான ஏனைய இயற்கை ஓவியங்கள் குறைவே, என்கிறார் தொல்காப்பியர். இயற்கை அரங்கில் நிலவும் கால நிலை மாற்றங்களைத் தொல்காப்பியர் அந்தந்த நிலைகளுக்கேற்ப மாறி மாறித் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறார்.

## சூரியன்

"வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம்" வானத்தில் ஓங்கி உயர்ந்து விளங்கும் நெருப்பு பந்தானது பூமியில் உள்ள அனைவருக்கும் நல்லவர் கெட்டவர் என்ற எவ்வித பாகுபாடும் இல்லாமல் வெளிச்சத்தைத் தருகிறது என்று பாடுகிறார்.

## பறவையும் பூமாவையும்

விசும்பு விசைத் தெறிந்த கூதளங் கொதையின் பசுங்கால் வெண்குருகு, கூதள மலர்களைக் கொண்டு கட்டிய ஒரு மாலையினை வானில் வீசி எறிந்தால் எப்படி இருக்குமோ, அவ்வாறு இருந்தது என்று பறக்கும் நாரைகளின் கூட்டத்தை வருணித்துப் பாடுகிறார். ஆழகிய நீல வானத்தில் மேகமானது இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

மிகப்பெரிய கொல்லி மலையின் உச்சியில் தோன்றும் நீரானது வேகமாக பெருக்கெடுத்து ஓடிவந்து கீழே வீழ்கின்ற அருவியாக விளக்குகிறார்.

## தொல்காப்பியத்தில் - திணை

தொல்காப்பியம் தமிழ் இலக்கணம், நிலம், இசை போன்றவற்றிற்கும் தனிச் சிறப்பு கொடுத்து எழுதப்பட்ட இலக்கண நூல் மட்டுமல்ல, கருத்துக்களைச் சுருக்கமாவும் மதி நுட்பச் செறிவுடனும் சொல்லிச் செல்லும் திறனாய்வு நூலாகும். ஊலக இலக்கியங்களில் எங்கும் காண முடியாத "திணை" என்ற பொருளில் நிலங்களை வகுத்து, அவைக்குரிய இயற்கைப் பின்னணியையும், பண்களையும், இசைக் கருவிகளையும், அந்நிலங்களில் வாழ்ந்த இசைக் கலைஞர்களையும், கலைவகைகளையும் விளக்கிச் செல்லும் நூலுமாகும்.

## தொல்காப்பியத்தில் ஐம்பூதங்கள்

நவீன காலத்தில் அண்டவியல் எனும் துறை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இயற்கை, அண்டவியல் பற்றிய அறிவியல் செய்திகளைக் கூறும் தொல்காப்பியம் ஐம்பூதங்கள் என அவை குறித்துத் தன் காலத்திற்கேற்ப பேசுகிறது.

"வளி என வருஉம் பூதக்கிளவியும்
அவ்வியல் நிலையும் செவ்விதென்ப"
(தொல் - எழுத்ததிகாரம் - உயிர்மருங்கியல் நூற்பா – 242)

"நிலம் நீர் விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்க உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி
வழா அமைத் திரிவு இல் சொல்லோடு தழாஅல்"
(எழுத்ததிகாரம் மரபியல் - நூற்பா 90)

இயற்கையில் பிரிக்க முடியாத வண்ணம் ஒன்றை ஒன்று பின்னிப்பிணைந்த நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் போன்ற மூலக்கூறுகளால் இந்த உலகம் உருவாகியிருக்கிறது என்பதை தொல்காப்பியம் கூறுகிறது. பண்டைத் தமிழர்கள் இந்த பிரபஞ்த்தை ஐம்பூதங்களால் உருவானது என்றார்கள்.

## ஐம்பூதங்களின் பொருள் நிலை

1. நிலம் - திடவடிவம்
2. நீர் – நீர்ம வடிவம்
3. தீ – தீய்மம்
4. காற்று – வளிமவடிவம்
5. விசும்பு – வெளிமம்

துகளாய் இருப்பது மண், அதுவே இறுக்கமாகி, அமுக்கம் பெற்றால் அது நிலம் என்று தொல்காப்பியம் கூறுகிறது. சங்க இலக்கியத்தில் மதுரைக் காஞ்சியில் பஞ்சபூதங்களை உருவாக்கியவர் மழுவாள் நெடியான் என்கிறார், மாங்குடி மருதனார்.

## தொல்காப்பியத்தில் நிலம் பற்றிய செய்திகள்

தொல்காப்பியர் அண்டவியலை மூன்றாகப் பிரிக்கிறார். அவை

1. முதல் பொருள்
2. கருப் பொருள்
3. உரிப் பொருள்

எனப்படும். அது மட்டுமல்ல அவற்றுக்குள் இருக்கும் பலவகை அம்சங்களை வகைப்படுத்தலுக்கும் உள்ளாக்குகிறார்.

## முதற்பொருள்

முதற்பொருள் என்றால் நிலமும், பொழுதும், அத்துடன் நிற்காமல் அதற்குள் உள்ள பிரிவுகளை விளக்கும் போது, அதற்குள் இரண்டு பொழுதுகள் என்றார்.

1. சிறுபொழுது
2. பெரும்பொழுது

சிறுபொழுதில் வரும் படிநிலைகள்

வைகறை, விடியல், நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம்

பெரும் பொழுதில் வரும் படிநிலைகள்

கார்காலம், கூதிர்காலம், முன்பனி, பிற்பனி, இளவேனில், முதுவேனில்

கருப்பொருள்

தாவரம், விலங்குகள், மனிதன், சுற்றுச்சூழல் எல்லாம் வருகிறது.

உரிப்பொருள்

மானிட உறவுகள், வாழ்க்கை நடைமுறைகள், மரபுகள் அவற்றின் பகுப்புகள் என விரிந்து செல்கிறது.

திணை என்ற பகுதி நிலம் பற்றி பேசுகிறது என்று சொல்லும் போது அவற்றை ஐந்து நிலங்களாகப் பிரிக்கிறார். அவை,

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்
5. பாலை

இந்த ஐந்து நிலத்திற்குரிய மனிதர்களின் செயல்பாடுகள், தொழில்கள், உணர்வுகள், அந்த நிலங்களுக்குரிய மனிதர்கள் வழிபட்ட தெய்வங்களின் பெயர்களும் கூறப்படுகின்றன.

முடிவுரை

இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கையை நடத்திய பழந்தமிழர்கள் நமது இலக்கியங்களில் இயற்கை பற்றிய வர்ணனைகளை பொதிந்து வைத்தார்கள். தம்மைச் சுற்றி உள்ள இயற்கையில் உள்ள மரங்கள், தாவரங்கள், மலர்கள், புள்ளினங்கள், குருவிகள், மிருகங்கள் பற்றியும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து எழுதி வைத்துள்ளார்கள். இயற்கை எனும் சொல்லை பூமி, இடம் என்ற பொருளிலும் பாடுகிறார் தொல்காப்பியர்.

தொகுப்புரை

- தொல்காப்பியம் தமிழகத்தின் பண்டை வரலாற்றை உணர்த்தும் கருத்துப் பேழை
- சமய உணர்வையும் தமிழையும் பிரிக்க முடியாது என்ற பேருண்மையை முதன்முதலாக எடுத்தியம்பும் நூல் தொல்காப்பியம்.
- நில இயற்கை அமைப்பை ஒட்டி இயற்கையோடு இயைந்த தெய்வ வழிபாட்டு நெறியைத் தொல்காப்பியம் மூலம் அறிகிறோம்.
- இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழக மக்கள், நாணிலங்களிலும் தெய்வ வழிபாட்டைப் போற்றினர் என்பதையும் தொல்காப்பிய இலக்கண நூலும், அதனைச் சார்ந்த சங்க இலக்கியங்களும் தெளிவுறுத்தும்.
- இயற்கை என்பது இயல்பானது, மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்.

அடிக்குறிப்பு


1. தொல்காப்பியக் கடல், வ.சுப. மாணிக்கம், பக்-328, முதற்பதிப்பு 1987, பாரி நிலையம், சென்னை.
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையுடன், தொல்காப்பியர், மறுபதிப்பு 1977, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. தொல்காப்பியம் தமிழண்ணல் - முதற்பதிப்பு 2008, தழிழகம் சதாசிவ நகர், சென்னை.
4. தமிழ் இலக்கணம் - இரா.இராசேந்திரன், திருத்தியப்பதிப்பு 2016, நந்தினிப் பதிப்பகம், சென்னை.

# மணிமேகலையில் புகார் நகரின் வனங்களின் வனப்பு

**முனைவர் சே. பார்த்தசாரதி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விளாத்திகுளம், தூத்துக்குடி*

## முன்னுரை

**இந்த உலகம் கடலாலும் வனங்களாலும் மற்றும் நிலங்களாலும் சூழப்பட்ட இயற்கை வளம் நிறைந்த வனப்பாகும். இதன் காரணமாக நாட்டில் நன்கு மழை வளம் பொழிந்து நல் விளைச்சல் பெற்று செல்வ செழிப்போடு மக்கள் வாழ்கின்றனர். காடுகளும் வனங்களும் இயற்கைகளும் பாதுகாக்கப்பட்டால் சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு வளங்கள் மூச்சுக்காற்றாக அமையும்.** அவ்வகையில் இலக்கியங்கள் இயற்கையின் அழகைப் படம்பிடித்து காட்டுகின்றன. **சிலப்பதிகாரம், மணிமேகலை** என்ற இரட்டைக் காப்பியங்கள் இயற்கையின் வளமையை அள்ளித் தருகின்றன. **அதிலும் குறிப்பாக, மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் இயற்கையின் வனப்பையும்** வனங்களின் அழகையும் ஆளில்லா வான்கல புகைப்படக் கருவியின் (drone camara) மூலம் படம்பிடித்தால் இன்றிருக்கும் அழகு அனைத்தையும் விட மணிமேகலை வனங்களின் வனப்பு **அள்ளிப்** பருகியிருக்கும். **மேலும், இக்கட்டுரையில் மணிமேகலை**யில் புகார் நகரின் **வனப்பை விரிவாகக் காண்போம்.**

## மலர்வனம்

**மணிமேகலையில்** மலர்வனம் புக்க காதையில் புகார்**நகர** வனங்களின் வனப்பை மிக அழகாக எடுத்துரைக்கிறது. சீத்தலைச்சாத்தனார் சுதமதியின் வாயிலாக இச்சிறப்பைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறார். **கணி**கையர் வீதிக்குத் தன்னை அழைக்க வந்த வயந்தமாலையிடம் மாதவி தன் கணவன் களவு குற்றத்திற்காகப் பொய்யுரைக்கப்பட்டு மதுரையில் கொலை செய்யப்பட்டு கண்ணகி தன் சீற்றத்தால் மதுரையை அழித்த துன்ப துயரங்களையெல்லாம் எடுத்துக் கூறினாள். அதனை

> **"வயந்த மாலைக்கு மாதவி யுரைத்த**
> **உயங்குநோய் வருத்தத் துரைமுன்**
> **றோன்றி"1**

பாடலின் வழி அறிய முடிகிறது.

மேலும், தன் மகள் மணிமேகலைக்காகப் புத்தபீடம் வந்ததனை விளக்கிக் கூறிக் கொண்டிருந்தாள். இதனையெல்லாம் மணிமேகலை கேட்டுக் கொண்டிருந்தாள். மணிமேகலைக்கு மலராத தனது வாழ்வு குறித்து அச்சம் அவள் நெஞ்சினில் நிழலாடியது. **கணிகை**யர் இல்லங்களில் பிறந்த பெண்களுக்கு எது **வழி** என்பதில் அச்சம் உண்டாகின்றன. அப்படியே **வழி** இருப்பினும் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தன் பாட்டி சித்ராவதி கூறுவதைப் போல சகல கலைகளையும் **கற்றுக்கொண்டு பெயர் பெற்ற கணிகையாக ஆடம்பர வாழ்வினை வாழ வேண்டும். இல்லையென்றால், அம்மாவைப் போல துறவு மேற்கொண்டு புத்த** பிக்குணியாகச் **சமய நெறியாளர்களுடன் ஊர் ஊராக மதம் பரப்பச் செல்ல வேண்டும். இந்த இரண்டுமே ஒரு பெண்ணிற்கு இரண்டு உச்சங்களைத் தொடும் வாழ்க்கையாக அமைகிறது இதற்கிடையில் ஒரு வாழ்க்கை உள்ளது.** அதாவது, **உரிய பருவத்தில் காதல் மணவாளன் ஒருவனைக் கைப்பிடித்து இல்லறம் தொடங்கும் வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டாள். மாதவி மணிமேகலை முகம் பார்த்து அவள் கண்களில் வடியும் கண்ணீரைத் துடைத்தும் அவளைத்**

தேற்றினாள். மணிமேகலையின் கண்ணீர் பட்டு பூமாலைகள் புனிதமிழந்துவிட்டன. மலர்வனத்திற்குச் சென்று மலர்களைக் கொய்த்து விட்டு வர வேண்டும் என்று மாதவி கூறினாள்.

மணிமேகலையை மலர்வனத்திற்குத் தனியாக அனுப்பப் போகிறீர்களா? என்று சுதமதி மாதவிடம் கேட்டாள். மலர்வனத்திற்கு மணிமேகலையைத் தனியாக அனுப்ப வேண்டாம் என்று சுதமதி கேட்டுக் கொண்டாள். மாதவி உடனே பதில் கூறத் தொடங்கினாள். அதாவது, இவள் அடிக்கடி தன்னுடைய தந்தைக்கும் கண்ணகி தாய்க்கும் நேர்ந்த அவமானத்தை எண்ணியெண்ணி கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள். நீல மலர்களைத் தாங்கிய தண்டினைப் போல அவள் கண்ணீர் கோடுகள் தெரிகிறது என்று மனவேதையுடன் மாதவி புலம்பினாள்.

மேலும், மணிமேகலையை யாரும் எதுவும் செய்ய முடியாது. ஏனென்றால், காமவேள் கூட தனது மலர்க் கணைகளைக் கீழே போட்டு விட்டு ஓடி விடுவான். அவன் கதியே இதுவென்றால் உறுதி இல்லாத ஆடவர்கள் இவளைக் காண நேர்ந்தால் எனனாவது! இவளைத் திரும்பிப் பார்க்காதவனைச் சோதனை செய்தால் அவன் நிச்சயம் ஒரு பேடியாகத் தான் இருப்பான் என்றாள். இருப்பினும் வேண்டாமம்மா இவளைத் தனியாக அனுப்ப வேண்டாம். இவள் மாதிரி இளம் வயது பெண்கள் ஆடவர் கண்களிலே படக்கூடாது என்றாள். பிறகு பெண்கள் வீட்டுக்குள்ளே முடங்கி கிடக்கத்தான் வேண்டுமா? மேலும், மாதவி சீற்றத்துடன் இவள் துறவிக் கோலம் கொண்டவள் தானே என்றாள்.

உடனே, சுதமதி தன்னுடைய கதையை மாதவிக்கு எடுத்துக் கூறினாள். ஒரு நாள் மலர்வனத்தில் மலர் கொய்து கொண்டிருந்தேன். அப்போது என் அழகில் மயங்கி இந்திரவிழா காண வந்த ஒரு விஞ்சையன். அவன் பெயர் மாருதி வேகன். என்னை தூக்கிக்கொண்டு போய் என் மீது மோகம் கொண்டு என்னை எல்லாவிதமானச் செயலுக்கும் உட்படுத்தி என்னை மீண்டும் வனத்திலே விட்டு விட்டுப் போய் விட்டான். சுதமதிக்கு நடந்த கொடுமையைக் கேட்டு மாதவி கண்ணீருடன் உறைந்து நின்றாள். அதனால் தான் மணிமேகலையைத் தனியாக அனுப்ப வேண்டாம் என்றேன். நானே மணிமேகலையுடன் செல்கிறேன் என்றாள்.

### இலவந்திகை வனம்

மணிமேகலையைப் பார்த்து மாதவி இலவந்திகையைச் சுற்றியுள்ள இடத்தில் ஒரு மலர்வனம் உள்ளது. இலவந்திகையின் பெரிய மதிலை அடுத்து சென்றால் பெரிய மரக்கன்றுகளை நட்டு குளிர்ந்த மலர்களைப் பரப்பிய பந்தல்கள் போட்டிருப்பார்கள். இராசாங்கத்தின் பாதி வேலையாட்கள் அங்கு தான் இருப்பார்கள். இப்போது இந்திரவிழா என்பதால் அங்கு யாரும் இருக்க மாட்டார்கள். அங்கு தேவர்களை அன்றி பிற மனிதர்கள் அங்கு வருவதில்லை. தேவர்கள் கொண்டு வந்த வாடாத மலர்மாலைகள் மிகுதியாக அடிக்க வைக்கப்பட்டிருக்கும். தொடர்ச்சியாக சுதமதி அந்த மலர்மாலைகளுக்கு காவலுக்கு ஒரு பூதம் இருக்கும். அந்த பூதத்திடம் சிக்கிக் கொண்டால் நம் கதி அதோ கதிதான். இது தெரிந்தவர்கள் அந்த மலர்வனம் செல்ல மாட்டார்கள் என்றாள். வேறு மலர்வனமே இல்லையா? என்று மாதவி கேட்டதற்கு சுதமதி ஓ! இருக்கிறதே என்று பதில் உரைத்தாள்.

### சம்பாபதி வனம்

கருடன் தன்னுடைய சிறகை விரித்து பரப்பிய படி கதிரவன் அருகில் சென்று தனது சிறகுகளை இழந்த சம்பாபதி என்னும் கழுகு வாழ்ந்த சம்பாபதி வனம் அருகில் உள்ளது. அதனை

"வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்"2

மணிமேகலையின் பாடல் வழி அறிய முடிகிறது.

**கவேரா வனம்**

காவிரியின் தந்தையான **கவேரன்** என்ற மன்னன் இருந்த **கவேரவனம்** ஒன்று உள்ளது. ஆனால், இந்த வனத்தில் அதிகம் **மு**திர்ந்த காலத்திற்கு உட்பட்ட பெண்கள் அங்கு வாழ்கின்றன. அதனால், அங்குள்ள பெண் **தெய்வங்களுக்கு அஞ்சி** மக்கள் அந்த வனங்களுக்கு செல்ல அஞ்சுகின்றனர். அதனால் அவ்வனத்திற்கு நாம் செல்வதும் நல்லதல்ல என்று சுதமதி **கூறினாள்**. **எல்லா மலர்வனத்தைப் பற்றியும் தெரிந்து வைத்திருக்கின்ற சுதமதியைப் பார்த்து புத்ததேவனுக்கு மாலைகள் தொடுக்க தேவையான மலர்களைப் பறிக்க ஒரு மலர்வனம் கூடவா**? **இல்லை என்று வினா எழுப்பினாள்**.

**உவவனம்**

**மாதவியம்மா அன்புள்ளம் கொண்டு இந்த உலகத்து உயிர்களை உயிர்பிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பகவான் புத்தரின் அன்பு கட்டளைக்கு அடிபணிந்து பல குளிர்ந்த வண்ண மலர்களைப் பூத்துக் குலுங்க செய்யும் மலர்வனம் ஒன்று உள்ளது**. **அந்த மலர்வனத்திற்கு உவவனம் என்று பெயர்**. **அந்த உவவனத்தின் சிறப்புகளை மணிமேகலையும் மாதவியும் கேட்க ஆவலாய்க் காத்திருந்தனர்**. **மேலும்**, **உவனத்தின் சிறப்புகளை மாதவி விரிவாக உரைக்கத் தொடங்கினாள்**. **இதனை**

**"அருளும் அன்பும் ஆருயி ரோம்பும்**

**ஒரு பெரும் பூட்கையும் ஒழியா நோன்பிற்"**[3]

**என்ற** அடிகளின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

உவவ**னம்** மரங்களும் பூச்செடிகளும் மலர்கொடிகளும் நிறைந்து கதிரவனின் வெப்பம் பூமியில் கூட**த்** தெரியாமல் அடர்ந்திருக்கும் அழகிய வனம். அந்த வனத்தில் ஒரு **பளி**ங்கி மண்டபம் உள்ளது. அதன் அமைப்பு மிகவும் விசித்திரமானது. உள்ளே இருப்பவர்கள் யார் என்று வெளியில் இருந்து பார்த்தால் தெரிகின்ற வகையில் அமைந்துள்ளது. ஆனால், உள்ளே இருப்பவர்கள் பேசுவதை வெளியி**லி**ருந்து கேட்க இயலாது. அப்படி ஒரு அமைப்பினை**க்** கொண்ட மதில்களால் எழுப்பப்பட்ட **பளி**ங்கு மண்டபத்தினை போன்றது. தூய ஒளியை**த்** தரக்கூடிய தூய மாணிக்க**க்**கற்கள் மூலம் அந்த மண்டபம் ஒளிவிட்டுக் கொண்டிருக்கு**ம்**.

அங்குள்ள **பளி**ங்கி மண்டபத்தில் ஒரு தாமரை **பீடம்** உள்ளது. அதன் பீடத்தில் அரும்புகளை வைத்தால் எத்தனை நாட்கள் **ஆயி**னும் அவை மலராமல் அரும்புகளாகவே இருக்கும் சக்தி பெற்றது. மேலும், அந்த அரும்புகளை வண்டுகள் கூட **மொய்க்காது**. அதைவிட ஒரு சிறப்பு என்னவென்றால் நாம் எந்த தெய்வத்தை நினைத்து மலர்களை காணிக்கையாக இடவேண்டும் என்று எண்ணி அதனை பத்ம பீடத்தில் வைத்தால் அந்த மலர்கள் நாம் நினைக்கும் தெய்வத்தின் வாதங்களைச் சென்றடையும் என்று சுதமதி கூற மணிமேகலையும் மாதவியும் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தனர். **இப்படி** வனத்தின் சிறப்புகளை**யெ**ல்லாம் எடுத்துக் கூறி இதனால்தான் மணிமேகலையை**த்** தனியாக வனத்திற்கு அனுப்ப வேண்டாம் என்று கூறினேன் என்றாள்.

மணிமேகலையை அழைத்துக் கொண்டு சுதமதி தேரோடும் பெரிய வீதிகளில் நடந்து உவனம் நோக்கி சென்றாள் செல்லும் வழிகளி**லெ**ல்லாம் அழகு மிக்க வண்ணப் பொடிகளைக் கொண்டு வானவர்களையும் விலங்குக**ள்**, பறவைகள் மற்றும் இயற்கை காட்சிகள் அனைத்தையும் வண்ண சித்திரங்களாக**த்** தீட்டி இருந்தனர். அதனை**யெ**ல்லாம் **இ**ரசித்துக் கொண்டே இருவரும் நடந்தனர்.

இருவரும் **உவவனம்** அருகில் வந்து கொண்டிருந்தனர். திடீரென ஒரு கூட்டம் அவர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டது. முன்னொரு காலத்தில் விராட தேசத்தில் பேடி உருவில் இருந்த அர்**சு**னனை அறிந்து கொண்ட மக்கள் அவனை சூழ்ந்து நின்று வேடிக்கை பார்ப்பது போல மணிமேகலையை வேடிக்கை பார்த்தனர்.

அப்போது ஒருத்தி இந்த மலர் வனத்துக்குள் மணிமேகலை நடந்து சென்றால் நீர்

பொய்கையின் அருகில் விளையாடும் அன்னங்கள் கூட, இவளது நடை அழகில் மயங்கி தன் நடை தளர்ந்து போய்விடும் என்றாள். இப்படி ஒவ்வொருத்தரும் அவள் அழகைப் பறவைகளோடும், இயற்கையோடும் ஒப்பிட்டு அவளிடம் பேசிக் கொண்டிருந்தனர். தோகை விரித்தாடும் மயில்கள் இவள் எழிலைக் கண்டு அவளிடம் அழகு குறிப்புக் கேட்பதற்கு வந்து நிற்கும் என்றாள் ஒருத்தி. பைங்கிளிகள் மழலை மொழி பேச இவளிடம் பாடம் கற்க போட்டி போடும் என்றாள் மற்றொருத்தி. இவர்களின் கூற்றுக்கு ஒருத்தி வந்து முற்றுப்புள்ளி வைத்தாள். சொன்னதையே சொல்லாதீர்கள் இவள் அழகிற்கு உவமையே கூறமுடியாது என்று கூறினாள். இதனையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் மணிமேகலையும் சுதமதியும் உவவனத்திற்குள் நுழைந்தனர்.

### உவவனத்தின் அழகு

மரங்கள் அடர்ந்து அழகு வனமாக உவவனம் காட்சியளித்தது. குரா, வெண்கடம்பு, குருத்து, கொன்றை, மஞ்சாடி, வகுளம் போன்ற மரங்களும் செம்மையான அடிமரம் கொண்ட வெட்சி, நாரந்தை, நாகம், புன்னை, பிடவம் கொடி, செம்முல்லைச் செடி, வளைந்த முல்லை உடைய தாழை, வெட்பாலை, செருத்தி, மூங்கில், அசோகு, வேங்கை, பெரிய செண்பகம், செந்தழல் போல மலர்கள் நிறைந்த முருங்கைமரம் போன்ற மரங்களும், மலர்களைச் சொரிந்து அந்த வனமானது ஒரு தேர்ந்த ஓவியனின் நேர்த்தியானச் சித்திரம் போலக் காட்சியளித்தது. அந்த வனத்தின் பேரியற்கையானது மணிமேகலையையும் சுதமதியையும் இருகரம் நீட்டி வரவேற்றது. மணிமேகலை அந்த வனத்தைத் தொழுது விட்டு சுதமதியுடன் மலர் கொய்ய உள்ளே சென்றாள். அதனை

> **"குரவவும் மரவமுங் குருத்துங் கொன்றையும்**
> **திலகமும் வகுளமுங் செங்கால் வெட்சியும்"4**

இவ்வரிகள் தெளிவுபடுத்துகின்றன. அந்த வனத்தில் உள்ள மரங்களின் மிகுதியால் உள்ளே இருப்பவர்கள் கதிரவனின் வெப்பத்தை கூட உணர்வதில்லை. தும்பிப் பூச்சிகள் குழல் ஊதுவது போல இரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. சின்னஞ்சிறிய வண்டினங்கள் யாழ் போல இசைத்தும் வெயில் நுழைய முடியாத அந்த வனத்தில் குயில் நுழைந்து பாடிக்கொண்டும் அந்த அரங்கத்தில் மயில் ஆடுவதை ஓர் இரசிகனைப் போல குரங்குகள் மரங்களில் அமர்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தன.

### முடிவுரை

மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் வனங்களின் வனப்பை அழகுச் சின்னமாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். வனமே இயற்கைக்கு மூலாதாரம் இயற்கையே மனிதனுக்கு வாழ்வாதாரம். வனத்தை அனைவரும் பாதுகாக்க வேண்டும் என்ற முயற்சியில் நம் அரசானது தீவிர முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனால் தான் வனநாள் (மார்ச் 31) என்றொரு நாளை நாம் வனத்தைப் பாதுகாக்கக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

### அடிக்குறிப்பு

1. **நா. மு வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை, காதை** - 3, ப. 76
2. **மேலது**.,ப. 79
3. **மேலது**., ப. 80
4. **மேலது**., ப. 83

### பார்வை நூல்கள்

1. **நா.மு. வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை, ஈஸ்வரி, பிரேம் நகர், பொழிச்சலூர், சென்னை** - 600074.
2. **சத்யப்பிரியன், நாவல் வடிவில் மணிமேகலை, சுவாசம் பதிப்பகம்**, 52/2, **பி. எஸ் மஹால் அருகில், சென்னை** 600127.

# ‘மீன்குகைவாசிகள்’ புதினம் காட்டும் இசுலாமிய மக்களின் இயற்கைசார் வாழ்வியல்

**க. லெட்சுமி**

*முனைவர் பட்ட ஆய்வாளர்*

*தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை*

**ஆய்வுச்சுருக்கம்**

*இறைவன் மனிதனுக்கு அளித்த கொடை ‘இயற்கை’ ஆகும். வேற்றுமை பாராட்டாது எல்லோரையும் சரிசமமாக பார்க்கும் ஒரே இனம் ‘இயற்கை’ மட்டுமே. யார் தீங்கு செய்தாலும் அவருக்கும் நல்லது செய்யும் ஆற்றல் வாய்ந்தது ‘இயற்கை’ மட்டுமே. தன்னை நம்பி வந்தவரை என்றுமே இயற்கை கைவிடாது. அள்ள அள்ள குறையாத செல்வம் இயற்கையிடம் மட்டுமே உண்டு. இத்தகைய சிறப்புமிக்க இயற்கை மனிதனுக்கு என்றுமே வரம் என்றுதான் கூறவேண்டும். மனிதன் இல்லாமல்கூட இயற்கை வாழ்ந்துவிடும். ஆனால் இயற்கை இல்லாமல் மனிதனால் வாழ முடியாது. அவ்வகையில் இயற்கையுடன் மனிதன் எவ்வாறு இயைந்து வாழ்கிறான் என்பதை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. உள்ளதை உள்ளவாறு எடுத்து இயம்புவதில் இலக்கியங்கள் எப்போதும் ஈடு இணையில்லா சேவையாற்றுகின்றன எனலாம். அதில் புதினங்களுக்கு என்றுமே பெரும்பங்கு உண்டு. அவ்வகையில் ‘மீன்குகைவாசிகள்’ புதினம் வெளிப்படுத்தும் இசுலாமிய மக்களின் இயற்கைசார் வாழ்வியலை ஆராய்ந்து எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

**முன்னுரை**

இனம், மொழி, மதம் அனைத்தும் மனிதனுக்கு மட்டுமே. இயற்கைக்கு அல்ல. எந்த மொழிக்கும், எந்த மதத்திற்கும், எந்த இனத்திற்கும் இயற்கை பொதுவானதாகவே இருந்திருக்கிறது, இன்றும் இருந்து வருகிறது. அவ்வகையில் ‘கீரனூர் ஜாகிர்ராஜா’ இயற்றிய ‘மீன்குகைவாசிகள்’ புதினம் நீரை வாழ்வாதாரமாகக் கொண்ட இசுலாமிய மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கிறது. குளத்தோடு பின்னிப் பிணைந்த இசுலாமிய மக்களின் இயற்கைசார் வாழ்வியலை ஆராய்ந்து எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**மீன்குகைவாசிகள் புதினம்**

இசுலாமிய மக்களின் வாழ்வியலைப் பற்றி ‘கீரனூர் ஜாகிர்ராஜா’ இயற்றியது ‘மீன்குகைவாசிகள்’ என்ற புதினமாகும். இது இவருடைய ‘மீன்காரத்தெரு’ என்ற புதினத்தின் தொடர்ச்சியாகும். ஒரே சமூகத்தைச் சேர்ந்த இருவேறுபட்ட சூழலை எடுத்துரைப்பதாக இப்புதினம் அமைந்துள்ளது. செய்யும் தொழிலால் உயர்வு, தாழ்வு கொண்ட சமூகத்தை மையமிட்டதாக இப்புதினம் கட்டமைக்கப்பட்டுள்ளது. குளத்தில் மீன்பிடித் தொழில் செய்து வாழும் இசுலாமிய மக்கள் சற்று கீழாகவும், முதலாளிமார்களாக பங்களாத் தெருவில் வசிக்கும் இசுலாமிய மக்கள் சற்று மேலாகவும் பார்க்கப்படுவதாக புதினம் பதிவு செய்கிறது. முதலாளித்துவ ஆதிக்கத்தின்கீழ்

அடங்கிப்போகும் மீன்காரத்தெரு மக்களின் பாவப்பட்ட நிலையை எடுத்தியம்புகிறது இப்புதினம்.

**இயற்கையுடன் ஒன்றிய மீன்காரத்தெரு மக்கள்**

இயற்கையுடன் ஒன்றிய வாழ்வு கொண்டவர்களாக 'மீன்காரத்தெரு' மக்கள் காணப்படுகின்றனர். இப்புதினம் காட்டும் மீன்காரத்தெரு மக்களின் வாழ்வாதாரமே நீரை நம்பியே உள்ளது. குளம் செழித்தால் இவர்களின் வாழ்வு செழிக்கிறது. குளம் சற்று சோர்ந்தால் இவர்களின் வாழ்வும் சோகக் கடலால் மூழ்கி விடுகிறது. மீன்காரத்தெருப் பெண்ணான ஆமினா மீன்காரத்தெரு வாழ்வதற்கே காரணமாக இருக்கும் குளத்தை 'குளத்தம்மா' என்று அழைக்கிறாள். உணவை உணர்வோடு அளிக்கும் யாரும் 'தாய்' என்றே சொல்லப்படுவர். அவ்வகையில் மீன்காரத்தெரு மக்களுக்கே உணவளிக்கும் குளத்தை ஆமினா 'குளத்தம்மா' என்பதை, ""மாமு..குளத்தம்மா..குளத்தம்மா.." என்றாள் பாவனையுடன். காதர்ஷாவுக்குப் புரிந்துவிட்டது. அந்தச் சொல் அவரைப் பரவசமாக்கியது வலையைக் கீழே போட்டார். குளத்தம்மா.. குளத்தம்மா.. சொல்லிச் சொல்லிப் பார்த்துக் கொண்டார். இப்போது அவர் கரையத் தொடங்கிவிட்டார். அம்பது வருஷமா இந்தக் கொளத்துல முக்கிளிக்கனம் போட்டு எந்திரிச்சிருக்கோம். இது குடுத்த மீனப்புடுச்சு வித்து ஒடம்பு வளத்துருக்கம். நமக்குத் தோணுலியே... லம்மா லே.. இப்படி ஒரு பேரு.. குளத்தம்மா.."[2] என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன.

**மீன்காரத்தெருவின் குளத்தோடு ஒன்றிய வாழ்வு**

மீன்காரத் தெருவைச் சேர்ந்தவர்கள் தாங்கள் வாழ்வதற்கே வாழ்வாதாரத்தை அளிக்கின்ற மீன் வசிக்கும் குளத்தை தங்கள் வாழ்வியலோடு ஒன்றி பார்க்கின்றனர் என்பதை காதர்ஷா ஆமினாவிற்குக் கூறும் ஆறுதல் வார்த்தைகளிலிருந்து அறிய முடிகிறது. ஆமினா பங்களாத் தெரு சலீமால் ஏமாற்றப்பட்டு வாழ்க்கையை இழந்து இனி வாழ்வதற்கு ஒன்றுமில்லை என்னும் நிலையில் குளத்தை நோக்குகிறாள். அப்போது காதர்ஷா 'லம்மா லே அழுகாதீல... இந்த கொளத்தப் பாருல.. நம்ம தெருச் சனங்க மனசுமாரில இந்தக் கொளம். நெறஞ்சு கெடக்குதுலெ... வத்தும்.. வறளும்.. நம்மளக் கை விட்றாதுல.."[1] என்று கூறுகிறார். சாதாரண குளம்தான். ஆனால் அதை மனிதனின் மனதிற்கு ஒப்புமையாக்குகிறார் காதர்ஷா. இதிலிருந்து அம்மக்கள் இயற்கையுடன் தங்கள் வாழ்வை எவ்வாறு பின்னிப்பிணைத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மேலும், ஆமினா தன் வாழ்வில் நடந்த சோகத்திற்கு ஆறுதல் தேடும் விதத்தில் குளத்திற்கு வருகிறாள். குளத்தை நீண்ட நேரம் நோக்குவதிலேயே அவள் அமைதி கொள்கிறாள். இதிலிருந்து இயற்கை மனிதனின் உணர்வோடு ஒன்றிய விதத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

**சுடும் வெயிலின் அழகு**

மழை மட்டும் அல்ல, வெயில்கூட இயற்கையின் கொடையே ஆகும். இயற்கையை ரசிப்பவன் இயற்கையின் எல்லா அம்சங்களையும் பாகுபாடின்றி ரசிப்பான். மழையும், வெயிலும் அதிகமாகும் போதெல்லாம் தமிழன் சொல்லும் ஒரே வார்த்தை 'இன்று நல்ல மழை', 'இன்று நல்ல வெயில்' என்றே. இயற்கைமீது என்றுமே கோபம் கொள்ளாதவன் 'தமிழன்' மட்டுமே. 'மீன்குகைவாசிகள்' புதினம் காட்டும் மக்களும் அப்படியே. மழையும்,

வெயிலும் இம்மக்களுக்கு பழக்கப்பட்டதே. இது இரண்டும் இல்லையேல் இவர்களால் வாழ முடியாது. "மீங்காரத் தெருவில் மட்டும் வெயில் விசேஷமாகக்காயும். ஆண்களுக்கு ஓய்வானால் வெறுமேலுடன் அலைந்து கிடக்கத்தான் விருப்பம். சுள்ளென்று அடிக்கும் வெயிலில் சுறுசுறுப்புக்கு குறைவிருக்காது. வியர்வைக் கரிப்பில்லாவிட்டால் எதையோ இழந்தது போல அவர்களின் பேச்சிலும் வீச்சிலும் சுவாரஸ்யக் குறைவு தட்டுப்படும். மந்தமாகிப் போவார்கள். வெயிலை ரசித்து ருசித்துக் குடித்தபடி "இன்னிக்கு வெயிலார் நல்ல ஒறப்பாப் போட்றார்ல" என்று இரு கைகளையும் தேய்த்து முகர்ந்து பரவசப்பட்டுக் கொள்கிறவர்களைப் பார்க்க அயல்தெருவினருக்கு ஆச்சரியமாயிருக்கும்"[3] என்ற வரிகள் மீன்காரத்தெரு மக்கள் வெயிலோடு ஒட்டி உறவாடும் சூழலையும், வெயிலையும் உடன்பிறப்பு போல நினைத்து மரியாதை கொடுத்து பேசுவதையும் எடுத்தியம்புகின்றன.

**முடிவுரை**

மனிதன் வாழ இன்றியமையாதது 'இயற்கை' ஆகும். அத்தகைய இயற்கையுடன் மனிதன் என்றுமே இயைந்தே வாழ்கிறான். 'கீரனூர் ஜாகிர்ராஜா' இயற்றிய 'மீன்குகைவாசிகள்' புதினமும் அதையே வெளிப்படுத்துகிறது. இப்புதினத்தில் வரும் மீன்காரத்தெரு மக்கள் அனைவரும் இயற்கையுடன் இயைந்தே வாழ்கின்றனர். இயற்கையை தங்கள் தாயைப் போல, தங்கள் உடன்பிறப்பு போல நினைத்துக்கொண்டு உறவு பாராட்டுகின்றனர் என்பதை இக்கட்டுரை உறுதிபடுத்துகிறது.

**மேற்கோள்கள்**

1. மீன்குகை வாசிகள் ப. 14
2. மேலது., ப. 11
3. மேலது., பக். 7, 8

**துணைநின்ற நூல்கள்**

1. கீரனூர் ஜாகிர்ராஜா, மீன்குகைவாசிகள், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி – 642002, இரண்டாம் பதிப்பு ஆகஸ்ட் 2013

# சங்க இலக்கியத்தில் இயற்கை

**நா. அழகேஸ்வரி**
*இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு*
*வளனார் கலை அறிவியல் கல்லூரி, குருவிகுளம்*

**ஆய்வு சுருக்கம்**
*சங்கம் நிறுவிய தமிழை ஆராய்ந்த காலம் சங்ககாலம். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியப் புலவர்களுக்கு, கருத்துச் சுதந்திரமும், மதிப்பும் இருந்தமையால் அவர்கள் தன் மனத்தில் பதிந்தவற்றை உணர்ச்சி மழுங்காமல் இயற்கைச் சூழலைப் பிண்ணணியாகக் கொண்டு இயல்பு நவிற்சியாகப் பாடல்களை இயற்றினார். இவை பாட்டும் தொகையும் என்று கூறப்பட்டன.*

## முன்னுரை

**வரையே சுரமே புறவே பழனம்**
**திரையே அவையனை சேர்தரும் இடனே**
**என ஈர்வகைத்து அனையில் நிலமே"**
**- நற்கவிராச நம்பி (அகபொருள் விளக்கம் - 9)**

என அகப்பொருள் பாடல் சங்ககால நில பாகுப்பாட்டை எடுத்துரைக்கிறது. இயற்கையால் சூழப்பட்ட இவ்வுலகில் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பழந்தமிழ்ர் அக, புற வாழ்வை பிரிதிபலிக்கும் பெட்டகமே சங்க இலக்கியம். புலவன் எண்ணிய கற்பனையைப் புகுத்தி இயற்கை வைத்தியம், மூட நம்பிக்கைகள் என ஐவகை நிலத்தில் நிகழும் செயல்பாடுகளை இயற்கையோடு இணைத்து பல சங்க இலக்கிய பாடல்களில் சிலவற்றை இங்கு காண்போம்.

## சங்க இலக்கியமும், இயற்கையும்

சங்க இலக்கியத்தின் தனி இயல்பு நவிற்சி அகப்பொருளாயினும், புறப் பொருளாயினும் புலவர்கள் இயற்கை இறந்த கற்பனையைப் பாடல்களில் புகுத்தவில்லை. பாடல்களைக் கூட்டமைக்கும் உறுப்புகளாக இயற்கைக் காட்சிகளும் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் கோக்கப்பட்டுள்ளன. இந்த ஒரு சிறந்த பாடலாக அமைக்கப்பட்டது.

**"துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரப்**
**பிடியூட்டிப் பின்உண்ணும் களிறு"**
**- கலித்தொகை**

பாலை நிலத்தில் குழியில் சிறிது தண்ணீர் உள்ளது. அதனை ஆண் யானையும் பெண் யானையும் குடித்தாக வேண்டும். கடுமையான தாகம் ஆண்யானை முதலில் குடித்து விடாமல் தன் பெண் யானை குடித்தப் பின்னர் எஞ்சிய நீரைக் குடிக்கிறது. இது இயற்கையில் காணப்படுகின்ற காட்சியே. இயற்கையில் நிகழக்கூடிய காட்சிகளும் மனித வாழ்வின் அனுபவ நிகழ்ச்சிகளும் பாடலில் இடம் பெறும் போது அப்பாடல் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியே என்னும் உணர்வைக் கலைஞர்களுக்குத் தருகிறது. உவமை! உள்ளுறை! இறைச்சி தொன்மம் போன்ற இந்நெறி சில சொற்களில் அமைந்துள்ள பாடல்களுக்கு விரிவான விளக்கங்களைத் தரவல்லவை. இடத்திற்கு ஏற்ற எளிய இயற்கைக் காட்சிகளையும், வாழ்வியற் செய்திகளையும் உவமைகளாகப் பயன்படுத்துவதில் சங்கப் புலவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

## பெருங்கடுக்கோ காட்டும் இயற்கை

எட்டுத்தொகை நூல்களைச் சார்ந்த கலித்தொகை பாடல்கள் ஒத்தாழிசைக் கலிப்பா என்னும் இன்னிசைப் பாலை சார்ந்து. இவை காதலரின் இன்ப, துன்ப உணர்ச்சிகளை இயற்கைச் சூழலில் மனித மாண்புகளைச் சுட்டிக்காட்டுகின்றன. பண்டைக்காலப் பெரு மன்னர்களும் இயற்கையைப் பார்த்து சாதாரண மக்களின் காதல் உணர்வுகளைத் நம்மகத்தே அனுபவித்துப் பாவனையாகப் பாடுவதில் பாடிய பாலைக்கலியும் சோழன் நல்லுருத்திரன் பாடிய முல்லை கலிப்பாடலும் இதற்குத்

தகுந்த சான்றாக இருக்கும். மக்கள் வாழ்வையும் அறநெறிக் கருத்தையும் இயற்கை வாழ்வுடன் இணைத்து உவமை கூறுவதில் வல்லவர் பெருங்கடுங்கோ!

**ஒரோ ஒகை தம்முள் தழ்இ ஓசை ஓசை**
**ஒன்றின் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ**
**சென்ற இளமை தரற்கு"**

**- பெருங்கடுங்கோ**

பொருள் மட்டும் வாழ்வில் இனிமை தாராது. காதலர் இணைந்து வாழ்தலே இனிமை என்கிறார். அதை இயற்கை வாழ்வில் இணைத்துக் காட்டுகிறார். களிறு, புறா, மான் ஆகிய விலங்கினங்கள் கூட வெம்மையான பாலை நிலத்தில் வாழ்ந்தாலும், தம் காதலருடன் இணைந்து இனிது வாழ்கின்றன. ஆனால் ஆறறிவு உடைய மனிதனோ செல்வம் செல்வம் என்று அலைந்து வாழ்க்கை இன்பத்தைத் தொலைத்து விடுகிறான் என்கிறார்.

**நற்றிணை**

**புன்னை மரம் என் சகோதரி!**

அவள் ஒரு இளம் பெண். தலைவி நெய்தல் திணை சார்ந்தவள். தலைவியின் ஊரில் எந்நேரமும் அலையின் சத்தமும், தலை வருடும் கடல் காற்றும் கேட்கும். தலைவி தன் காதலனோடு ஓடி ஆடி மகிழ்கிறாள். இருவரும் ஓடி வந்த களைப்பு தீர ஒரு மரத்தின் அடியில் வந்து நிற்கின்றனர். இருவர் முகத்திலும் சந்தோஷம் கரைபுரண்ட போது, சந்தோஷத்தில் தலைவன், தலைவிடம் முத்தம் கேட்கிறான் தலைவிக்கு நாணம் தடுக்கிறது. அவள் சொல்கிறாள், நான் சிறுபிள்ளையாக இருந்த போது என் தோழியருடன் விளையாடிக் கொண்டிருந்த போது விளையாட்டாக ஒரு புன்னை விதையை நட்டு வித்தேன். அப்படி நட்டதை நான் மறந்தபோதும் என்தாய் என்னை வளர்த்ததைப் போல் நெய்யும், பாலும் ஊட்டி அதை வளர்த்து விட்டாள். என்னை அந்த மரத்தின் அடியில் காணும் போதெல்லாம் அந்த மரம் எனக்குத் தங்கை என்று சொல்லுவாள். அந்த மரம் தான் இது. என் தங்கை முன்னால் உன்னோடு இன்பம் அனுபவிக்க எனக்கு நாணம் தடுக்கிறது என்கிறாள். தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை நிலத்தை ஒட்டியே அமைத்தார்கள். நிலம், மழை, தாவரங்கள் எல்லாம் நம் சிந்தனைகளை நம் எண்ணங்களை மாற்றும் ஓரறிவு உயிர் முதல் ஐந்தறிவு உயிர் வரை இயற்கைச் சூழலும் நம் வாழ்வில் முக்கிய பங்கு பெறுகின்றது. மரம் (செடி போன்ற) இயற்கைச் சூழல் நம் மனதோடு தொடர்புடையது.

இந்த பாடலில் தலைவி நட்ட மரமானது அவளின் உணர்வைப் பாதிப்பதாகக் காட்டப்படுகிறது. இது சங்ககால மக்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்வை வாழ்ந்தனர் என்பதை காட்டுகிறது.

மரத்தைக் கூட உடன் பிறந்த சகோதரியாக நினைத்து வாழ்ந்த சமுதாயத்தை புலப்படுத்துகிறது. உடன் பிறந்த சகோதரி என்றும் பார்க்காமல் ஏற்றத் தாழ்வு பார்க்கும் சமூகத்திலிருந்து அன்றைய சமூகம் தலை சிறந்து விளங்குகிறது. குகனோடு ஐவரானோம் குன்று சூழ்வாள் மகனோடு ஆறுவரானோம், உன்னோடு ஏழுவரானோம் என்று இராமன் கூறினான். அதையும் தாண்டி ஒருபடி மேலே சென்று மரத்தைக் கூட உடன்பிறந்த சகோதரியாக நினைத்து சமுதாய வாழ்வையும் இத்தகைய இனிமையும் நிறைந்த பாடல்கள் நமது சங்க இலக்கிய பாடல்கள்.

**தொண்டைமான் இளநிரையன் காட்டும் தலைவியின் செயல்**

தொண்டைமான் இளந்திரையன் நெய்தல் நிலத்தின் பண்பையும் இயற்கை சூழலையும் தலைவியின் செயலைக் கொண்டு அழகாக வெளிக்காட்டுகிறார்.

தலைவன் தன் காதலியிடம் அவனின் ஆசை நோயை வெளிப்படுத்துகிறான். அந்தத் தலைவியனாவள் மறுமொழி கூறாமல் திகைத்து நிற்கின்றாள். அவளின் செயல்களால் தன் காதலை வெளிக்காட்டுகிறாள். இதனை நம் சங்கப் புலவன் தொண்டைமான் இளந்திரையன் தன் நற்றிணை பாடலில்

இயற்கையோடு இணைந்து வெளிப்படுத்துகிறார். பாடலின் மூலம் தலைவன், தலைவி திணை (நிலம்) வெளிப்படுத்தப்படுகிறது.

**அறிதலும் அறியோ பாக! பெருங்கடல்**
**ஏறி திணை கொழீஇய ஏக்கர்**
**வெறிகொள ஆடு வரி அவன் ஒருவயின்**
**ஆற்றாது.**

**- நற்றிணை – 106.**

இதன் பொருள் தலைவன் பாகனிடம் கூறுகிறான். கடலலையானது மணலில் ஏறி திரும்புகிறது. அந்தப் பகுதி எங்கும் மணக்கும் நாழல் மலரும் ஓடிவிளையாடும் நண்டுகளும் இதைப் பார்த்து கொண்டிருந்த தலைவிடம் தன் காதல் நோயை வெளிப்படுத்தினேன். அதற்கு அவள் மறுமொழி கூறாது தன் கையில் மணந்து கொண்டிருக்கும் ஞாழல் மலரை உதிர்த்துக் கொண்டிருக்கிறான் அந்த மடப்பெண் அறிவு மயங்கி நின்றாள் இதன் பொருள் என்வாக இருக்கும் பாக? என தலைவன் நேர்ப்பாகனிடம் உரைக்கிறான். இங்கு அந்நிலத்தில் நிகழும் இயற்கைச் சூழல் அவர்களின் உணர்வை பாதிக்கின்றது. இதன் மூலம் மனித வாழ்வையும் இயற்கைச் சூழலையும் ஒன்றிணைத்தார் புலவர்.

**கபிலர்**
**மண் திணிந்த நிலனும்**
**நிலம் எந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித்தலை இயய நீயும்**
**தீ - இரணிய நீரும் - என்றாங்கு**
**ஐம்பெரும் பூத்தத்து இயற்கை போல**

**– புறநாறூறு**

இதன் மூலம் பஞ்சபூதங்களும் தன்மை சீரமைத்து கொள்ளும் தன்மை பெற்று விளங்கின என்பது அறியலாகிறது. தொழில் நுட்பம் எனும் சதியால் தான் இயற்கைச் சிற்றம் ஏற்படக் காரணமாக அமைகிறது. பாரி புறம்பு மலையைச் சிறப்பிக்க வந்த கபிலர். சங்க கால மக்கள் ஐம்பூதங்கள் வழிநடந்து இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்வைக் காட்டுகிறது. மேலும் சந்தனமரம் அழிந்த செய்தியை கபிலர் பாடலில் அறியலாம்,

குறித்தி மாட்டிய வறல்கடை கொள்ளி

**ஆரம் ஆதலின் அம்புகை அயலது**
**சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும்**

சந்தன மரம் எரிக்கப்பட்டு அதன் புகை வேங்கை மரத்தில் படிந்தது.

எதிர் நாட்டின் நீர் நிலைகளை போர் காரணமாக யானைகள் கொண்டு மாசுபடுத்தியதும், இலக்கியங்களில் பிற உயிருகளுக்குத் தங்கு தாராது வண்ணம் குறிப்பிடப்படுகிறது. காரணமில்லாமல் எந்த உயிரையும் கொல்லக் கூடாது. தாவர இனங்களைக் காக்க வேண்டும் என்ற செய்தியையும் வழிப்படுத்துகிறது.

**ஒரு நாள் மட்டுமே உயிர்வாழும் ஈசல்**

**புறம் - 51**

ஒரு நாள் மட்டும் உயிர் வாழும் ஈசல் என்னும் உயிரினம் பற்றி ஐபூர் முடவனார் கூறுகிறார்.

**பூவாது காய்க்கும் மரம் - 1 - புறம் 58**

பூ இல்லாமல் காய் காய்க்கும் மரம். மரம் பற்றி செய்தியை காரிக்கண்ணனார் புறநானூறு 58வது பாடலில் குறிப்பிடுகிறார். மேலும் நிலத்தில் புதைத்து மதுவைப் பக்குவப்படுத்திய செய்துயும் புறனானூறு 120 பாடலில் இடம் பெற்றுள்ளது. இயற்கை விவசாயம், இயற்கை வைத்தியம் போன்ற பல செய்திகளை நமது சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது.

மேலும் ஆழிப்பேரலைகளும் காற்றும் மாசுபாடும் அதைத் தடுக்க மரங்கள் வளர்த்த செய்தியும் நமது சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.

**தேன் மயங்கு பாலுனும் இனிய அவர்**
**நாட்டு**
**உவலைக் கூவுற்கீழ்**
**மான் உண்டு கலுழி நீரே**

**- ஐங்குறுநூறு – 203**

சங்ககால மக்கள் இயற்கை வளமும், நிறைந்த பகுதியாக இருந்தாலும் கலங்கிய நீரைப் பயன்படுத்தியமாக குறிப்பிடுகிறது.

**காலகாணிப்பு**

மங்குதல் மாமழை விண் அதிர்பு முயங்கி துள்ளுப் பெயர் கழிந்த பின்றை புகை உறப். இங்கு போர்க்கு சென்ற தலைவன் திரும்பும் பருவம் வந்தும் வரவில்லையே என தலைவி தலைவனின் வரவை எதிர்பார்த்து வாடினாள் பருவ நிலை மற்றத்தால் வாடைக் காற்றை தாங்க முடியாத தலைவிக்கு ஏற்பட்ட பசலை நோயின் தாக்கம், மழைக்காலம் முடிந்து பனிக்காலம் வந்ததால் கருவளை என்றும் காக்கணம் பூக்கள், நெல் கதிர்கள்,ஈகை, அவரை போன்ற பூக்களில் பனிகள்யானது தேங்கி காணப்படுகிறது.

தன் மணம் போல் தலைவனுக்கு இல்லையே என தலைவன் பிரிவை எதிர் கொண்ட தலைவியின் கூற்றாக அமையும் இப்பாடலில் சங்க காலத்தில் காலக் கணிப்பைக் காட்டுகிறது. அன்று மக்கள் காலங்களை இயற்கைச் சூழலைக் கொண்டு கனித்தன என்பது இங்கு புலனாகிறது. தொல்காப்பியத்தில் கார் காலமே முதன்மையாகக் கூறப்படுகிறது.

**காரும், மலையும், முல்லை, குறிஞ்சி**
**கூதிர் யாமம் என்மானார் புலவர்**
**(தொல் பொருள்) (அகம் - 6)**

**ஔவையார் கூறும் இயற்கை**

**நெல்லிக்கனி உண்டால் ஆயுள் நீழக்கும்**
**(புறநானூறு – 91)**

நெல்லிக்கனி உண்டால் நீண்ட காலம் உயர் வாழலாம். என நெல்லியின் மருத்துவ குணத்தை பாடினார் ஔவையார்.

**“வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம்**
**(அகநானூறு – 4)**

என நெருப்பு பந்தாக சூரியனையும்

**“விசும்பு விசை நெறித்து கூளங்கொதை பசுகால் வெண்கிருகு)**
**- அகநானூறு 273**

ஷ என நாரைகள் வானில் பறக்கும் காட்சியை கூளம் என்னும் மலர்கள் தொடுக்கப்பட்ட மாலை எனவும் உவமித்து தன் கற்பனையைப் புகுத்துள்ளார் ஔவையார்.

**முடிவுரை**

இன்றைய மக்கள் வாழ்வில் நேரத்தைக் குறைக்கும் விஞ்ஞானம் வளர்ந்து காணப்படும் அவசர உலகம் இது. இங்கு ரசனை என்பது நுழைந்து விட்டது. இயற்கையோடு இணைந்த வாழ்வு என்பதே இங்கு கேள்விக் குறிதான். இயற்கையோடு இணைந்து வாழ்ந்த சங்ககால மக்களின் வாழ்வை சங்க இலக்கியங்கள் மூலம் அறியப்படுகிறது. மரம் நட கூட நேரம் இல்ல இவ்காலத்தில் செடி கொடிகளோடு இணைந்து வாழந்த சமூகம் இயற்கையோடு ஆன நற்புணர்வையும் காட்டுகிறது.

**துணை நூல்பட்டியல்**


1. தமிழக இலக்கிய வரலாறு – ஜெ. ஸ்ரீ சந்திரன் - ஜெ. ஸ்ரீசந்திரன் பதிப்கம்
2. தமிழக இலக்கிய வரலாறு – கி.ப. சுயம்பு, பாரதி பதிப்பகம்
3. புறநானூறு – அ.ப. பாலையன் பகுதிப்பாசிரியர் - எஸ். கௌமாரீஸ்வரி அகநானூறு – புலியூர்க்கிகேசிகள் நித்திலக்கோவை, பதிப்பு – ஏ.பப்பிளிகேஷன்
4. நற்றிணை - புலியூர்க்கிகேசிகள் பதிப்பு –ஏ. பப்பிளிகேஷன்

# பண்டைத் தமிழர் கண்ட இயற்கையின் இசை

**முனைவர் சி. சூரியகுமார்**
*முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச்சுருக்கம்**
*"இசை ஒன்று தான் உலகப்பொது மொழி" என்ற இங்கிலாந்து நாட்டின் பழமொழிக்கு அமைவாக இசை என்பது மொழி, மதம், இனம், நாடு போன்ற வேற்றுமைகளைக் கடந்து அனைவரையும் ஒருங்கிணைக்கக் கூடிய ஓர் சக்தி வாய்ந்த கலையாகும். உலகில் வாழ்கின்ற ஒவ்வோரின மக்களும் தத்தமது கலை, பண்பாடு, கலாச்சாரப் பாரம்பரியங்கள் சிறந்தது என்றும் பழமையானது என்றும் மேலானது என்றும் நிறுவ முற்பட்டதன் விளைவாக அவர்கள் குறிப்பிடுகின்ற இசையின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றில் மாறுபாடு காணப்படுகிறது. எவர் எவ்வாறு குறிப்பிடினும் ஆதிக்குடிகளாகிய தமிழன் கண்ட இசையானது இயற்கையில் இருந்து பெறப்பட்டதொன்றாகும். இதுவே அறிவியலுக்குப் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. எனவே தமிழன் கண்டுனர்ந்த இசையாது எவ்வாறு இயற்கையில் இருந்து தோற்றம் பெற்றது, எவ்வாறு வளர்ச்சியடைந்தது, இன்று அதன் பயன்பாடு எவ்வாறு உள்ளது போன்றவற்றினை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வாய்வானது முதநிலைத் தரவுகளாக நூல்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வரலாற்று ஆய்வாகவும் விவரண ஆய்வாகவும் மேற்கொள்ளப்படுகிறது.*
**திறவுச்சொற்கள்:** *இசை, இலக்கியங்கள், இசைக்கருவிகள், இயற்கை, இராகங்கள்.*

## முன்னுரை

தற்கால உலகப் பயன்பாட்டிலுள்ள இசை முறைகள் பலவாறாகக் காணப்படுகிறது. இவ்வாறான இசை முறைகளில் ஒவ்வோரின மக்களும் தத்தமது இசை முறை சிறந்தது என்று நிறுவுவதற்கு முயல்வதன் காரணமாக இசையின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றின் செய்திகள் ஒன்றுக்கொன்று முரனாக அமைந்துள்ளது. ஆயினும் தமிழ் மக்கள் பயன்படுத்துகின்ற இசை முறையின் தோற்றம், வளர்ச்சியானது முற்று முழுதாக அறிவியல் பூர்வமாகக் காணப்படுகிறது. உண்மையில் இசை என்பது இற்கையில் இருந்து நமக்குக் கிடைத்த மிகப்பெரும் பொக்கிசமாகும். சில வடமொழி நூல்கள் குறிப்பிடுவது போல் இசையை யாராலும தோற்றுவிக்க முடியாதென்பது ஏராளமான சான்றுகள் மூலமாகத் தற்காலத்தில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பண்டைத் தமிழன் கண்ட இயற்கை இசையானது பிற்காலத்தில் வரையறை செய்யப்பட்டு, இலக்கணம் வகுக்கப்பட்டு சிறப்பான நிலையினை பெற்றுள்ளதெனலாம்.

## இசை

இசை என்பதற்கு பொதுவாக இசைய வைப்பது என்றும் பொருள். இசை என்னும் இலக்கணம் பற்றி தொல்காப்பியத்தில் பின் வருமாறு குறிப்பிடப்படுகின்றது. இசை என்னும் சொல் "இயை" எனும் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. தொல்காப்பியர் "இசையே புணர்ச்சி" எனக் கூறுவதிலிருந்து இயை என்பதும் இசை என்பதும் ஒரே பொருள் குறிப்பதனால் இசை என்பது இசைய வைப்பது என்ற கூற்றை நாம் உணரலாம். மேலும் தொல்காப்பியத்தில் 64 இடங்களில் இசை என்னும் சொல்லை தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளார். அவர் இசை என்ற அடிச்சொல்லோடு பின்னூட்டுகளாக இசைத்தல், இசையொடு என்ற பல்வேறு நிலைகளில் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

**"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீட்டலும்**
**உளவென மொழிப".. (தொல்காப்பியம்)**

அந்த வகையில் அதிகமாக இசை என்ற சொல் 18 இடங்களிலும், இசைக்கும் என்ற சொல் 16 இடங்களிலும் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். மேலும் இசை என்பதற்கு

விளக்கம் தரும் இசைத்தமிழ் இலக்கண, இலக்கியங்களில் இசைப்பது, சொல்வது, இசைவது, இணைவது, புகழ்வது பேன்ற முப்பதிற்கும் மேற்பட்ட பொருள்களில் குறிப்பிடப்படுகின்றது. சான்றாக:

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு**
**(குறள் -அறத்துப்பால் - புகழ் 231)**

இதன் பொருளினை நேக்குகின்ற போது உள்ளதைப் பலருக்கும் பகுத்துக் கொடுத்து புகழேடு வாழவேண்டும் அப்படிப்பட்ட வாழ்வு அல்லாமல் உயிருக்கு ஊதியம் என்பது வேறு யாதும் இல்லை இதில் இசை என்பது புகழைக் குறிக்கினறது. மேலும் இசை என்னும் சொல் ஒன்று சேர் பொருந்தும் எனப் பொருள்படுவது. பண், ஸ்ருதி, தாளம், பாடலின் சொல், பாடலின் பொருள் இவை ஒன்றோடொன்று பொருந்துவது குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிட்டுள்ளது போன்று இசை என்னும் சொல் இயை எனும் சொல்லில் இருந்து பிறந்தது எனலாம். இயைபு என்பது சேர்தல், இணைதல் எனப்பொருள்படுவது வழக்காகும். எனவே இசையின் கூறுபாடுகாளகிய தாளம், பண், தொடரொலி (சுருதி), பாடற்சொல், பாடல் பொருள், ஆடல் இவை ஒன்றோடொன்று ஒன்றித்து இயைபுபட்டு இயங்குவது இசையாகும். இதனையே

**“யாழும் குழலும் சீரும் மிடறும்**
**தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்**
**இசைந்த பாடல் இசையாகும்”**
**(சிலப் 3 : 26 - 28)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

இசை என்பதனை வடமொழி நூல்கள் ‘‘சங்கீதம்’’ என்றும் ‘‘சங்கீத்’’ என்றும் குறிப்பிடுகின்றன. சங் என்றால் இனிமை என்றும் கீதம் என்றால் பாட்டு என்றும் பொருள் கெள்ளப்பட்டு பொதுவாக இனிமையான பாட்டு என்று அறியப்படுகின்றது. செவிவழி புகுந்து மனதிற்கு இன்பம் கொடுக்கக் கூடிய அற்புதக்கலை என்பதால் சங்கீதத்தை ‘‘ஸ்ரவன கலை’’ என்று வடமொழி நூல்கள் குறிப்பிடுகின்றன. இசையால் வசப்படாதோர் எவரும் இல்லை எனலாம். ஐந்தறிவு கொண்ட தாவரங்கள், விலங்குகள் முதல் ஆறறிவு கொண்ட மனிதனும் அவன் வணங்கும் தெய்வங்களும் இசைக்கு வசப்படுவர். அதனாலேயே சங்கீதத்தை ‘‘கந்தர்வ வேதம்’’ என்று குறிப்பிடுவர். (பூலோகம் போன்றே கந்தர்வ லோகம் என்ற ஒன்று உள்ளதாக நம்பப்படுகின்றது இதில் வாழ்பவர்கள் கந்தர்வர்களாவர். கந்தர்வர்கள் வான வெளிமூலம் ஏனைய லோகங்களுக்கும் பறந்து செல்வது உண்டு அவ்வாறு அவர்கள் செல்கின்ற போது பூமியில் ஒலிக்கும் இனிமையான இசையினை இறங்கிக் கேட்டுவிட்டு அதை இசைப்பவர்களை வாழ்த்தி விட்டுச் செல்வார்கள் என்பது ஐதீகம். இதனாலேயே கந்தர்வவேதம் எனும் பெயர் உண்டானதாக கருதப்படுகின்றது.) கந்தர்வ வேதம், இந்து தொன்மவியலில் சில தேவ கணங்களை கந்தர்வர்கள், அரம்பையர்கள் (அப்சாஸ்), வித்தியாதரர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள் என்று வகைப்படுத்தப்பட்டனர். ஆவர்களில் கந்தவர்கள் இசை மற்றும் நடனக்கலையில் தேர்ச்சி பெற்றவர்களாகக் கருதப்பட்டனர். பரத முனிவர் நாட்டிய சாஸ்த்திரம் என்னும் காந்தர்வ வேதம் எழுதியவராகக் கருதப்படுகின்றார். காந்தர்வக் கலை கி.மு 500 முதல் கி.பி 500 முடிய இக்கலை வளர்ச்சி அடைந்ததாகக் கருதப்படுகின்றது. காந்தர்வ சாத்திரம் 6,000 சுலோகங்களும், 36 அதிகாரங்களும் கொண்டது. அதில் இசை, நடனம், நாடகம் என்ற மூன்றும் இருந்தன. இன்றுள்ள கந்தர்வ வேதத்தில் சங்கீதம், நடனம், நாட்டியம், நாடகம், கவிதை அடங்கும். நாரதர் காந்தர்வக் கலையில் தேர்ச்சி பெற்ற கந்தர்வர் தேவ கணக்கினர் ஆவார்.[1]

இசை என்பதனை ஆங்கிலத்தில் Music என்று அழைப்பர். Music என்ற சொல் அழரளய என்ற கிரேக்க சொல்லிலிருந்து

வந்துள்ளது. அரளநள என்ற கிரேக்க தேவதைகள் விரும்பி ஊக்குவித்த ஒரு கலை பின்பு Music என்று அழைக்கப்பட்டது. பண்டைத் தமிழர்கள் தமிழை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முப்பெரும் பிரிவுகளாகப்பிரித்து இனிமையான ஓசை கொண்ட இசைத்தமிழை நடு நாயகமாக போற்றினான். இசைத்தமிழின்றி இயற்றமிழும், நாடகத்தமிழும் இயங்க முடியாது என்பதிலிருந்து இசைத்தமிழின் மேன்மை உணரலாம்.

**இசையின் தோற்றம்**

நாதம் எனும் தத்துவம் எல்லா பொருள்களிலும் அமைந்துள்ளது. அந்நிலையில் பொருள்களின் அசைவினால் காற்றில் ஏற்படும் அதிர்ச்சியே ஒலிக்கும் காரணம் என அறிவியல் நமக்கு தெரிவிக்கிறது. மனிதன் பேசும்போது அவன் வாயின் உட்புறம் இருக்கின்ற காற்றில் வாயுறுப்புக்களால் அதிர்வு ஏற்பட்டு ஒலி உண்டாகிறது. வீணையில் ஒரு தந்தியை மீட்டும் போது காற்றில் அதிர்ச்சி ஏற்பட்டு ஒலி உண்டாகிறது. மகாகவி பாரதியார் இதை பின்வருமாறு அழகுற கூறியுள்ளார்.

> **“மண்ணுலகத்து நல்லோசைகள்**
> **காற்றெனும் வானவன் கொண்டு வந்தான்**
> **பண்ணிசைத் தவ்வொலி**
> **களனைத்தையும் பாடி மகிழ்ந்தான்..”**

இறைவனை இசையாகக் கருதுவதும் இசையை இறைவனாகக் கருதுவதும் நமது முன்னோர்களின் வழி இன்று வரை தொடர்ந்து வருகின்றது. அந்த வகையில் இறைவன் ஒலி வடிவமாக விளங்குகின்றான் என இறையடியார்கள் பலர் கூறயுள்ளனர். ஒலி வடிவான இறைவனே இவ் உலகிலுள்ள அனைத்தையும் படைத்தவன் என அருள்திரு யோவான் கூறியுள்ளதை விவிலியநூலில் காணலாம்.[2]

ஓம் என்னும் ஒலியின் பிரதிபலிப்பே இசையாகவும் லலிதகலைகளில் ஒன்றாகவும் விளங்குகின்றது. இசைக்கு அடிப்படை ஓங்காரமாகும் இதிலிருந்தே எல்லா ஒலிகளும் வெளிவந்தவையாகும். ஒலியின் அடிப்படை சீராக அமைந்த இசைக் கலையையே சுவைக்க முடியும். இசை என்ற சொல் மக்கள் மனதை வசப்படுத்தி அசைக்கிறது என்று எம்.எம். தண்டபாணி தேசிகர் கூறுகின்றார். ஒலியின் பல்வேறு ஏற்ற இறக்கக் கூறுகளை இனிதாக இணைத்து மனமுவப்படைய அதனை இசைத்துக் காட்டுவதில் இசைக்கலை பிறக்கின்றது.

**இலக்கியங்கள்**

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பண்டைத் தமிழர் இசைக்கும் உரிய இடத்தினைக் கொடுத்துப் போற்றியது வரையிலான செயல்களை முச்சங்க நூல்களின் வாயிலாக உணரலாம். பண்டைய மக்களின் வாழ்வு இசையில் தொடங்கி இசையோடு முடிவதனை குழந்தையின் தாலாட்டு தொடங்கி முதியோரின் இறப்பு ஒப்பாரியில் முடிவது கொண்டு அறிய முடிகிறது. பல்வேறு துன்பங்களையும் மறந்து ஒன்றித்துப் போகும் தன்மை கொண்டது இசை எனக் கூறினால் அது மிகையாகாது. அரவணைக்கும் தன்மை கொண்டபடியால் தான் இசை தாய்க்கு ஒப்பாகக் கருதப்படுகின்றது. வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதனவாகிய சமய அனுட்டானங்களில் இசைக்கு ஒதுக்கப்பட்ட இடம் தெய்வீகத்திற்கு ஒப்பானது. சமயா சமயம், வேளா வேளை எனக் கிரியை முறைகளோடு இணைந்து இசைக்கப்பட்டது.[3]

ஒலியிலிருந்து ஓசையைப் பிரித்துக்காண மனித மனம் நாடியுள்ளது. தேவாரப் பாடலில் ‘‘ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே’’ (திருத்தாண்டகம்) என்று இறையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைச் சிந்திக்கலாம். ஓசை வேறாகவும் ஒலி வேறாகவும் கருதப்படுவதைக் காணலாம். மீண்டும் ஒரு தேவாரப் பாடலில் ’’ஏழிசை ஏழ் நரம்பின் ஓசையே’’ (சுந்தரர் தேவாரம்) என்று கூறுவதில் நரம்பிலிருந்து எழும் ஓசையானது ஏழிசையாக அமைகிறது என்று சொல்லப்படுகிறது. இசைக்கு அடிப்படை ஓசை என்பதனை இதனால் அறியலாம்.

இவர்களைப் பின்பற்றியே ஏராளமான மெய்யடியாாகள் இறைவனையும் இசையையும் தொடர்பு படுத்திப் பாடியுள்ளனர். இதனைப் பின்பற்றியே தற்காலத்தில்

**"இசையால் வசமாகா இதயம் எது**
**இறைவனே இசை வடிவம் எனும் போது**
**- தமிழ்**

இறைவனை வழிபடுவதற்கு அடியார்கள் பலமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இறைவன் இசைவடிவாய் விளங்குவதால் இசை வாயிலாக அவனை வழிபடுவது மற்றைய முறைகளிலெல்லாம் மிகச் சிறந்ததும் எளியதுமான முறையாகும். இறைவனின் அடியார்கள் இறைவன் மீது மிக்க அன்பு கொண்டு உள்ளம் உருகிக் கண்ணீா மல்கிப்பாடும் இசைப்பாடல்கள் இறைவனின் உள்ளத்தைத் தொட்டு விடுகின்றன. இறைவன் புகழை ஏத்திப்பாடும் அடியார்களின் உள்ளம் இறைவனோடு ஒன்றிவிடுகின்றது. இசைப்பாடலால் வழிபடும் அடியார்க்கு இறைவன் அருள்பாலிக்கின்றான். இசை தனது ஆற்றலால் இறைவனை அடியார்கள் பால் இசைவிக்கின்றது. இசையை அறிந்தால் இறைவனை அறியலாம் என்பது ஆன்றோர் வாக்கு.

**"நாதம் பரத்தில் லயித்திடுமதனால்**
**நாதமறிந்திடப் பரமுமறியலாம்...."**

என்று திருமூலர் பாடலிலும் இதே கருத்து கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக இசைக்கலை ஒரு தெய்வீகக் கலையாக போற்றபடுகின்றது.[4]

## இயற்கையில் இசை

விலங்குகள், பறவைகள் போன்ற உயிர் உள்ளவைகளும் கடல், அருவி, காற்று போன்ற பஞ்ச பூதங்களும் ஒலிகளை உடையனவாய் இருக்கின்றன. பறவைகள், விலங்குகள் முதலியவைகளின் ஒலிகளைக் கேட்டு மனிதன் மகிழ்கின்றான். குயிலின் இனிய குரலையும், அருவியின் ஒலியையும், வண்டின் ரீங்காரத்தையும் கேட்டு இன்புறுகிறான். பல்வேறு ஒலிகளின் இனிமை அவன் உள்ளத்தை ஈர்க்கிறது.

**"கானப் பறவை கலகலெனு யோசையிலும்**
**காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்**
**ஆற்று நீரோசை அருவி யொலியிலும்**
**நீலப் பெருங் கடலெந் நேரமும் தானிசைக்கும்........"**

என்ற பாடலில் மகாகவி பாரதியார் இதனை அழகுற வர்ணித்து இவ்வித இசையினிலே என் நெஞ்சைப் பறிகொடுத்தேன் எனப் பாடுகிறார். இயற்கை தரும் இன்னொலிகளைக் கேட்டு மனிதன் சிந்திக்கின்றான். இது போன்ற இன்னொலிகளைக் கருவிகளில் இசைப்பதற்கு அவன் முயன்றான் என எண்ணுவதற்குப் பழங்காலத்தைச் சேர்ந்த சங்கப் பாடல்கள் ஆதாரங்களாக விளங்குகின்றன. மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அந்தத் துளைகளில் காற்றுப் புகுந்து வெளியேறும் போது இனிய ஒலி பிறந்தது. அருவி நீரின் இனிய ஓசை முழவு போல் ஒலித்தது. வண்டின் இமிரொலி யாழின் இசையைப் போல் ரீங்காரம் செய்தது. தன் அறிவின் திறத்தால் மனிதன் பல இசைக் கருவிகளைக் கண்டு பிடிப்பதற்கு மேற்கூறிய இயற்கை தந்த இன்னொலிகளை முன்னோடிகளாக மனிதன் பயன்படுத்தியுள்ளான் என்பதனை.

**"ஆடமைக் குயின்ற அவிர்துளை மருக்கன்**
**கோடை யவ்வரி குழலிசையாகப்**
**பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்**
**தோடமை முடிவின் துதை குரலாகக்**
**கணக்கலை இருக்கும் கடுங்குரல் தும்பொடு**
**மலைப்பூங்சாரல் வண்டியாழாக"**

**(அகநானூறு - 245)**

திருப்பரங்குன்றத்தில் பாணர்கள் இசைக்கும் இனிய யாழினது இசை ஒரு பக்கத்தில் ஒலித்தது. மறுபக்கத்தில் திருப்பறங்குன்ற மலையில் பூத்துள்ள பூக்களில் உள்ள தேனை உண்பதற்காக வந்த வண்டுகளில் இமிரிசை எழுந்தது. ஒரு பக்கத்தில் கணுக்களுடைய புல்லாங்குழலின் இனிய இசை காற்றில் மிதந்து வந்தது. மறுபக்கத்தில் தும்பிகள் இசைத்த பரந்த

இசை ஒலித்தது. மண்ணினால் செய்யப்பட்ட மார்ச்சனை ஒரு பக்கத்தில் அமைக்கப் பெற்ற முடிவு ஒரு புறம் முழங்கியது. மற்றொரு புறத்தில் மலையினின்று விழும் அருவி நீர் ஒலித்தது. இசையில் தேர்ச்சி பெற்ற கூத்தியர் ஒரு புறம் ஆட மறுபுறம் வாடைக்காற்று வீசுவதால் பூங்கொடிகள் அசைந்தாடின. ஒரு புறம் பாடினி பாலைப்பண் என்னும் இனிய பண்ணைப் பாட மறு புறத்தில் தோகையை விரித்து ஆடும் மயிலின் குரல் எழுந்தது. இவ்வாறு திருப்பரங்குன்றத்தில் ஒலித்த இயற்கை இன்னொலிகளுக்கு உவமையாக யாழ், குழல், முழவு ஆகியவற்றின் இசையொலிகளை பாடலாசிரியர் நயமுறக் கூறியுள்ளார்.

**"ஒரு திறம் பாணர் யாழின் திங்குரல் எழ ஒரு திறம் பாணர் வண்டின் இமிரிசை எழ....."**

**(பரிபாடல்)**

இயற்கையின் இன்னொலிகளைச் செயற்கை இசைக்கருவிகளின் இசையொலிக்கு உவமித்து இவ்விருவித ஒலிகளுக்குமிடையே உள்ள ஒற்றுமையைப் மேற்கண்ட பரிபாடல் வழங்கியிருக்கிறது.[5]

**இசையின் பயன்**

ஆதியிலே மனிதன் தன் உள்ளத்தில் எழுந்த கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த பல்வேறு ஒலிகளை பிறப்பித்தான். பல்வேறு சைகைகளும் இதற்கு பயன்பட்டன. இதன் பின்பு முதலில் மனிதன் இந்தச் சொற்களை பேசிச் சிரித்து மகிழ்ந்தான். சொற்களைக் கொண்டு அழுது புலம்பினான். குயிலின் இசை வண்டுகளின் ரீங்காரம் ஆகியவற்றைக் கேட்ட ஆதிமனிதன் சிந்திக்கத் தொடங்கினான். அவன் எழுப்பிய ஒலியினை முறைப்படுத்தியபோது இன்னொலி என்னும் இசை பிறந்ததைக் கண்டான். இதைத்தான் கூத்தநூல் இயற்றிய சாத்தனார் ''ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே..'' என்று குறிப்பிட்டார்.

பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதன் இசையிலே ஊறிக்கிடக்கின்றான். ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. மனச்சோர்வை நீக்கும், உடல்நல வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். இசையின் மூலம் உயிரினங்கள் ஏற்படும் நோயைக் குணப்படுத்தலாம் எனத் தற்கால விஞ்ஞானிகள் கருதுகின்றனர். துன்பத்திற்கு ஆறுதல் அளிக்கும் மருந்தாக இசை பயன்பட்டு வருகின்றது. பயிர்கள் வளரும் இடத்தில் இசைத்தட்டுக்களை வைத்து இசைக்கச் செய்து அதன் வளர்ச்சியை ஆராய்ந்த அண்ணாமலை பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த "சந்திர நாராயண சிங்'' என்பவர். "இசையைக் கேட்க செய்வதன் மூலம் பயிர்களும், மரங்களும் மகிழ்ந்து வாழ்கின்றன'' என்ற கொள்கையை முன்வைத்தார். கலைகள் மனிதன் உள்ளத்தை கவரும் ஆற்றல் பெற்றவை. இக்கலைகளுள் இசைக் கலை மிகவும் சிறப்பானதாக கருதப்படுகின்றது. இக்கலையைப் போன்று இனிமையான கலை வேறொன்றும் இல்லை. ஏனென்றால் கற்போர் மட்டுமன்றி கல்லாதோரும் ஏனைய உயிர்களும் இசையில் மயங்குகின்றன. தனி நிலையில் பெருநிலை கொண்ட கவலையை இசைக்கலை என்று கூறலாம். இந்த இசைக் கலையின் ஒப்பற்ற ஆற்றலை சேக்கிழாரின் பெரிய புராணத்தில் நோக்கலாம்.

நல்ல பாம்பின் மெல்லிய செதில்கள் புன்னகவராளி இராகத்தைப் பாடினால் அவை ஒருவித உணர்ச்சிக்கு தூண்டப்படுகின்றது. நல்ல பாம்பின் அரச இனத்தைச் சேர்ந்த ஒருவகைப் பாம்பானது காடுகளில் தனது இரு பிளவான நாக்கால் எழுப்பும் ஒலி புன்னகவராளி இராகத்தின் சாயலுடையது என்றும், இசை நுட்பத்தை அகத்தியர் ஒரு சந்தர்ப்பத்தில் இசை பாடிய கல்லுருகியது என்றும் தொல்காப்பிய பாயிரத்தில் கூறப்படுகின்றது. அசுணமா என்ற விலங்கு ஆற்றுவதில் சிறந்தது என்றும் இது இனிமயான இசையைக் கேட்டால் மூர்ச்சை அடைந்து

விடும் என அகநானூறு கூறுகின்றது.[6] நஞ்சினை நீக்கிய மகிமையை திருநாவுக்கரசருடைய பதிகம் செய்பக என்றும் வேதார்ண்யத்தில் அடைக்கப்பட்டிருந்த கோவில் கதவுகன் இசைக்கு கட்டுப்பட்டு தானாக திறந்தன என்னும் ஞானசம்பந்தர் பாவை எலும்பை பொன்னாக்கி மீட்டார் என்றும் புராணக்கதைகள் கூறுகின்றன.

**"வீணை எழீ வீதியின் நட்ப ஆணை ஆசாநடகடியுறை**
**போல மதக்களிறு பாடிய.."**

எனக் கூறுகிறது.

இசைக்கலைக்கு கொடியிடும் கொலையாளியும் அடக்கிக் கட்டுப்படுவார்கள் என்பதை சவர் புனிஞர் எனும் கொரற் தொழில் கூட்டத்தினரை கொண்டு புலவர் நிறுவிக் காட்டுகிறார் இதனை

**"'பாடற் பாணி புல்னைன் கேட்டு ஆடென வணங்கற் கறதலை துமித்தும்........"**

சிவகங்கை பெரிய வைத்தி என்பவர் நள்ளிரவில் "பூபாள'' ராகத்தைப் பாடி காகத்தைக் கரையச் செய்துள்ளார். அத்தோடு ''மேகராககுறிஞ்சி'' எனும் பண்ணும், ''வருணப்பிரியா'', அமிர்தவர்ஷினி போன்ற ராகங்களைப் பாடுவதனால் மழைபொழியும் என்ற நம்பிக்கையும் அன்றிலிருந்து இன்றுவரை எல்லோராலும் நம்பப்படுகின்றது. மாரி முத்தாப்பிள்ளை மற்றும் முத்துஸ்வாமி தீட்ஷிதர் போன்றவர்கள் இதற்கு நல்ல சான்றாகின்றனர். இசையானது நோய்களைத் தீர்க்கக்கூடிய நன்மருந்தாக இருக்கின்றது. "ஆனந்த பைரவி,'' "காம்போஜி'' இராகங்கள் இரத்த அழுத்தத்தையும், மன அழுத்தத்தையும் போக்கிவிடும்.[7]

## முடிவுரை

கலைகளில் சிறந்த கலையாகிய இசைக்கலையின் சிறப்புக்கள் நீண்டு கொண்டே செல்லும். தொன்று தொட்டு இன்று வரை இசை ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறு வகையான இசை வல்லுனர்களும், மகான்களும் பல்வேறு வகையான அற்புதங்களை இசை மூலம் செய்தவண்ணமே இருக்கின்றனர். ஆயினும் இந்த இசையானது குறிப்பிட்ட சிலராலோ அல்லது குறிப்பிட்ட சில குழுக்களாலோ உருவாக்கப்படவில்லை. மாறாக இயற்கையின் படைப்பில் உருவாகிய இவ் அரிய கலையினை நமது முன்னோர்களான தமிழர்கள் கண்டுணர்ந்து அதனைத் தொகுத்து, முறைப்படுத்தி, வகைப்படுத்தி அதனை பிற்கால சந்ததியினருக்குக் கொடையாகக் கொடுத்துவிட்டுச் சென்றனர். ஆகவே இயற்கையிலிருந்து தமிழன் கண்டுணர்ந்த இசையானது உலகிலுள்ள அத்தனை துறைகளிலும் இன்று சிறந்து விளங்குகின்றமை புலனாகின்றது.

## அடிக்குறிப்புக்கள்

1. தனபாண்டியன் .து. ஆ, இசைத்தமிழ் இலக்கண வரலாறு, பக் - 19
2. ஆபிரகாம் பண்டிதர் - காணாம்ருத சாகரம் - முகவுரை பக். 2
3. மனோன்மணி பாரதியின் கன்னிக்குயிலின் இன்னிசைப்பாட்டு பக். 45
4. சுப்பிரமணியன் பெ. பரிபாடல் பக்கம் 454
5. சாத்தனார், கூத்தநூல் பக்கம் -1
6. வெற்றிச்செல்வன், இசை இயல், 1994, பக் : 08
7. முனைவர் ஔவை நடராசன், இசைத் தமிழ் வரலாறு, பக் - 1

# பெரியபுராணம் காட்டும் இறைபொருளும் இயற்கைப்பொருளும்

**வீ. வீரமாரீஸ்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*4/33, களஞ்சியம் நகர், ஆண்டார் கொட்டாரம் (த), மதுரை*

**ஆய்வுச்சுருக்கம்**
*பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் வழியாக இயற்கையின் மீது மனிதன் கொண்ட ஈடுபாடும் அதன் விளைவாக இயற்கை பொருட்களை காணும் போதெல்லாம் இறைவனின் அடியார் இறைவனைக் கண்டனர். பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள இயற்கை சார்ந்த பொருட்களும் இயற்கை சார்ந்த சூழலும் பெரிய புராணம் காலகட்டத்தில் தமிழகத்தின் சூழலியலை காட்சிப்படுத்துகிறது. இலக்கண நூலர் குறிப்பிடும் உறுவெளி தோற்றம் என்பதற்கான விளக்கமாய் இறையடியார்களின் இயற்கை சார் இறை சிந்தனை விளங்குகிறது. ஐம்பூதங்கள் இல்லாமல் இவ்வுலக உயிர்கள்யாவும் தோன்றியிருக்க இயலாது. இவ்வுலக உயிர்களின் தோற்றுவாயாக விளங்கும் ஐம்பூதங்கள் குறித்த செய்திகளும் திருமுறையில் கணக்கிடைக்கிறது.*

## முன்னுரை

இலக்கியம் என்பது கவிஞனின் உள்ளம், கருத்துக்கள், உணர்ச்சிகள், நோக்கங்கள் போன்றவற்றை சொற்கள் வடிவிலே வெளிப்படுத்துவது. இக்கருத்திற்கு அரண் சேர்த்து நிற்பது பெரிய புராணம். பொருட்சுவை பக்தியை வெளிப்படுத்துவது நோக்கமாகக் கொண்டிருப்பினும் அதனை உணர்த்துவதற்கு ஏற்ற வகையில் இயற்கை பொருட்களை கையாண்ட வகையில் சேக்கிழாரின் தனித்தன்மை புலப்படுத்தி நிற்கிறது. இயற்கையை காணும் இடங்களில் எல்லாம் சேக்கிழார் இறைவனைக் காணடார். மலையின் அமைப்பில் இறைவனின் சயனக் கோலத்தை காண்டார். பக்தியில் தோய்ந்த சேக்கிழாரின் உள்ளத்தில், காணும் பொருட்கள் அனைத்தும் பக்தி உணர்வை வெளிப்படுத்துவதுடன் இயற்கை உணர்வையும் வெளிப்படுத்த வல்லனவாக உள்ளன. பெரியபுராணத்தில் வெளிப்பட்டுள்ள இயற்கைசார் குறிப்புகளை இக்கட்டுரை விவரிக்கிறது.

## இயற்கை

இயற்கை இவ்வுலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் தோன்றுவதற்கான நிலைக் கலனாய் அமைகின்றது. இயற்கையில் இருந்து பரிணாமித்த மானுடன் இயற்கையின் மீது கொண்ட அச்சத்தினால் இயற்கையை இறைவனாக வழிபட முற்பட்டான். கால ஓட்டத்தில் சுற்றியுள்ள இயற்கையின் இன்றியமையாமையும் இயற்கையால் அவன் பெறுகின்ற நன்மையும் அதன்பால் விருப்பம் விளைய காரணமாக அமைந்தது. சேக்கிழார் காலத்திற்கு முன்பிருந்த சங்க இலக்கியக் காலத்தில் அக உணர்வை மிகுவிப்பதாக இயற்கை இருந்தது. சிலப்பதிகாரத்தில் மங்கள வாழ்த்துப் பாடலில் இயற்கையை வாழ்த்திப் பாடுகிறார் இளங்கோவடிகள். பிற காப்பியங்களில் ஆற்றுப்படலம், நாட்டுப் படலம், நகர படலம் என இயற்கையை இயற்கை வர்ணிக்கப்படுகிறது. பெரிய புராணத்தில் இயற்கையை இறைவனாக கண்டு போற்றும் தன்மை நூல் முழுதும் காணப்படுகிறது.

## உருவெளித் தோற்றம்

இலக்கண நூலார் ஒருவழி தோற்றம் என்னும் ஒன்றினை கூறுகின்றனர் காணும் பொருட்கள்யாவும் அன்பு கொண்டோரை நினைவு படுத்துவனாக தோன்றுவது உருவழி தோற்றம் ஆகும்.

> **"நோக்குவன எல்லாம் அவையே போறல்"**
>
> **(தொல்காப்பியம்)[1]**

தன்னால் காணப்பட்ட எல்லாம் தான் கண்ட உறுப்பு போலாதல் என்பார் இளம்பூரணர். இவ்வாறு தான் கண்ட யாவற்றிலும் இறைவனை காண்கின்றனர் இறைவனடியார்.

**ஐம்பூதங்களில் இயற்கை**

மாணிக்கவாசகர் ஐம்பூதங்களிலும் இறைவனின் திருக்காட்சியைக் கண்டார்.

**"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"[2]**

பக்தி திறன் கொண்ட அடியார்களுக்கு காண்பனையெல்லாம் இறைவனாகவே காட்சி அளித்தன. மாணிக்கவாசகர் பக்தியில் திளைத்ததன் விளைவாய் காண்பன எல்லாம் இறைவனாய் கண்டார். தன்னை சூழ்ந்துள்ள சூழலியல் கூறுகளான நிலம் நீர் தீ வழி வெளி என ஐம்பூதங்களிலும் ஐம்பூதங்களாகவும் இறைவனின் திருக்காட்சியையே கண்டார் மாணிக்கவாசகர்.

**இயற்கைப்பொருள்யாவும் இறைவன் காட்சி**

இறைவன் அடியார்கள் யாவரும் இயற்கை பொருட்களில் எல்லாம் இறைவனைக் கண்டனர் சேக்கிழார், சிவபெருமான் வீற்றிருக்கும் திருவண்ணாமலை மழையின் அமைப்பை சிவனின் திருவடிவம் போல் காட்சியளிக்கிறது என்றார்.

**"அண்ணாமலை அங்கு அமரர்பிரான்**
**வடிவு போன்று .... "[3]**

வெண்ணீறு புனைந்த பொன் மேனியனாகிய சிவபெருமானாகவே அம்மலை காட்சியளிக்கிறது. திருவண்ணாமலை அமரபிரான் சிவபெருமானது திருவடிவம் போன்று திகழ்கிறது என்று சேக்கிழார் காட்சிப்படுத்துகிறார்.

நாவுக்கரசர், இமய மலையின் தோற்றத்தை உமையம்மையுடன் சிவபெருமான் இணைந்து வெள்ளி மலையின் மேல் மரகதக் கொடியுடன் பவளமலைப் போன்று விளங்குவதாக உருவகப்படுத்துகிறார். இயற்கை பொருளாய் அமைந்தவற்றை இறைபொருளாய் நினைத்தனர்.

கொன்றை மலர்க்கொத்தும் சடையுடைய சிவனும் கார்காலத்தில் மலர்ந்த கொன்றை மலர்க்கொத்துகளின் காட்சியானது சேக்கிழார் உள்ளத்தில் இறைவனின் சடாமுடியை நினைவுகூர காரணமாய் அமைந்தது. நறுமணம் கமழும் பூங்கொத்துக்களை தாங்கிய கொன்றைமரம் தாழ்ந்த சடையுடைய சிவபெருமானைப் போன்று காட்சிதந்தது.

**"சென்று அணைந்த ஆனாயர்**
**செய்த விரைத் தாமம் என**
**மன்றல் மலர்த் துயர் தூக்கி**
**மருங்கு தாழ் சடையார் போல்**
**நின்ற நறுங் கொன்றை"[4]**

இவ்வாறாக சடாமுடியானது கொன்றை நறும் மலர் கொத்துகளின் தோற்றத்தில் காணப்படுவதாக சேக்கிழார் கூறுவது இயற்கையை இறைவனாக அவர் காண்பதை எடுத்தியம்புகிறது.

**உயிர்களிடையே தோன்றும் நேயம்**

ஆனாய நாயனார் இறைவனின் ஐந்தெழுத்தை வணங்கி குழல் இசைத்தால் உயிர்கள் இடையே நேயம் உண்டாயிற்று என்றார். இறைவனால் முரண் குணமுடைய உயிரகளிடமும் நேயம் தோன்றுவதாகக் கூறுகின்றார்.

**"நலிவரும் மெலிவரும் உணர்வு ஒன்றாய் நயத்தலினால்**
**மலிவாய் வெள் எயிற்று அரவம் மயிலின் மீது மருண்டு விழும்**
**சலியா நிலை அரியும் தடங்கறியும் உடன் சாரும்**
**புலி வாயின் மருங்கு அணையும் புல்வாய் புல்வாயும்"[5]**

மேற்கண்ட பாடலானது, பகையுடைய அரவமும் மயிலும், சிங்கமும் யானையும், புலியும் மானும், மகிழ்ந்து இருந்ததனை விளக்குகிறது. இறையருளால் இயற்கையில் முரண்பாடுடைய குணமுடைய உயிரினங்களிடையே நேயம் தோன்றும் என்கிறார் ஆனாய நாயனார்.

### முடிவுரை

பனிரெண்டாம் திருமுறை ஆகிய பெரிய புராணத்தின் வழி இறையடியார் இயற்கைக்கு கொடுத்த மிக முக்கியமான மதிப்பானது வெளிப்படுகிறது.

இறையும் இயற்கையும் இரண்டல்ல ஒன்று என்னும் பெரும் மெய்ப்பொருளையும் உணர்த்துகிறது.

இயற்கையில் இருந்து பரிணாமத்த மானிடன் இயற்கையின் மீது கொண்ட ஈடுபாட்டினை மனிதன் இயற்கையை காணும் போதெல்லாம் இறைவனின் தோற்றத்தை காண்பதன் மூலம் உறுதி செய்கிறது.

### மேற்கோள்

1. மேலது., இளம்பூரனார். நூ.9
2. திருவாசகம், போற்றித் திருவகவல், 137 141
3. பெரியபுராணம், திருமலைச் சிறப்பு, (திருமலை), பா-1
4. பெரியபுராணம், ஆனாயர், பா-21
5. மேலது., ஆனாயர், பா-31

### துணை நூற்பட்டியல்

1. புலவர். பி. ரா. நடராசன், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (4 5 6 திருமுறைகள்), வரலாற்று முறையில் மூலமும் உரையும், உமா பதிப்பகம், ஆறாம் பதிப்பு 2022.
2. புலவர். பி. ரா. நடராசன், பதினோராந் திருமுறை மூலமும் உரையும், உமா பதிப்பகம், ஆறாம் பதிப்பு 2022.

# அற்புதத்திருவந்தாதியில் இயற்கை

**சு. தெய்வ ஜெயஜோதி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*ம.சு. பல்கலைக்கழக கல்லூரி, பணகுடி, திருநெல்வேலி*

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதன் துயருறும் காலங்களில் தன்னைக் காக்க இறைவனை வேண்டி நிற்பது மரபு. இறைவன் மேல் கொண்ட அதீத அன்பின் காரணமாக மனிதன் இறைவனைப் பல நிலைகளில் வழிபடுகிறான். இவ்வழிபாடு பல நிலைகளில் காணப்படுகிறது. மனிதனிடம் உள்ள தெய்வீக நம்பிக்கையின் காரணமாக இறைவனிடம் உள்ள இயற்கையான படைப்புகளின் உருவாக்கத்தை கொண்டு ஆக்கல், அழித்தல், காத்தல் போன்ற உயிர்களின் உருவாக்கத்தை இறைவன் எவ்வாறு தோற்றுவிக்கிறான் என்பதை பக்தி இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. இலக்கியங்களில் காணப்படும் கருத்துகளை கொண்டு இயற்கையான முறையில் உலகில் வாழும் உயிரினங்களின் இயக்கம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் அடிப்படையில் அமைகின்றது என்பதை காரைக்கால் அம்மையாரின் அற்புதத்திருவந்தாதியில் இயற்கை என்னும் கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.*

## முன்னுரை

பக்தி இலக்கியங்களில் சைவ நெறியைப் பின்பற்றி பக்தியால் சிறந்து விளங்கிய நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார் முதன்மையானவர். மனிதன் கடவுள் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக இறைவனைப் பல நிலைகளில் வழிபடுகிறான். அதன்வழி காரைக்கால் அம்மையார் சிவன் மீது கொண்ட பக்தியின் காரணமாக அற்புதத்திருவந்தாதி எனும் சிறந்த நூலைப் படைத்துள்ளார். சிவன் மேல் உள்ள அன்பையும், நம்பிக்கையையும், இயற்கையின் வெளிப்பாடுகளையும் இதில் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வகையில் அற்புதத்திருவந்தாதியில் இயற்கை எனும் செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.

## பக்தி இலக்கியம்

தமிழ்ப்பக்தி இயக்கம் கி.பி. ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிவு வரை தமிழகத்தில் செயற்பட்ட சமய சமூக அரசியல் இயக்கமாகும். தமிழைப் பக்தியின் மொழி என்று சிறப்பித்துக் கூறுவர். இறைவன் மீது பக்தர்கள் உள்ளம் உருக வழிபாடு செய்து பாடியனவையே பக்தி இலக்கியங்கள். சங்க கால இலக்கியங்களைத் தொடர்ந்து, சைவ, வைணவ சமயத்தை முன்னிறுத்தியும், அக்காலத்தில் தமிழர்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகவும் பக்தி இயக்கம் தோன்றியது.

நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பக்திப் பாடல்கள் தமிழர்களின் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தது. சங்க இலக்கியத்தில் மன்னர்களிடமும் புலவர்களிடமும் இருந்த தமிழ், மக்களிடையே மிகுதியாகப் பரவியக்காலம் பக்தி இலக்கியக்காலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர் மக்களோடு மக்களாக ஒவ்வொரு கோவிலுக்கும் சென்று தமிழிசையால் இறைவனைப் பாடி மகிழ்ந்தனர்.

இயல் தமிழ் பாடல்கள் பண்ணோடு இசைந்து எங்கும் இசைமணம் பரவியது. வடமொழி செல்வாக்கினால் ஏற்பட்ட தமிழ்மொழியின் இறுக்கம் நெகிழ்வுற்றது. கற்றோர் நாவில் மட்டுமே இருந்து வந்தத் தமிழ், கல்லார் நெஞ்சிலும் பக்தி பரவசத்தால் உணர்ச்சிப் பெருக்கெடுத்து ஓடியது. அதன் காரணமாக எளிமையும், நளினமும் தமிழை இனிமையாக்கின. ஆழ்வார்கள் வைணவ சமயத்தினையும், நாயன்மார்கள் சைவ சமயத்தினையும் வளர்த்து பல்வேறு இலக்கியங்களைப் படைத்தனர். காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், முதலாழ்வார் ஆகிய மூவரால் இந்த தமிழ் பக்தி

இலக்கியம் தொடங்கப்பட்டது. காரைக்கால் அம்மையார் பக்தி இலக்கியத்தின் முன்னோடியாக கருதப்படுகிறார்.

**காரைக்கால் அம்மையார்**

காரைக்கால் அம்மையார் இளம் வயதிலேயே சிவன் மீது அதீதப் பற்று கொண்டவராக இருந்தார். சிவனடிகள் யாரேனும் கண்டால் அவர்களை இல்லம் அழைத்து வந்து விருந்தளிப்பார். சிவனுக்கு நிகராக சிவனடியார்களை எண்ணினார். இவர் காரைக்காலில் பெரிய வணிகர் தனதத்தனுக்கு மகளாகப் பிறந்தார். இவருடைய இயற்பெயர் புனிதவதி ஆகும். காரைக்கால் அம்மையார் திருமணப் பருவம் அடைந்தார். அவருக்கு நாகப்பட்டினத்தில் பரமதத்தன் என்ற வணிகர் குலத்தவரை திருமணம் செய்து வைத்தார். பின் தனதத்தன் மகளைப் பிரிந்திருக்க மனமின்றி, காரைக்காலில் அவர் வீட்டின் பக்கத்திலேயே வீடு அமைத்து குடியிருக்கச் செய்தார். மகிழ்ச்சியாக இல்லறப் பணியோடு பக்திப் பணியையும் மேற்கொண்டார்.

ஒருமுறை பரமதத்தனின் நெருங்கிய நண்பர் ஒருவர் இரண்டு மாங்கனியை வழங்கினார். அவரும் அதனை வீட்டுக்கு கொடுத்தனுப்பினார். சிவனடியார் ஒருத்தர் காரைக்கால் அம்மையார் வீட்டுக்கு வந்தார். அவரை உபசரித்து விருந்து அமுது படைத்தார். கரி இல்லாத காரணத்தால் மாங்கனி ஒன்றை அடியாருக்கு படைத்தார். பரமதத்தன் மதிய நேரம் உணவு உண்ண வீட்டிற்கு வந்தார். அவருக்கு விருந்து படைக்க ஒரு மாங்கனியை கரிக்கு பதிலாக படைத்தார். பரமதத்தனும் உணவு உண்டபின் மாங்கனியின் சுவையின் காரணமாக இன்னொரு மாங்கனியையும் கேட்டார். பதறிய அம்மையார் சிவனிடம் வேண்ட அவரது பக்தியின் காரணமாக ஒரு மாங்கனிக் கிடைத்தது. அந்த மாங்கனியை அம்மையார் அவர் கணவருக்கு உண்ண கொடுத்தார். அதனை உண்ட பரமதத்தன், அந்த மாங்கனியை விட இந்த மாங்கனி இன்னும் அதிக சுவையாக இருப்பதற்கு காரணம் கேட்க அம்மையாரும் நடந்த உண்மையைக் கூறினார். ஆனால் பரமதத்தன் நம்பாமல் வாதிட பின் சிவனிடம் வேண்டி இன்னொரு மாங்கனியைக் கொண்டு வா நான் நம்புகிறேன் என்றார்.

கணவன் வேண்டுகோளுக்கிணங்க அம்மையாரும் சிவனை நினைத்து வேண்டிக் கொள்ள இன்னொரு மாங்கனியும் கிடைத்தது. அதனைக் கண்ட பரமதத்தன் வியப்படைந்தார். பின் வாணிபத்தின் காரணமாக கடல் கடந்து சென்றான். நாட்கள் சென்றது பரமதத்தன் வரவில்லை. அம்மையாரின் உறவினர் ஒருவர் பரமதத்தன் இருக்கும் இடத்தைக் கூற அங்கே அம்மையார் பரமதத்தனைக் காண தன் குடும்பத்தோடு சென்றார். அங்கு பரமதத்தன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து வாழ்ந்து கொண்டிருந்தான். அதனைக் கண்டு துயரமுற்ற அம்மையார் சிவனிடம் தன் கணவனுக்கு உபயோகப்படாத இந்த உடல் அழிந்து பேய் வடிவம் பெற வேண்டும் என வேண்டி பேய் வடிவம் பெற்றார்.

அம்மையார் இரு திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகங்கள், திரு இரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி ஆகியவற்றைப் பாடியுள்ளார்.

**அற்புதத்திருவந்தாதி**

அற்புதத்திருவந்தாதி என்னும் நூல் சைவத்திருமுறைகளில் பதினோராம் திருமுறைத் தொகுதியில் உள்ள சிறந்த நூலாகும். இந்நூலை அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான காரைக்கால் அம்மையார் எழுதியுள்ளார். இந்நூலே அந்தாதி முறையில் பாடப்பெற்ற முதல்நூல் என்பதால் ஆதி அந்தாதி என்று இறைவன் மீது பாடப்பெற்றதால் திருவந்தாதி என்றும் அழைக்கப்படுகிறது.

இறைவன் அருளால் வானம் மண்ணும் எல்லாம் வணங்கி பேய் வடிவம் பெற்ற அம்மையார் முதன்முதலில் திருவாய் மலர்ந்தருளிய சிறப்புடைய பிரபந்தம் அற்புதத்திருவந்தாதி. அற்புதம் என்பது போற்றுவதற்குரிய "சிவஞானம்" என்னும்

பொருளைத் தருவதாகும். இறைவன் அருளால் தம் உள்ளத்தில் தோன்றி சிவஞானத்தினால் உமையாளை ஒரு பாகத்தில் கொண்ட இறைவனைப் பாடிப் போற்றிய அந்தாதி ஆதலால் இது அற்புதத்திருவந்தாதி எனப் பெயர் பெற்றது.

**இயற்கை**

இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது. இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம் அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகியவை அனைத்தையும் இணைத்து இயற்கை என்கிறோம். பொதுவாக இயற்கையை ஆய்வு செய்வதென்பது அறிவியலின் மிகப்பெரிய ஒரு பகுதியாகும். மனிதர்களும் இயற்கையின் ஒரு பகுதி ஆவர்.

நேட்சுரா என்ற இலத்தீன் சொல்லின் இருந்து நேச்சர் என்ற ஆங்கில சொல்லில் உருவாகியதுதான் இயற்கை. இதன் பொருள் அவசிய குணங்கள், பிறவிக்குணம் என்பதாக அறியப்படுகிறது. பண்டைய இலக்கியங்களில் பிறவி அல்லது பிறப்பு என்று இதற்கு பொருள் உண்டு. ஒட்டு மொத்தமாய் இயற்கை என்பது அண்டத்தின் இயற்பியல் என்று கருதப்படுகிறது.

நேச்சர் என்ற சொல்லின் பல்வேறு பயன்பாடுகளுக்கு மத்தியில் இச்சொல்லின் பொருள் பெரும்பாலும் நிலவியல் மற்றும் வனவியல் என்ற பொருள்களையும் குறிப்பதாக உள்து. தாவரங்கள், விலங்குகள் வாழும் பொது உலகத்தை இயற்கை என்ற சொல்லால் குறிக்கிறது.

**அற்புதத்திருவந்தாதியில் இயற்கை**

காரைக்கால் அம்மையார் சிவனின் இயற்கையான தோற்ற அமைப்பினை அற்புதத்திருவந்தாதியில் அழகாக கூறுகிறார். ஒளி வடிவமாகிய சிவன் இளம்பிறையைத் தலையில் சூடியவர். பாம்பைக் கழுத்தில் மாலையாக அணிந்தவர். கங்கையைத் தலையில் சூடியவர். புலித்தோலை ஆடையாக இடையில் அணிந்திருப்பவர். நெற்றியில் ஒரு கண்ணைக் கொண்டு முக்கண்ணனாகத் திகழ்பவர். பக்தர்களுக்கு குளிர்ச்சியையும், பகைவர்க்கு சுட்டெரிக்கும் சூரியனாகவும் காட்சி அளிப்பவர் என்பதை கீழ்கண்டவாறு காரைக்கால் அம்மையார் பாடுகிறார்.

***“மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்***
***குறித்துத் தொழுதொண்டர் பாதங் - குறித்தொருவர்***
***கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்டுள்ளாதார் கூட்ட மொருவு”***

**(அற். திரு.பா. – 40)**

உலக உயிர்கள் அனைத்திற்கும் தந்தையானவர் சிவன். ஏனெனில் இவ்வுலகில் வாழக்கூடிய உயிர்கள் அனைத்தையும் தோற்றுவித்தவன் சிவன். படைத்த உயிர்களை அழிப்பதும், காப்பதும் சிவனே, அவரே இவ்வுலகுக்கு தந்தையாக இருந்து மக்களின் துன்பத்தைக் காண்கின்றார். இதனைப் பின்வரும் பாடல் தெளிவுறுத்துகிறது.

***இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி***
***இறைவனே யீண்டிற்க்கஞ் செய்வான் - இறைவனே***
***எந்தாயென விரங்கும் எங்கண்மேல் வெந்துயரும் வந்தா லதுமாற்று வான்”***

**(அற்.திரு.பா – 5)**

பிறவி என்னும் கடலில் உறைந்து வேதனை அடைபவர், ஈசன் காலடியில் விழும்போது துயர்அனைத்தும் களைந்து போகும். அதனாலேயே அம்மையார், நான் பூமியில் பிறந்து பேசத் தொடங்கிய நாள் முதலாக உன்மேல் கொண்ட அன்பினால் உன் பாதங்களை மட்டும் வணங்கி பிற தெய்வங்களை மனதால் கூட நினைக்காமல் இருக்கிறேன். கருமைநிற கழுத்துடைய தலைவனே என் பிறவித் துன்பத்தை எப்போது ஒழிக்கப் போகிறாய் என்று இறைவனை வேண்டி நிற்கிறார்.

*“பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங்காதல்*
*சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறத்திகழும்*
*மைஞ்ஞான்ற கண்டத்து வானோர்*
*பெருமானே எஞ்ஞான்று தீர்ப்ப தீடர்”*

**(அற்.திரு.பா -1)**

வானம் ஆகாயகங்கை எனப்படுவது. இது பல்லாயிரக்கணக்கான நட்சத்திரத் தொகுதிகளைக் கொண்டது. ஆகாய கங்கையான நட்சத்திரத் தொகுதிகளும், சந்திரனும், பாம்பு வடிவக் கோள்கள் எனப்படும் இராகு கேகது என்னும் பாம்புகளும் சேர்ந்திருப்பது ஆகாயம். சிவனுடைய முடியைக் கண்ணுற்ற அம்மையார் சிவன் தலையிலுள்ள கங்கையினையும், பிறைச் சந்திரனையும் பாம்பினையும் கண்டு அவனுடைய முடியின் தோற்றமானது ஆகாயம் போல் விளங்குகிறது என கூறுகிறார்.

*“கலங்கு புனற்கங்கை யூடால லாலும்*
*இலங்கு மதி இயங்க லாலும் - நலங்கொள்*
*பரிசுடையான் நீள்முடிமேற் பாம்பியங்க லாலும்*
*விரிசடையாங் காணில் விசும்பு”*

**(அற். திரு.பா – 75)**

சிவன் தன்னுடைய கரத்தில் அக்னியைத் தாங்கியதால் கரங்கள் செம்மை நிறம் அடைகிறதா அல்லது அழகிய கையில் பொருந்திய செம்மை நிறத்தால் நெருப்பு சிவந்து தோன்றுகிறதோ! இதனைச் சொல்லியருள வேண்டும் என இறைவனிடம் வேண்டுகிறார்.

*“அழலாட அங்கை சிவந்ததோ அங்கை*
*ஆழகால் அழல்சிவந்த வாறோ – கழலாடப்*
*பேயோடு கானிற் பிறங்க அனலேற்கித்*
*தீயோடு வாய்இதனைச் செப்பு”*

**(அற்.திரு.பா – 98)**

இவ்வாறாக அம்மையார் தன் மனத்தில் நிறைந்திருக்கும் இறைவனனின் வடிவத்தை இயற்கையோடு கற்பனை செய்து அதன் விளைவாக தோன்றிய கருத்துகளை இறைவனின் படைப்புகளான பஞ்சபூதங்களை பற்றி கூறுகிறது.

*“அறிவானுந் தானே அறிவிப்பான் தானே*
*அறிவா யறிகின்றான் தானே- அறிகின்ற*
*மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாச*
*மப்பொருளுந் தானே யவன்”*

**(அற். திரு. பா – 20)**

தனியாக நின்று உலகப்பொருள்களின் முழுமை அறிபவன் ஈசன் எல்லா உயிர்களின் மனதிலும் நிறைந்திருப்பவன். உயிரோடு உயிராக இணைந்து உயிர்களை ஆள்கின்றவன். தவம் செய்வோர் தன் மனத்தால் உணர்ந்து அறியும் உண்ணப் பொருளாக விளங்குபவன் சிவன். அவன் நிலம், நீர். தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களிலும் நீக்கமற கலந்திருக்கின்றான் என்பதை இப்பாடல் மூலம் மெய்ப்பிக்கின்றார்.

## முடிவுரை

சிவபெருமானை உள்ளம் உருகி பாடும் அம்மையார் அவர் தோற்றத்தை வர்ணிக்கும் போது கருமை நிறமுடைய மேனியை கொண்டவர் இறைவன். இப்பஞ்ச பூதங்களின் உருவாக்கத்தை இயற்கையோடும் இணைத்து இறைவனை பற்றி பாடுகிறார். இயற்கையின் உருவாக்கத்தை இறைவன் எவ்வாறு அமைத்து இருக்கின்றார் என்பதை இக்கட்டுரை மூலம் அறியலாம்.

## தொகுப்புரை

காரைக்கால் அம்மையாரின் படைப்புகளில் ஒன்றான அற்புதத்திருவந்தாதியில் இயற்கை எனும் கட்டுரையில் ஆய்வுச் சுருக்கம், முன்னுரை, பக்தி இலக்கியத்தின் முக்கியத்துவம், காரைக்கால் அம்மையாரின் தோற்றம், சிவபெருமானிடம் இறைபற்றை வேண்டுதல், அற்புதத்திருவந்தாதியில் இறைவனின் படைப்புகளை இயற்கையோடு எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும்,

இக்கட்டுரையின் தொகுப்புரையாக அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. காரைக்காலம்மையார் படைப்புகள் முனைவர் கதிர்முருகு, கு. சுபாஷினி பதிப்பு ஆண்டு ஏப்ரல் 2007 சாரதா பதிப்பகம், ஜி – 4 சாந்தி அடுக்ககம் 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை – 14
2. மேலது பக்கம் - 78
3. மேலது பக்கம் - 49
4. மேலது பக்கம் - 45
5. மேலது பக்கம் - 107
6. மேலது பக்கம் - 127
7. மேலது பக்கம் - 61

# எட்டுத்தொகை அகநூல்களில் இயற்கை

**சை. ஜாபர்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*சி. அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி), மேல்விஷாரம், இராணிப்பேட்டை*

**ஆய்வுச்சுருக்கம்**

*மூவேந்தர்கள் தமிழகத்தில் ஆட்சி செய்த காலம் சங்க காலமாகும். சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களே சங்க இலக்கியங்கள் எனப்படுகிறது. பாட்டும் தொகையும் என்று பிரிக்கப்பட்டு, பதினெண் மேற் கணக்கு நூல்கள் என்ற பெயரில் வழங்கப்பட்டது. எட்டுத்தொகை நூல்கள் அகம், புறம், அகப்புறம் என்ற அமைப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. காதல் பற்றியவை அகப்பாடல்களாகவும், போர், வீரம் பற்றியவை புறப்பாடல்களாவும், காதல், வீரம் பற்றியவை அகப்புறப்பாடல்களாகவும் அமைந்துள்ளன. எட்டுத்தொகை நூல்களில் ஐந்து நூல்கள் அகம் சார்ந்ததாகவும், இரண்டு நூல்கள் புறம் சார்ந்ததாகவும், ஒரு நூல் அகப்புறம் சார்ந்தாக உள்ளன. சங்க இலக்கிய அகநூல்களில் தலைவன், தலைவியின் காதலைப் பற்றி சொல்லும்போது பெரும்பாலும் இயற்கை காட்சிகளை ஒப்புமைப்படுத்தும் வழக்கம் சங்ககால புலவர்களிடையே அதிகமாக காணப்படுவதுண்டு. அவற்றுள் சங்ககால எட்டுத்தொகை அகநூல் சார்ந்த பாடல்களில் இயற்கை காட்சிகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆய்வுக் களமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த ஒவ்வொரு காலச் சூழலிலும் அவை இயற்கையோடு இணைந்து வாழ்வு கொண்ட மக்களைப் பற்றியே கூறுகிறது. எட்டுத்தொகை அகநூல்களில் இடம் பெறும் அகப்பாடல் ஒவ்வொன்றிலும் காதல் செய்திகள் கூறுவதோடு மட்டுமல்லாமல், அச்செய்திகளை இயற்கையோடு ஒப்பட்டு கூறும் வழக்கம் உடையவர்களாக அக்கால புலவர்கள் இருந்தனர். இதிலிருந்து இயற்கையானது மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்துக் காணப்படுகிறது. என்ற நிதர்சனத்தை அறிய முடிகிறது. எட்டுத்தொகை அகப் பாடல்களில் சங்ககால புலவர்கள் கூறியுள்ள இயற்கை வர்ணனைகளை எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இயற்கை – சொல் விளக்கம்

‘இறைவனால் மனிதனுக்கு கிடைத்த அற்புத பரிசு இயற்கை’ என்று கூறுவார்கள். இயற்கை என்பது இயல்பாக படைக்கப்பட்டது. மனித சக்தியில்லாமல் இறைவனால் இயல்பாக தோன்றிய அனைத்து பொருட்களும் இயற்கை எனப்படும். இதனைத் தொல்காப்பியம்

**“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை**
**ஐம்பால்இயல்நெறிவழாஅமைத்**
**திரிவு இல் சொல்லொடு தழாஅல்**
**வேண்டும்”**[1]

**(தொல்.பொருள்.மரபு - 90)**

அதாவது நிலம், நீர், தீ, காற்று, வானம் என்ற ஐந்தும் தம் நிலையில் மாறுபாடு இல்லாமல் ஒன்றோடொன்று கலந்து மயக்கமே உலகம் என்று தொல்காப்பியர் கூறுகிறார். இவ்வைந்தும் தம் நிலையில் மாறுபாடு இல்லாமல் செயல்படும் போது உயிரினங்கள் வாழ முடியும் என்பதை உணர்த்துகிறார். இக்கருத்தையே அடிப்படையாகக் கொண்டு புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர்,

**“மண் திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்,**
**தீ முரணிய நீரும், என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல”**[2]

**(புறநானூறு - 02)**

இத்தகைய பாடல் வரிகளைக் கூறுகிறார் ஐம்பூதங்களின் செயல்பாடுகளில் மாறுதல்கள் ஏற்படும்போது பூலோகத்தில் பேரழிவுகள் உண்டாகின்றன.

**நற்றிணை**

தலைவன் பொருள் தேடச் செல்லுகையில் தலைவி தன் தோழியிடம் தலைவனைப் பற்றி புகழ்ந்து கூறி, தன் காதல் எவ்வளவு உன்னதமானது என்பதை,

**"தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தித் தொடுத்த தீம்தேன் போல**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீர்இன்று அமையா உலகம் போலத்**
**தம்இன்று அமையா நம்நயந் தருளி"[3]**

**(நற்றிணை - 01)**

தலைவி தலைவன் மீது வைத்த காதலானது தேனீக்கள் தாமரையின் குளிர்ந்த மகரந்தங்களை ஊதி. உயர்ந்து நிற்கும் சந்தனமரத்தின் உச்சியில் கொண்டு சேர்த்த தேனைப் போல உயர்வானதும், உறுதியானதும் என்று கூறி, கடலால் சூழ்ந்து இருக்கும் இப்புவியுலகம் நீர் இல்லாமல் எப்படி இயங்காதோ அதுபோல, தலைவன் இன்றி என்னால் இயங்க முடியாது என்று தம் காதலையும் தம் எண்ணங்களையும் இயற்கையோடு ஒப்பிட்டு கூறுகிறாள்.

போர் வினை முடிந்த பின்னர் இல்லம் மீளும் தலைவன் தன் தேர்ப் பாகனிடம் கூறுவது,

**"இலையில் பிடவம் ஈர்மலர் அரும்பப்**
**புதலிவர் தளவம் பூங்கொடி அவிழப்**
**பான்னெனக் கொன்றை மலர மணியெனப்**
**பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கஞலக்**
**கார்தொடங் கின்றே காலை"[4]**

**(நற்றிணை - 242)**

வீடு திரும்பும் தலைவன் கார்காலம் வந்துவிட்டது என்பதை ஈரம் மிக்க பிடவ மலர் இலை இல்லாத புதர்ச்செடியில் அரும்பு விட்டிருக்கிறது. புதரில் படர்ந்திருக்கும் தளவம் பூக்கொடி மலர்ந்திருக்கிறது. கொன்றைப் பூ பொன்போல மலர்ந்திருக்கிறது. மணி போன்ற நீல நிறத்தில் காயாம்பூக் கொத்து சிறிய கிளைகளில் மலர்ந்திருக்கிறது என்று கார்காலம் தொடங்கியதை, அக்காலத்தில் மலரக் கூடிய மலர்களைக் கூறி விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் என்ற புலவர் விளக்குகிறார்.

**குறுந்தொகை**

தலைவி, தலைவன் மீது வைத்துள்ள காதலை தோழியிடம் கூறும்போது, தன் காதலின் அளவை அகலம், நீளம், உயரம் எனப் பிரித்து அதனோடு இயற்கையை ஒப்பிட்டு கூறுகிறாள். அவை

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் மாரள வின்றே சாரல்"[5]**

**(குறுந்தொகை - 03)**

தேவகுலத்தாரால் இயற்றப்பட்ட இப்பாடல் தலைவி தலைவனின் மீதுள்ள காதலானது நிலத்தை விட பெரியது என்றும், வானத்தை விட உயர்வானது என்றும், கடலை விடவும் ஆழமானது. என்று இயற்கையை உதாரணம் காட்டி உரைக்கிறாள். தலைவன் தலைவியின் காதலை ஒப்பிட்டு கூற இதைவிடச் சிறந்த உவமை மற்ற மொழிகளில் கூற இயலாது.

சங்க இலக்கியப் பாடல்களில் நீங்காதப் புகழைப் பெறுபவர் கபிலர். அவரின் பாடலில் தலைவிக்கு உள்ள காதல் நோயை தோழி தலைவனிடம் கூறும்போது,

**"சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு இவள்**
**உயிர் தவச்சிறிது காமமோ பெரிதே!"[6]**

**(குறுந்தொகை - 18)**

இப்பாடலில் மலைப்பக்கத்தில் உள்ள பலாமரத்தின் சிறிய கொம்பில், பெரிய பழம் தொங்கியது போல, தலைவியின் உயிரானது மிகவும் சிறியது. ஆனால் அவள் உடலில் உள்ள காமநோய் மிகவும் பெரியது என்கிறார். பலா மரத்தின் சிறய கொம்பு தலைவியின் உயிருக்கும், சிறிய கொம்பில் உள்ள பெரிய பழம் தலைவியின் உடலில் உள்ள பெரிய நோய்க்கும் ஒப்புமைப்படுத்தப்பட்டது.

**ஐங்குறுநூறு**

இளவேனில் காலத்தில் திரும்பிவிடுவேன் என்று கூறிவிட்டு பொருளீட்டச் சென்ற தலைவன், இளவேனில் பருவம் வந்தும் திரும்பவில்லை. ஆகவே தலைவி இளவேனில் காலம் வந்துவிட்டது என்பதை, அக்காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் இயற்கைச் சார்ந்த குறியீடுகளையும் தலைவி தோழியிடம் கூறி கலங்குகிறாள்.

**"அவரோ வாரார் தான்வந் தன்றே**
**எழில்தகை இஅள்முலை பொலியப்**
**பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே"[7]**
**(ஐங்குறுநூறு - 347)**

பொறிப் பொறியாகப் புன்கம் பூக்கள் பூத்துக் கிடக்கின்றன. நம் முலைகளில் புன்கம் பூக்களை அணிந்துக்கொள்ளும் பொழுது இது. புன்கம் பூக்கள் குளுமை தரும். அவர் வரவில்லை. இளவேனில் வந்துவிட்டது என்பதை இளவேனில் காலத்தில் பூக்கும் புன்கம் பூக்களைக் கொண்டு காலத்தை உணர்த்துகிறாள் தலைவி.

ஐங்குறுநூற்றின் வேழப்பத்தில் வேழம் நிரம்பியிருக்கும் ஊரை உடையவன் தலைவன் என்பதை உணர்த்த,

**"அறுசில் கால அஞ்சிறைத் தும்பி**
**நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்**
**காம்புகண் டன்ன தூம்புடை வேழத்துத்**
**துறைநணி யூரனை உள்ளியென்**
**இறையேர் எல்வளை நெகிழ்புழ டும்மே"[8]**
**(ஐங்குறுநூறு - 20)**

ஆறு கால்களையும் அழகிய சிறகுகளையும் உடைய தும்பி நூற்றுக்கணக்கான இதழ்களை உடைய தாமரை மொட்டை உள்ளே நுழையச் சீய்க்கும். அந்தத் தாமரையின் தண்டு போல் உள்ளே துளை கொண்டதாய் இருக்கும் வேழம் விளைந்திருக்கும் துறையை உடைய ஊரன் அவன். அவனை நினைத்துக் கொண்டு என் கணுக்கை வளையல்கள் கழன்று அவனிடம் ஓடுகின்றனவே! என்று தலைவனின் ஊர் சிறப்பைக் கூறி தலைவி தோழியிடம் புலம்பும் நிலை காணப்படுகிறது. பெரும்பாலும் தலைவனின் ஊர் சிறப்பை பற்றி குறிப்பிடும்போது இயற்கை காட்சிகளே சாட்சியாக அமைகின்றன.

**கலித்தொகை**

எட்டுத்தொகை நூல்களில் இயற்கை காட்சிகளும், வர்ணனைகளும் அதிகமாக இடம்பெறும் இலக்கியம் கலித்தொகை ஆகும். கலித்தொகைக்கு இயற்கை இன்பக்கலம் என்ற சிறப்பு பெயரும் உண்டு.

தலைவன் பொருள் தேடச் செல்வதை தோழியிடம் கூறினான். தோழியானவள் நீ சென்றால் தலைவி வருத்தம் அடைவாள் என்றுக் கூறி தடுத்தாள். தான் கூறுவதைக் கேட்காமல் சென்ற தலைவனை நோக்கி, நீ தலைவியை விட்டுப் பிரிந்தால் அவள் இறந்துவிடுவாள் என்பதை இயற்கை காட்சிகள் உனக்கு உணர்த்தும் என்றுரைக்கிறாள்.

**"உடைஇவள் உயிர் வாழாள்நீ நீப்பின்யெனபல**
**இடைகொண்டுயாம் இரப்பவும்யெம கொள்ளாய் ஆயினை**
**கடைஇய ஆற்றிடை, நீர்நீத்த வறுஞ்சுனை**
**அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன**
**வல்லகைநீ துறப்பாயேல் வகைவாடும் இவள்யென**
**ஒல்ஆங்கு யாம்இரப்பவும் உணர்ந்தீயாய் ஆயினை**
**செல்லுநீள் ஆற்றிடைசேர்ந்து எழுந்த மரம்வாட**
**புல்லுவிட்டு இறைஞ்சிய பூங்கொடி தகைப்பன**
**பிணிபுநீ விடல்சூழின் பிறழ்தரும் இவள்யென**
**பணிபுவந்து இரப்பவும்பல சூழ்வாய் ஆயினை**
**துணிபுநீ செலக்கண்ட ஆற்றிடைஅம் மரத்து**
**அணிசெல வாடியஅம் தளிர் தகைப்பன."[9]**
**(கலித்தொகை - 03)**

தோழி தலைவனை நோக்கி! நீ விட்டுச்சென்றால் இவள் உயிர் வாழமாட்டாள் என்று நான் கெஞ்சி எடுத்துரைத்தாலும், நீ கேட்காமல் செல்வாயாயின் வழியில் நீர் இல்லாத சுனையில் பூவும் இலையும் வாடிக்கிடப்பது உன்னை தடுத்து நிறுத்தும். விரைந்து பிரிந்தால் இவள் வாடுவாள் என்று பொருந்தும் வகையால் எடுத்துரைத்துக் கெஞ்சுகிறேன். நீ உணரவில்லை. நீ செல்லும் வழியில் வாடிய மரத்தில் ஏறும் கொடியும், ஏற முடியாமல் தவிப்பது உன்னைத் தடுத்து நிறுத்தும். இவளோடு சேர்ந்திருப்பதைக் கைவிட நீ எண்ணினால் இவள் உயிர் பிரிந்து போய்விடும் என்று பணிந்து சொல்லிக் கெஞ்சுகிறேன். நீ உன் எண்ணத்திலேயே சுழன்றுக் கொண்டிருக்கிறாய். துணிவுடன் நீ செல்லும் வழியில் மரங்களில் வாடித் தொங்கும் இலைகள் உன்னைத் தடுத்து நிறுத்தும். என்று இயற்கையின் எதிர்மறையான செயலை விளக்கி தலைவனின் பிரிவை தடுத்து நிறுத்துவதாக பாலை பாடிய பெருங்கடுக்கோ கூறுகிறார்.

**அகநானூறு**

சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் முக்கிய இடம் பெறுபவர் ஔவையார். அவரின் பாடலில் இடம்பெறும் இயற்கை, தலைவனின் பிரிவை ஆற்றாளாய தலைமகள் தோழிக்கு கூறுவதாக அமைந்துள்ளது.

> **“வானம் ஊர்ந்த வயங்குஒளி மண்டிலம்**
> **நெருப்புயெனச் சிவந்தஉருப்பு அவிர்அம் காட்டு”[10]**
>
> **(அகநானூறு - 11)**

வானத்தில் ஓங்கி உயர்ந்து விளங்கும் நெருப்பு பந்தானது பூமியில் உள்ள அனைவருக்கும் நல்லவர் கெட்டவர் என்ற எவ்வித பாகுபாடும் இல்லாமல் வெளிச்சத்தைத் தருகிறது என்று பாடுகிறார்.

> **“விசும்பு விசைத்துஎழுந்த கூதளங் கோதையின்**
> **பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ”[11]**
>
> **(அகநானூறு - 273)**

இப்பாடலில் கூதளம் பூ மாலை வானத்தில் பறப்பது போல இளங் கால்களை உடைய குருகுப் பறவைகள் வானத்தில் பறக்கும். மழை ஈரம் பட்ட நிலத்தில் பூ மலரும் பனிக்காலத்தில் புதுமை தோன்றப் பறக்கும் என்று நாரைகளின் கூட்டத்தை வருணித்துப் பாடுகிறார். ஆழகிய நீல வானத்தில் மேகமானது இருள் சூழ்ந்துக் காணப்படுகிறது. மிகப்பெரிய கொல்லி மலையின் உச்சியில் தோன்றும் நீரானது வேகமாக பெருக்கெடுத்து, ஓடிவந்து கீழே வீழ்கின்ற அருவியாக காட்சியளிக்கிறது என்பதை ஔவையார் விளக்குகிறார்.

**முடிவுரை**

சங்ககாலப் புலவர்கள் பெரும்பாலும் தலைவன் தலைவியின் அக வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும் போது இயற்கை காட்சிகளே, சாட்சியாக அமைகின்றன. பிரிந்த தலைவன் மீண்டும் வருவேன் என்று சொன்ன காலம் வந்துவிட்டது என்பதை உணர்த்தவும், அக்காலத்து இயற்கை நிகழ்வுகள் உதாரணமாக அமைகின்றன. இவற்றிலிருந்து சங்ககால மக்களும், புலவர்களும் இயற்கையை மிகவும் நேசித்துள்ளார்கள் என்றும் இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. இயற்கை வளங்கள் மனித வாழ்வின் முக்கிய அங்கமாக அமைந்துள்ளது என்பதை உணர முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியம் நூற்பா எண் - 90
2. புறநானூறு பாடல் எண் - 02
3. நற்றிணை பாடல் எண் - 01
4. மேலது., பாடல் எண் - 242
5. குறுந்தொகை பாடல் எண் - 03
6. மேலது., பாடல் எண் - 18
7. ஐங்குறுநூறு பாடல் எண் - 347
8. மேலது., பாடல் எண் - 20
9. கலித்தொகை பாடல் எண் - 03
10. மேலது., பாடல் எண் - 273
11. அகநானூறு பாடல் எண் - 11

# கிருபானந்தவாரியாரின் கந்தபுராண தத்துவம்

**முனைவர் த. தனலெட்சுமி**
*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்*
*ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி*

**ஆய்வுச்சுருக்கம்**
*கச்சியப்பரால் எழுதப்பட்ட கந்தபுராணம் இறைவனின் கட்டளையால் உருவாக்கப்பட்ட உன்னத நூல். இந்நூலில் முருகப்பெருமான் அசுரர்களின் ஆணவத்தைக் கட்டுப்படுத்திய நிகழ்வினைக் கிருபானந்தவாரியார், அவரின் புலமைத்திறனுக்கு ஏற்ப வெளிப்படுத்தியுள்ளதை எடுத்துரைப்பதோடு, இறைவனை சரணடைந்தவர்கள் உயர்பதவி அடைவர் என்பதை கந்தபுராணத்தின் உள்நிலைப் பொருளாக விளங்குவதை கூறுகின்றது இவ்வாய்வு.*

## முன்னுரை

பக்தியின் இலக்கியமாக விளங்கும் இறைவன் அருளிய கந்த புராணத்தில் முருகனின் அருளை அறிவதோடு, இறைவனின் இயல்புகளை அசுரனின் அழிவால் உலகுக்கு எடுத்துரைப்பதையும் காணமுடிகின்றது. உண்மைப்பேசுவதை அரிச்சந்திரபுராணம் உரைத்தல் போல, சிவனிடம் வரமாகப் பெற்ற நற்குணங்களை அசுரன் தவறாகப் பயன்படுத்தி அழிந்தான். ஆணவம் அழிவைத்தரும் என்பதையும், இறைவனால் புத்தி புகட்டப்பட்ட அசுரன் உயர்பதவி அடைந்ததையும் இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

## கந்தபுராண நூல் வரலாறு

காஞ்சிபுரம் குமரக்கோயில் அர்ச்சகரான காளத்தியப்ப சிவாசாரியாரின் மகன் கச்சியப்ப சிவாசாரியாரின் கனவில் முருகப்பெருமான் தோன்றி வடமொழிக் கந்தபுராணத்தில் உள்ள சரித்திரத்தைத் தமிழில் விரித்துப் பாடுவாயாக என்று கட்டளையிட்டதோடு, "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்ற முதலடியும் எடுத்துக் கொடுத்து மறைந்தார். கச்சியப்பர் இறைவனின் வேண்டுகோளுக்கு இணங்கப் பாடினார். இந்நூல் இறைவனால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட நூல் என்னும் பெருமைக்குரியது.

"கந்தபுராணத்தில் இல்லாதது வேறு எந்த புராணத்திலும் இல்லை" என்னும் சிறப்புடையது மட்டுமல்லாமல், சிவனின் முக்கண்களாகக் கூறப்படும் புராணங்களில் கந்தபுராணம் நெற்றிக்கண்ணாக விளங்குகின்றது. இறைவனைப் பேசுதல் நாவிற்கு இன்பம், சிந்தித்தல் மெய்யினிற்கு இன்பம் என்பது போல் இறைவனின் நூலாக விளங்குவது கந்தபுராணம்.

## கந்தபுராண நூலின் அரங்கேற்ற அற்புதம்

கச்சியப்பர் கந்தபுராணம் முழுமையும் பாடிமுடித்து நல்லநாளில் குமரக்கோயில் ஆலயத்தில் அரங்கேற்றம் செய்ய விழைந்தார். அரங்கேற்றம் செய்த அந்நாளில் கச்சியப்பர் முதல் வரியான "திகட சக்கரம்" என்னும் செய்யுளைப் பாடி பொருளை விளக்க முற்பட்டபோது, புலவர் ஒருவர் 'திகழ் தசம் – என்பது திகடசம்' எனப் புணர்வதற்குத் தொல்காப்பியத்தில் விதி இல்லை என்று உரைத்தார். அதற்கான விடையை மறுநாள் விளக்குவதாகக் கூறிச் சென்றார்.

கச்சியப்பர் அவையில் நடந்த நிகழ்வினை எண்ணி இறைவனிடம் தன்னுடைய சூழலை முறையிட, புலவர் ஒருவரால் விடை கிடைக்கும் என்று இறைவன் அருளினார். மறுநாள் அவை கூடியபோது சோழநாட்டுப் புலவர் வீரசோழியம் என்னும் இலக்கண நூலை வழங்கினார். அந்நூலில் அப்புலவருக்கான விடை உள்ளது என்பதை உரைக்க, இலக்கண விதி இல்லை என்று உரைத்த புலவர் தனது அறியாமையைப் பொறுத்தருள வேண்டினார். பின்னர் நூல் முழுமையாக அரங்கேற்றப்பட்டு, கச்சியப்பர் சிவிகையில் அமர்த்தப்பட்டு சிறப்பு

செய்யப்பட்டார். இறையடியார்களுக்கு இறைவனே எல்லாமுமாக விளங்குவான் என்பதை அறியமுடிகின்றது.

**கந்தபுராண நூல் அமைப்பு**

கந்தபுராணத்தின் பெரும்பிரிவு காண்டம், உட்பிரிவு படலம் ஆகும். ஆசிரியர் தமிழ்க் காப்பிய அமைப்பிற்கேற்ப இதனைப் பாடியுள்ளார். இந்நூல் 10346 செய்யுள்கள் அடங்கிய பெட்டகமாகும். உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மஹேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷகாண்டம் என்னும் ஆறு காண்டங்களையும், 142 படலங்களையும் கொண்டு அமைந்துள்ளன. இவற்றுள் தேவ காண்டம் ஐந்து படலங்களையும் 421 பாடல்களையும் கொண்டு அளவில் சிறியனவாகவும், யுத்த காண்டம் 2967 பாடல்களைக்கொண்டு எண்ணிக்கையில் அதிகமானதாகவும் அமைந்துள்ளன.

**கந்தபுராண கதை அமைப்பு**

கந்தபுராண நூலின் ஆசிரியரான கச்சியப்பர் இந்நூலில் முருகனது கதையை மட்டும் கூறாமல், அவரது தந்தை சிவபெருமானின் அருட்செயல்களையும் கூறியுள்ளார்.

"சூரபத்மன்" எனும் அசுரன் சிவனிடம் கடுந்தவம் புரிந்து, சிவனைத் தவிர வேறு யாரும் அழிக்க முடியாத உன்னதமான வரத்தைப் பெற்றான். இவனால் துன்பத்திற்கு ஆளான தேவர்கள் அவனை அழிக்கும்படி சிவனிடம் முறையிட்டனர். அதனை ஏற்ற இறைவன், தனது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகளைத் தோற்றுவித்தார். இப்பொறிகள் சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாகத் தோன்றின. அதனை உமாதேவியார் கையில் எடுத்து அணைத்த போது "கந்தன்" எனும் குமாரக்கடவுள் தோன்றினார். இவ்விறைவனே தேவர்களைக் காத்த கடவுளாவார்.

குமாரக்கடவுளாகிய இறைவன் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தினார். தந்தைக்கே பிரணவப்பொருள் உணர்த்தியவர் மட்டுமல்ல, சூரபத்மனை நேரில் போரிட்டவன். போரின் இறுதியில் கடலின் நடுவே மாமரமாக நின்ற சூரனை "உடம்பிடி" என்னும் ஆயுதம் கொண்டு வீழ்த்த இரு கூறுகளாகப் பிரிந்து மயிலாகவும், சேவலாகவும் தோன்றின. இதனையே ஊர்தியாகவும், கொடியாகவும் ஏற்றவர். இத்தனை சிறப்பு மிக்கது கந்தபுராணம். நாமத்தை உச்சரிப்பது போல தலவரலாறு அறிந்து கொள்வதும் புண்ணியம்.

**உரையாசிரியர் கிருபானந்தவாரியார்**

வேலூர் மாவட்டம், காங்கேய நல்லூரில் 1906 ஆம் ஆண்டு, மல்லையதாசருக்கும், மாதுஸ்ரீ கனகவல்லி அம்மையாருக்கும் நான்காவது மகவாகப் பிறந்த வாரியார், ஆன்மீக சொற்பொழிவுகள் நிகழ்த்துதலைத் தவமாகக் கொண்டு வாழ்ந்த பெரியார். சமயம், இலக்கியம், பேச்சுத்திறன், எழுத்துத் திறன், இசை போன்ற துறைகளில் ஆழ்ந்த புலமைப் பெற்றவர். புலமைத்திறனால் "அருள்மொழி அரசு", திருப்புகழ் ஜோதி" என்று பாராட்டப்பெற்றவர். எட்டு வயதில் கவிபாடும் ஆற்றலைப் பெற்ற இவர், தமது 12 ஆம் வயதில் பதினாயிரம் பண்களை மனப்பாடம் செய்த சிறப்புமிக்கவர். பேச்சு வழக்கு ஒட்டியே பிரசங்கங்கள் அமைந்ததால் பாமர மக்களின் உள்ளத்தில் இடம்பிடித்தார். நகைச்சுவையும், நடைமுறைச் செய்திகளையும், நயம்படக் கூறுவது இவரது தனிச்சிறப்பு.

வாரியார் 500 க்கும் மேற்பட்ட ஆன்மீகக் கட்டுரைகளையும், 150 க்கும் மேலான நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் சிறப்பானவை கந்தவேள் கருணை, இராமகாவியம், மகாபாரதம் போன்றவாகும். 83க்கும் மேலான சொற்பொழிவுகள் குறுந்தகடுகளாக வெளிவந்துள்ளன. பாம்பன் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும் நூலாக வெளியிட்டுள்ளார். சென்னை, தமிழ் இசை சங்கம், 1967 இல் இசைப்பேரறிஞர் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.

**வாரியாரின் முருகா என்னும் நாமத்தின் விளக்கம்**

பொய்கையில் உதிக்கும் முன்னரே முருகன் எனும் திருநாமம் கொண்டவன். ஆறுமுகம் கொண்டதால் சண்முகன், கங்கையில்

தவழ்ந்ததால் காங்கேயன், கார்த்திகை மாதர் வளர்த்ததால் கார்த்திகேயன், ஆறு திருவுருவமும் ஒன்று கூடியதால் கந்தன், மயிலை வாகனமாக உடையதால் விசாகன் என்னும் நாமங்களால் "முருகன்" என்னும் நாமத்தின் தொன்மையை அறியமுடிகின்றது.

தமிழில் மூன்று இனமாகிய வல்லினம், மெல்லினம், இடையினம் உண்டு. அத்தகைய சிறப்பு மிக்க மொழியோடு தொடர்பான முதல்வன் முருகன். அதாவது மெல்லினத்தில் ஒரு எழுத்து "மு", இடையினத்தில் ஒரு எழுத்து "ரு", வல்லினத்தில் ஒரு எழுத்து " கு" என மூவினத்தில் மூன்று எழுத்தினை நாமமாகக் கொண்டு அமைகின்றது. மு, ரு, கு என்னுமெழுத்தில் ஏறிவரும் 'உ' கரம் காத்தலைக் குறிப்பதால் உலகங்களைக் காத்தருளும் திருநாமம் என்ற பெயர் பெறுகின்றது.

'முருகா' என்பதற்குத் தெய்வத்தன்மை, அழகு, இளமை, மகிழ்ச்சி, மணம், இனிமை எனவும் ஆறு நிலைகளில் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இறைவன் பல்லாயிரம் நாமங்கள் கொண்டு விளங்கினாலும் முருகன், குமரன், குகன் என்னும் நாமங்களில் சிறந்து விளங்குவது "முருகன்" என்ற நாமம் என்று கந்தரநுபூதியில் குறிப்பிடுகின்றார். முருகா என்னும் நாமத்தை ஓதுபவர் மும்மை நலங்களும் பெற்று உயர்வு பெறுவர்.

### அன்பின் வடிவம் முருகன்

கந்தன் என்பதற்கு "பகைவர்களுடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கிறவன்" என்று அமர சிம்மம் நிகண்டு பொருள் விளக்கம் தருகின்றது. பகைவன் இருக்கலாம் வலிமை இருக்கக்கூடாது, பாகற்காய் இருக்கனும் கசப்பு இருக்கக் கூடாது என்பது போல் கந்தபுராணத்தில் சூரசம்மாரம் கிடையாது. இராவணனை இராமனும், இரணியனை நரசிம்மனும், கம்சனை கண்ணபிரானும் கொன்றனர். ஆனால் சூரபன்மன் முருகனால் கொல்லப்படாமல் சேவலும், மயிலுமாக ஆனான். சூரபன்மன் அசுரபதவியில் இருந்த போது அண்டங்கள் அனைத்தும் அச்சத்தால் வணங்கினர். சேவலும், கொடியுமாக ஆன இறைவனை அன்பினால் வணங்கினர். அன்பினால் இறைவன் அருள்பாலிக்க வல்லவன். எவ்வளவு கொடியவர்களானாலும் முருகனிடத்தில் அடியவர்களானால் அவர்கள் உலகத்தாரால் வணங்கப்படுவர்.

### ஆணவ மலம் – தத்துவம்

ஆணவ மலம் துன்பத்திற்குக் காரணமானது. ஆணவ மலத்தைப் போக்க இறைவன் கன்ம மலம், மாயா மலம் எனும் இரு மலங்களைக் கொடுக்கிறான். ஒன்றைக் கொண்டு ஒன்றைப் போக்குவதே அதன் தத்துவம். அதாவது நமது கையில் கட்டையாக, குட்டையாக இருக்கும் விரலைப் பெருவிரல் என்கிறோம். ஒரு பொருளைப் பிடிக்கும் போது நாலு விரல்கள் ஒரு பக்கமாகவும், கட்டைவிரல் ஒரு பக்கமாகவும் இருந்து செயல்படுகின்றது. நாலு பேர் செய்கின்ற வேலையை ஒருவரே செய்யும்பொழுது பெரியவர்களாகின்றனர். இதனால் பெருவிரல் என்னும் பெயர் பெறுகின்றது. கட்டைவிரல் பதி, ஆள்காட்டி விரல் பசு, அடுத்து உயரமாக இருப்பது ஆணவமலம். இது தனியாக வேலை செய்யாது, கூட்டத்தோடு இருப்பது. மோதிர விரல் கன்மங்களைச் செய்வது, கடைசி விரல் மாயாமலம். இந்த மூன்று மலங்களோடு சேர்ந்திருப்பது ஜீவாத்மா. விலகியிருப்பது பரமாத்மாவாகும். ஆணவ மலமாக விளங்குபவன் சூரபன்மன், கன்ம மலமாக விளங்குபவன் சிங்கமுகாசுரன், மாயா மலமாக விளங்குபவன் தாரகாசுரன். கந்தபுராணத்தில் முருகப்பெருமான் மூன்று மலங்களை அடக்குகிறான். கொடியவனை அடக்கினான் என்பதை விட ஆணவ ஆட்சி தகர்த்தெறியப்பட்டதோடு, மக்களுக்கு நல்லெண்ணமும் விதைக்கப்பட்டுள்ளது. ஆணவம் ஆகாது என்பதைக் கந்தபுராணம் வலியுறுத்துகின்றது.

### மூலம் ஒன்று எனும் தத்துவம்

இறைவனின் மூலம் என்பது ஒன்றுதான். தேவர்கள் ஒருமுறை சுவாமியை தரிசிக்க

சென்றார்கள். புகழவும், போற்றவும், நினைக்கவும் இயலாத முழுமுதல் பொருளான இறைவனிடம் வாய்புதைத்து நிற்க இறைவனே என்ன வேண்டுமென்று பரிவோடு கேட்கின்றார். எதைக் கேட்பது என்று வாய் புதைத்து நிற்கின்றனர் தேவர்கள். இறைவன் கேட்டதைக் கொடுப்பவன். கொடுக்கும் பொருளின் அர்த்தம் அறியாதவர்கள் தேவர்கள். நாங்கள் குழந்தையைக் கேட்டால் நீங்கள் நெருப்பைக் கொடுத்தீர்கள். அதற்கு இறைவன் நான் கொடுத்தது குழந்தைதான் என்றார். அதற்கு உதாரணம் கூறுகின்றார். ஏழை புலவன் ஒருவன், வசதியான நண்பனாகிய மன்னனை வறுமையின் காரணமாக சந்திக்கச் செல்கிறான். அதிக உணவுப் பொருட்களை உண்ணக் கொடுக்கிறான். இவையனைத்தும் வீட்டிற்குக் கொண்டு போக கிடைத்தால், வீட்டில் இருப்பவர்களின் பசி நீங்கும் என்று எண்ணுகிறான். மன்னன் எடுத்துச் செல்ல பெரிய பூசணிக்காய் கொடுத்துவிடுகிறார். இதை வைத்து என்ன செய்வது என்ற மனநிலையில் செல்கிறார். பிள்ளைகளும், மனைவியும் ஏதேதோ கற்பனை செய்து ஓய்ந்து விடுகின்றனர். கோபத்துடன் உடைத்த பூசணிக்காய் அவர்களின் கற்பனைக்கேற்றாற் போல் அனைத்துப் பொருள்களும் இருந்தன. மன்னன் வழியில் இடையூறுகள் எதுவுமின்றி செல்ல எண்ணி பூசணிக்காயின் உள்ளே பொருளை வைத்து அனுப்பினான். அதே போல் இறைவன் நமது கண்களுக்கு நமது எண்ணம் போல தான் காட்சி இருக்கும் என்ற உயர்ந்த தத்துவத்தை விளக்குகின்றார்.

கிருபானந்த வாரியார் இறைவனின் இயல்புகளை பாமர மக்களின் பார்வையில் கதையாக எளிமையாக எடுத்து இயம்புகின்றார்.

## முடிவுரை

பக்தியைப் புகட்டுவது போல் எளிய நடையில் ஆழமான தத்துவக்கருத்துகள் நிரம்பியுள்ளதைக் காணலாம். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவதை விட, தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்னும் உயர்ந்த கருத்தினை எடுத்துரைக்கின்றார். ஆணவம் அழிந்தால் மனத்தினுள் உள்ள இருள் நீங்கி வெளியானது ஒளிரும். இறைவனை சரணடைந்தவர் உயர்ந்தநிலை அடைவர் என்பதற்கு முருகனுக்கு மயிலும், சேவலுமான சூரபன் மனும், அம்பாளுக்கு சிம்ம வாகனமான சிங்கமுகாசுரனும், ஐயனாருக்கு யானை வாகனமான தாரகாசுரனும் சான்றாக அமைவர். இம்மூவரும் பெரும்பதவி பெற்றதே கந்தபுராண தத்துவமாகும்.

## துணைநூற்பட்டியல்


1. திருமுருக.கிருபானந்த வாரியார் சுவாமிகள் அறநெறி 2 ஆம் பதிப்பு, 2004, குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை.
2. திருமுருக.கிருபானந்த வாரியார் சுவாமிகள் வாரியாரின் வடநாட்டு யாத்திரை, முதல் பதிப்பு, 1997 குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை.
3. திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் கந்தபுராணத் தத்துவம், முதல் பதிப்பு, 2004 குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை – 600 002

# திருவரங்கக் கலம்பகத்தில் இயற்கை

**முனைவர் ந. கிருஷ்ணவேணி**
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்*
*தஞ்சாவூர், (திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது)*

**க. செங்கொடி**
*முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், (தமிழ்த்துறை),*
*அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்*
*தஞ்சாவூர், (திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் இணைவுப் பெற்றது)*

**ஆய்வுச்சுருக்கம்**
*தொல்காப்பியம் கூறும் நிலம், பொழுது ஆகிய இரண்டின் இயல்பு இயற்கை எனப்படும். சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் தோன்றி, வளர்ந்த ஒவ்வொரு காலச் சூழ்நிலையிலும், அவை பெரும்பாலும் இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பற்றிப் பாடப்பட்டுள்ளன. அதே போல சிற்றிலக்கியங்களிலும் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்துள்ளனர் என்பதை கலம்பகம், பள்ளு, உலா போன்ற சிற்றிலக்கியங்களில் காணமுடிகின்றது. திருவரங்கக் கலம்பத்திலும் இயற்கை வருணனைகள் நிரம்பியுள்ளன என்பதே இவ்வாய்வின் சுருக்கமாகும்.*

**கலைச்சொற்கள்:** *மந்தி - தெங்கு - துயில் - கமுகு – ஞாழல் - கம்புள் - கானல் - முழவு – மதுகரம் - வடவை- தொடியனி – குவலயம் - பேடை – களிறு – பொதுவர் - குருகு.*

## முன்னுரை

சங்க காலந்தொட்டு புதுப்புது பொருள்களிலும் புதுப்புது வடிவங்களிலும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இன்னும் வளர்ந்து வருகின்றன. அவற்றில் சில இலக்கியங்கள் குறிப்பிட்ட இன மக்களின் வாழ்க்கை முறைகளையும், இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையும் எடுத்தியம்புகின்றன. சிற்றிலக்கியங்கள் இடைக்காலத்தில் தோன்றி வளர்ந்தன. அவற்றுள் ஒன்றே கலம்பக இலக்கியம் ஆகும். இந்த இலக்கியம் கடவுளையோ, மன்னனையோ, பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனுடைய நாட்டின் இயற்கை வளத்தை வருணனையுடன் பாடப்படுகின்றது. கலம்பகத்துள் திருவரங்கப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடப்பட்டுள்ளது. திருவரங்கக் கலம்பகப் பாடல்களில் பொதிந்துள்ள இயற்கையின் சிறப்பை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

## சிற்றிலக்கியம்

தொல்காப்பியர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் என்னும் இலக்கிய வகைத் தோன்றவில்லை என்றாலும் அவ்விலக்கியங்கள் தோன்றுவதற்கான அடிப்படைக் கூறுகள் இடம்பெற்றிருப்பதை **“விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”**1 என்னும் தொல்காப்பிய நூற்பா வழியாக அறியலாம். சிற்றிலக்கியம் என்ற சொல் வழக்கு இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகும். ஆனால் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சிற்றிலக்கியத்தின் பொற்காலம் என்பர். சிற்றிலக்கியங்கள் என்ற சொல்லாட்சி அண்மைக் காலத்தில் எழுந்ததாகும். இச்சொல் வழக்கில் வரும் முன்பு ‘பிரபந்தம்’ என்னும் சொல்லால் சுட்டப்பட்டது. பிரபந்தம் என்பதற்கு தொண்ணூற்றாறு வகை நூல், இசையுரு கட்டுரை என்றும் பொருளுண்டு. பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு தமிழில் நூல் என்ற பொருள் உள்ளது எனலாம். ஆகவே

சிற்றிலக்கியத்தைச் சிறு பிரபந்தம் என்றனர். கால ஓட்டத்தில் பிரபந்தம் என்ற சொல் சிற்றிலக்கியம் ஆயிற்று. எங்கும் நிறைந்து விளங்கிய தெய்வத்திற்குக் கோயில்களைக் களமாகக் கொண்டுப் பல சிற்றிலக்கியங்கள் எழுந்தன. சமுதாயத்தின் அடித்தளத்தில் உழன்ற ஏழை எளிய மக்களின் நடைமுறை வாழ்வுக் கூடச் சிற்றிலக்கியங்களின் கருப்பொருளாகியது. பிற்காலச் சிற்றிலக்கியங்களில் கலம்பக இலக்கியமும் ஒன்றாகும்.

## கலம்பகம்

கலப்பு+அகம்=கலம்பகம் என்று பிரித்து மெலித்தல் விகாரமாக இச்சொல் அமைகிறது. கலம்பகம் நூலைக் குறிக்கும் போது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகும். கலம்பகத்தின் பொருள் 'புகழ்வது' என்பதாம். யாப்பில் கலப்பு, பல உறுப்புகளின் கலவை என்பதை விட அகம், புறம் என்பவற்றின் கலவையே கலம்பகம் என்பதற்குப் பொருத்தமெனலாம்.**"களிவண்டு பிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல்"2** என்னும் திருப்பள்ளியெழுச்சி ஐந்தாம் பாடலில் தொண்டரடிப் பொடியாழ்வார் பல்வகை மலரும் கலந்துத் தொடுக்கப்பட்ட மலர் மாலை என்றுக் குறிப்பிடுகிறார். எனவே இத்தொடரில் கலவை என்னும் பொருண்மையில் சார்புடன் கலம்பகம் அமைந்துள்ளதைக் காணலாம். **"பல் பூ மிடைந்த படலைக் கண்ணி"3** என்று பெரும்பாணாற்றுப்படைத் தொடருக்கும் பல பூக்கள் கலந்து நெருங்கிய மாலை என நச்சினார்கினியர் உரை தந்துள்ளமை நோக்கத்தக்கது. கலம் என்றால் பன்னிரண்டு எனவும் பகம் என்பது அதில் பாதியான ஆறு எனவும் இதனைக் கூட்டி வரும் பதினெட்டு உறுப்புகள் இடம் பெறுவதால் கலம்பகம் என்றும் பெயர்க்காரணம் கூறுவர்.

## இயற்கை

இயற்கை என்பது இயல்பானது. மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதனைத் தொல்காப்பியம், **"நிலம் நீர் தீவளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்"4** இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்று கூறுகிறது. இயற்கை என்ற சொல்லிற்கு **"இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை"5** என்று பல பொருள்கள் கழக அகராதியில கூறப்பட்டுள்ளது. கௌரா தமிழ் அகராதி, **"இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி, முறைமை"6** என்று பல பொருள்களைக் கூறுகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி **"மனிதனால் உண்டாக்கப்படாமல் தானகவே காணப்படும் (மலை நீர்) போன்ற பொருள் அல்லது (மழை, நீர், இடி, காற்று) போன்ற சக்தி என்று பொருள் தருகிறது"7** இவ்வாறான பல விளக்கங்களின் அடிப்படையில் இயற்கை என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உண்டாக்கப்படாத நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது எனக் கொள்ளலாம். அதே போல திருவரங்கக் கலம்பகப் பாடல்களிலும் இயற்கை வருணனைகள் இடம் பெற்றுள்ளன என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

## திருவரங்கக் கலம்பகத்தில் இயற்கை

திருவரங்கக் கலம்பகத்தில் திருவரங்க நாட்டில் பெரிய நீர் நிலைகளும், ஆறுகளும், உறுதி வாய்ந்த அரண்களும் சோலைகளும் சிறந்து விளங்கியுள்ளன என்பதை இயற்கை வருணனை பாடல்கள் வாயிலாக அறியலாம். பூமி தோன்றி பல ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்திருககலாம். இதில் பல்வேறு உயிரனங்கள், தாவரங்கள் தோன்றி அழிந்தும் இருக்கலாம். இருப்பினும் இயற்கையில் அழகு என்பதும் புதைந்தேயுள்ளது. இயற்கையின் அழகானது தற்போது புகைப்படக் கலைஞர்களாலும், ஓவியர்களாலும், கவிஞர்களாலும் மட்டுமே போற்றப்படுகிறது. பல்வேறு வகை இலக்கியங்களால் இயற்கையின் வலிமை சித்தரிக்கப்படுகிறது. இயற்கையும் காட்டு

விலங்குகளும் உலக வரலாற்றில் பல்வேறு காலங்களிலும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. அந்த வரிசையில் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பத்தில் இயற்கை பெரும் பங்கு வகிக்கின்றது.

**திருவரங்கக் கலம்பகத்தில் பெரும்பொழுது**

**"காலம் என்பது ஆண்டின் கூறுபாடாகும்"8** என்று நம்பியகப்பொருள் நூற்பா கூறுகின்றது. திருவரங்கக் கலம்பகத்தில் கார்காலம், கூதிர்காலம், இருபனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் போன்ற பெரும் பொழுதுகளைக் காணமுடிகின்றது.

**"வாடையாய் இருபனியும் ஆய் வேனிலாய் வுந்தது கார் என்றே"9** என்ற பாடல் அடிகள் வாயிலாக இயற்கை என்னும் காலங்கள் திருவரங்கக் கலம்பகத்தில் கூறப்பட்டுள்ளது.

## திருவரங்கக் கலம்பகத்தில் நிலம்

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அரங்கன் மீது காதல் கொள்ளும் தலைவி கடற்கரையில் இருக்கும் பூக்கள், பறவைகள், விலங்குகளிடம் தலைவனின் பிறிவாற்றாமையைக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. அவற்றில் இயற்கையைத் தலைவி இரங்கி வேண்டுகிறாள். இதனை,

**"குருகுறங்கு கானலே! கருநிறங்கொள் பானலே!**
**கொடியகண்ட ஞாழலே! நெடிய கண்டல நீழலே!**
**பொருதரங்க வேலையே! நிருதரங்க மாலையே!**
**போதயின்ற கம்புளே! ஏதைஇன் றியம்புகேன்!"10**

என்னும் பாடல் அடிகளின் வாயிலாக நெய்தல் நிலத்தின் இயற்கைச் சூழலைப் பற்றி அறியலாம்.

## காவிரியின் சிறப்பு

திருவரங்கம் ஒரு புறம் கொள்ளிடம் ஆறு மறுபுறம் காவிரி ஆறும் பாய்ந்து அந்நாடு செழுமையாகக் காட்சியளிக்கிறது. இது சிறிய தீவினைப் போன்றது என்பர். அத்தகைய சிறப்புமிக்க நாட்டில் அரங்கன் வீற்றிருக்கிறார். அங்கு அவரின் கட்டுப்பாட்டில் சூரியனும், சந்திரனும் உலவுகின்றனர். காவிரி ஆறு பாய்வதால் மரங்களும், சோலைகளும், உள்ளன. அங்கு வாழும் விலங்குகளும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றன. இதனை,

**"காவிரி இடைப் பூவிரி பொழில்**
**நிலமந்திகள் சினை தாவ**
**பலதெங்கின பழக்குலை உதிர**
**அடர் கமுகின் மிறுஒடிதர**
**தேமாங்கனி சிதறுபுவிழ**
**முடப்பலவின் குடக்கனிஉக**
**அரம்பைக் கனி வரம்பில்புக**
**வயல் மருங்கின் மலர்ப்பொய்கையுள்"11**

என்னும் பாடலில் காவிரியிடையே உள்ள பூக்கள் நிறைந்திருக்கின்ற சோலைகளில் சில பெண் குரங்குகள் மரக்கிளையில் தாவி விளையாடிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு விளையாடும் போது தென்னை மரங்களில் உள்ள முதிர்ந்த பழங்கள் உதிர்கின்றன. அதனால் அருகில் உள்ள பாக்கு மரத்தின் கண்டப் பகுதி ஒடிந்து விழுந்தது. அது விழுந்ததால் அருகிலுள்ள இனிய மா மரங்களின் மாம்பழங்கள் சிதறி விழுந்தன. அவை வீழ்ந்ததால் பலா மரத்தினது பலாப்பழங்கள் கீழே சிந்தவும், அவை வீழ்ந்ததால் அருகில் உள்ள வாழைப் பழங்கள் வயல் வரப்புகளில் விழவும், வயல் பக்கத்தில் உள்ள பூக்கள் நிறைந்த தடாகத்தில் தூங்குகின்ற வலம்புரிச் சங்குகள் திருக்குற்று அலறுகின்றன என்று திருவரங்கத்தில் இயற்கையின் சாயலைக் காட்டுகின்றது.

## பறவைகளின் வாழ்வு

காம்புகளை உடைய தாமரையில் வீற்றிருக்கும் உச்சியையுடைய அன்னப் பறவைகள் தங்கள் பேடைகளுடன் வாழுகின்றன. பெண் மயில்களும், ஆண் மயில்களும் மகிழ்ச்சியுடன் ஆடுகின்றன. ஆண் குயில்களும், பெண் குயில்களும் உள்ளன. மழை மேகங்கள் ஒன்றோடு ஒன்று

மோதிக் கொள்வதால் முழவு என்னும் தோல் கருவியின் ஓசையைப் போன்று அதிரும். திருவரங்கப் பெருநகரத்தில் வீற்றிருக்கும் அரங்கனின் அருளால் பறவையினங்களும் மகிழ்வுடன் இருக்கின்றது என்ற இயற்கைக் காட்சியை இப்பாடல் தெரிவிக்கின்றது.

**"தா அட்டாமரைத் தவிசுறைதரு**
**சூஉட்டோதிமம் பேஎட்டுடனெழ**
**மயிற்சேவல் மனங்களிப்பக்**
**குயில்பேடைக் குலமொளிப்ப**
**மழைமுகிலென முழுவதிர்தர**
**திருவரங்கப் பெருநகருள்"12**

## முடிவுரை

இலக்கியங்களில் இயற்கையை இணைத்துப் பாடும் மரபே இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது. மனிதனைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகள் அனைத்தும் சுற்றுச்சூழல். இந்தச் சுற்றுச்சூழல் என்பது ஐம்பூதங்களும், பல்லுயிர்களும் என அனைத்தையும் உள்ளடக்கியதாகும். இயற்கை என்பது கண்ணால் கண்டு மனத்தால் உணரக்கூடியது. மனிதனால் உருவாக்க இயலாத உன்னத படைப்பு இயற்கை. அத்தகைய இயற்கை காட்சிகளைத் திருவரங்கக் கலம்பகத்தில் பெரும்பொழுது, நிலம், சோலைகள், மரங்கள், பறவையினங்கள் ஆகியவற்றைக் காணமுடிகின்றது.

## தொகுப்புரை

- சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கான அடிப்படைக் கூறுகள் தொல்காப்பியத்தில் உள்ளது என்பதை அறிந்துக் கொள்ள முடிகின்றது.
- தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று கலம்பகம். இது பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது என்பதை அறிய முடிகிறது.
- நிலம், நீர், வளி, தீ, விசும்பு என்ற ஐம்பூதங்களால் ஆனது இயற்கை என்பதை அறிய முடிகின்றது.
- திருவரங்கக் கலம்பகத்தில் நிலம், பொழுது ஆகிய இயற்கையைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடியுள்ளதை அறிய முடிகிறது.
- காவிரி ஆறு, பறவைகள், விலங்குகள், மரங்கள் ஆகிய இயற்கைப் பொருள்களை திருவரங்கன் படைத்துள்ளார் என்றும் இவற்றால் திருவரங்கம் அடையும் பெருமைகளையும் அறிய முடிகிறது

## சான்றெண் விளக்கம்


1. தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், மா.ஞானசம்பந்தன், ப-568 மூன்றாம் பதிப்பு-2010 உமா பதிப்பகம், 18(171), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.
2. நாலாயிர திவ்ய பிரபந்தம்-4 டாக்டர் துரை. இராசராம் (தெளிவுரை ஆசிரியர்) திருப்பள்ளியெழுச்சி பா-5, முதல் பதிப்பு-2000, வி.எஸ்.வி. இராகவதாஸன் (பதிப்பு) முல்லை நிலையம், சென்னை-17
3. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், ச.வே.சுப்பிரமணியன், ப.178 இரண்டாம் பதிப்பு - 2010 மணிவாசகர் பதிப்பகம், 31,சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108.
4. தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், மா.ஞானசம்பந்தன், ப-595 மூன்றாம் பதிப்பு-2010 உமா பதிப்பகம், 18(171), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-600001.
5. கழகத் தமிழ் அகராதி, கழகப் புலவர் குழுவினர், ப-113, முதல் பதிப்பு - ஏப்ரல் 1964, பத்தொன்பதாம் பதிப்பு - 2004 திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே.சாலை, சென்னை-600018.
6. கௌரா தமிழ் அகராதி, கௌரா பதிப்பகம், பதிப்பு - 2010 9, செயிண்ட் ஜான் சர்ச் காம்ளக்ஸ், இராகிள்ஸ் சாலை, திருச்சி ஜங்சன், திருச்சிராப்பள்ளி 620001.

7. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, எஸ். இராமகிருஷ்ணன், இரண்டாம் பதிப்பு - 2008, க்ரியா பதிப்பகம், எண் 58, டி.என்.ஹௌச்.பி காலணி, தாம்பரம், சென்னை - 600047.
8. நம்பியகப்பொருள், கா.ர. கோவிந்தராச முதலியார் (குறிப்புரையுடன்) ப - 14 முதல் பதிப்பு 1943, ஐந்தாம் பதிப்பு 1963,
9. திருவரங்கக் கலம்பகம், முனைவர் சத்தியபாமா காமேஸ்வரன், ப - 286, முதல் பதிப்பு ஆகஸ்ட் 2007, சரசுவதி மகால் நூலகம், இராஜாகிருஷ்ணாபுரம், தஞ்சாவூர் 613001.
10. மேலது ப -162
11. மேலது ப - 238
12. மேலது ப - 238

# ‘ஐம்பேரியற்கை’ புதினம் காட்டும் இயற்கைசார் மனித வாழ்வியல்

**திருமதி க. சத்யஜோதி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை*

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கையின் ஆற்றல் அளப்பரியது. இதன் ஒழுங்கமைவையும் அதில் நிகழ்வுறும் செயல்பாடுகளையும் உற்றுநோக்கலின்போது இயற்கையின் பிரம்மாண்டத்தை உணரமுடியும். இயற்கையின் இவ்வுன்னதத் தன்மையை உணர்ந்த பழந்தமிழர்கள், இதனைப் பலவிதமாகப் போற்றியுள்ளனர். இதற்குச் சங்கப்பாடல்கள் சான்றுபகரும். இதன் நீட்சியாக, இக்கால தமிழ்ப் புனைகதையிலாளர்கள் இயற்கைசார் படைப்புகளைத் தொடர்ந்து இயற்றிவருகின்றனர். அத்தகு படைப்புகளுள் ‘ஐம்பேரியற்கை’ புதினமும் ஒன்று. எழுத்தாளர் மாற்கு, இயற்கையை மையமிட்ட மனித வாழ்வியல் எங்ஙனம் அமைந்திருக்க வேண்டும் என்னும் தம் ஆவலை இப்புதினத்தின்வழி ஆவணப்படுத்தியுள்ளார். மேலும் இவர், சமகால மனிதன் இயற்கை நேயனாக இல்லாமல், இயற்கையின் விரோதியாக நடந்துகொள்ளும் பாங்கினைக் கருத்தில்கொண்டு, இப்புதினத்தின் மூலம் இயற்கைசார் மனித வாழ்வியலின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தியுள்ளார். அவ்வாறு ‘ஐம்பேரியற்கை’ புதினம் காட்டுகின்ற இயற்கைசார் மனித வாழ்வியலை இவ்வாய்வுக்கட்டுரை விழுமியுள்ளது. மனிதனின் அன்றாட வாழ்வியலான உணவு, இருப்பிடம் போன்றவற்றிலும் சமூகக் கூட்டிணைப்பு வாழ்வியலான வழிபாடு, கல்வி, இன்னபிறவற்றிலும் இயற்கையுடன் இறைந்து வாழ்தல் எங்ஙனம் என்பதைப் புதினத்தின் வழியே எடுத்துரைக்கும் விதமாய் இக்கட்டுரை கட்டமைக்கப்படுகின்றது.*

**முன்னுரை**

காலந்தோறும் தமிழ் இலக்கியம் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களை அடைந்து வருகின்றது. சங்கச் செய்யுள் பாடல்கள், நீதி நூல்கள், பொருட்தொடர் செய்யுள் நிலைப் பாடல்கள், சிற்றிலக்கியப் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து சமகால தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சித் தன்மை அடைந்துள்ளது. இதில், பழந்தமிழ் யாப்பு அமைப்பிலிருந்து மாறுபட்ட, எளிமைத் தன்மை மிக்க, நீரோட்டம் போன்ற கதையை மையமிட்ட புதின இலக்கியம் குறிப்பிடத்தகுந்தது. எழுத்தறிவு கொண்ட அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் இவ்விலக்கியம் அமைவதால் ஓர் எழுத்தாளன், புதினத்தின் வாயிலாகத் தான் கூற விழையும் சிந்தனையை எளிமையாக வெளிப்படுத்தவியரும். அவ்வகையில் மாற்கு என்பவர் தம் ‘ஐம்பேரியற்கை’ புதினத்தை எழுதியுள்ளார். அவ்வாறு இப்புதினத்தின் கூறலாகும் சிந்தனைகளை மையமிடுவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**ஐம்பேரியற்கை**

தற்கால இலக்கியங்கள் சமூகத்தின் நடப்பியல்பைக் காட்டுவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. அவ்விலக்கியங்களுள் புதின இலக்கியத்தை, மனிதர்களின் அன்றாட வாழ்வியலைப் புலப்படுத்தும் கண்ணாடி எனக் கூறுதல் மிகையாகா. அத்தகைய புதினங்களுள் மாற்கு எழுதியுள்ள ஐம்பேரியற்தை புதினமும் ஒன்று. இப்புதினம் இயற்கையுடன் நல்லிணக்கத்துடன் அமைந்த மனிதவாழ்வை இலட்சியப் பான்மையில் காட்டும் நூலாகும். இயற்கையின் அங்கமான மனிதர்கள், சமகாலத்தில் இயற்கை அமைவிற்குத் தீங்கிழைக்கும் விதமாய் நடந்துக் கொள்வதை மாற்றவேண்டிய நோக்குடன் இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது. நல்லூர் என்னும் கிராமத்தின் மக்கள் சகலரும் ஒருமித்த கருத்துடன் (தன்னாட்சி தன்மானம் தற்சார்பு) இயற்கையைச் சார்ந்து அதனைச் சீர்குலைக்காமல் இணக்கமுடன் வாழ்ந்து வருகின்றனர். அரசின் உதவியின்றி தம் தேவையைத் தாமே நிறைவேற்றிக்

கொள்கின்றனர். இவர்களால் எவ்வாறு இப்படி வாழ முடிகின்றது என்பதை அறியவெண்ணும் நோக்குடன் அப்பகுதியின் ஆட்சியரை நல்லூரைக் காணச் செல்கிறார். அவ்வாறு காணச் சென்றவர், அந்நாளின் இறுதிக்குள் தம் பணியை நீக்கி, அங்கேயே வாழ முற்படுகின்றார் என்பதே கதைக்கரு. ஒரு நாளின் நிகழ்வே புதினத்தின் கதையென்றாலும் சமூகச் செழிப்பிற்கான சிறந்த நெறியார்ந்த வாழ்வியலைப் படம்பிடிக்கின்றது இப்புதினம். அவ்வாறு புதினம் காட்டுகின்ற இயற்கைசார் வாழ்வியலை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

**இயற்கைசார் மனித வாழ்வியல்**

மனிதனோ அல்லது பிற உயிரினம் போன்றவற்றின் உதவியின்றி சுற்றிலும் தாமாக அமைந்துள்ள அமைப்பை இயற்கை என்றுரைக்கலாம். இயல்பு என்ற வேர்ச்சொல்லின் பிறப்பு இயற்கை. இயல்பாக அமைந்துள்ள ஒன்று என்றும் கூறலாம். “பார்வைத்திறன் குறைந்தவற்றுக்கு முகர்வுத் திறன், முகர்வுத் திறன் குறைந்தவற்றுக்குக் கேட்புத் திறன், ஓடுந் திறன், எச்சரிக்கும் திறன், தற்காத்துக் கொள்ளும் திறன்... இயற்கையின் கொடைகள் அளப்பரியவை”[1] என மோமன் ரூபன் கூறுவது இங்கு எண்ணத்தக்கது. இயற்கையின் ஓர் அங்கம் மனிதர்கள். இச்சூழலைப் புரிந்துகொள்ளாமல் இன்றைய நாகரிக மனிதர்கள் வாழும் உலகைச் சீர்குலைக்கின்றனர். இதன் எதிரொலிகள் பலவிடத்தில் ஒலிப்பதையும் அறியமுடியும். இயற்கையைச் சார்ந்து மனித வாழ்வு அமையும்பொழுதே இன்னல்கள் ஏதும் நிகழாதிருக்கும் என்னும் சிந்தனையை விதைக்கும் படைப்பு ஐம்பேரியற்கை புதினம். அவ்வாறு இப்புதினம் இயம்பியுள்ள இயற்கைசார் வாழ்வியலைப் பின்வருமாறு காணலாம்.

**உணவுமுறை**

மனிதனின் அன்றாடத் தேவைகளில் முதன்மையானது உணவு. உணவை மையமிட்டே மனிதவாழ்வு நகர்கின்றது. மனிதன் தன்னுடைய பெரும்பாலான நேரத்தை உணவுத்தேடலுக்காகச் செலவளிக்கின்றான். இவ்வுணவுமுறை நலமாக அமையவேண்டியது அவசியமாகும். பழங்கால தமிழர்களின் திணைவாழ்வியலில் வாழிடச் சூழலிற்கேற்றாற் போல் உணவுமுறைமை அமைந்திருந்ததை அறியலாம். “அந்த பருவத்தில் அந்த இடத்தில் என்ன இயற்கையாக விளைகின்றதோ அதுதான் அந்த காலக்கட்டத்தில் நல்ல உணவாக அமையும் என்கிறது இயற்கை”[2] என்று ‘இயற்கையோடு இணைந்து’ என்னும் நூலின் வாயிலாக அதன் ஆசிரியர் உணவு சார்ந்த தம் சிந்தனையை வெளிப்படுத்துகின்றார். இதுபோன்ற சிந்தனைகளை ‘ஐம்பேரியற்கை’ புதினமும் பதிவிட்டுள்ளது. “அந்த காலத்துல நாம உண்ட உணவு பல நிறங்கள்ல இருந்துச்சு. கம்பு, தினை, வரகு, சோளம், குதிரைவாலி, சாமை, கொள்ளுன்னு பல தானியங்களச் சாப்பிட்டோம். இதுக பல நிறங்கள்ல பார்க்க ரொம்ப அழகா இருந்துச்சு... வெள்ளைநிற அரிசிச்சோற மட்டும் மூணு நேரமும் சாப்பிட ஆரம்பிச்சோம். அதனால சரிவிகித உணவு நமக்குக் கிடைக்கல.”[3] ‘நெல்லுச்சோறு’ என்றழைக்கப்பட்ட அரிசிச்சோற்றின் ஆவலால் சிறுதானிய உணவுகள் கைவிடப்பட்டது உண்மையே. ஆனால் தற்போது நீரிழிவு நோய் போன்ற உடல்நல குறைபாட்டிற்கு மீண்டும் சிறுதானிய உணவுமுறை கைகொடுப்பதையும் மறுக்கவியலாது.

‘ஐம்பேரியற்கை’ புதினத்தின் நல்லூர் கிராமத்தினர் தம் வாழ்வில் வெள்ளை நிற உணவுகளைக் கைவிடுத்தலைக் காண முடிகின்றது. “பால், சோறு, சக்கரை, மைதா, உப்பு போன்ற எல்லாமே உடல்நலிவுக்கு அடிப்படைக் காரணமா அமையுது”[4] என்னும் நல்லூராரின் கருத்து ஆராயத்தக்கது. அவ்வாறு தம் உண்ணும் முறையில் சிறிது மாறுதல்களைக் கொண்டிருக்கின்றனர். சான்றாகப் பழங்கள் உண்ணும் நேரத்தைக் கூறலாம். “முதல்லையே பழங்களைச் சாப்பிட்டா நாம அதிகமாச் சாப்பிட மாட்டோம். அதிகமாச் சாப்பிடறதாலதான் பெரும்பாலும் நமக்கு வியாதிக வருது”[5]

எனப் பழங்களை முதலில் உண்ணுதல் கவனிக்கத்தக்கது.

நல்லூர் கிராமத்தினரின் உணவுப் பட்டியலில் சான்றுகாட்டும் விதமாக, “இன்னைக்கு குதிரைவாலிச் சோறும் பாசிப்பருப்புக் குழம்பும் இருக்கு. காணத் துவையல். உங்களுக்கு விருப்பமான காய்கறியை எடுத்துக்கிடலாம். கீரையும் இருக்கு”[6] என்னும் கூற்றை எடுத்துரைக்கலாம்.

இயற்கையாகத் தம்மைச் சுற்றிக் கிடைக்கக்கூடியவற்றை உணவாகக் கொள்கின்றனர் ‘ஐம்பேரியற்கை’ புதின மக்கள். இவர்கள், தம் நலமான வாழ்விற்கு இயற்கையான மற்றும் ஊட்டச்சத்து மிகுந்த உணவுவகைகளையும், அவற்றை உண்ணும் முறைகளையும் கொண்டிருத்தலும் காணலாகிறது.

### குடியிருப்பு

உணவிற்கு அப்பால் உறைவிடமும் தனிமனிதனின் ஆகப்பெரும் தேவை. ‘ஐம்பேரியற்கை’ புதினத்தின் மாந்தர்கள் ஒவ்வொருவரும் தம் சுய விருப்பத்திற்கு ஏற்ப தம் குடியிருப்புகளைக் கட்டிக்கொள்கின்றனர். இக்குடியிருப்புகளும் தனித்துவம் மிக்கவையாக உள்ளன. சமகால கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் சிமெண்ட் போன்றவற்றைப் பயன்படுத்தாமல், “பனை ஓலைகளும், பனைமரச் சட்டங்களும் இருந்தா குடிசை போட்டுறலாம். ஆனா நாங்க பனைமரச் சட்டங்கள பயன்படுத்துறதில்ல. பனை வளரப் பல வருசம் ஆகும். ஆதனால அதை வெட்டுறதில்ல. அதுக்குப் பதிலா மூங்கில்களைத் தான் பயன்படுத்துறோம். மூங்கில் புதர்க இங்க அதிகம் இருக்கு. ஓலைக, மூங்கில்க எல்லாமே குடிசைதான?”[7] என இயல்பாக வளரும் மரங்களையும் புற்களையும் பயன்படுத்தித் தம் குடியிருப்புகளை அமைத்துக் கொள்கின்றனர் என ‘ஐம்பேரியற்கை’ புதினம் பதிவுசெய்கிறது.

வீடு கட்ட உபயோக்கிக்கும் பொருட்களைக் காட்டும் புதின ஆசிரியர், வீட்டின் உட்புற அமைப்பையும் தம் நூலில், “முன்பக்கம் தாழ்வாரம். நடுவில் வாசல். மூங்கில் தட்டியே கதவு. இருபுறமும் சாணத்தால் மெழுகிய மண்திண்ணைகள் இருந்தன... தாழ்வாரத்தின் ஒருபுறம் சமையல் அறை”[8] என்பதாகக் காட்டியுள்ளார்.

இக்குடியிருப்புகள் இயற்கையோடு இயைந்தவை என்பதை, “வெயில்காலத்துல குடிசை குளிர்ச்சியா இருக்கும். குளிர்காலத்துல வெப்பமா இருக்கும். அதுக்கு ஓலைக் கூரைக்கும், மண் தரைக்கும்தான் நாம நன்றி சொல்லணும். தர்ப்பைப் புல்லால இந்தக் குடிசைக்குக் கூரை போட்டிருக்கோம்”[9] என்னுமிடத்தில் அறிலாகிறது. சுற்றுச்சூழலிற்கு ஏற்ப வாழ்வதன் மூலமே நிறைவான வாழ்வியலைக் கொண்டிருக்க முடியும் என்பது இங்ஙனம் புலனாகிறது.

### குழந்தை வளர்ப்பு

‘ஐம்பேரியற்கை’ புதினம் எடுத்துக்காட்டுகின்ற குழந்தை வளர்ப்பு எதார்த்தவியலிற்கு ஒத்துவிளங்குதலை மறுக்க முடியாது. குழந்தைகள் இவ்வுலகைக் கற்றுக்கொண்டு வாழவே பிறந்திருக்கின்றன என்னும் பான்மையில் நல்லூர் மக்கள், குழந்தைகளுக்குத் தேவையான இயற்கை அறிவை வளர்க்கும் விதமாகக் கற்றுத்தருகின்றனர். “வளர்ந்த குழந்தைக தட்டான், வண்ணத்துப்பூச்சி, பொன்வண்டு, குருவிக்குஞ்சு, அணில்குஞ்சு போன்ற உயிருள்ளதுகளைப் பிடிச்சு ரொம்ப அன்பா வளர்ப்பாங்க. உயிரினங்களைத் துன்புறுத்தக் கூடாது, இயல்பா வளர்றதப் பார்த்து ரசிக்கணும்னு சொல்லிக் கொடுப்போம்.”[10] இக்கூற்றின் வழியே பிற உயிர்களின்மீது நேயத்தை இயற்கையாக வளர்த்தலைக் காணலாம்.

இயற்கையின் தூண்களாம் ஐம்பேரியற்கையுடனான இணக்கச்சூழலைக் குழந்தைகளுக்குப் பழக்குகின்றனர் நல்லூரார். இதனைக் “குழந்தைகளுக்கு ஐம்பூதங்களோட உறவு இருக்கிறது மாதிரி நாங்க வளர்க்கோம்”[11] என்பதில் அறியலாம்.

- பிறக்கும் குழந்தையைத் தரையில் வைத்து வளர்த்தல்

- சிறு உடையுடன் காற்று மற்றும் வெயில் படுமாறு விளையாட வைத்தல்
- மழையில் நனைந்து விளையாட அனுமதித்தல்
- வானத்தின் அழகை வருணித்தப்படி உறங்க வைத்தல்.

போன்ற செயல்பாடுகளின் வழியே குழந்தைகளை இயற்கை நேயர்களாக வளர்த்தலை 'ஐம்பேரியற்கை' புதினம் இயல்புற வெளிக்காட்டுகின்றது. இதற்குச் சான்றுபகரும் வண்ணம், "வெயிலுக்கும் மழைக்கும் குடையை யாரும் பயன்படுத்துறதில்ல. வெப்பத்தோட குழந்தைகளுக்குத் தொடர்பு இருக்கு"[12] என்னும் கூற்று அமைந்திருக்கின்றது.

**இயற்கை வழிபாடு**

தம் வாழ்வின் ஆதாரங்களை அள்ளித்தரும் இயற்கையைக் கடவுளாக வைத்து வழிபடும் வழக்கம் பெரும்பாலும் பூர்வக்குடியினருக்கே அமைந்திருக்கின்றது. இத்தகைய வழக்கத்தை 'ஐம்பேரியற்கை' புதினமும் காட்டியுள்ளது. "வழிபாட்டுக்கு நந்த வனத்துக்குப் போகும் நேரம் இது. இயற்கையோடு தான் நாங்க இருக்கிறோங்கிறதை மீண்டும் உறுதி செய்றோம். அதோட இயற்கையாய் கிடைப்பதைப் பிறரோடு பகிரணும். இதுதான் வழிபாடு."[13] இவ்வாறு நல்லூர் கிராமப் பெண் பூரணி, ஆட்சியர் ஜெயக்குமாரிடம் தம் ஊரின் இயற்கை வழிபாட்டு முறையைக் கூறுகிறார். மேலும் இயற்கையை வழிபடுவதின் அவசியத்தையும் அதன்மூலம் தம் நிலைப்பாடு என்ன என்பதையும், "உயிரினங்களின் சமத்துவத்திற்கு ஏற்பவும், அனைத்து உயிரினங்களும் தங்கள் இயல்புக்கு ஏற்பவும் வாழுதுங்கிற எண்ணமே நம்மை வழி நடத்துது. இந்த மனநிலையில நம்மைச் சுற்றி இருக்கிற அனைத்து உயிரினங்களோடு சேர்ந்து இயற்கையை வழிபடுவோம்"[14] எனப் பச்சைமணி என்னும் ஊர்பெரியவர் புலப்படுத்துவதாகப் புதினம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**மருத்துவம்**

இன்றைய காலச் சூழலில் மருத்துவத்துறை பல முன்னேற்ற நிலையை அடைந்துள்ளது எனினும் சமூகத்தில் வசதி வாய்க்கப் பெற்றவர்களுக்கானதாக உள்ளதை மறுக்கவியலாது. இயற்கை மூலிகை மருத்துவத்தை அக்காலத்தில் கொண்டிருந்ததால் நலவாழ்வு கொண்டிருந்தனர் பழந்தமிழர். இம்மூலிகை மருத்துவத்தை 'ஐம்பேரியற்கை' புதின மாந்தர் கொண்டு விளங்குதலை, "எங்கள்ல பரம்பரை பரம்பரையா வள்ளுவர்னு ஒரு பிரிவு இருக்கு. அவுவங்க தொழிலே மருத்துவம்தான். நாடி பார்த்து என்ன வியாதின்னு சொல்லும் திறமை அவுங்ககிட்ட இருந்துச்சு. மூலிகை மருந்துகளும் கொடுப்பாங்க. நான் அந்தப் பிரிவைச் சார்ந்தவன்"[19] என்னும் கூற்றில் அறியலாம். மேலும் இம்மருத்துவமுறைமை அக்கிராமத்தில் இலவசம் என்பதையும் புதினம் பதிவிடுகிறது. இவர்கள், பெண்களுக்கான மகப்பேறு மருத்துவத்தை எளிமையான முறையில் கடைபிடிக்கின்றனர் என்பதும் புதினம் வாயிலாக அறிய முடிகிறது. "நெருப்புப் பாட்டி கர்ப்பமா இருக்கும் பெண்களுக்கு ஆலோசனை சொல்லுவாங்க. அடிக்கடி பார்ப்பாங்க. பிரசவம் பார்த்து குழந்தை வேறு தாய் வேறுன்னு எந்தச் சேதாரமும் இல்லாமப் பிரிப்பாங்க. பிரசவத்துல தாயோ குழந்தையோ இருவருமோ இறந்ததாச் சரித்திரமே இல்ல."[20]

உணவே மருந்து என்பது பழமொழி. அவ்வாறு நாம் உண்ணும் உணவின் வாயிலாக உடல்நலக் குறைபாட்டைச் சரிசெய்ய முடியும் என்பது அறிவியல் உண்மை. இதனை 'ஐம்பேரியற்கை' புதினம் கீழ்க்கண்டவாறு எடுத்தியம்புகிறது. "இயற்கையைப் பஞ்சபூதங்கன்னு சொல்றோம். அதுமாதிரி நாம உண்ணும் உணவுலயும் இந்த பஞ்சபூதங்களின் தன்மை இருக்கு. நிலம், நீர், காற்று, நெருப்பு, வெளி. வெளி எல்லாத்துக்கும் பொது. மற்ற நான்கும் நாம் உண்ணும் உணவுல இருக்கு."[21] இயற்கைத்

தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த உடலில் உண்டாகும் மாற்றங்களுக்கு ஏற்ப உணவு மருந்தாக அமையும் என்பது 'ஐம்பேரியற்கை' கூறலாகும் சிந்தனை. வாதம், பித்தம் மற்றும் கபம் ஆகிய மூன்று நிலைகளையும், "நம்ம உடம்புல பித்தம்னா நீரும் வெப்பமும் கலந்த நிலை. வாதம்னா காற்றும் நிலமும் கலந்த நிலை. கபம்னா நீரும் காற்றும் நிலை"[22] எனப் புதினத்தின் வாயிலாக ஆசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.

### கல்விமுறை

ஒரு மனிதனின் வாழ்வியலானது முழுதும் அவன் வாழும் சுற்றுச்சூழலைச் சார்ந்தது. அச்சூழலுக்கு ஏற்ப வாழத் தொடங்கும் பொழுதே அவன் வாழ்வு மேன்மையடைகிறது. அதாவது வாழும் சூழலை அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். "குழந்தைகளுக்கும் இயற்கைக்குமான உறவு பெரும் இடைவெளியை கொண்டுள்ளது. இயற்கையோடு இருக்கும் சூழல் குழந்தைகளுக்கு வாய்ப்பதில்லை! இதற்கு கல்வியும் ஒரு காரணம்"[23] எனக் கோவை சதாசிவம் கூறுகின்றார்.

இயற்கையைக் கற்றுணரலின்வழி நீடித்து வாழும் யுக்தியை அடையமுடியும். எனவேதான், 'ஐம்பேரியற்கை' புதினத்தில் காணலாகும் மனிதர்கள் தம் குழந்தைகளுக்கு இயற்கையின் பிரம்மாண்டங்களைக் கற்றுத்தருகின்றனர். அதனையும் புதுவிதமாக, அனைவரும் தமக்குத் தெரிந்த அனைத்தையும் அறிந்துகொள்ளும் விதமாக நாளொன்றுக்கு ஓர் ஆசிரியர் என்னும் முறைமையில் இயற்கை கல்வியளிக்கின்றனர். இதனை, "அவரு பிள்ளைகள காட்டாறுக்குக் கூட்டிக்கிட்டுப் போறாரு. அவருதான் இன்னைக்கு வாத்தியார்"[24] என்பதில் உணரலாம்.

விளையாட்டு நோக்கில் குழந்தைகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியும் சிறந்த பொழுதுபோக்கு உண்டாக்கும் விதமாக ஆசிரியர் குழந்தைகளுக்கு இயற்கையறிவைச் செலுத்துகிறார். "இங்க நிறைய செடிக இருக்கு. ஒவ்வொருத்தரும் ஏதாவது ஒரு செடியில இருந்து இலையைப் பறிச்சுக் கொண்டுவரணும். ஆனா வெவ்வேறு வகைச் செடியா இருக்கணும். ஒரே மாதிரியான இலையை ரெண்டு பேர் கொண்டு வரக் கூடாது. அதனால எல்லாரும் கூட்டாப் போய் பறிக்கணும். பிறகு இங்க வந்து இலையின் பெயரச் சொல்லணும்."[25] குழந்தைகளுக்கு இவ்வாறு விளையாட்டின் மூலம் கற்றுத்தருவதால் ஆழமாகப் பதியும் என்பதையும் இங்ஙனம் அறியமுடிகிறது.

முறைசார்ந்த கல்வியைக் (பள்ளிக்கல்வி) குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க முயலாமே என்னும் ஆட்சியரின் வினாவிற்கு குழந்தைகளின் ஆசிரியர், "நாங்க கொடுக்கிற கல்வி இயற்கையோடு இணைந்த கல்வி. இயற்கையை நேசிக்கச் செய்ற கல்வி. இயற்கையின் அழகை ரசித்து அதுபோல இயற்கையா வாழணுங்கிற ஆசையைக் கொடுக்கிற கல்வி. இயற்கையைக் காப்பாத்தணுங்கிற கல்வி"[26] என்னும் கூற்றின்வழி பதிலுரைக்கின்றார். தம் கிராமத்தில் வேறு யாரேனும் சுயவிருப்புடன் வெளியூரில் தங்கிப் படிக்கவோ, பணிபுரியவோ வேண்டினால் அதற்கான ஏற்பாட்டையும் கிராமசபை மூலம் செய்து தருதலும் கவனிக்கத்தக்கது.

### தொழில்

காலமாற்றத்திற்கேற்ப தொழில்களும் மாறுபடுகின்றன. இத்தொழில்கள், மனிதனைப் பல்வேறு முன்னேற்றங்களுக்கு இட்டுச் சென்றுள்ளன. செய்யும் தொழிலைத் தெய்வமென எண்ணும் கதைமாந்தர்களை 'மாற்கு' தம் புதினத்தில் கீழ்க்கண்டவாறு காட்டுகின்றார். "எல்லாரும் வேலை செய்யணும். வேலையில உயர்வு தாழ்வு பார்க்கிறதில்ல. எல்லாமே வேலதான். உடல் உழைப்புத்தான். எனக்கு இந்த வாரம் சாணி அள்ளுற வேல. அதத்தான் செய்றேன். தலைவிங்கிறதுனால எனக்கு எந்தச் சிறப்புச் சலுகையும் கிடையாது."[27] இக்கூற்றின் மூலம் அனைவரும் சமம் என்னும் கருத்தையும் அறியலாகின்றது.

'ஐம்பேரியற்கை' நல்லூர் கிராமத்தில் வாழும் மக்களின் முக்கியத் தொழில் உழவுத்தொழில். இயற்கை வேளாண் முறையில் உழுதுண்டு சுற்றுச்சூழலுக்குத் தீங்கிழைக்காமல் வாழ்கின்றனர். இவர்களிடம் ஆட்சியர் ஜெயக்குமார், டிராக்டர் போன்ற கருவிகளைக் கொண்டு நவீனமுறையில் விவசாயம் மேற்கொள்ளலாமே என்று வினவுகையில், "நாங்க இப்படியே ஆடு, மாடு, மேய்ச்சல், சாணம்னு கிடக்கிறோம். ஆனா ஆரோக்கியமா வாழ்றோம். நீங்க எப்படி வாழ்றீங்க? இயற்கை உரம் போடாம ரசாயன உரம் போடுறீங்க. விளைச்சல் அதிகமா கெடைக்கு. உண்மைதான். ஆனா உற்பத்தியாகும் உணவுப்பொருள்கள்ல பூச்சிமருந்து கலந்திருக்கு. விஷத்தைத்தான் சாப்பிடுறீங்க"[28] என்று பதில்மொழிகின்றனர். இயற்கை விவசாயத்திற்கு ஆதாரம் கால்நடைகள். கால்நடைகளின் கழிவுகள் சிறந்த இயற்கை உரம் என்பதால் வேளாண்மைக்கு அடுத்து ஆடுமாடு மேய்ச்சலை முக்கியத் தொழிலாகச் செய்கின்றனர். ஊரிலிருக்கும் ஐம்பது குடும்பங்களும் தனித்தனியாகக் கால் நடைகளை வளர்க்காமல் பொதுவிடத்தில் வளர்த்தலையும் புதினம், "யாரும் வீடுகள்ல தனியா ஆடுமாடுகளை வளக்கிறதில்லை. எல்லாத்தையும் கூட்டாகவே செய்றோம்"[30] என இயம்புகின்றது.

**முடிவுரை**

இயற்கையும் மனிதனும் வேறு வேறு அன்று. இயற்கையின் அங்கம் மனிதன். இயற்கையின் ஆட்டுவித்தலின் மூலம் இயங்க வேண்டிய மனிதன், தன்னியல்பிலிருந்து முற்றிலும் வேறுபடுதலைச் சமகாலத்தில் காண முடிகின்றது. இதற்குத் தீர்வு காணும் நோக்கில் எழுந்துள்ள 'ஐம்பேரியற்கை' புதினம் கூறுகின்ற கருத்து கவனிக்கத்தக்கது. அக்கருத்து யாதெனின் இயற்கைசார் வாழ்வியலை மனிதன் கொண்டிருக்கும் போது எவ்வுயிருக்கும் இன்னலில்லை என்பதாகும். அவ்வகையில், இயற்கைசார் வாழ்வியலின் வழி காட்டியாகவும் இப்புதினம் அமைந்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

**மேற்கோள்கள்**


1. (ப. 3, மோகன் ரூபன், 'கவின்மிகு கானகம்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018)
2. (ப. 160, கன்யூட் ராஜ், 'இயற்கையோடு இணைந்து', தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு - 2015)
3. (ப. 60, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
4. (ப. 61, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
5. (ப. 139, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
6. (பக். 138-139, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
7. (ப. 24, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
8. (ப. 37, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
9. (ப. 57, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
10. (ப. 98, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
11. (ப. 102, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
12. (பக். 102 - 103, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
13. (ப. 274, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
14. (ப. 275, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
15. (ப. 133, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
16. (ப. 135, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
17. (ப. 137, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
18. (பக். 137 -138, மாற்கு, 'ஐம்பேரியற்கை', தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)

19. (ப. 84, கோவை சதாசிவம், ‘உயிர் இனிது’, குறிஞ்சி பதிப்பகம், திருப்பூர்)
20. (ப. 109, மாற்கு, ‘ஐம்பேரியற்கை’, தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
21. (ப. 111, மாற்கு, ‘ஐம்பேரியற்கை’, தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
22. (ப. 120, மாற்கு, ‘ஐம்பேரியற்கை’, தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
23. (ப. 91, மாற்கு, ‘ஐம்பேரியற்கை’, தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
24. (ப. 94, மாற்கு, ‘ஐம்பேரியற்கை’, தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)
25. (ப. 211, மாற்கு, ‘ஐம்பேரியற்கை’, தமிழினி பதிப்பகம், சென்னை, 2018)

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

## Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

## Hosted by

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**

**T.Kallikulam**

(Accredited by NAAC with 'A' Grade)

(Affiliated to Manomaniam Sundaranar University)

(Co-Educational Institution)




Impact Factor 4.650

Articles should be mailed to bodhijournal@gmail.com

**BODHI**

**International Journal of Research in Humanities, Arts and Science**

www.bodhijournals.com

Powered & Published by

**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**

www.crrps.in